ஸ்ரீகலா SRIKALA

ஸ்ரீகலா SRIKALA

தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...

TAMIL NOVELS ONE CLICK DOWNLOADER

Download

ஸ்ரீகலாவின் “வீழ்கிறேன் உனது விழியில்”

Contents

முன்னுரை :
விழி : 1
விழி : 2
விழி : 3
விழி : 4
விழி : 5
விழி : 6
விழி : 7
விழி : 8
விழி : 9
விழி : 10
விழி : 11
விழி : 12
விழி : 13
விழி : 14
விழி : 15
விழி : 16
விழி : 17
விழி : 18
விழி : 19
விழி : 20

PDF தமிழ் .com
WWW.PDFTAMIL.COM

PDF தமிழ் .com

“வீழ்கிறேன் உனது விழியில்” கதையானது “கள்ளிப்பூ காதல்” கதையின் தொடர்ச்சியாக எழுதப்பட்ட கதை... அந்த கதையில் வந்த அக்ஷய் – அபி, ஆதர்ஷ் – அனி, விக்டர் – நிஷா இந்த மூன்று ஜோடிகளின் வாரிசுகளை சுற்றி பின்னப்பட்ட மென்மையான காதல் கதை இது... அக்ஷய் – அபி ஜோடி உங்கள் மனதை கவர்ந்தது போல் இந்த கதையின் நாயகன், நாயகியான மித்ரேஷ்வரன் – மதுவந்தி ஜோடியும் உங்கள் மனதை கவர்வார்கள் என்று நம்புகிறேன்... நன்றி...

அன்புடன்,
ஸ்ரீகலா :)

"கோசலை தேவியின் குணமிகு மைந்தா!
வீசலைக் கடலில் வெய்யவன் உதிக்கத்
தேசுறு சந்தியை தோன்றினள் ஆங்கே;
தாசர தீ! எழு, கண்விழி வீரா!
பூசைகள் செய்திடக் காலமி தையா!"

பூஜையறையில் கணீர் குரலில் பாடி கொண்டு இருந்தார் துளசி... வயதின் முதிர்ச்சி அவரது தோற்றத்தில் மாற்றத்தை கொண்டு வந்து இருந்தது... இரு மக்களின் நிறைவான வாழ்க்கை, பேரன் பேத்தி இவர்களின் அன்பு, பாசம் என அவரது வாழ்க்கை நிம்மதியாக மகிழ்ச்சியாகச் செல்கிறது... அதோடு கணவரது நேசம், அரவணைப்பு அன்று போல் இன்றும் மாறாமல் இருக்கிறது... இதை விட வேறு என்ன வேண்டும் அவருக்கு...

பூஜை முடிந்து எழுந்தவர் வரவேற்பறைக்கு வந்து சோபாவில் அமர்ந்த அடுத்த நொடி மதுவந்தி தூக்க கலக்கத்துடன் அங்கு வந்தவள்,

"குட்மார்னிங் ஆச்சி..." என்று அவரது கன்னத்தில் முத்தமிட்டு அவரது மடியில் படுத்துக் கொள்ள அவர் சிரித்துக் கொண்டே,

"என்ன அம்முவுக்கு இன்னும் தூக்கக் கலக்கம் போகலையா...?" என்றபடி வாஞ்சையுடன் பேத்தியின் தலையை வருடி கொடுத்தார்...

அங்குச் செய்தித்தாளை படித்துக் கொண்டு இருந்த கோபிநாத் புன்னகையுடன் இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டு இருந்தார்...

அந்நேரம் அங்குக் காபி கோப்பையுடன் வந்த அபிக்கு நடு வீட்டில் சோபாவில் உறங்கும் மகளைக் கண்டதும் கோபம் வந்தது...

துளசியிடம் காபி கொடுத்தபடி மகளிடம், "அம்மு... எழுந்திரு... இது என்ன பழக்கம்...? இப்படியா நடு வீட்டில்

PDF தமிழ் .com

தூங்குறது...?" என்று அதட்ட...

கண்களைத் திறவாமல் வாயை மட்டும் திறந்தாள் செல்ல மகள்...

"நான் எங்கே நடு வீட்டில் தூங்கறேன்... என் ஆச்சி மடியில் தான் தூங்கறேன்... முதல்ல உங்க கண்ணுக்கு ஒரு கண்ணாடி போடணும் மிஸஸ். அக்ஷய்..."

"கொழுப்பாடி உனக்கு..." மகளின் முதுகில் ஒரு அடி கொடுக்க...

"விடும்மா... நம்ம வீட்டில் இருக்கிற வரை தான் இந்தச் செல்லம் எல்லாம்... நாளைக்குக் கல்யாணமானா அவளே நினைச்சாலும் இது மாதிரி இருக்க முடியுமா..." துளசி இருவரையும் சமாதானப்படுத்த...

"என்னை அடிச்சிட்டீங்கல்ல... நான் டாட் கிட்ட போய்க் கம்ப்ளெயிண்ட் கொடுக்கிறேன்..." என்று சிணுங்கி கொண்டே காலை உதைத்து விட்டு நடந்த மதுவந்தியை கண்டு இன்னும் கோபம் தான் எழுந்தது அபிக்கு...

இருபத்திநான்கு வயதாகும் மகள் இன்னும் சிறு பிள்ளை போல் இருக்கிறாளே என்று சில சமயம் வருத்தமாக இருக்கும்... இதில் வீட்டில் உள்ளவர்கள் அனைவருக்கும் அவள் செல்லப் பிள்ளை... கண்டிப்பதாக இருந்தால் அபி மட்டுமே கண்டிக்க வேண்டி இருந்தது...

அபி அவர்களது அறைக்கு வரும் முன் மது தந்தையிடம் அன்னையைப் பற்றிப் புகார் அளித்து விட்டு விட்ட தூக்கத்தைத் தந்தை மடியில் படுத்து தொடர்ந்து கொண்டு இருந்தாள்...

"இங்கே வந்தும் இதைத் தான் செய்றாளா... இவளை..." என்றபடி அபி கையை ஓங்கி கொண்டு அவள் அருகே வர...

"ஹேய் விடு ரக்ஷி..." என்றபடி மனைவியின் கையைப் பிடித்துத் தடுத்து நிறுத்தி மகளை அடியில் இருந்து காப்பாத்தியவன்,

"தூக்கம் வந்தா தூங்கட்டும்..." மகளுக்கு ஆதரவாய் பேசியவனை அபி முறைத்து பார்க்க...

'ப்ளீஸ்... பாவம்... விட்டிரு...' கண்களால் கணவன் கெஞ்ச சற்று மலை இறங்கினாள் அவள்...

"இவளுக்கு மாப்பிள்ளை பார்க்க சொன்னேனே என்னாச்சு...?" என்று கேட்டபடி அவன் அருகில் அமர்ந்தாள்...

"மாப்பிள்ளை தானே பார்த்துட்டே இருக்கேன்... ஒண்ணும் சரிவர மாட்டேங்குது..." தங்கைக்கே அத்தனை மணமகனை பார்த்து தட்டி கழித்தவன் அவன்... மகளுக்கு என்றால் சும்மாவா இருப்பான்... அலசி ஆராய்ந்து எல்லாவற்றையும் தட்டி கழித்துக் கொண்டு இருந்தான்...

"டாட்... எனக்குக் கல்யாணம் எல்லாம் வேண்டாம்... நான் உங்க கூடவே இருந்தர்றேன்..."

"ஏன் உன் அண்ணனுக்குத் துணையா நீயும் இருக்கப் போறியா...?" வெடுக்கென்று அபி கேட்டு விட்டாள்...

"ரக்ஷி... என்ன இது...?" அக்ஷய் அவளைக் கடிய...

"பின்னே என்னங்க... ஆதி தான் கல்யாணத்துக்குப் பிடி கொடுக்க மாட்டேங்கிறான்னா... இவளும் அதே தான் சொல்லிட்டு இருக்கா... ரெண்டு பிள்ளைங்களைப் பெத்துட்டு ஒருத்தருக்கு கூடக் கல்யாணம் பண்ணி பார்க்க முடியாம நான் கஷ்டப்படுறது எனக்கு மட்டும் தான் தெரியும்..."

"நீங்களாவது ரெண்டு... ஆனா ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணுன்னு ஒரு பொண்ணு பெத்து வச்சிருக்கிற எங்க மாமாவை கொஞ்சம் நினைச்சு பாருங்க... அவர் பாவம் இல்லையா..."

"அதுக்கு யாரு காரணம்... உன் அண்ணன் தானே... உன்னைப் போல் தானே அவனும் இருப்பான்..."

PDF தமிழ் .com

அபி சொல்வதும் சரி தான்... ஆதர்ஷ், அனியின் ஒரே மகள் மிருதுளா, ஆதித்யாவை சிறு வயதில் இருந்து நேசிக்கிறாள்... ஆனால் அதற்கு எந்தவிதமான எதிரொலியும் அவனிடத்தில் இல்லை... ஆதிக்கு முப்பது வயது என்றால் அவளுக்கும் இருபத்தியாறு வயதாகி விட்டது... இனி மேலும் அவன் மனம் மாறி அவளைத் திருமணம் செய்வான் என்ற நம்பிக்கை எல்லோருக்கும் விட்டுப் போனது... ஆனால் மிருதுளா மட்டும் அவனுக்காக நம்பிக்கையுடன் காத்துக் கொண்டு இருக்கிறாள்... என்றாவது அவன் மனம் மாறும் என்று...

ஆனால் 'நான் மாற மாட்டேன்...' என்பது போல் கல்லாய் இறுகி போய் இருக்கிறான் ஆதித்யா... அதிலும் அவள் தன்னைக் காதலிக்கிறாள் என்று தெரிந்ததில் இருந்து அவளிடம் சாதாரணமாய்ப் பேசுவதைக் கூட விட்டு விட்டான்... அவளால் தான் அவனை எல்லோரும் ஏதோ கொலைக்காரனை பார்ப்பது போல் பார்ப்பதாக எண்ணியவனுக்கு அவள் மீது ஆத்திரம் மட்டுமே எஞ்சியிருந்தது...

"அவன் பேச்சிலர் லைப்பை நல்லா என்ஜாய் பண்ணட்டும் மாம்..." சகோதரனுக்கு ஆதரவாக மது பேசினாள்...

"நல்லா என்ஜாய் பண்ணுங்க ரெண்டு பேரும்... எனக்கு என்ன வந்தது...?" கோபமாய்ப் பேசிய அபியை கண்டு அக்ஷய்க்கு யோசனையாய் இருந்தது...

"மது... இன்னைக்கு ஒரு முக்கியமான பிரஸ் மீட் போகணும் சொன்னியே..." அவன் மகளுக்கு நியாபகப்படுத்த...

"எஸ் டாட்... நல்லவேளை நியாபகப்படுத்துனீங்க..." என்று அவசரமாக எழுந்தவள் தந்தையின் கன்னத்தில் முத்தமிட்டு,

"தேங்க்ஸ் டாட்..." என்றவள்,

"டாட் எதுக்கும் மாம்மை மாமா கிட்ட கூட்டிட்டு போய் ஹெல்த் செக்கப் பண்ணுங்க... பிளட் பிரஷர் வந்திருக்கப்

போகுது..." என்று அன்னையைக் கிண்டல் அடித்து விட்டு செல்ல...

அக்ஷய் சிரிப்புடன் மகள் செல்வதைப் பார்த்தவன் மனைவி புறம் திரும்பினான்... அவள் முகம் இன்னமும் தெளியாததைக் கண்டு,

"ரக்ஷி... என்ன யோசனை எல்லாம் பலமா இருக்கு...?"

"ஏன்னு உங்களுக்குத் தெரியாதா...?"

அவளின் மனம் அவனுக்குப் புரியாமல் இல்லை... அதற்காக வளர்ந்த பிள்ளைகளை அதற்கு மேலும் வற்புறுத்த அவனுக்கும் மனம் இல்லை...

"இங்கே பார் ரக்ஷி... ஆதியை பத்தி கவலைப்படாதே... அவன் என்னை மாதிரி கல்யாணத்துல இன்ட்ரெஸ்ட் இல்லாம இருக்கிறானோ என்னவோ... அவனை அவன் போக்குல விட்டு தான் பிடிக்கணும்..."

"பாவம்ங்க மிருதுளா... அண்ணாவுக்கும் அண்ணிக்கும் அவளை நினைச்சு ஒரே கவலை... முதல்லயாவது அவ படிச்சிட்டு இருந்தா சரின்னு விட்டுட்டாங்க... ஆனா இப்போ படிப்பும் முடிஞ்சு போச்சு... இனியும் தாமதிக்க முடியாதுன்னு நினைக்கிறாங்க... ஆதி கிட்ட என்னைப் பேச சொல்றாங்க... அவன் கிட்ட போய் நான் என்ன பேச... நாம பத்து வார்த்தை பேசினா அவன் ஒரு வார்த்தை தான் பேசுவான்... சில சமயம் அதுவும் கிடையாது..."

அவள் சொல்வதும் உண்மை தான்... ஆதித்யா சுபாவமே அப்படித்தான் இருந்தது... படிப்பு முடிந்து தொழிலை கையில் எடுத்தவன் தந்தையை விட நன்றாக அதை மேலும் மேலும் வளர்ச்சி பாதையில் கொண்டு சென்றான்... எந்த ஒரு கெட்டப் பழக்கமும் இல்லாத அக்மார்க் நல்ல பையன்... எந்நேரமும் தொழில்... தொழில் தான்... அதைத் தவிர வேறு சிந்தனை எதுவும் இல்லை... அக்ஷயிடம் கூட அளந்து தான் பேசுவான்... அக்ஷயும் மகன் குணம் அறிந்து தேவை இல்லாமல் பேசுவது கிடையாது...

PDF தமிழ் .com

ஆதித்யா புன்னகை முகமாய்ப் பேசும் ஒரே நபர் மதுவந்தி மட்டுமே... அவளையும் ஒரு எல்லைக்கு மேல் தன்னிடம் நெருங்க விட மாட்டான்... அவன் மனதில் என்ன இருக்கிறது என்பது யாருக்கும் தெரியாது... தனக்குள் ஒரு வட்டம் போட்டுக் கொண்டு அமைதியாய் தான் உண்டு தன் வேலை உண்டு என்று வாழ்பவன்...

அவன் மனம் திறக்கும் ஒரே ஒரு நபர் உண்டு... அவரும் இப்போது அவனுடன் இல்லை...

"நாம ரெண்டு பேரும் லேட் மேரேஜ் பண்ணிக்கிட்டவங்க தானே... அது மாதிரி நம்ம பசங்களையும் நினைச்சுக்கோ... சீக்கிரம் இதுக்கு ஒரு நல்ல முடிவு வரும்..." என்ற கணவனைக் கண்டு அவளுக்கும் மேலே பேச முடியவில்லை...

பாவம் அவனும் தான் என்ன செய்வான்... இந்தக் காலத்துப் பிள்ளைகளிடம் வாய் கொடுத்து தப்பிக்க முடியாதே...

"ஹேய் சில்க்கி... வா... வா... பூரி சாப்பிடுறியா..." வாயில் பூரியை வைத்து அடைத்தபடி மது மிருதுளாவை பார்த்து கேட்க...

"உனக்கு எத்தனை தடவை சொல்றது மது... காலையில் இப்படி ஆயில் புட் சாப்பிட்டாதேன்னு... ஹெல்த்தியான புட்டா சாப்பிடுன்னு... அப்புறம் வெயிட் போட்டுடுச்சுன்னு புலம்ப வேண்டியது..." மிருதுளா சொல்லி முடிக்கும் முன் மேலும் இரண்டு பூரிகளை உள்ளே தள்ளிய மது அவளைப் பார்த்து அசடு வழிந்தாள்...

"ஹி... ஹி... எதை வேணும்ன்னாலும் கண்ட்ரோல் பண்ண சொல்லு பண்றேன்... ஆனா இந்த வாயை மட்டும் கண்ட்ரோல் பண்ண சொல்லாதே சில்க்கி... சாப்பிடறதும், பேசுறதும் என்னோட இரண்டு கண்கள் மாதிரி..."

"அப்போ நல்லா வெய்ட் போடட்டும்..." என்ற மிருதுளா மதுவின் இடுப்பு சதையைப் பிதுக்கி காண்பித்து, "இப்படி..." மருத்துவராய் அதட்டினாள் அவள்...

மிருதுளா தந்தையைப் போன்று மருத்துவராகி இருந்தாள்... ஆனால் குழந்தைகள் நல மருத்துவர்...

"ஏய்... நான் உட்கார்ந்து இருக்கிறதால அப்படிச் சதை தெரியுது... நான் எழுந்து நின்னா உன்னை விட ஸ்லிம் தான்..."

சீரோ சைஸ் உடம்புக்காரியான மிருதுளாவை பார்த்து சற்று பூசினார் போன்ற உடல்வாகு உடைய மது அப்படிச் சொல்ல அதைக் கேட்டு அங்கு இருந்த அனைவரும் சிரித்து விட்டனர்...

ஆனால் ஆதி மட்டும் மிருதுளாவை ஒரு பார்வை பார்த்துவிட்டு தனது உணவை தொடர்ந்தான்...

அவனது ஒற்றைப் பார்வையில் அவள் மனம் உருகி போய் நின்றாள்...

'நீ எப்போடா சிரிப்ப...? உன் சிரிப்பை பார்க்கணும் போல் எனக்கு ஆவலா இருக்கு...' மனதிற்குள் அவனிடம் பேசி கொண்டு இருந்தவள் காதருகே குனிந்த மது,

"சுவிஸ்சா இல்லை குலுமனாலியா...?" என்று கண்சிமிட்டி நமட்டு சிரிப்புடன் கிசுகிசுப்பாய் கேட்க,

"போடி..." என்று கன்னம் சிவந்து வெட்கப்பட்ட மாமன் மகளைப் பார்த்து பெருமூச்சு விட்ட மது,

"பார்த்து ரசிக்க வேண்டியது ஜடம் போல் சாப்பாட்டைக் காணாதது மாதிரி மொக்கிட்டு இருக்கு... டேய் அண்ணா உனக்கு அறிவே இல்லைடா..." முணுமுணுத்துக் கொண்டு நகர்ந்தவள் கையைக் கழுவிவிட்டு தன்னுடைய கைப்பையை எடுத்துக் கொண்டு,

"போகலாம் சில்க்கி..." என்று கிளம்ப...

"மிருதுளா இரும்மா..." என்ற அபி உள்ளே சென்று தோட்டத்தில் பூத்த ஜாதிப்பூவை சரமாய்த் தொடுத்து வைத்து இருந்ததை எடுத்து வந்து மருமகள் தலையில் சூடினாள்...

PDF தமிழ் .com

அதைக் கண்டு கொள்ளாமல் எழுந்த ஆதி தனது கார் சாவியை எடுத்துக் கொண்டு அலுவலகம் கிளம்பினான்...

"நீயும் வைக்கிறியா மது..." அன்னையின் கேள்விக்கு,

"மாம்... ஜீன்ஸ் போட்டு பூ வச்சா பட்டிக்காடு மாதிரி இருக்கும்... இது எல்லாம் உங்க குத்துவிளக்கு மருமகளுக்குத் தான் சரிப்படும்..." என்றவள் மிருதுளாவை அழைத்துக் கொண்டு ஜான்பீட்டர் வீட்டிற்குச் சென்றாள்...

விக்டர், நிஷாவின் இரண்டாவது மகன் தான் ஜான்... அவன் சிறு வயதில் இருந்து ஆதர்ஷை பார்த்து வளர்ந்ததாலோ என்னமோ அவனுக்குத் தானும் ஒரு இதய மாற்று சத்திர சிகிச்சை மருத்துவராக வேண்டும் என்ற எண்ண விதை அந்தச் சிறு வயதிலேயே அவனுள் ஆழமாய் ஊன்றப் பட்டு விட்டது... அதே போல் வளர்ந்து மருத்துவம் படித்தவன் ஆதர்ஷை போல இதய நோய் சம்பந்தப்பட்ட சிறப்பு மருத்துவராக ஆகிவிட்டான்...

ஆதர்ஷ் மருத்துவமனையில் தான் மிருதுளா, ஜான் இருவரும் பணிபுரிந்தனர்...

அவனது படிப்பிற்கு உதவியது அனைத்தும் அக்ஷய் தான்... அதே போல் நகரத்தை விட்டு சற்று தள்ளி கடற்கரையை அருகே மூவருக்கும் ஒன்று போல் வீடு கட்டி அதில் எல்லோரையும் அருகருகே குடி வர செய்துவிட்டான்...

ஆரம்பத்தில் விக்டர் தன் நிலை குறித்துத் தயங்க அக்ஷியும், அபியும் அவனையும், நிஷாவையும் வற்புறுத்தி தங்களுடன் அழைத்து வந்துவிட்டனர்... அக்ஷய், ஆதர்ஷ், விக்டர் மூன்று குடும்பமும் ஒரே சுற்றுச் சுவருக்குள் தனித் தனி வீடுகளாய் இருந்தது... என்ன தான் அருகில் வந்தாலும் விக்டர் தன் தகுதியை எண்ணி சற்று தள்ளியே இருப்பான்...

"ஜான்... மேரி ஜான்..." குரல் கொடுத்துக் கொண்டே வீட்டினுள் நுழைந்தாள் மது...

"கத்தாம வாயேன்டி..." மிருதுளா காதை பொத்தி கொண்டு சொல்ல...

"அது கொஞ்சம் குஷ்டமாச்சே சில்க்கி..."

மது சொல்லி கொண்டு இருக்கும் போதே ஜான் தானும் கிளம்பி வந்துவிட்டான்... மூவருக்குள்ளும் எழுதப்படாத சட்டம் அது... மூவரும் ஒன்று போல் தான் தங்கள் வேலைக்குக் கிளம்ப வேண்டும் அதுவும் ஒரே காரில்... ஏதாவது ஆத்திரம் அவசரம் என்றால் மட்டுமே இந்தப் பயணம் தடைப்படும்...

அந்த அரை மணி நேர பயணத்தில் உலக விசயம் முதல் வீட்டு விசயம் உட்பட அனைத்தும் அக்கு வேறு ஆணி வேறாக அலசப்பட்டு ஆராயப்படும்... தாங்கள் செய்யும் தவறுகளுக்குப் பாவமன்னிப்பு கேட்கும் இடமும் அது தான்... அதனால் இவர்கள் மூவரிடையே ஒளிவு மறைவு என்பது கிடையாது...

"வாயாடி வந்துட்டியா..." என்றபடி அவள் தலையில் தட்டிய ஜான் மிருதுளாவை பார்த்து வரவேற்பாய் புன்னகைத்தான்...

மிருதுளாவின் உடன் பிறவாத சகோதரன் அவன்... கல்லூரியில் புதிதாய் அவள் சேர்ந்த போது அவன் தான் சீனியர் மாணவர்களின் ராகிங்கில் இருந்து அவளைக் காப்பாற்றினான்... அண்ணனாய் பேருக்கு மட்டும் இல்லாமல் செயலிலும் இருப்பவன்...

"அத்தை எங்கே ஜான்...?" மது கண்களால் வீட்டை அலசிய படி கேட்க...

அவள் கேட்டதும் ஜானின் முகத்தில் இருந்த மகிழ்ச்சி வற்றிப் போய்விட்டது...

"ஜான்..." மது அவனின் தோளை தொட...

"இன்னைக்கு ஈஷ்வரோட பேர்த் டே..." என்றவனது கண்கள் கலங்கி இருந்தது...

PDF தமிழ் .com

அதைக் கேட்டு மதுவின் முகம் இறுகி போனது... அவளது முகத்தில் இருந்தது கோபமா, வருத்தமா, துக்கமா எதுவென்று மிருதுளாவால் கண்டுப்பிடிக்க முடியவில்லை...

"கொஞ்சம் இரு ஜான்... நான் அத்தை கிட்ட சொல்லிட்டு வர்றேன்..." மது உள்ளே செல்ல மற்ற இருவரும் அவளைப் பின் தொடர்ந்தனர்...

அங்கே பூஜையறையில் இரு மதத்து கடவுள்களும் கொலுவீற்றிருக்க நிஷா மௌனமாய் அமர்ந்து கடவுளை வெறித்துக் கொண்டு இருந்தாள்...

"அத்தை..." மதுவின் அழைப்பில் நிஷா திரும்பினாள்...

பிள்ளைகள் மூவரும் கிளம்பி இருப்பதைக் கண்டு அவசரமாய் எழுந்தவள், "வாம்மா..." என்றபடி இரு பெண்களையும் வரவேற்றவள் முகத்தில் மகிழ்ச்சி என்பது சுத்தமாய் இல்லை...

நிஷா உள்ளே சென்று மூன்று கிண்ணத்தில் பாயாசத்தைக் கொண்டு வந்தவள் மூவரிடமும் அதை நீட்டினாள்...

மிருதுளாவும், ஜானும் ஒன்றும் பேசாமல் அதை வாங்கி உண்ண ஆரம்பிக்க மதுவால் அதை உண்ண முடியவில்லை...

அவளுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது... நிஷாவின் வருத்தத்திற்குத் தான் அல்லவா முக்கியக் காரணம்... கையில் இருந்த கரண்டியை கொண்டு பாயாசத்தைக் கிளறிக் கொண்டு இருந்தவளின் தோளை தட்டி ஜான் கண்களால் 'எதையும் காட்டி கொள்ளாதே...' என்பது போல் சைகை செய்தான்...

அவனது சைகையில் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டவள் அந்தப் பாயாசத்தைக் கசப்பை முழுங்குவது போல் ருசி பார்க்காமல் கஷ்டப்பட்டு முழுங்கினாள் நிஷாவிற்காக...

கிளம்பி காரிலேறி அமர்ந்த மதுவிற்கு அழுகை வரும் போல் இருந்தது...

"ஏன் சில்க்கி அவன் இப்படிப் பண்ணினான்...?" மிருதுளாவின் தோளில் சாய்ந்து அவள் விசும்பினாள்...

"ப்ளீஸ் கண்ட்ரோல் யுவர்செல்ப் மது..." மிருதுளா அவளைச் சமாதானப்படுத்தினாள்...

"மது நீயே உன்னைக் காட்டி கொடுத்துடுவ போலிருக்கு... யாருக்கும் எதுவும் தெரியாமல் இருப்பது தான் நல்லது... இல்லை எல்லாரும் உன்னைத் தான் திட்டுவாங்க..."

"பரவாயில்லை ஜான்... அத்தை, மாமாவோட வேதனையைப் பார்க்கும் போது எல்லா உண்மையையும் சொல்லிடணும் போல இருக்கு... எனக்குக் கிடைக்க வேண்டிய தண்டனையா அவங்களோட திட்டை நான் வாங்கிக்கிறேன்..."

"அப்போ நீ தப்பு செஞ்சேன்னு ஒத்துக்கிறியா...?" ஒரு மாதிரி குரலில் அவன் கேட்க...

அடிப்பட்ட பார்வையை அவனை நோக்கி வீசியவள், "நீயே என்னைப் புரிஞ்சிக்கலைன்னா எப்படி...? உன் அண்ணனை பத்தி உனக்குத் தெரியாதா...?" கண்களில் கண்ணீர் வழிய இருந்தவளை கண்டு அவனுக்கு வருத்தமாக இருக்க...

"சரி விடு... ஆரம்பத்தில் இருந்து உங்க ரெண்டு பேருக்கும் ஒத்து வராது... இப்போ பெருசா சண்டை போயிருச்சு... விடு எல்லாம் சரியாகும்..." ஜான் தன் அண்ணனை பற்றிய பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்தான்...

மது அழுத விழிகளைத் துடைத்துக் கொண்டு வெளியில் வேடிக்கை பார்த்தாள்...

'எல்லாம் சரியாய் போகுமா...?' அவளது மனக்கண்ணில் மித்ரேஷ்வரனின் கோபமான முகம் வந்து போனது...

PDF தமிழ் .com

வேதனையுடன் கண்களை மூடி கொண்டவள் இருக்கையில் சாய்ந்தாள்...

அவளால் எத்தனை பேருக்கு வேதனை, வருத்தம்... இதற்குத் தான் ஒரு காரணம் என்றால், அதற்கு அவனும் ஒரு காரணம் அல்லவா... அவன் மீது வருத்தம் இருந்த அதே சமயம் அளவில்லா கோபமும் இருந்தது...

அதற்குள் அவளது அலுவலகம் வந்துவிட இருவரிடமும் விடைப்பெற்று இறங்கினாள்... இதழியலில் முதுகலை பட்டம் பெற்று பிரபல பத்திரிக்கையில் நிருபராய் பணி புரிகிறாள்... தந்தையின் பணப் பலமோ, தொழில் புகழோ வேண்டாம் என்று நினைத்தவள் தனது தைரியத்திற்குச் சவால் விடும் இந்த நிருபர் வேலையைத் தேர்ந்து எடுத்து இருந்தாள்...

அலுவலகத்திற்குள் நுழைந்ததும் புகைப்படக் கலைஞரை உடன் அழைத்துக் கொண்டு இன்று புதிதாய் பதிவியேற்கும் காவல்துறை உதவி ஆணையர் ஏற்பாடு செய்து இருந்த பத்திரிக்கையாளர்களின் சந்திப்பிற்கு அலுவலக வண்டியில் விரைந்தாள்...

வழக்கம் போல் கூட்டம் நடப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டு இருந்த அறையில் நாற்காலியில் அமர்ந்தவள் தனது சிறு குறிப்பேடையும், பேனாவையும் கையில் எடுத்துக் கொண்டு உதவி ஆணையருக்காகக் காத்திருந்தாள்...

நடுத்தர வயதுடைய ஒருவரை எதிர்பார்த்து காத்திருந்தவள் அங்கு வேக நடையுடன் கம்பீரமாய் வந்த இளைஞனை கண்டு ஆச்சிரியம் அடைந்தாள்...

அவன் அருகே வர வர அவளுக்கு நன்கு அடையாளம் தெரிந்தது அவன் யார் என்று...

"மித்து..." அவளையும் அறியாமல் அவளது வாய் முணுமுணுத்தது...

ஆம் ஏழு வருடங்களுக்கு முன் காணாமல் போன மித்ரேஷ்வரன் தான் இன்று காவல்துறை உதவி

ஆணையராய் பொறுப்பேற்று ஏழு வருடங்களுக்குப் பின் முதன் முறையாய் சென்னையில் காலடி எடுத்து வைத்திருக்கிறான்...

அவள் அவனைக் கண்ணிமைக்காமல் ஆச்சிரியமாய்ப் பார்த்தது போல் அவனும் அவளைப் பார்த்துக் கொண்டே தான் உள்ளே நுழைந்தான்... ஆனால் அவனது பார்வையில் எந்த உணர்வும் இல்லை... பார்வையில் மட்டுமா அவனது முகத்திலும் தான்... அந்தளவுக்கு அவனது முகம் கற்பாறையாய் இறுகி இருந்தது...

ஈர்க்கும்...

மதுவந்தியினால் தன் கண்களை நம்ப முடியவில்லை... கண்கள் இரண்டையும் கசக்கி கொண்டு மித்ரேஷை பார்த்தாள்... அவள் கண்கள் பொய் சொல்லவில்லை... உண்மை தான் இது அவன் தான் என்று அவளது உள் மனம் ஆர்ப்பாட்டமாய் ஆர்ப்பரித்தது... அதற்கு ஏற்றார் போல் அவனும் பேச ஆரம்பித்தான்...

"என் பெயர் மித்ரேஷ்வரன் ஐபிஎஸ் அது உங்க எல்லோருக்கும் தெரியும்... நான் இங்கே பேச வந்த விசயம் வேறு... அது என்னவென்றால் சிட்டியில் சட்ட ஒழுங்கில் சில மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறோம்... அது பற்றி விரிவாக விளக்கி சொல்ல தான் இந்தக் கூட்டம்..." அடுத்து அவன் பேசிய வார்த்தைகள் எதுவும் அவள் காதில் விழவில்லை...

கம்பீரமான அவனது குரல் கேட்டு, 'இது அவனே தான்...' அவளது மனம் குதூகலம் அடைந்தது...

எத்தனை வருடங்கள் ஆயிற்று அவனைப் பார்த்து... அன்று தன்னிடம் சண்டை போட்டு விட்டு சென்றவன் முழுதாய் ஏழு வருடங்கள் கழித்து இன்று தான் அவள் கண்ணில் விழுந்து இருக்கிறான்...

PDF தமிழ் .com

வருடக்கணக்கில் பிரிந்த சொந்தத்தை மீண்டும் சந்திக்கும் போது ஏற்படும் ஒரு நெகிழ்ச்சியான உணர்வில் தத்தளித்தவள் கண்ணில் சட்டென்று கண்ணீர் தளும்பியது... யாருக்கும் தெரியாமல் ஆழ மூச்செடுத்து கண்ணீரை அடக்கி கொண்டாள்...

அவளது அன்புக்குரிய நிஷா அத்தை மட்டும் இப்போது அவரது மகனை கண்டால்...??? அந்தக் காட்சியை மனக்கண்ணில் ஓட்டி பார்த்தவளுக்கு அத்தையின் மகிழ்ச்சியைத் தனது மகிழ்ச்சியாய் எண்ணிவளுக்குப் புன்னகை அழையா விருந்தாளியாய் வந்து உதட்டில் ஒட்டி கொண்டது...

அதற்குள் கூட்டம் முடிந்து எல்லா நிருபர்களும் கலைந்து போக அதில் தன்னுணர்வு அடைந்தவள் தானும் எழுந்தாள்... எந்தக் குறிப்பும் அவள் எடுக்கவில்லை... அவன் பேசியதை கவனித்து இருந்தால் அல்லவா குறிப்பு எடுத்து இருக்க முடியும்...

என்ன செய்வது என்று யோசித்தவள் அவளுடன் பணியாற்ற வந்த புகைப்படக் கலைஞரான விஷ்ணுவை நெருங்கி,

"விஷூ... எனக்கு ஒரு முக்கியமான ஒரு வேலை இருக்கு... எனக்கு லீவு சொல்லிரு..."

அவளை ஒரு மாதிரியாய் பார்த்தவன், "சரி ரிப்போர்ட்டை கொடு..." என்க...

"சாரி விஷூ... ஏதோ நியாபகத்தில் எழுத மறந்துட்டேன்... எப்பவும் நீ உன் மொபைல்ல ரிக்கார்ட் பண்ணி இருப்ப தானே... அதைக் கொடுத்துரு..."

விஷ்ணு எப்பவுமே வேலை விசயத்தில் கொஞ்சம் பெர்பெக்ட் தான்...

“ஓகே...” என்றவன்,

"எப்பவும் இப்படி இருக்க மாட்டியே மது... ஆர் யூ ஆல்ரைட்..." அக்கறையாய் கேட்டவனிடம்,

"நத்திங் விஷூ... ஓகே பை யா..." என்றபடி அவனிடம் விடைப்பெற்றவள் நேரே மித்ரேஷின் அலுவலகத்திற்குத் தான் வந்தாள்...

"சார் உங்களைப் பார்க்க ஒரு பொண்ணு வந்திருக்கு..." மித்ரேஷிடம் கூறினார் அந்தக் கடைநிலை காவலர்...

'யாராக இருக்கும்...?' என்று யோசித்தவனின் நினைவில் மதுவின் முகம் நிழலாட அவனது முகம் கடினமுற்றது...

"இப்போ நான் யாரையும் பார்க்க முடியாதுன்னு போய்ச் சொல்லுங்க..." என்று உத்தரவாய் சொன்னவன் தன் வேலையில் மூழ்கி போனான்...

அந்தக் காவலர் அவன் சொன்னதை அப்படியே கூற அதுவரை நெகிழ்ந்து இருந்த மதுவின் மனம் கோபத்தில் கொந்தளிக்க ஆரம்பித்தது...

'பெரிய இவன்... ரொம்பத் தான் பந்தா காட்டுறான்... இவன் என்ன பெர்மிசன் கொடுக்கிறது... நான் என்ன கேட்கிறது... நான் போய்ப் பார்த்தா என்ன என் கழுத்தையா சீவிருவான்...' எகிறிய மனதை அவனது பதவியை எண்ணி அடக்கி கொண்டாள்...

இதே இது வீடாய் இருந்து இருந்தால் நடந்து இருக்கும் கதையே வேறு... இது அவனது அலுவலகம்... அதிலும் காவல்துறையில் பொறுப்பான பதவியில் இருக்கிறவன் பெயரை தான் களங்கப்படுத்த வேண்டாம் என்று அமைதியாய் அங்கு இருந்த நாற்காலியில் அமர்ந்தாள்... அதுவும் அவளது அன்பு அத்தை நிஷாவிற்காக... பெண் பிள்ளை இல்லாத நிஷாவுக்கு அவளும், மிருதுளாவும் செல்லப் பிள்ளைகள் அல்லவா...

தன்னால் இத்தனை வருடங்கள் காணாமல் போன அவரது அன்பு மகனை மீண்டும் அவரது கண் முண் நிறுத்திய பிறகே அவளால் நிம்மதியாய் இருக்க முடியும்... இத்தனை

PDF தமிழ் .com

வருடங்களாய் அவளது மனதை உறுத்திய குற்றவுணர்ச்சி சட்டென்று விலக அவளது மனம் மயிலிறகு போல் லேசானது...

வீட்டிற்கு அழைத்து எல்லோரிடமும் மித்ரேஷை தான் கண்ட விசயத்தைக் கூற அவளது மனம் துடித்தது... ஆனால் அவன் என்ன மாதிரியான மனநிலையில் இருக்கிறான் என்று அவளுக்குத் தெரியவில்லையே... மீண்டும் வர மாட்டேன் என்று முரண்டினால் என்ன செய்வது...? வீட்டில் இருப்பவர்களை ஆசை காட்டி மோசம் செய்தது போல் ஆகிவிடாதா...? அதற்காக அவனை இப்படியே விட்டு விட்டு செல்லவும் அவளுக்கு மனம் வரவில்லை...

அவன் என்ன மனநிலையில் இருந்தாலும் பரவாயில்லை... பிடிவாதமாய்க் காத்திருந்து அவனை வீட்டிற்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்று உறுதியாய் எண்ணியவள் அவன் அழைப்பிற்காகக் காத்திருக்க ஆரம்பித்தாள்...

ஆனாலும் அவளது வாயும், கையும் துருதுருவென்று இருந்தது... அடுத்த நொடி நிஷாவிற்கு அலைப்பேசியில் அழைத்தாள்...

"அத்தை..." என்று ராகம் போட்டவளை கண்டு மறுமுனையில் இருந்த நிஷாவிற்குச் சிரிப்பு வந்தது...

"அத்தை இன்னைக்கு நைட் நம்ம வீட்டில் ஒரு விருந்துக்கு ஏற்பாடு பண்றோம்..."

"மது சொன்னா பண்ணாம இருக்க முடியுமா...? பண்ணிடலாம்... இன்னைக்கு என்ன விசேசம் மது...?"

"இன்னைக்கு ஒரு முக்கியமான கெஸ்ட்டை நான் கூட்டிட்டு வர போறேன்..."

"அப்படி யாரு மது முக்கியமான கெஸ்ட்...?"

"அது சஸ்பென்ஸ்... உங்களுக்குத் துணைக்கு அபி, அனி எல்லாரையும் கூப்பிட்டுக்கோங்க... ரெண்டு பேரும் வேலை இல்லாம சும்மா தான் இருக்காங்க... அவங்களுக்கு நல்லா

வேலை கொடுங்க... அபிக்கு மட்டும் ஸ்பெசலா அம்மியில் மசாலா அரைக்கிற வேலை கொடுங்க... என்னை ரொம்ப டார்ச்சர் பண்றாங்க..."

"மது... உன்னை..." மது சொன்ன விதத்தில் நிஷா சிரித்து விட்டாள்...

"அப்புறம் அத்தை நான் சொன்ன மெனு எல்லாம் சாப்பாட்டில் இருக்கணும்... மீன் குழம்பு, வஞ்சிர மீன் வறுவல், இறால் தொக்கு... அப்புறம்..."

அந்தப் பக்கம் இருந்த நிஷாவிடம் மௌனமே பதிலாய் கிடைக்க...

"அத்தை லைனில் இருக்கீங்களா...?"

"இருக்கேம்மா... சொல்லு..." அவளது கரகரத்த குரலே அவள் அழுது கொண்டு இருப்பதைச் சொல்லாமல் சொல்லியது...

அத்தையின் அழுகைக்குக் காரணம் மதுவிற்கு நன்கு தெரியும்... ஏனெனில் இது எல்லாம் மித்ரேஷ்க்கு பிடித்த உணவு வகைகள்...

"ஏன் அத்தை உலகத்திலேயே சீ ஃபுட் உங்க பையனுக்கு மட்டும் தான் பிடிக்குமா... எங்களுக்கு எல்லாம் பிடிக்காதா...? எப்ப பாரு அவன் நினைப்பு தானா..."

அவள் பேசி கொண்டு இருக்கும் போதே யாரோ கனைக்கும் சத்தம் கேட்டு அவள் திரும்பி பார்க்க அங்கு மித்ரேஷ் நின்று கொண்டு இருந்தான்... அவனைக் கண்டு அவள் முகம் மலர,

"அத்தை நான் வைக்கிறேன்..." என்று அவசரமாக அலைப்பேசியை அணைத்தவள் அவனைப் பார்த்து,

"மித்து..." என்று ஆசையாக அழைக்க... அவளை ஏறெடுத்தும் பார்க்காமல்,

PDF தமிழ் .com

"மேடத்தை வழியை விட்டு நிக்கச் சொல்லுங்க..." அருகில் இருந்த காவலரிடம் அவன் சொல்ல அதில் மனம் அடிப்பட்டுப் போனவளாய் அவளே விலக அவன் விரைந்து வெளியேறி அவனது ஜீப்பில் ஏறி சென்றுவிட்டான்...

அவனது உதாசீனத்தில் அவளுக்கு மீண்டும் அழுகை வரும் போல் இருந்தது... அப்படி என்ன தவறு செய்துவிட்டாள் என்று தன் மேல் இவ்வளவு கோபம் காட்டுகிறான்... அவனும் தவறு செய்தவன் தானே... எல்லாவற்றிற்கும் பிள்ளையார் சுழி போட்டது அவன் தானே... செய்வது எல்லாம் செய்துவிட்டு இப்போது பெரிய இவன் மாதிரி தன்னிடம் கோபப்படுகிறான்...

'எத்தனை மணி ஆனாலும் பரவாயில்லை அவனை வீட்டிற்கு அழைத்துப் போகாமல் இந்த இடத்தை விட்டு நகருவதாய் இல்லை... உனக்குத் தான் பிடிவாதம் இருக்குமா... எனக்கும் இருக்கும்...' மனதில் சொல்லி கொண்டவள் அங்கேயே அமர்ந்து அவனது வரவிற்காகக் காத்திருந்தாள்...

வெளி வேலை முடிந்து மாலையில் அலுவலகம் வந்தவன் இன்னமும் போகாமல் அங்கே அமர்ந்து இருந்த மதுவை தூரத்தில் இருந்தே பார்த்துவிட்டவன் அவள் அருகில் வரும் போது வேண்டும் என்றே பார்க்காதது போல் உள்ளே சென்றுவிட்டான்...

அதில் உச்சப்பட்ச கொதிநிலையை அடைந்தாள் மது...

இரவு ஏழு மணி வரை வழக்குச் சம்பந்தமான கோப்புக்களைப் பார்த்துக் கொண்டு இருந்தவன் வீட்டிற்குக் கிளம்பினான்... அப்போதும் அவனின் வரவிற்காகக் காத்திருந்த மதுவை கண்டு ஒற்றைப் புருவத்தை உயர்த்தி யோசித்தவன் அவள் அவனைப் பார்க்கும் முன் தனது பார்வையைத் திருப்பிக் கொண்டு வெளியில் விரைந்தான்...

'போடா போ... எப்படி நீ கிளப்புறன்னு நானும் பார்க்கிறேன்...?' மனதில் நினைத்தவள் அசையாமல்

அமர்ந்து இருந்தாள்...

மித்ரேஷ் தனது ஜீப்பில் ஏறியவன் அதைக் கிளப்ப எத்தனித்த ஓட்டுநரிடம் வேண்டாம் என்பது போல் சைகை செய்துவிட்டு பத்து நிமிடம் காத்து இருந்தான்...

அவள் தான் அவனை விடப் பிடிவாதக்காரி ஆயிற்றே... கிளம்பும் விழியைக் காணோம்...

'என்ன நினைத்துக் கொண்டு இருக்கிறாள் இவள்...?' எரிச்சல் அடைந்தவன் ஓட்டுநரிடம் இருந்து சாவியை வாங்கிக் கொண்டு,

"காலையில் வந்தால் போதும்..." என்று அவரைப் போகச் சொல்லிவிட்டு தனது அலுவலகத்தை நோக்கி நடந்தான்...

தன் முன் வந்து ஒன்று பேசாமல் நின்று இருந்த மித்ரேஷை கண்டு அவளும் அழுத்தமாய்க் கையைக் கட்டி கொண்டு உட்கார்ந்து இருந்தாள்... ஆனால் தனது பார்வையை மட்டும் அவனின் முகத்தில் இருந்து அவள் அங்கும் இங்கும் திருப்பவில்லை... அதே போல் அவனிடம் பேச முயற்சிக்கவும் இல்லை...

அவனுக்குத் தெரியும் தானாய் வலிய சென்று பேசாவிட்டால் அவள் பேச மாட்டாள் என்று... அதே சமயம் இந்த இடத்தை விட்டு அசையவும் மாட்டாள் என்றும்...

"தனியா இங்கே எல்லாம் இருக்கக் கூடாது... வீட்டுக்கு கிளம்பு..." வார்த்தைகளைக் கடித்துத் துப்பினான் அவன்... அவளின் பிடிவாதம் கண்டு அவனுக்குக் கோபம் வந்தது...

"நான் ஒண்ணும் தனியா இல்லையே..." என்று தோளை குலுக்கியவளை வெறித்துப் பார்த்தவன்,

"என்ன என்னையைச் சொல்லுறியா... நான் இப்ப கிளப்பிருவேன்... உன் கூடத் துணைக்கு இருக்க என்னால் எல்லாம் முடியாது..."

"சரி போ..." அவனது கண்ணைப் பார்த்து அழுத்தமாய் உரைத்தவள் சிறிதும் அசையவில்லை...

PDF தமிழ் .com

அவன் போக மாட்டான் என்ற நம்பிக்கை இருந்தது அவளுக்கு... அவள் மேல் என்ன தான் கோபப்பட்டாலும் அவனுக்கு அவள் மேல் அக்கறை உண்டு என்பதை அவள் அறிவாள்... அதை விட நிஷா அத்தையின் வளர்ப்பில் அவளுக்கு அத்தனை நம்பிக்கை...

"இப்போ உனக்கு என்ன வேணும்...?" எரிச்சலில் சிடுசிடுத்தான்...

"நீ தான்..."

"என்ன...?" அவன் முறைத்த முறைப்பில் நாக்கை கடித்துக் கொண்டவள்,

"நீ வீட்டுக்கு வரணும்..." அவள் சொன்னதில் அவனது முகம் இறுகி போனது...

"என் வீட்டுக்கு வர சொல்ல நீ யாரு...? அங்கே எனக்கு எப்ப போகணும்ன்னு தோணுதோ அப்ப நான் போவேன்... நீ உன் வேலையைப் போய்ப் பாரு..."

"மித்து... அப்படி எல்லாம் பேசாதே... நிஷா அத்தை நீ இல்லாம ரொம்பத் தவிச்சு போயிருக்காங்க... தினமும் உன்னை நினைச்சு அழுறாங்க..."

அன்னையைப் பற்றிச் சொன்னதும் அவனது கண்கள் கலங்கியது... சட்டென்று தனது உணர்வுகளை அடக்கி கொண்டவன்,

"எங்க அம்மா மேல எனக்கும் பாசம் இருக்கு... இடையில் நீ ஒண்ணும் வர தேவை இல்லை..."

"அப்போ வீட்டுக்கு வா..."

"ஏன் வந்தா அவர் என்னைத் தூக்கி போட்டு மிதிக்கிறதுக்கா...?" கோபத்துடன் வந்தது அவனது வார்த்தைகள்...

அவள் புரியாமல் அவனைப் பார்க்க அதில் அவன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்...

"நீ கிளம்பு... நான் பிறகு வர்றேன்..."

"இல்லை நீ இப்படியே எஸ்கேப் ஆகிட்டேனா...? ஏற்கெனவே உன்னைப் பிரிஞ்சு ஏழு வருசம் அவஸ்தைப்படுறது போதாதா..."

அவளது வார்த்தையில் அவனது கண்கள் சுருங்கி அவளை உற்று நோக்கியது... அடுத்தக் கணம் இயல்பு நிலைக்கு மாறியவன்,

"இப்போ என்ன தான் பண்ண சொல்ற...?"

"ஒண்ணு நீ என் கூட வா... இல்லை நான் உன் கூட வர்றேன்... எப்படியோ நீ வீட்டுக்கு வந்தா போதும்..."

"நீ மாறவே இல்லை... அதே பிடிவாதம்..."

"மாறினா அது மது இல்லையே..." என்றவள் கலகலப்பாய் சிரிக்கத் துவங்க...

அவளது சிரிப்பை ஆழ்ந்த பார்வையால் பார்த்துக் கொண்டு இருந்தவன் அவளது 'என்ன...?' என்ற கண்ணசைவில் தன்னை மீட்டு கொண்டவன்,

"வா..." என்று அவளை அழைத்துவிட்டு முன்னால் நடந்தான்...

"அப்பா மித்ரேஷ்வரா... இப்படி ஸ்பீடா நடந்தா எப்படி...? கொஞ்சம் மெதுவா போ..." என்றபடி அவனது வேக நடைக்கு ஈடு கொடுக்க முடியாமல் அவன் பின்னால் ஓடினாள் அவள்...

ஜீப்பில் அவனுடன் பயணம் செய்யும் போது இருவரிடையே கனத்த மௌனம் நிலவியது... இருக்கிற நல்ல மனநிலை எதையாவது தான் பேசி கெடுத்து விடக்கூடாதே என்று அவள் எதுவும் பேசாமல் அமைதியாய் வந்தாள்... அவனும் எதுவும் பேசவில்லை...

ஜீப் வீட்டிற்குச் செல்லாமல் வேறு வழியில் செல்வதை உணர்ந்து மது, "வீட்டுக்கு இந்த வழியில் போகக் கூடாது...

PDF தமிழ் .com

அப்படிப் போகணும்..." என்றவளை நோக்கி 'எனக்கேவா' என்பது போல் அலட்சிய பார்வை ஒன்றை வீசியவன்,

"அது எனக்குத் தெரியும்... இது நான் தங்கி இருக்கிற குவார்ட்டர்சுக்கு போகும் வழி..."

"இப்போ அங்கே எதுக்கு...? முதல்ல வீட்டுக்கு போ..."

"ம்ப்ச்... சொன்னா புரிஞ்சிக்கணும்..." என்றவன் அதற்கு மேல் ஒன்றும் பேசவில்லை...

'என்ன புரிஞ்சிக்கணுமாம்...' மனதில் கோபம் எழுந்தது அவளுக்கு... ஆனாலும் அமைதியாய் வெளியில் வேடிக்கை பார்த்தாள்...

காவலர் குடியிருப்பில் அவனது வீட்டின் முன் ஜீப்பை நிறுத்தியவன் அவளை இறங்க சொல்லிவிட்டு வீட்டின் கதவை திறந்து மின்விளக்கு, மின்விசிறியை போட்டவன் உள்ளே வந்தவளை கண்டு,

"நீ உட்காரு... நான் இப்போ வந்துடுறேன்..." என்றவன் அறைக்குள் சென்று கதவை சாத்தி கொண்டான்...

வீட்டை நோட்டமிட்டுக் கொண்டு அமர்ந்து இருந்தாள் மது... அங்கு மேசை மீது இருந்த அவனது குடும்பப் புகைப்படத்தைப் பார்த்தவள் அதன் அருகில் சென்றாள்...

நிஷா, விக்டர் நடுவில் நிற்க மித்ரேஷும், ஜானும் இருபக்கத்திலும் நின்று இருந்தனர்... அதில் மித்ரேஷ் காதில் கடுக்கனும், தலைமுடியை நன்கு வளர்த்துக் கொண்டை போல் முடியை ஸ்டைலாகப் போட்டு இருந்தான்... அவனது வண்ணமயமான உடையைப் பார்த்தவளுக்குப் புன்னகை எழுந்தது...

"எப்ப பாரு கழைக் கூத்தாடி மாதிரி என்னடா ட்ரெஸ் இது...?" விக்டர் எப்போதும் மித்ரேஷை திட்டும் வார்த்தைகள் இப்போதும் நினைவுக்கு வந்து அவளுக்குச் சிரிப்புப் பொங்கியது...

அந்நேரம் அறைக்கதவு திறக்கும் சத்தத்தில் அவள் திரும்பினாள்... திரும்பி பார்த்தவள் அவனது தோற்றத்தில் தெரிந்த மாற்றத்தில் கண்ணிமைக்க மறந்தவளாய், மூச்சுவிட மறந்தவளாய் நின்று இருந்தாள்...

நீல நிற ஜீன்சும், இளம் பழுப்பு நிறத்தில் முழுக்கை சட்டை அணிந்து அதை முழங்கை வரை மடித்து விட்டு, ஒட்ட வெட்டிய தலை முடியும், கத்தை மீசையுமாய் அழகாய் கம்பீரமாய் நின்று இருந்தவனின் அழகு இது நாள் வரை அவனிடத்தில் அவள் கண்டது கிடையாது...

விழியகல பார்வையை அவன் மீது இருந்து அகற்றிக் கொள்ளாமல் நின்றிருந்தவளின் நிலை கண்டு அவள் அருகில் வந்தவன் அவள் முகத்தின் முன் விரலால் சொடக்கு போட்டு அவளது மோனநிலையைக் கலைத்தவன் தன்னை முன்னாடியும் பின்னாடியும் மாடல் போல் திருப்பி அவளிடம் காட்டியவன்,

"நீ சொன்ன மாதிரி டிரெசிங் சென்ஸ் மாத்திவிட்டேன்... நீ சொன்ன மாதிரி சமுதாயத்தில் ஒரு கௌரவமான மனிதனாய் தலை நிமிர்ந்து விட்டேன்... இன்னமும் அந்தப் பந்தயப் போட்டி நம்மிடையே இருக்குன்னு தான் நான் நினைக்கிறேன்... அதுக்கு இப்போ நான் ரெடி... என்னோடு விளையாட நீ ரெடியா..."

அவனது வார்த்தையில் அவள் அதிர்ச்சியில் உறைந்து போய் நின்று இருந்தாள்...

"என்ன பயமா இருக்கா...? வெளியில் தான் நான் டீசன்ட்டான போலீஸ்... ஆனா உள்ளுக்குள்ள அதே பொறுக்கி ஈஷ்வர் தான்... போலீஸ் டிரெஸ்க்கு மரியாதை கொடுத்து தான் நான் அமைதியா இருந்தேன்... அதுக்காக நான் ரொம்ப நல்லவன்னு கனவு காணாதே..."

சிறுத்தை தனது புள்ளிகளை என்றுமே மாற்றிக் கொள்ளாது என்று எங்கேயோ படித்தது அவளுக்கு இப்போது நினைவு வந்தது... அவனும் அது போல் தானா...???

PDF தமிழ் .com

ஈர்க்கும்...

விக்டர் வீட்டில் அனைத்து குடும்ப உறுப்பினர்களும் குழுமி இருந்தனர்... ஆதித்யா மற்றும் மிருதுளா இருவரை தவிர... ஆதித்யா பொதுவாக இந்த மாதிரி விருந்துகளை அறவே தவிர்த்து விடுவான்... ஏற்கெனவே ஒட்டாத தன்மையுடன் இருப்பவனுக்கு இந்த விருந்து எல்லாம் அவனை உள்ளுக்குள் இன்னமும் இறுகச் செய்துவிடும்... மிருதுளா வராததற்குக் காரணம் இன்று புதிதாய் உலகிற்கு அவதரித்த குழந்தை ஒன்றுக்கு மூச்சு திணறல் ஏற்பட அதற்குச் சிகிச்சை அளிக்க வேண்டி மருத்துவமனையில் இருந்தாள்...

"நிஷா... மது சொன்னாங்கிறதுக்காக இவ்வளவு கஷ்டப்பட்டுச் சாப்பாடு சமைச்சு வச்சிருக்கியே... அந்த வாலு நம்மளை ஏமாத்த ஏதாவது திட்டம் போட்டிருக்கப் போகுது..." அபிக்கு மகளைப் பற்றி நன்கு தெரியும்... அதனால் அப்படிக் கேட்டாள்...

"இல்லை அபி... மது பொய் சொல்ல மாட்டாள்..." நிஷா மதுவிற்காகப் பரிந்து பேசினாள்... அது என்னமோ உண்மை தான் வீட்டில் அடங்காமல் துள்ளும் மது இரு அத்தைகளிடம் பெட்டி பாம்பாய் அவர்களின் அன்புக்கு கட்டுப்பட்டு அடங்கிவிடுவாள்...

"அண்ணி... மது விளையாட்டு பொண்ணா இருந்தாலும் பொறுப்பானவள் தான்..." அனி தன் பங்கிற்கு மருமகளுக்குப் பரிந்து கொண்டு வர...

அபி அக்ஷயை பார்த்தாள்... "உங்க பங்குக்கு நீங்க ஏதாவது உங்க பொண்ணோட அருமை, பெருமைகளை அள்ளி விடுங்க... நீங்க மட்டும் ஏன் சும்மா இருக்கீங்க...?"

"அம்மா தாயே உங்க அம்மா, பொண்ணு பிரச்சினையில் என்னை இழுக்காதே..." அவன் கையெடுத்து கும்பிட்டான்...

"அதானே மாப்பிள்ளைக்கு ரெண்டு பேரு தயவு வேணுமே..." என்று சொல்லி கண்சிமிட்டி சிரித்தான்

ஆதர்ஷ்...

"ஹி... ஹி..." அசடு வழிந்தான் அக்ஷய்...

அது என்னமோ தெரியவில்லை பெண்களிடம் இடைவெளி விட்டு பழகுபவனின் வாழ்க்கை இந்த இரு பெண்களின் கையில் அடங்கி இருக்கிறது என்றால் மிகையில்லை... அவனின் உயிர் நாடி மனைவியும், மகளுமான இரு பெண்கள் தான்... அதிலும் மகள் பிறந்த பின் அபிக்கு தான் செய்த தவறை எண்ணி அவன் வருந்தாத, வேதனை கொள்ளாத நாட்கள் இல்லை... அதனால் இன்னமும் அபியின் மேல் அவனது அன்பு அதிகமானது...

இதை எல்லாம் பார்த்துக் கொண்டு ஓரமாய் அமர்ந்து இருந்தான் விக்டர்... முதலில் இருந்தே அவன் அப்படித்தான் என்றாலும் மகன் காணாமல் போனதில் இருந்து அவன் இன்னமும் ஒடுங்கி போனான்... பேச்சும் குறைந்து போனது...

ஜான் தொலைக்காட்சியில் ஒவ்வொரு ஒளியலை வரிசையை மாற்றிக் கொண்டு இருந்தவன் திடீரென்று, "மாம்... நம்ம ஈஷ்வர்..." என்று அலற அதில் எல்லோரது கவனமும் அங்குச் சென்றது...

காலையில் மித்ரேஷ் பத்திரிக்கையாளர்களிடம் பேசி கொண்டு இருந்தது இப்போது ஒளிபரப்பப்பட்டுக் கொண்டு இருந்தது...

கம்பீரமாய்க் காவலதிகாரி உடையில் பேசி கொண்டு இருந்தவனைக் கண்டு எல்லோரும் ஆச்சிரியத்தில் இமைக்க மறந்தனர்...

"ஹேய் நம்ம ஈஷ்வர்..." எல்லோரும் உற்சாகமாய் ஆர்ப்பரித்தனர்...

பின்னே இருக்காதா... ஏழு வருடங்கள் கழித்து அவனைப் பார்த்ததால் மகிழ்ச்சி கடலில் மூழ்கினர் அனைவரும்... அவன் உயிருடன் இருக்கிறானா இல்லையா என்று கூடத் தெரியாமல் பரிதவித்தவர்கள் முன் அவன் உயிருடன் அதே

சமயம் உயர்ந்த பதவியில் காட்சி அளித்தால் சந்தோசப்படாமல் எப்படி இருக்க முடியும்...

விக்டர் கண்ணிமைக்க மறந்து மகனை பார்த்துக் கொண்டு இருந்தான்... எந்த மகனை உதவாக்கரை, பொறுக்கி என்று திட்டி அடித்தானோ அவன் இன்று படித்துக் காவல்துறையில் பெரிய அதிகாரியாய் பதவியில் இருப்பதைக் கண்டு அவனால் நம்ப முடியவில்லை... மனம் தவறு செய்துவிட்ட குற்றவுணர்ச்சியில் தவியாய்த் தவித்தது...

நிஷா நெகிழ்ந்து போய்க் கண்களில் கண்ணீர் வழிய அமர்ந்து இருந்தாள்... அவளின் சந்தோஷமான வாழ்க்கைக்குச் சான்றாகப் பிறந்த முதல் பிள்ளை அல்லவா அவன்... அவளது அத்தனை மகிழ்ச்சிக்கு சொந்தமான பிள்ளை திடீரென்று சொல்லாமல் கொள்ளாமல் வீட்டை விட்டுக் காணாமல் போனால் அவளின் மனது எந்தளவுக்குப் பரிதவித்துப் போயிருக்கும்... அவன் சென்றதற்கான காரணம் என்ன என்று தெரியாமல் அவனை நினைத்து அவள் உள்ளுக்குள் மருகி வேதனை அடைவது அவள் மட்டுமே அறிவாள்...

காணாமல் போன பிள்ளை இன்று உயர்ந்த நிலையில் இருப்பதைக் கண்டு அந்தத் தாயுள்ளம் பூரித்துப் போனது... அதே சமயம் அவனது உயர்வுக்குத் தன்னால் தோள் கொடுக்க முடியவில்லையே, அவனது துன்பத்தைத் தான் தாங்க முடியவில்லையே என்ற ஆதங்கம், தவிப்பு அந்தத் தாயின் மனதில் எழாமல் இல்லை...

கையில் ஒற்றை ரூபாய் கூட இல்லாமல் சென்ற மகன் இந்த நிலை அடைய என்ன என்ன கஷ்டப்பட்டானோ என்று உள்ளுக்குள் குமைந்து கொண்டு இருந்தாள் நிஷா ஒரு தாயாய்...

மிருதுளா மருத்துவமனையில் இருந்து வந்து குளித்து வேறு உடை அணிந்து கொண்டு விக்டர் வீடு நோக்கி சென்று கொண்டு இருந்தாள்... அந்நேரம் அவளது

அலைப்பேசி அழைத்தது... எடுத்ததும் ஜானின் உற்சாகக் குரல் ஒலித்தது...

"மிருதுளா... ஈஷ்வர் கிடைச்சுட்டான்..." அவனின் சந்தோசத்தில் அவளுக்கும் குதூகலம் உண்டாகியது... மித்ரேஷூம் அவளது சிறுவயது தோழன் அல்லவா...

"என்ன சொல்ற ஜான்...? எங்கே... எப்படி...? என்னால நம்ப முடியலை..." என்றவளிடம் மித்ரேஷை தொலைக்காட்சியில் தான் கண்டதை அவன் பற்றிச் சொன்னவன் நேரில் வரும்படி அவளிடம் கூறி விட்டு அலைப்பேசியை அணைத்தான்.

மிருதுளா உற்சாகம் பொங்க வேகமாய்ச் செல்ல துவங்கும் போது அப்போது தான் ஆதித்யா அங்கு வந்தான்... காரில் இருந்து இறங்கி கொண்டு இருந்தவனை நோக்கி அவள் ஓடினாள்... மித்ரேஷூம் ஆதியும் எந்தளவுக்கு நெருங்கிய நண்பர்கள் என்று அவளுக்குத் தெரியும்...

"மாமா... மாமா..." என்று அழைத்தவளை கண்களில் நெருப்பு பறக்க பார்த்த ஆதி,

"எத்தனை தடவை உனக்குச் சொல்றது.... என்னை மாமான்னு கூப்பிடாதேன்னு..." பல்லை கடித்தான்...

மற்ற நாளாய் இருந்து இருந்தால் அவள் குறும்பாய் ஏதாவது பதில் அளித்து இருப்பாள்... ஆனால் இன்று தன்னவனுக்குப் பிடித்த செய்தியை சொல்லி அவனின் முகத்தில் வெகு நாட்களுக்குப் பின் சந்தோசத்தைக் காண ஆவலாய் இருந்தாள்...

"ம்ப்ச்... அதை விடுங்க மாமா..." என்றவள் மேலே பேசும் முன்...

"விட்டுத் தொலைன்னு தான் நானும் சொல்றேன்... விட மாட்டேங்கிறியே..." முணுமுணுத்தவனை நேர்ப்பார்வையாய் பார்த்தாள் மிருதுளா...

"அப்படி எல்லாம் விட முடியாது மாமா..." உறுதியாய் மறுத்தவளை அவன் முறைத்து பார்க்க,

"ம்... இப்ப தான் முறைமாமன்னு ப்ரூவ் பண்றீங்க... குட் இப்படித்தான் இருக்கணும்..." என்று அவனது முறைப்பையும் சிலாகித்துப் பாராட்டியவளை கண்டு அவனின் கோபம் கொஞ்சம் கொஞ்சமாய் அதிகரிக்கத் துவங்கியது...

ஒன்றும் பேசாமல் வீட்டிற்குள் செல்ல முற்பட்டவனை அவனின் வார்த்தை தடுத்து நிறுத்தியது...

"மாமா... நான் சொல்ல வந்த விசயம் சொல்ல வேண்டாமா...?"

அவள் புறம் திரும்பி, "நீ ஒரு விசயமும் சொல்ல வேண்டாம்... கிளம்பு..." என்றவன் மேலே நடக்கத் துவங்க...

"உங்க பிரெண்ட் ஈஷ்வர் பத்தின விசயமா இருந்தா கூடவா...?" அவளது வார்த்தையில் நின்றவன் கண்கள் மின்ன, முகம் மலர வேக எட்டுக்கள் வைத்து அவளை நோக்கி நெருங்கி வந்தவன் அவளது தோளில் தனது இரு கைகளையும் வைத்து இறுக பற்றியவாறு,

"பட்டு உண்மையாவாடி சொல்ற...?"

வெகு நாட்கள் இல்லை இல்லை வெகு வருடங்கள் கழித்து அவன் அவளை ‘பட்டு’ என்று அழைத்ததும், அவளை உரிமையாய் 'டி' போட்டு கூப்பிட்டு பேசியதும் அவளது நெஞ்சில் தித்திப்பாய் இனித்தது...

கண்ணிமைக்க மறந்து அவனைப் பார்த்துக் கொண்டு இருந்தவள் கண்களில் நீர் திரண்டது ஆனந்தத்தில்...

"சொல்லுடி...?" அவன் தோள் பற்றிக் குலுக்கியதில் தன்னுணர்வு அடைந்தவள்,

"ஆமாம் மாமா... ஈஷ்வர் அண்ணா இப்போ ஏசியா இங்கே தான் ஜாயிண்ட் பண்ணி இருக்காராம்..." என்றவள் ஜான் கூறியதை அப்படியே கூற...

"உண்மையாவா..." என்றவனின் கண்கள் உணர்ச்சி வசப்பட்டதில் சற்றுக் கலங்கியது...

எத்தனை வருட பிரிவு இது... தோழன் அவனிடத்தில் கூடச் சொல்லாமல் கொள்ளாமல் மித்ரேஷ் சென்று விட்டதை எண்ணி அவன் துயரப்படாத நாட்களே கிடையாது... பிறந்ததில் இருந்து சற்று அழுத்தமான, அமைதியான அவன் எந்த ஒரு விசயத்தையும் மித்ரேஷிடம் பகிர்ந்து கொள்ளாமல் இருந்தது கிடையாது... அந்தளவுக்கு இருவரிடத்திலும் நெருக்கமான உறவு இருந்தது... சிறு வயதில் இருந்து ஒன்றாய் வளர்ந்ததினால் கூட அப்படி இருக்கலாம்...

அவன் இல்லாத சமயங்களில் மனதின் துக்கத்தை யாரிடமும் பகிர்ந்து கொள்ள முடியாமல், அதை மறக்கவும் முடியாமல் தனக்குள் போட்டு புதைத்துக் கொண்டு அதன் அழுத்தம் தாங்காமல் இன்னமும் அவன் இறுகி போனான்... இன்று அந்த அழுத்தம் சற்றுக் குறைந்தார் போன்று தோன்றியது நண்பன் மீண்டும் கிடைத்ததினால்...

"நான் பொய் சொல்வேனா மாமா..." ஒரு மாதிரி குரலில் கேட்ட மிருதுளாவை பார்த்தவன் சந்தோச மிகுதியில்,

"நீ பொய் சொல்ல மாட்டேன்னு எனக்குத் தெரியும் பட்டு... எனக்கு இருக்கிற சந்தோசத்துக்கு..." என்றவன்,

"ஸ்வீட்டான நியூஸ் சொல்லி இருக்கிற பட்டு... உனக்கு என்ன வேணுமோ கேளு..."

தன் தோளில் பதிந்து இருந்த அவனது கைகளின் மீது தனது கைகளை அழுத்தமாய் வைத்தவள் அவனின் கண்ணை நோக்கியபடி,

"எனக்கு என்ன வேணும்ன்னு உங்களுக்குத் தெரியாதா மாமா...?" அவளது வார்த்தையில் தீச்சுட்டார் போன்று அவன் தனது கைகளை விலக்கினான்...

அதில் மனம் உடைந்து போனவள், "ஏன் மாமா என் மனசை இப்படி நோகடிக்கிறீங்க...? நீங்க என் கூடப் பேசி எத்தனை

வருசமாகுது தெரியுமா...? என்னை ஏன் உங்களுக்குப் பிடிக்க மாட்டேங்குது...? உங்களுக்குப் பிடிச்ச மாதிரி நான் இல்லையா மாமா...? ஏன், என்ன காரணம்ன்னு தெரியாம நான் மனசுக்குள் குழம்பி போய்த் தவிக்கிற கஷ்டம் எனக்கு மட்டும் தான் தெரியும்... உங்க மனசில அப்படி என்ன தான் பிரச்சினை இருக்கு மாமா சொல்லுங்க..." அவள் கேள்விக் கணைகளால் அவனைத் தாக்க...

"உனக்கு என்ன குறை பட்டு... எல்லா விதத்திலும் என்னை விட நீ உயர்ந்தவள் தான்... உனக்கு ஏத்த நல்ல புருசன் உனக்குக் கிடைப்பான்..."

"எனக்கு ஏத்த நல்ல புருசன் நீங்க தான்..."

அவளின் உறுதியான அழுத்தமான வார்த்தையில் அவனது முகத்தில் வேதனையின் நிழல் படிந்தது...

"நான் உனக்கு ஏத்தவன் கிடையாது பட்டு... நான் உனக்கு வேண்டாம்... நானே உனக்கு நல்ல மாப்பிள்ளையா பார்க்கிறேன்... என்னை நீ மறந்திரு... நீ கல்யாணம் பண்ணி கணவன், குழந்தைகள்ன்னு சந்தோசமா வாழணும்... உனக்காக இல்லைன்னாலும் மாமா, அத்தைக்காகவாவது..."

"அது மட்டும் இந்த ஜென்மத்தில் நடக்காது... இந்த ஜென்மத்தில் நீங்க தான் என் கணவர்..."

பிடிவாதமாய்க் கூறியவளை கண்டு அத்தனை நேரம் இருந்த இளக்கம் அவனது முகத்தில் இருந்து மறைய, "என்னமோ பண்ணி தொலை... ஆனா என்னை மறக்கிறது தான் உனக்கு நல்லது..." என்றவன் விறுவிறுவென விக்டர் வீடு நோக்கி செல்ல துவங்கினான்...

அவன் போவதை பார்த்துக் கொண்டு இருந்த மிருதுளா மனதில் சிறு வருத்தம் எழுந்தாலும் இத்தனை நேரம் இணக்கமாய்ப் பேசிய ஆதியின் பேச்சில் அவள் மனம் நிம்மதியுற்றது... நிச்சயம் அவன் மனதை மாற்ற முடியும் என்ற நம்பிக்கை அவளுள் எழுந்தது...

****

மித்ரேஷ் பேசிய வார்த்தைகளை நம்ப முடியாமல் கேட்டுக் கொண்டு இருந்த மது உறைந்து நின்றது சில நொடிகள் தான்...

'இவன் என்று தன் குணத்தை மாற்றி இருக்கிறான் இன்று மாறுவதற்கு...? தோற்றம் மாறினாலும் அவனது உள்ளம் அதே மித்துத் தான்...' என்று வெறுப்பாய் எண்ணியவள் ஒன்றும் பேசாமல் அங்கிருந்து கிளம்ப எத்தனித்த அடுத்த நொடி அவளது அலைப்பேசி அழைத்தது...

மித்ரேஷ் அவளது முக மாற்றத்தை தான் கவனித்துக் கொண்டு இருந்தான்... அவளது கண்ணில் தெரிந்த வெறுப்பு அவனது கண்ணில் பட்டது... அந்த வெறுப்பு அவன் மனதில் பலவித உணர்வலைகளைத் தோற்றுவித்தது... ஆனாலும் தனது முகத்தில் எந்த உணர்வையும் காட்டி கொள்ளாது அவன் நின்று இருந்தான்...

"மது... நீ கூட்டிட்டு வர்றேன்னு சொன்னது ஈஷ்வர் தானே..." நடுங்கும் குரலில் உயிரை கையில் பிடித்துக் கொண்டு கேட்ட அத்தையின் குரல் கேட்டு அவளது கண்கள் கலங்கியது...

"ம்... ம்..."

"அம்மாடி அவனை எப்படியாவது கூட்டிட்டு வாம்மா... அவன் என்ன கோபமா பேசினாலும் பரவாயில்லை கொஞ்சம் பொறுத்துக்கோ மது... இந்த அத்தைக்காக..." ஏறக்குறைய தன்னிடம் கெஞ்சிய நிஷாவின் வார்த்தையில் அவளுக்கு அழுகை பொங்கி கொண்டு வந்தது...

'என்ன என்று சொல்வாள்...? உங்க மகன் பழசை எல்லாம் மறக்கலை.... இப்பவும் அதே கோபம், அதே மூர்க்கத்தனம் அவனிடத்தில் இன்னமும் இருக்கு... அவன் அங்கு வர மாட்டான் என்றா...'

"அத்தை..." அவளது குரல் உடைந்து போய் ஒலித்தது

கண்களில் கண்ணீர் வழிய நின்று இருந்தவளை பார்த்துக் கொண்டு இருந்த மித்ரேஷ் அவளிடம் இருந்து அலைப்பேசியைப் பறித்தான்... அவள் மேலே பேசும் முன் அவள் வாயில் தனது கை விரலை வைத்து 'பேசாதே' என்று சைகை செய்தவன் அன்னையிடம் பேச துவங்கினான்...

திடுமென அருகில் வந்தவன் அருகாமையில், அவனது செயலில் அவள் உள்ளம் தடுமாறி நின்று இருந்தாள்... அவன் விரலை எடுத்த பின்னும் அவனது ஒற்றை விரல் தொடுகை அவளது உள்ளத்தில் ஏதோ ஒருவித மாயையைத் தோற்றுவித்தது...

எத்தனையோ முறை அவனைத் தொட்டு பேசி இருக்கிறாள், அடித்துப் பிடித்து விளையாடி இருக்கிறாள் அப்போது எல்லாம் வராத தடுமாற்றம் இப்போது ஏன்...? அவளது மனம் தனக்குள் கேள்வி கேட்டுக் கொண்டு இருந்தது...

"மாம்..." அவனது குரலிலேயே அவன் உணர்ச்சிவசப்பட்டு இருப்பது புரிந்தது...

"ஈஷ்வர்..." வெகு வருடங்கள் கழித்து மகனின் குரலை கேட்ட அந்தத் தாய் அழுகையில் கரைந்தாள்...

"மாம்... அழாதீங்க... நீங்க அழுறதை பார்க்கிற சக்தி எனக்கு இல்லை..." அவனது கண்ணிலும் கண்ணீர் துளிகள் நிரம்பியது...

"அப்புறம் ஏன் என்னைப் பார்க்க வரலை கண்ணா...? என் மேல் கோபமா...? அந்தளவுக்கு நான் பாவியாகி போனேனா...?"

"இல்லை மாம்... அப்படி எல்லாம் இல்லை... நான் தான் பாவி... எதையும் புரிஞ்சிக்காம என் மனம் போன போக்கில் வாழ்ந்த நான் தான் பாவி மாம்..." என்று வேதனையுடன் சொன்னவன்,

"இன்னும் அரை மணி நேரத்தில் நான் அங்கு இருப்பேன்..." என்றவன் அதற்கு மேல் பேச முடியாமல் தொண்டை அடைக்க அலைப்பேசியை அணைத்து மதுவிடம்

நீட்டியவன் மனதின் உணர்வு போராட்டத்தைத் தாங்க முடியாமல் அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தான்...

இத்தனை வருடங்களில் உணர்வுகளைக் கட்டுப்படுத்தி வாழ அவன் முயற்சி செய்து அதில் வெற்றியும் பெற்றுவிட்டான்... ஆனால் இன்று அன்னையின் அன்பின் முன் அவனது முயற்சி எல்லாம் தோல்வி அடைய அவரது அன்பிற்கு ஏங்கும் சிறு மழலையாய் மாறிப் போனது அவனது மனம்...

இரு கைகளால் தலையைத் தாங்கியபடி அமர்ந்து இருந்தவன் கண்ணில் இருந்து இரு துளி நீர் தரையில் சொட்டியது அவனையும் அறியாது... மது அங்கு இருப்பதை மறந்து...

அவ்வளவு நேரம் அவளை வார்த்தையால் இம்சித்தவன் இப்போது கண் கலங்கி நிற்பது கண்டு அவளால் எப்படியோ போ என்று அவனை விட்டு விட்டு போக முடியவில்லை...

ஆண் மகன் பகையை மறக்காமல் மனதில் வைத்து வஞ்சம் தீர்க்க நினைக்கலாம்... ஆனால் பெண்ணவள் மனம் அவனது கலங்கிய தோற்றத்தை கண்டு தாயுள்ளம் கொண்டு துடித்தது... என்ன இருந்தாலும் ஒன்றாய் வளர்ந்த பாசம் அவனின் சோகத்தில் பங்கு எடுத்துக் கொள்ளச் சொல்லி அவளைத் தூண்டியது...

"மித்து..." அவன் முன் மண்டியிட்டு அமர்ந்தவள் அவனை அழைத்தாள்...

அதில் தன்னை நிலைப்படுத்திக் கொண்டு நிமிர்ந்தவன் முகத்தில் பழைய இறுக்கம் திரும்பி இருந்தது...

"சாரி மித்து..." என்றவளை அலட்சியமாகப் பார்த்தவன்,

"உன்னோட பரிதாபம் எனக்குத் தேவை இல்லை..." என்றான் பட்டென்று முகத்தில் அடித்தார் போன்று...

அதில் சுள்ளென்று அவளுக்கும் உறைத்தது... மனதில் கோபம் லேசாய் எட்டி பார்த்தாலும் நிஷாவிற்காக அமைதி காத்தாள்...

"அப்போ எதுக்குப் பெண் பிள்ளை மாதிரி அழுதுட்டு இருக்க...?"

அதில் அவனது முகம் அவமானத்தில் கன்றியது... சட்டென்று தன்னைச் சமாளித்துக் கொண்டவன்,

"இப்போ எல்லாம் பெண்கள் அழுறாங்களா என்ன...? இல்லையே ஆணை அழ வைத்துப் பார்ப்பது தானே அவங்களுக்குப் பழக்கம்..."

அதில் அவளுக்குக் கோபம் வந்தது... "அப்படி எத்தனை பெண்களோடு அய்யா பழகி இருக்கீங்க...?" கிண்டலாய் வினவினாள்...

"ஏன் உன் ஒருத்தி கூடப் பழகிட்டு நான் படுற அவஸ்தை போதாதா... இதில் வேறு பெண்கள் வேறா... தொலைஞ்சேன் நான்..." என்று முணுமுணுத்தவன் எழுந்து கிளம்ப ஆயத்தமாக...

"நான் உன்னை அவஸ்தைப் படுத்துறேனா...? அப்படி என்னடா நான் உன்னைக் கொடுமைப் படுத்தினேன்..." தானும் எழுந்து நின்று கோபமாய்க் கத்தியபடி அவன் அருகில் சென்றாள்...

இன்னும் கொஞ்சம் நெருங்கினால் தன்னைத் தீண்டி விடும் நெருக்கத்தில் இருந்தவளை இமைக்காது பார்த்தவன், "இதைத் தான்டி சொன்னேன் அவஸ்தைன்னு..."

"என்னது...?" புரியாமல் மீண்டும் அவனிடம் அவள் பாய...

"எப்ப பாரு இப்படிக் கத்துற பார்த்தியா அதைத் தான் சொன்னேன்..." என்றவன் அவளை விலக்கி நிறுத்தி விட்டு வாகனத்தின் சாவியை எடுத்துக் கொண்டு வெளியில் வந்தான்...

அவளும் அவனைப் பின் தொடர்ந்து வெளியில் வர வீட்டை பூட்டி கொண்டு அங்கிருந்த இரு சக்கர வாகனத்தைக் கிளப்பினான்...

"ஏறு..." அவளைப் பார்த்து சொல்லவும்,

"பைக்கிலா...?" முகத்தைச் சுளித்தாள் அவள்...

"ஏன் மகாராணி கார் இருந்தா தான் வருவீங்களோ...?"

"அப்படி எல்லாம் இல்லை..." அவனின் கேலியில் அவளின் சுருதி இறங்கியது...

முன்பு அவனுடன் இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்து இருக்கிறாள் தான்... ஆனால் இப்போது அவனுடன் செல்ல ஒரு மாதிரியாக இருந்தது...

வயதின் முதிர்ச்சி அவளைப் பக்குவப்படுத்தி இருந்ததோ இல்லை இளமையின் உணர்வுகள் பயப்படுத்தியதோ ஏதோ ஒன்று தோன்ற அவள் தயங்கினாள்...

"உன் கற்புக்கு நான் கியாரண்ட்டி... பயப்படாம வந்து ஏறு..." நக்கல் குரலில் உரைத்தவனின் பேச்சில் அவள் தன்மானம் சீண்டி விடப்பட...

"உன் கிட்ட எனக்கு என்னடா பயம்...? அப்படியே நீ ஏதாவது செஞ்சேன்னு வைய்யி என்னோட டாட் உன்னைச் சும்மா விட்டுருவார்ன்னா நினைச்ச... என் டாட்டை விடு... உன் டாட் உன் தோலை உறிச்சிட மாட்டார்..." என்று கூறியவளுக்கு அந்தக் காட்சி மனக்கண்ணில் தோன்ற சிரிப்புப் பொங்கியது... வாயை பொத்தி சிரிப்பை அடக்கி கொண்டாள் அவள்...

அதில் அவனது முகம் உணர்ச்சியைத் தொலைத்தது...

"இப்படியே பேசிட்டே இருந்தேன்னு வை... உன்னை நான் விட்டுட்டு போயிருவேன்..." அவன் சொன்னதும் அவள் வாயை மூடி கொண்டு அவன் பின்னால் ஏறி வெகு ஜாக்கிரதையாகச் சற்று இடைவெளி விட்டு அமர்ந்தாள்...

ஆனாலும் அவள் முகத்தில் இருந்த குறும்பு சிரிப்பு மறையவில்லை...

முன்பு புறம் இருந்த கண்ணாடி வழியே அதைப் பார்த்துக் கொண்டே வண்டியை கிளம்பியவன், "ஆமாம் அந்த மூக்குறுஞ்சியோட அண்ணன் எப்படி இருக்கான்...? நீ சொன்ன மாதிரி ஐஏஎஸ் பாஸ் பண்ணிட்டானா...?"

அவன் கேட்டதும் அத்தனை நேரம் அவளது முகத்தில் இருந்த சிரிப்பு மறைந்தது...

"யாரை கேட்கிற...? எனக்குப் புரியலை..." என்றாள் வேண்டும் என்றே... வேண்டாத பேச்சுகள் பேச அவள் தயாராக இல்லை...

"அதான் உன் க்ளோஸ் பிரெண்ட் அந்தத் தான்யாவோட அண்ணன் தருணை தான் சொல்றேன்..."

'உன் ஞாபக சக்தியில் தீயை வைக்க...' அவனது அபார ஞாபக சக்தியை எண்ணி மனதுக்குள் வைதபடி வந்தாள்...

"என்ன பதிலை காணோம்...?"

"ம்... அவனுக்கு என்ன... சொன்ன மாதிரி ஐஏஎஸ் பாஸ் பண்ணிட்டான்... இப்போ இராமநாதபுரத்தில் போஸ்ட்டிங்கில் இருக்கிறான்... அடுத்துச் சென்னை தான்னு தனு சொல்லிட்டு இருந்தாள்..."

மித்ரேஷ் மனதில் லிட்டர் லிட்டராய் பெட்ரோலை ஊற்றி தீயை பற்ற வைத்தாள் அவள்...

"ஓ... சொன்ன மாதிரி அவன் ஐஏஎஸ் ஆகிட்டான் அப்படித்தானே..." ஒரு மாதிரி குரலில் கேட்டவனின் மனதை அவளால் கணிக்க முடியவில்லை...

"ஆமாம்... அதுக்கு என்ன...?"

"அப்போ நீ அவன் கிட்ட ஐ லவ் யூ சொல்லிட்ட...?"

அவனது கேள்வியில் அவளுக்கு எல்லாம் புரிந்து போனது... இத்தனை நாளாய் அவனைக் காணாததில் குற்றவுணர்ச்சியில் அவளது கோபம் சற்று குறைந்து இருந்தது... அதையும் சீண்டி பேசி வரவழைத்தவன் அவனது தாயின் அன்பில் அவன் தடுமாறி நின்ற போது அதில் அவளின் கோபம் சிறிது மட்டுப்பட்டது... ஆனால் மீண்டும் அவளைச் சீண்டி பார்க்கும் அவனை என்ன செய்வது என்று தெரியவில்லை அவளுக்கு... இதற்குப் பதிலடி கொடுக்கவில்லை என்றால் அவள் தோற்று போனதாய் அல்லவா அர்த்தம்...

"இல்லையா பின்னே... நீயாவது ஐபிஎஸ்... ஆனா அவன் ஐஏஎஸ்..." 'ஐஏஸ்' என்ற வார்த்தையை அழுத்தி சொன்னவள்,

"அது உன் ஐபிஎஸ்யை விட ஒரு படி மேல் இல்லையா... அவன் ஐஏஎஸ் பாஸ் பண்ணியதுமே நான் அவன் கிட்ட என் காதலை சொல்லிட்டேன்... பாவம் பையனும் எத்தனை நாள் தான் பதில் தெரியாமல் தவிச்சிட்டு இருப்பான்... இப்போ எங்க காதலுக்கு மூணு வயசு..." குறும்பு குரலில் கூறியவளின் குறும்புத்தனத்தை அவன் உணரவில்லை...

ஆனால் அவளின் வார்த்தைகளின் தாக்கத்தில் அவனது கைகள் ஆக்சிலேட்டரை முறுக்கியது...

"இப்போ புரியுதா... நீ விளையாடலாமான்னு கேட்டப்போ நான் ஏன் அமைதியா இருந்தேன்னு... ஐம் ஆல்ரெடி என்கேஜ்டு... உன் கூட விளையாட நீ வேறு ஆளை தான் பார்க்கணும்... எப்படியும் பந்தயத்தில் தோற்றது நீ தான்..."

கலகலவெனச் சிரித்தவளின் சிரிப்பு நியாயத்திற்கு அவனுக்குச் சந்தோசத்தை அளித்து இருக்க வேண்டும்... ஆனால் அவனின் மனம் சந்தோசப்பட முடியாமல் கோபப்பட்டது... அந்தக் கோபத்தை வண்டியின் மீது காட்டினான் அவன்...

"ஏய்... ஸ்பீடு பிரேக் டா..." அவள் அலறிய போதும் அவன் தனது வேகத்தை மட்டுப் படுத்தவில்லை...

"டேய்..." என்று கத்தியவள் பயத்தில் அவனது தோளை கெட்டியாய் பிடித்துக் கொண்டு கண்களை இறுக மூடி கொண்டாள்...

அதில் அவனது கோபம் சற்று குறைய அந்த வேகத்தடையின் மீது செல்லாமல் சாலையின் ஓரமாய் இருந்த நடைபாதையில் வாகனத்தைச் செலுத்தி மீண்டும் சாலையில் பயணித்தவனின் வேகம் மட்டும் குறையவில்லை... அதே போல் அவனது மனதின் குமுறலும் அடங்கவில்லை...

ஈர்க்கும்...

மித்ரேஷ் கைகளில் அவனது இரு சக்கர வாகனம் வேகமாய்ப் பறந்தது... வேகம் வேகம் வேகம் மட்டுமே... அப்படியாவது அவனது மனக் குமுறல்கள் அடங்கி விடாதா என்று அவன் நினைக்க அதற்கு எல்லாம் கட்டுப்படுமா அவனது மனம்...

வேகமாய் வந்ததாலோ என்னமோ குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பாகவே அவர்களது வீடுகள் அடங்கிய குடியிருப்பு பகுதிக்கு வந்துவிட்டான் அவன்... நுழைவாயிலில் நுழையும் போது அவனையும் அறியாமல் வண்டியின் வேகம் சற்றுக் குறைந்தது... அடுத்த நொடி அது வேகத்துடன் சீறிப் பாய்ந்தது...

காலம் ஏழு வருடங்களைக் கடந்த நிலையிலும் அந்தக் குடியிருப்பு பகுதி எந்தவித மாற்றமும் இன்றி அன்று பார்த்தது போல் அதே மாதிரி இருந்தது... வீட்டை நெருங்கியவன் மனதில் பலவித உணர்வலைகள் தாக்கியது... அன்று நிகழ்ந்த நிகழ்வுகள் மனக்கண்ணில் படமாய் ஓட அவனையும் அறியாது அவனது மனமும், உடலும் இறுகியது...

தனது வீட்டின் முன் அவன் வண்டியை நிறுத்தியதும் குதித்துக் கொண்டு முதல் ஆளாய் இறங்கிய மது அவனைக் கோபமாய் முறைத்து பார்த்தாள்...

"ஏண்டா... இன்னும் நீ திருந்தலையா...? ஒரு ஏசியா இருந்துட்டு இப்படித்தான் ஹை ஸ்பீடில் வண்டி ஓட்டுவியா...? உன்னை எல்லாம்...?" அவனைத் திட்டி கொண்டு அவள் செல்ல...

அவன் ஒன்றும் பேசாது ஹெல்மெட்டை கழட்டி கொண்டே வண்டியை விட்டு இறங்கினான்... மது கத்திய கத்தலில் மொத்த குடும்பமும் வாசலுக்கு வந்துவிட்டது...

அத்தனை பேரின் கண்களும் மித்ரேஷை மொய்த்துக் கொண்டு இருக்க அவனது கண்கள் தனது தாயை மட்டும்

பார்த்தது... ஏழு வருடங்களுக்கு முன் பார்த்த அன்னைக்கும் இப்போது பார்க்கும் அன்னைக்கும் எவ்வளவு வித்தியாசம்... முற்றிலுமாய்த் தளர்ந்து போய் இருந்தவரை கண்டு அவனுக்குக் கண்கள் கரித்தது...

"மாம்..." என்று ஓடி வந்து அவரை அணைத்துக் கொண்டான்... தனது படிப்பு, பதவி எல்லாம் மறந்தவனாகத் தாயை தேடி ஓடி வரும் கன்று குட்டியாய் அவரிடம் வந்து அடைக்கலம் புகுந்தான் அவன்...

"ஈஷ்வர்..." நிஷா மகனை பாசத்தோடு அணைத்து கொண்டாள்...

"மாம்... எப்படி இருக்கீங்க...?"

"நீ வந்துட்டல்ல இனி நான் நல்லா இருப்பேன்..." என்றவள் அவனைச் சற்று தள்ளி நிறுத்தி அவனது உருவத்தைக் கண்களில் நிறைத்து கொண்டாள்... எத்தனை ஆண்டுகளாய் மகனை காணாமல் தவித்து இருப்பாள்...

'ஏன் என்னை விட்டு போனாய்...? எப்படி என்னை விட்டு போகலாம்...?' என்று அவனைக் கடிந்து ஒரு வார்த்தை பேசவில்லை அவள்...

அன்று அவன் பொறுப்பு இல்லாமல் ஊர் சுற்றிய போதும் அன்பாய் அரவணைத்துக் கொண்ட அன்னை, இன்று அவன் பொறுப்பான பதவியில் அமர்ந்து உயர்ந்த நிலைக்கு வந்த பின்னும் அதே போல் அரவணைத்துக் கொண்டார்... உலகில் என்றும் மாறாதது மாற்றம் மட்டும் அல்ல அன்னையின் அன்பும் தான்...

"ஈஷ்வர்..." என்று தனது நண்பனை அணைத்துக் கொண்ட ஆதியை எல்லோரும் அதிசயமாய்ப் பார்த்தனர்...

ஆதியும், மித்ரேஷும் நண்பர்கள் தான் என்றாலும் ஆதி இந்தளவுக்கு அப்பட்டமாய்த் தனது உணர்வுகளை எல்லோர் முன்னிலையிலும் வெளிப்படுத்த மாட்டான்... தனியே இருக்கும் போது மட்டுமே அவனது உணர்வுகள் வெளிப்படும்... அதிலும் மித்ரேஷ் அவனது வாயை பிடுங்கி

தான் அவனது மனதின் ரகசியத்தைக் கறப்பான்... ஆதியும் நண்பனிடம் எந்தவித ஒளிவு மறைவும் இல்லாமல் எல்லாவற்றையும் பகிர்ந்து கொள்வான்...

"ஆதி..." மித்ரேஷும் நெகிழ்ந்து போய் அவனை அணைத்துக் கொண்டான்...

கட்டவிழ்ந்த காளையாக அவனுடன் தான் ஊர் சுற்றித் திரிந்தது, மனம் விட்டு பேசியது எல்லாம் அவன் நினைவில் எழுந்தது...

"சில்க்கி... நம்ம தளபதி படம் ரஜினியும், மம்முட்டியும் தோத்தாங்க போ... என்னமா சீன் போடுதுங்க ரெண்டும்..." மது மிருதுளாவின் காதை கடித்தாள்...

"வாயை வச்சிக்கிட்டு சும்மா இருக்க மாட்டியா...? ஏற்கெனவே உனக்கும் அண்ணாவுக்கும் ஒத்து வராது... திரும்ப இப்படிப் பேசி பிரச்சினையை இழுத்து விட்டுக்காதே..." மிருதுளா அவளைக் கண்டித்தாள்...

"இனி அவன் எப்படிக் காணாம போறான்னு நானும் பார்க்கிறேன்... முதல்ல நான் சின்னப் பொண்ணு... இப்போ நான் ஒரு ஜர்னலிஸ்ட்... அவன் எங்கே போனாலும் கண்டுப்பிடிச்சுக் குண்டுக்கட்டா தூக்கிட்டு வந்துட மாட்டேன்..."

"நீ... அண்ணனை தூக்கிருவியா...?" அவளை மேலும் கீழுமாய்ப் பார்த்த மிருதுளா,

"ம்... நீ செஞ்சாலும் செய்வ..." என்றாள் நமட்டு சிரிப்புடன்...

"ஏய்... குரங்கே... என் உடம்பை பார்த்து கண்ணு போடாதேன்னு உனக்கு எத்தனை தடவை சொல்லுறது..." தன் பூசின உடல்வாகை தான் அவள் கிண்டல் செய்கிறாள் என்று புரிந்து மது அவளிடம் சண்டைக்கு வந்தாள்...

"உண்மையைச் சொன்னா கோபம் வருதாக்கும்..." மிருதுளாவிற்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை...

"போடி..." மது கோபித்துக் கொள்ள மிருதுளா அவளைச் சமாதானப்படுத்தினாள்...

"என்ன ஜான் அங்கேயே நின்னுட்டு இருக்க இங்கே வா..." மித்ரேஷ் பாசத்துடன் தம்பியை அழைத்தான்...

ஜான் நம்ப முடியாமல் நின்று கொண்டு இருந்தான்... பின்னே எப்போதும் அவனைத் திட்டி கொண்டு இருக்கும் அண்ணன் பாசத்துடன் அழைத்தால் அவனால் தன் கண்களை நம்ப முடியவில்லை... ஜானை விக்டருக்கு பிடிக்கும் என்பதாலும், எப்போதும் ஜானுடன் தன்னை ஒப்பிட்டு பார்த்து திட்டுவதாலும் மித்ரேஷ்க்கு தந்தை மேல் கோபம் வரும்... தந்தையிடம் காட்ட முடியாத கோபத்தை அவன் தம்பியிடம் காட்டி தீர்த்து கொள்வான்...

மித்ரேஷ் தம்பி அருகில் வந்தவன் பாசத்துடன் அவனை அணைத்துக் கொள்ள ஜானும் கண்கள் கலங்க சகோதரனை அணைத்துக் கொண்டான்...

விக்டர் இந்தக் காட்சியைப் பார்த்து உள்ளுக்குள் மகிழ்ந்து கொண்டாலும் வெளியில் எந்தவித உணர்வையும் காட்டி கொள்ளாது நின்று இருந்தான்...

தகப்பனின் பார்வை உணர்ந்தார் போன்று அவனைத் திரும்பி பார்த்த மித்ரேஷ் தந்தையிடம் எதுவும் பேசவில்லை...

அக்ஷியோ மித்ரேஷை ஆராய்ச்சியாய் பார்த்துக் கொண்டு இருந்தான்...

"எப்படி இருக்க ஈஷ்வர்...?" பொதுவாக அவனின் நலம் விசாரித்தவன் வேறு எதுவும் கேட்கவில்லை...

மித்ரேஷ் அடிக்கடி அக்ஷயை திரும்பி திரும்பி பார்த்தான்... ஆனாலும் எதுவும் பேச முற்படவில்லை...

அபி, அனி, ஆதர்ஷ், மிருதுளா என ஒவ்வொருவரும் நலம் விசாரித்த பின்னர் அங்கு மகிழ்ச்சி ஆரவாரம் பொங்கியது... இவ்வளவு நாள் உயிர்ப்பை இழந்து இருந்த

விக்டரின் இல்லம் இன்று அவனது வரவால் மீண்டும் உயிர்ப்பை பெற்று இருந்தது...

நிஷாவின் முகத்தில் தெரிந்த நிம்மதி, மகிழ்ச்சி இதைக் கண்டு மதுவிற்கு நிம்மதியாய் இருந்தது... எத்தனை நாள் அத்தையின் வேதனை கண்டு அவள் மனம் நொந்து அழுது இருப்பாள்... தன்னால் தான் நிஷாவிற்கு இந்த நிலைமை என்று அவள் வருந்தாத நாள் இல்லை... இன்று அந்த வருத்தம் எல்லாம் அவனின் வருகையால் துணி கொண்டு துடைத்தது போல் காணாமல் போயிருந்தது...

நிஷா தனது கையால் மகனுக்குப் பரிமாறி ஊட்டி விட அதைக் கண்டு எல்லோரது கண்களும் பனித்தது...

அதன் பிறகு மகிழ்ச்சியாய் அரட்டையுடன் பொழுது கழிந்தது... இரவு பதினொரு மணி வரை அரட்டை அடித்து விட்டு அவரவர் வீட்டிற்குக் கிளம்பி சென்றனர்...

மித்ரேஷ் தனது தாயின் பின்னோடு அவரது அறைக்குச் சென்றான்...

"ஈஷ்வர்... உன் ரூமில் எல்லாம் அப்படியே தான் இருக்கு... நீ போய்த் தூங்கு கண்ணா..."

அன்னையைக் கட்டிலில் அமர வைத்து அவரது கைகளைப் பிடித்துக் கொண்டான்... ஏனோ அவனது கண்களில் கண்ணீர் நிறைந்தது... மனதில் எழுந்த உணர்வுகளை வெளிக்காட்ட முடியாமல் தன்னுள் போட்டு புதைத்துக் கொண்டான் அவன்... அவனது உணர்வுகள் அன்னையைப் பாதிக்கும் என்று நிச்சயம் அவனுக்குத் தெரியும்...

"இங்கே வா கண்ணா..." அவனைத் தன் மடியில் படுக்குமாறு நிஷா சொல்ல,

"இல்ல மாம்... நீங்க படுங்க..." என்றவன் தனது அன்னையைச் சேயாய் மடி தாங்கினான்...

துயரம் மட்டுமே வாழ்க்கையாகக் கொண்ட தன் அன்னைக்குத் தானும் மிகுந்த துயரத்தை அளித்து

விட்டதை உணர்ந்து மனம் வெதும்பி போயிருந்தான்... வாழ்க்கையை எதிர் கொள்ள முடியாமல் கோழையைப் போல் பயந்து ஓடியதை எண்ணி இப்போது மனம் வெட்கினான்...

இன்று தன்னிடம் இருக்கும் தெளிவு அன்று ஏன் தனக்கு இல்லாமல் போனது தனக்குத் தானே கேள்வி கேட்டு கொண்டவனுக்கு விடை தான் தெரியவில்லை...

"கண்ணா ரொம்பக் கஷ்டப்பட்டியா...?" அன்னையின் கண்களில் வழிந்த நீரை துடைத்து விட்டவன்,

"அப்படி எல்லாம் இல்லை மாம்... எனக்கு என்ன நல்லா தான் இருந்தேன்... நீங்க தான்..." மேலே பேச முடியாமல் அவனுக்குத் துக்கம் தொண்டை அடைத்தது...

மெலிந்த அன்னையின் கரத்தை எடுத்து வருடி விட்டான்...

"நீ இல்லாம நான் எப்படிக் கண்ணா நிம்மதியா, சந்தோசமா இருப்பேன்... என் சந்தோசமே நீ தானே..." அவர் சொல்வதின் அர்த்தம் முழுமையாகப் புரிந்தவன் தலை குனிந்து அமர்ந்து இருந்தான்...

"நீ வீட்டை விட்டு போகும் அளவுக்கு அப்படி என்னப்பா நடந்துச்சு...?"

என்னவென்று அவன் சொல்வான்...? மதி கெட்டுப் போய்த் தனது அவசரப் புத்தியினால் வீட்டை விட்டு ஓடி போனேன் என்றா...

"அப்பா ஏதும் திட்டுனாங்களா...? அடிச்சாங்களா...?" என்ற அன்னையிடம்...

"ம்... ம்..." என்றான் பாதி உண்மையுமாய், பாதிப் பொய்யுமாய்...

"இனி மேல் இப்படி என்னை விட்டுட்டு போயிராதே கண்ணா... அதுக்கு அப்புறம் இந்த அம்மா உடம்புல உசிர் தங்காது..."

"மாம்... இது என்ன பேச்சு...? இவ்வளவு நாள் கழிச்சு நான் இங்கே வந்து இருக்கேன்னா உங்க கூடச் சேர்ந்து இருக்கத்தான்... அதனால் கண்டதையும் நினைச்சு மனசை போட்டு குழப்பிக்காதீங்க..." என்று மென்மையாய் அவளைக் கடிந்தவன் அவளின் தலையை வருடி விட்டு,

"தூங்குங்க..." என்க...

மகனின் வருகையினால் எழுந்த நிம்மதியா இல்லை அவனது இதமான வருடலா ஏதோ ஒன்று நிஷாவை ஆழ்ந்த உறக்கத்தில் ஆழ்த்தியது...

அன்னை உறங்கியதும் அவரை மெதுவே தலையணையில் படுக்க வைத்தவன் போர்வையைப் போர்த்தி விட்டு வெளியில் வந்தான்...

அதே நேரம் விக்டர் அறைக்குள் செல்வதற்காக அங்கு வந்தான்...

ஒரு நொடி தகப்பன் மற்றும் மகனின் கண்கள் சந்தித்து மீண்டது... மித்ரேஷ் வேகமாய் அங்கிருந்து நகர விக்டர் மகன் செல்வதைப் பெருமூச்சுடன் நின்று பார்த்தவன் பின் தனது அறைக்குள் நுழைந்தான்...

மித்ரேஷ்க்கு ஏனோ உறக்கம் வருவதாய் இல்லை... வெளியில் சென்று தோட்டத்தில் உலாவ எண்ணி கதவை திறந்து கொண்டு வெளியில் வந்தான்...

மூன்று வீடுகளுக்கும் பொதுவாகத் தோட்டம் அமைக்கப்பட்டு இருந்தது... தோட்டத்தைப் போல் விளையாடுவதற்கு ஏதுவாக டென்னிஸ் கோர்ட், கூடைப்பந்து விளையாட தனி இடம் என விளையாட்டிற்காகப் பெரிய இடம் ஒதுக்கப்பட்டு இருந்தது... அதைச் சுற்றி நடைப் பயிற்சிக்கான நடை பாதையும் உண்டு...

தோட்டத்திற்கு அவன் வந்த போது அங்கு அவனுக்கு முன்னரே வந்து அமர்ந்து இருந்தாள் மது... அங்கிருந்த கல் மேடையில் கையைக் கட்டி கொண்டு அமர்ந்து இருந்தவள்

அருகே சற்று இடைவெளி விட்டு அமர்ந்தான் மித்ரேஷ்... அவன் வரவை உணர்ந்தாலும் அமைதியாய் அமர்ந்து இருந்தவளை கண்டு அவனுக்கு அதிசயமாய் இருந்தது...

"என்ன யோசனை எல்லாம் பலமா இருக்கு...?" என்றவனின் பேச்சில் அவள் திரும்பியும் பார்க்கவில்லை...

"என்னடா காணாமல் போனவன் திரும்பவும் திரும்பி வந்து நம்ம நிம்மதியை கெடுக்கிறானேன்னு ஃபீல் பண்றியா...?" நக்கலாய் கேட்டவன் தன்னைத் திரும்பி பார்த்து முறைத்தவளை அதே நக்கல் சிரிப்புடன் ஏறிட்டவன் அவளது முகம் கண்டு திகைத்தான்...

கண்களில் கண்ணீர் அரும்பி இருக்க உதடுகள் உணர்ச்சியில் துடிக்க அவனைப் பார்த்துக் கொண்டு இருந்த மது இது நாள் வரை அவன் கண்டறியாதவள்...

அவனையும் அறியாது அவனது மனம் துடித்தது...

"மது..." அவன் அழைத்த நொடி அவள் அவனைச் சராமாரியாய் அடிக்க ஆரம்பித்தாள்...

"இனி மேல் இப்படிப் பண்ணுவியாடா... பண்ணுவியா..." என்று அவள் கண் மண் தெரியாமல் அவன் முகம், தோள்ப்பட்டை, நெஞ்சு என்று எல்லா இடத்திலும் பாகுபாடு இல்லாமல் அடிக்கத் துவங்க...

அவனோ அவளைத் தடுக்காமல் அவளின் அடி ஒவ்வொன்றும் தனக்கான தண்டனையாக வாங்கிக் கொண்டு இருந்தான்... அவளாவது அவனுக்குத் தண்டனை கொடுக்கட்டும் என்று அமைதியாய் அதை வாங்கிக் கொண்டான்...

ஒரு கட்டத்தில் அடிக்க முடியாமல் கைகள் வலிக்கத் தனது அத்தனை நாள் ஆத்திரமும் அடங்க அடுத்து அவளது மனதின் துயர் அழுகையாய் வெளிப்பட்டது...

"ஏழு வருசமா காணாம போய் என் நிம்மதியை கொன்னுட்டு இப்ப வந்து நான் நிம்மதியா இருந்தேன்னா

கேட்கிற... என்னால தான் நீ வீட்டை விட்டுட்டு போயிட்டியோன்னு ஒவ்வொரு நொடியும் நான் உள்ளுக்குள்ளேயே அழுது புலம்பியது எனக்கு மட்டும் தான் தெரியும்... அதிலும் அத்தையைப் பார்க்கும் போது எல்லாம் என்னையும் அறியாமல் குற்றவுணர்ச்சி குறுகுறுக்கும்... ஐயோ இவங்களுக்குப் போய் இப்படி ஒரு பெரிய துரோகம் பண்ணிட்டோமேன்னு... இது எல்லாத்துக்கும் நீ தான்டா காரணம்..." அழுகையில் உடைந்தவள் அவனது தோளில் சாய்ந்தாள் மனதின் பாரத்தை இறக்கி வைக்கும் பொருட்டு...

அதில் தன்னுணர்வு அடைந்தவன் அவளின் நெருக்கமான நிலையைக் கண்டு அவனின் மனதுக்குள் பெரும் போராட்டம் நிகழ்ந்தது...

'எப்படி அருகில் வந்தாள்...?' மனம் கேள்வி கேட்டாலும் வாய் விட்டு அவன் கேட்கவில்லை...

"அதான் வந்துட்டேனே விடு மது..." என்றான் தன்மையாக...

"எப்படிடா விடச் சொல்ற...? எதை விடச் சொல்ற...? இத்தனை நாள் நான் தவிச்ச தவிப்பை உன்னால போக்க முடியுமா...? இத்தனை நாள் குற்றவுணர்ச்சி மனதை கொன்னாலும் வெளியில் சிரிச்சிட்டு இருந்தாலும், உள்ளே அழுதுட்டு இருந்தேனே என் சந்தோசத்தை உன்னால திருப்பிக் கொடுக்க முடியுமா...?"

அவளது கேள்வியில் அவன் வாயடைத்துப் போனான்... அவள் இந்தளவுக்குத் தன்னைத் தேடி இருப்பாள், தவித்து இருப்பாள் என்று அவன் கனவிலும் நினைத்தது கிடையாது...

இத்தனை ஆண்டுகளில் அவன் மனதில் அவளைப் பற்றிய இருந்த நினைவு எல்லாம் அவளைத் தோற்கடிக்க வேண்டிய வெறி, பழிவாங்கும் வெறி மட்டும் தான்... மற்றபடி அவளைப் பற்றிப் பெரிதாய் அவன் நினைத்துப் பார்த்தது இல்லை கடைசிச் சில வருடங்களைத் தவிர...

ஆனால் அவளோ ஒவ்வொரு நொடியும் தன்னைத் தேடி இருக்கிறாள் என்பதை உணர்ந்தவனுக்கு என்ன பேசுவது என்று தெரியவில்லை... திகைத்து போய் அமர்ந்து இருந்தான்...

"ஏன்டா என் கிட்ட கூடச் சொல்லாம போன...?" அழுது கொண்டு மூக்கை உறிஞ்சியவளின் சத்தத்தில் தன்னை மீட்டு கொண்டவனுக்கு அவளின் பேச்சுச் சிரிப்பை வரவழைத்து...

"ஏய் குண்டு பூசணி..." அவன் ஆரம்பிக்கவும் அத்தனை நேரம் இருந்த அழுகை மறைந்து அவளுள் கோபம் எட்டி பார்த்தது...

"அப்போ குள்ள கத்திரிக்காய்... இப்போ குண்டு பூசணியா..." என்றவள் அவனை அடிக்க ஏதுவாய் ஏதாவது அகப்படுகிறதா என்று தேடியவள் கண்ணில் ஒன்றும் சிக்காததால் தன் கையே தனக்கு உதவி என்பது போல் தன் கையைக் கொண்டு அவன் தலையில் கொட்ட வர அதைத் தடுத்து அவளின் கையைப் பின்பக்கமாய் வளைத்து முறுக்கியவன்,

"பார்த்தியா பூசணி... இந்த வேலை தானே வேண்டாம்ங்கிறது... பேச்சு பேச்சா இருக்கணும்... இப்படித் திடீர்ன்னு தீவிரவாதி ரேன்ஜ்க்கு வன்முறையில் இறங்க கூடாது..."

"டேய் விடுடா..." அவள் திமிற அவளது உடல் அவனது உடலோடு உரச அதில் மின்சாரம் தாக்கியவன் போல் அதிர்ந்து போனவன் தன்னையும் அறியாது அவளது கையை விடுவித்தான்...

"போடா லூசு..." சிவந்து இருந்த கையின் மணிக்கட்டை தடவி விட்டு கொண்டவள் அவனை முறைத்து பார்த்தாள்...

பதில் பேசாது அமர்ந்து இருந்தவனிடம், "சொல்லுடா ஏன் என் கிட்ட கூடச் சொல்லலை...? நான் அன்னைக்குச் சும்மா தானேடா சொன்னேன்... அதை ஏன் அவ்வளவு சீரியசா நீ

எடுத்துக்கிட்ட... நீ என்னைச் சீண்டறதும் நான் கோபப்படுறதும் நமக்குள் நடக்கிறது என்ன புதுசா... இதுக்கு எல்லாமா கோபப்பட்டு வீட்டை விட்டு போவ...?"

அவளை நிமிர்ந்து பார்த்தவன், "இருக்கலாம்... நமக்குள் பிரச்சினை இருந்து இருக்கலாம்... ஆனால் எல்லாத்துக்கும் ஒரு லிமிட் இருக்கு... அன்னைக்கு நீ பேசிய வார்த்தைகள் என்னை எந்தளவுக்குச் சீண்டியதுன்னு உனக்குத் தெரியாது... இப்பவும் என் மனசில் அந்தக் கோபம் இருக்கு... இல்லைன்னு சொல்ல மாட்டேன்... ஆனா நம்ம பெற்றோருக்காக அதை மறந்து இருக்க முயற்சி பண்றேன்..."

அவன் சொன்ன வார்த்தைகள் அவள் மனதை வலிக்கச் செய்தது... அப்படி என்ன பேசிவிட்டாளாம் அவனை... அவன் அவளைப் பேசியதை விடவா... அன்று அவளை எவ்வளவு கேவலமாய்ப் பேசினான் அவன்... அதை எல்லாம் மறந்துவிட்டானா அவன்...

ஆண்கள் அவர்களின் சௌகரியத்திற்குச் சில விசயங்களை மறந்து விடுவார்கள் போலும்...

அவன் பேசிய விதத்தில் அவளுக்கும் கோபம் வந்தது... அவனுக்கு மட்டும் தான் அவள் மீது கோபம் இருக்குமா....? ஏன் அவளுக்கு இருக்கக் கூடாதா...?

ஏதோ அவன் காணாமல் போனது தன்னால் தான் என்ற உணர்வில் ஏற்பட்ட குற்றவுணர்ச்சியில் அவள் தவித்ததினால் ஒன்றும் அவள் பழைய நிகழ்வுகளை மறக்கவும் இல்லை... அவனை மன்னிக்கவும் இல்லையே... அத்தோடு இன்று அவன் வீட்டில் அவளைப் பார்த்து அவன் பேசிய வார்த்தைகள் இப்போது நியாபகத்தில் வந்து அவளுள் சினத்தை மேலும் வளர்த்தது...

"நீ மட்டும் குறைவாகவா என்னைப் பேசின நீயும் தான் தேவையில்லாமல் பேசின... உன்னை விடச் சின்னப் பெண் நான் உன் பேச்சு தாங்க முடியாமல் தற்கொலை பண்ணிக்கிட்டேனா... இல்லை உன்னை மாதிரி வீட்டை

விட்டா ஓடி போனேன்... பிரச்சினையைச் சந்திக்கத் தெரியாத கோழை நீ... அதான் வீட்டை விட்டு ஓடி போயிட்ட..."

அவளது பேச்சில் அன்றைய நினைவின் தாக்கம் அவனைத் தாக்க அவனது முகம் உணர்ச்சிகளைத் தொலைத்தது...

"ஓடி போனேன் தான்... ஆனா கெட்டு சீரழிஞ்சு போகலையே... படிச்சு நல்ல பதவியோடு தானே திரும்ப வந்து இருக்கேன்... நீ தான் பழசை மறந்துட்டே... பேசிய வார்த்தைகளை மறந்துட்ட... நமக்கு இடையே உள்ள பந்தயத்தையும் மறந்துட்ட..." என்று கோபமாய் வார்த்தைகளை விட்டவன்,

"மொத்தத்தில் எல்லாத்தையும் மறந்துட்ட..." என்றவன் எதையோ நினைத்தவனாய் வேதனையுடன் கண்களை மூடி கொண்டான்...

அவனது 'பந்தயம்' என்ற வார்த்தையில் முகத்தைச் சுளித்தவள், "நீ என்னைக்குமே மாற மாட்ட... என்ன கௌரவமா வந்து என்ன பிரயோஜனம்... உன் மனசு எப்பவுமே அசிங்கம் பிடிச்சது தான்... நீ இதை விட எவ்வளவு பெரிய உயரத்துக்குப் போனாலும் நீ நீதான்... பந்தயமாம் பந்தயம்... அதுக்கும் சில தகுதிகள் வேணும்... அது உனக்கு இல்லை..."

அவள் இந்த வார்த்தைகள் சொல்லும் போது கண்களைத் திறந்து அவளை வெறித்துப் பார்த்தான் அவன்...

'தகுதி இல்லை என்பதால் தான் அமைதியாய் கையைக் கட்டி கொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்கிறேன்... இல்லை என்றால் பேசுகின்ற இந்த வாயை...' அதற்கு மேல் செல்ல முயன்ற கற்பனைக் குதிரையை முயன்று அடக்கி கொண்டான்...

"இத்தனை நாள் குற்றவுணர்ச்சியில் தவிச்சதால உன்னைப் பார்த்ததும் சந்தோசப்பட்டு உன்னை வீட்டுக்கு

கூட்டிட்டு வந்துட்டேன்... இனி உன் வழியில் நான் வர மாட்டேன்... அது போல் நீயும் என் வழியில் குறுக்கிடாதே... இனி நீ யாரோ... நான் யாரோ... இனிமேல் என் மூஞ்சியில் முழிக்காதே..." கோபமாய்ப் பேசியவள் அங்கிருந்து விறுவிறுவெனச் சென்றுவிட்டாள்...

அன்று பேசியதை விட இன்று அவள் பேசிய வார்த்தைகள் அவன் மனதை இன்னமும் அதிகமாய் வலிக்கச் செய்தது...

ஆனாலும் அந்த வலி ஏனோ அவனுக்குச் சுகமாய்த் தான் இருந்தது... அவளின் வெறுப்பும் பெரும் ஆறுதலாய் தான் இருந்தது... இனிமேல் அது தான் அவனுக்குத் துணையும் கூட...

ஈர்க்கும்...

"என்ன ஜான் இது...? இப்படி ரெண்டு பேரும் சண்டை போட்டுக்கிறாங்க... இந்த மது ஏன் எதையும் புரிஞ்சிக்க மாட்டேங்கிறா...?" மிருதுளா ஆதங்கத்துடன் ஜானிடம் கேட்டவள் தளர்ந்த நடையுடன் செல்லும் மித்ரேஷை கண்டு அவளுக்கு வருத்தமாக இருந்தது...

அதே சமயம் கோபப்பட்டுக் கத்திவிட்டுச் செல்லும் மதுவை கண்டு அவளுக்குக் கோபம் வந்தது...

"அப்படியே அவங்க அண்ணன் மாதிரி... எதுவுமே புரியாத மரமண்டை... ட்யூப் லைட்..." அவள் மதுவை திட்டி தீர்க்க... ஜான் புன்னகையுடன் அவளைப் பார்த்துக் கொண்டு இருந்தான்...

ஆதித்யா தன்னிடம் பேசிய முறையில் சற்று வருத்தமாய் இருந்த மிருதுளா அதைப் பற்றி ஜானிடம் பகிர்ந்து கொள்ளத் தான் தோட்டத்திற்கு வந்தாள்... மதுவிடம் ஆதியை பற்றிப் பேச அவளுக்குச் சற்றுப் பயம் தான்... என்ன இருந்தாலும் அவன் மதுவின் உடன் பிறந்தவன் அல்லவா... அதனால் மதுவை தவிர்த்துவிட்டு ஜானிடம் மனசு விட்டு பேச அவனை அழைத்துக் கொண்டு வந்து இருந்தாள்... அவர்கள் பேசி கொண்டு இருக்கும் போது தான் மது அங்கே வந்தது...

ஓரமாய் அமர்ந்து இருந்த இவர்களை அவள் கவனிக்கவில்லை... எழுந்து போய் என்ன என்று கேட்கலாம் என்று மிருதுளா நினைத்த போது ஜான் மித்ரேஷ் வருவதைச் சுட்டி காட்டி தடுத்து விட்டான்...

"அப்பப்பா இந்தக் காதல் படுத்தும் பாடு இருக்கே..." என்ற ஜான் வாய்விட்டுச் சிரித்தான்...

"ஏன் சொல்ல மாட்டே... நீயும் காதலித்துப் பார்... அப்போ புரியும் உனக்கு..."

"நானா மாட்டேங்கிறேன்... மனசுக்கு பிடிச்ச மாதிரி யாரும் கிடைக்க மாட்டேங்கிறாங்களே..." சோகமாய் அவன்

சொல்ல...

"ஆமாம் இப்படியே சொல்லிட்டு இரு... பொண்ணு கிடைச்ச மாதிரி தான்... சரி அதை விடு ஜான்... இந்த மது ஏன் இப்படிப் பண்றா...?" மீண்டும் மதுவிடத்தில் வந்து நின்றாள் அவள்...

"ஈஷ்வரும் அந்த மாதிரி தான் பேசினான்... பதிலுக்கு அவளும் அதே போல் பேசிவிட்டாள்... தப்பு ரெண்டு பேர் மேலயும் இருக்கு... எல்லாம் சரியாகும்... சரியாகலைன்னா சரியாக்கிருவோம்..."

"எப்படி...?"

"நான் இருக்கப் பயமேன் மிருது..." என்று வலது கையை உயர்த்திக் காட்டினான்...

அதில் கலகலவெனச் சிரித்தாள் மிருதுளா... அவளது முகத்தைப் பார்த்துக் கொண்டு இருந்த ஜான்க்கு அவளைக் கண்டு இரக்கம் சுரந்தது...

'என்ன இல்லை இந்தப் பெண்ணிடம்... ஒருவனின் காதலுக்காக எத்தனை ஆண்டுகளாய் தவம் இருக்கிறாள்...? ஆனால் அவனோ இவளை சிறிதும் கண்டு கொள்ள மாட்டேங்கிறானே...' ஜான்க்கு ஆதியை நினைத்து எரிச்சல் வந்தது...

அதே நேரம் தனது அறைக்கு வந்த மது மித்ரேஷ் மேல் அப்படி ஒரு கோபத்தில் இருந்தாள்...

'பெரிய இவன்... இவனுக்கு மட்டும் தான் கோபம் வருமா...? ஏன் எனக்குக் கோபம் வர கூடாதா...? அவன் கோபப்பட்டா இனி நானும் பதிலுக்குக் கோபப்படுவேன்...' என்று மனதில் அவனைத் திட்டி கொண்டே வந்தவள் நிமிர்ந்து பார்த்த போது அங்கு இருந்த கண்ணாடி கண்ணில் பட வேகமாய் அங்கே சென்றாள்..

கண்ணாடி முன் நின்று முன்னும் பின்னும் தன்னைத் தானே திருப்பிப் பார்த்து கொண்டவள், 'நான் நல்லா

தானே இருக்கேன்... ஏன் என்னைக் குண்டு பூசணின்னு சொன்னான்...?' மனதுக்குள் நினைக்க...

'நீ நல்லா அழகா தான் இருக்கே... அதே போல் குண்டு பூசணியாவும் தானே இருக்க...' அவளது மனசாட்சி குரல் கொடுக்க அதில் விள்கெண்ணெய் குடித்தது போல் அவள் முகம் மாறியது...

இடுப்பின் இரு புறமும் இருந்த சதையைப் பிதுக்கி பார்த்தவள், "ஆமாம்... அவன் சொன்ன மாதிரி குண்டா தான் இருக்கேன்... மது நாளையில் இருந்து உன் உடம்பை குறைக்கிற... ஸ்லிம் ஆகுற... அவன் எல்லாம் சொல்ற அளவுக்கா உன் உடம்பை வச்சிருப்ப..." கண்ணாடி பார்த்து தனது உருவத்திடம் சொல்லி கொண்டவள்,

"நாளையில் இருந்து அதுக்கான முயற்சி எடுக்கிற... அவன் முகத்தில் கரியை பூசுற..." தனக்குத் தானே சபதம் எடுத்தவள் அடுத்த நொடி மிருதுளாவிற்கு அழைத்தாள்...

"இப்ப இவ எதுக்கு ஃபோன் பண்றாள்ன்னு தெரியலையே..." மிருதுளா பயத்துடன் அலைப்பேசியை உயிர்பித்தாள்...

"என்ன மது இந்த நேரத்தில்..."

மிருதுளா பேசியதை காதில் வாங்கிக் கொள்ளாத மது, "சில்க்கி... நாளைக்குக் காலையில் என்னை ஃபைவ் ஓ க்ளாக் எழுப்பி விட்டிரு..."

"எதுக்குடி...?" அதிர்ச்சி அடைந்தாள் மிருதுளா... பின்னே எட்டு மணிக்குக் குறையாமல் எழும்பாதவள் ஐந்து மணிக்கு எழும்பப் போவதாய்ச் சொல்வது அதிர்ச்சியாக இருக்காதா...?

"சொன்னதை மட்டும் செய்... குறுக்கு விசாரணை எல்லாம் பண்ணாதே..." கோபத்துடன் மது அலைப்பேசியை அணைத்தாள்...

"என்ன மிருது... எதுக்கு இவ்வளவு அதிர்ச்சி..." ஜான் சிரித்துக் கொண்டே கேட்க...

"மது ஏர்லி மார்னிங் எழுப்பி விடச் சொல்றா ஜான்..." நம்ப முடியாமல் சொன்னாள் அவள்...

"ஓகே... அப்போ ஸ்டார்ட் ஆகிருச்சு..." என்றபடி எழுத்து சோம்பல் முறித்த ஜான், "எனக்குத் தூக்கம் வருது... நீயும் போய்த் தூங்கு... குட் நைட்..."

"என்ன ஸ்டார்ட் ஆகிருச்சு... சொல்லு... சொல்லு..." என்று ஆர்வத்துடன் கேட்டவளை உற்று பார்த்தவன்,

"லவ் ஃபீலிங் தான்..."

"உண்மையாவா...?"

"ம்... இனி ஈஷ்வருக்குப் பிடிச்ச மாதிரி ஒவ்வொரு விசயத்திலும் தன்னை மாத்திக்குவா பாரு..."

"எப்படி ஜான்...? முன்னாடி ரெண்டு பேரும் சண்டை போடாத நாள் கிடையாது... இப்போ அண்ணாவை பார்த்து ஏழு வருசம் இருக்கும்... அப்படி இருக்கும் போது இது எப்படி...?" இன்னமும் நம்ப முடியவில்லை அவளால்...

"இந்த ஏழு வருசத்தில் அவள் என்னைக்காவது ஈஷ்வரை நினைக்காம இருந்து இருக்காளா... இல்லை அழாம தான் இருந்து இருக்காளா...?"

"அது... பெரியம்மா கஷ்டப்படுறாங்களேன்னு..."

"ம்ஹூம்..." மறுப்பாய் தலையசைத்தவன், "அது மட்டும் இல்லை... அவளுக்கும் அந்த வருத்தம் இருக்கு... ஆனா அதை உணராம தான் இப்படி இருக்கிறா..."

"ஆனா அண்ணா..." இழுத்தாள் மிருதுளா...

"அவனும் லவ் பண்ற மாதிரி தான் இருக்கு... கன்ஃபார்மா தெரியலை... ஆனா மது பத்தி எனக்குக் கன்ஃபார்மா தெரியும்..."

"எப்படியோ நல்லபடியா முடிஞ்சா சரி..." என்ற மிருதுளா விடைப்பெற்று சென்றாள்...

மறுநாள் விடியற்காலையில் மிருதுளா மதுவின் அலைப்பேசிக்கு சுமார் இருபது தடவை அழைத்து அவளை எழுப்பி விட்டாள்...

தூக்க கலக்கத்திலேயே பல் துலக்கி, உடையை மாற்றிக் கொண்டு விளையாட்டு மைதானத்திற்கு வந்தாள் மது... அங்கு ஏற்கெனவே மித்ரேஷ், ஆதித்யா கூடைப்பந்து விளையாடி கொண்டு இருக்க, மிருதுளாவும், ஜானும் டென்னிஸ் விளையாடி கொண்டு இருந்தனர்...

'காலையிலேயே ஆரம்பிச்சுட்டான்களா...? இப்படி உடம்பு வளைச்சு விளையாடுறது எல்லாம் நமக்குச் சரிப்பட்டு வராது... பேசாம நடப்போம்...' மனதுக்குள் நினைத்தவள் நடப்பது எளிது என்று நினைத்து சுற்றி இருந்த நடைப்பாதையில் நடக்க ஆரம்பித்தாள்...

'குண்டு பூசணி இங்கே என்ன பண்ணுது...? காலையில் கும்பகர்ணி மாதிரி தூங்க இல்ல செய்வாள்...' என்று நினைத்தபடி மித்ரேஷ் அவளைப் பார்வையில் தொடர்ந்தான்...

கொடுமையே என்று நடந்து கொண்டு இருந்தவள் ஏதோ தோன்ற திரும்பி பார்த்தாள்... அவள் நினைத்தது போல் மித்ரேஷ் அவளைப் பார்த்துக் கொண்டு இருக்க ஆள் காட்டி விரலை தூக்கி, 'கொன்னுருவேன் கொன்னு...' என்று சைகையில் அவள் சொல்ல அதில் தன் பார்வையைத் திருப்பிக் கொண்டவன் தனக்குள் சிரித்தபடி விளையாட்டைத் தொடர்ந்தான்...

அதே நேரம் மிருதுளா ஆதியை இடையிடையே பார்த்துக் கொண்டு விளையாட்டில் சொதப்பிக் கொண்டு இருந்தாள்... அவளின் மனநிலை புரிந்தவனாய் ஜானும் மெதுவாய் விளையாண்டான்...

"இவ எல்லாம் விளையாடலைன்னு யார் அழுதா...?" ஆதி முணுமுணுத்தது தெளிவாக மித்ரேஷ் காதில் விழுந்தது...

"யாரை சொல்ற ஆதி...?" சுற்றும் முற்றும் பார்த்தவன், "மதுவையா... அவள் விளையாடலையே... அவ வாக்கிங் போய்ட்டு இருக்கா..."

"ச்சு... நான் மதுவை சொல்லலை... ப..." பட்டு என்று சொல்ல வந்தவன் நிறுத்திவிட்டு, "மிருதுளாவை சொல்றேன்..."

"இது என்ன புதுசா இருக்கு... பட்டு எப்போ மிருதுளாவாச்சு... நான் பட்டுன்னு கூப்பிட்டா கூட உனக்குப் பிடிக்காதே..."

இருவரும் பேசி கொண்டு இருந்தாலும் அவர்களது கைகள் பந்தை மாறி மாறி பறித்து விளையாடுவதில் மும்முரமாய் இருந்தது...

"அவ என்னை லவ் பண்றாள்ன்னு சொன்னதில் இருந்து..." எரிச்சலுடன் மொழிந்தான் ஆதி...

"ஏய்... வாட் அச் சர்ப்ரைஸ்... நம்ப முடியலையே..." என்றவன், "அப்போ நீ கல்யாணத்துக்கு ரெடின்னு சொல்லு..."

"இல்ல ஈஷ்வர்... நான் முடியாதுன்னு மறுத்துட்டேன்..." என்றவன் குரல் இறுகி ஒலித்தது... தன் கையில் இருந்த பந்தை நழுவ விட்டான்...

பந்தை கையில் எடுத்து மித்ரேஷ் அதைத் தரையில் அடித்துத் தட்டி கொண்டே... "ஏன்... சிஸ்டருக்கு என்ன குறைச்சல்...? ஏன் வேண்டாம்ன்னு சொன்ன...?"

"நிறை குறை பார்த்து வருவது இல்லைடா காதல்... மனசுக்கு பிடிக்கணும்..."

"சிஸ்டரை உனக்குப் பிடிக்கலையா...?"

"ப்ச்சு... பிடிக்கலைன்னு இல்லை... ஆனா மனைவியா நினைச்சு பார்க்க பிடிக்கலைன்னு சொல்றேன்..."

"அதான் ஏன்னு கேட்கிறேன்...?" விடாமல் கேட்டான் மித்ரேஷ்...

"என் உணர்வுகளைப் புரிஞ்சிக்கிறதுக்கு நீயும் ஒரு பொண்ணைக் காதலிச்சு இருக்கணும் ஈஷ்வர்... காதலை உணர்ந்தவனால் மட்டுமே என்னைப் புரிஞ்சிக்க முடியும்..."

அதற்கு மேல் ஆதித்யா பேசவில்லை... அதற்கு மேல் என்ன பேசினாலும் அவன் வாயை திறக்க போவது இல்லை... அதை உணர்ந்த மித்ரேஷும் அமைதி காத்தான்... ஆனால் ஆதி பேசிய வார்த்தைகள் அவனின் மனதில் பலவித உணர்வலைகளைத் தோற்றுவிக்க அதைத் தாங்கும் சக்தி இல்லாது தனது இயலாமையைப் பந்திடம் முரட்டுத்தனமாய்க் காட்ட துவங்கினான் அவன்...

மூன்று சுற்றுக்களுக்கு மேல் நடக்க முடியாமல் மது அங்கிருந்த மரத்தடியில் அமர்ந்துவிட்டாள்... சுகமாய் வருடி சென்ற காற்றும், நடந்ததினால் ஏற்பட்ட களைப்பும் அவளை ஆட் கொள்ள அவளையும் அறியாது அவளது விழிகள் சொருகியது...

எல்லோரும் விளையாடி விட்டு செல்ல மித்ரேஷ் மட்டும் செல்லாமல் அங்கேயே நின்றான்... மூவரும் கண்ணை விட்டு மறைந்ததும் வேகமாய் மதுவின் அருகில் சென்றான்... மரத்திற்குப் பின்னால் அமர்ந்து இருந்ததால் யாரும் அவளைக் கவனிக்கவில்லை... ஆனால் மித்ரேஷ் அவள் வந்ததில் இருந்து அவளை மட்டுமே கவனித்துக் கொண்டு இருந்தான்...

ஓவியப் பாவையாய் உறங்கி கொண்டு இருந்தவளை அவனையும் மீறி அவனது கண்கள் ஒரு நொடி ரசித்தது... பின் தன்னை மீட்டு கொண்டவன் அவளின் தோளை தட்டி,

"மது... மது..." என்று எழுப்ப...

"ம்..." என்றவள் தூக்க கலக்கத்தில் ஒரு புறமாய்ச் சரிய ஆரம்பிக்க...

"ஏய்..." என்று பதறியவன் அவள் அருகில் அமர அடுத்த நொடி அவள் வாகாய் அவனது மடியில் சரிந்தாள்...

என்ன செய்வது என்று புரியாமல் விழித்தவன் தூங்கும் அவளை எழுப்ப மனம் வராமல் அவளைத் தன் மடியில் நன்கு படுக்க வைத்து கொண்டவன் விழி எடுக்காமல் அவளைப் பார்த்துக் கொண்டு இருந்தான்...

நாளை காலம் என்ன வைத்து காத்திருக்கிறதோ அது அவனுக்குத் தெரியாது... அதனால் இந்தக் கணத்தை அவன் விரும்பி ரசித்தான்...

அப்போது பேச்சு குரல் கேட்க பதட்டத்துடன் நிமிர்ந்தவன் அங்கு நடைப்பயிற்சிக்காக வந்து கொண்டு இருந்த மூன்று தந்தையரையும் கண்டு உள்ளம் பதற அவளை எழுப்பினான்...

அக்ஷயிடம் அவனுக்குச் சிறிது பயம் உண்டு... தந்தை அக்ஷயை 'சார்' என்று மரியாதையுடன் அழைத்துப் பழகியதை பார்த்து வளர்ந்ததினால் என்னவோ அவனும் அக்ஷயை சார் என்றே அழைத்துப் பழகிவிட்டான்...

"மது... எழுந்திரு... உங்கப்பா வர்றாங்க..."

அவளோ எழாமல் சண்டித்தனம் செய்தாள்...

'ராட்சசி... என்னை எப்படி எல்லாம் பழி வாங்கிறா...' மனதுக்குள் புலம்பியவன் புலம்பல் அவள் காதுக்கு எங்கே கேட்க போகிறது... அவள் சுகமாய்த் தூக்கத்தில் ஆழ்ந்து இருந்தாள்...

வேறு வழியின்றி அவளை மடியில் இருந்து தூக்கி மீண்டும் மரத்தில் சாய்த்து அமர வைத்தவன் சட்டென்று அங்கிருந்து எழுந்து அவ்விடத்தை விட்டு அகன்றான்...

"அக்ஷய்... இங்கே பாருங்க நம்ம மதுவை..." ஆதர்ஷ் அக்ஷயிடம் சொல்ல...

அவளின் உடையைப் பார்த்த அக்ஷய் சிரித்துக் கொண்டே, "வாக்கிங் போக வந்துட்டு தூங்குறதை பாரு..." என்றபடி மகளின் அருகில் சென்று அவளை எழுப்பினான்...

சிரமப்பட்டு அவளை எழுப்பியவன் அவளை வீட்டுக்கு அனுப்பி வைத்துவிட்டு தனது நடைப்பயிற்சியைத் தொடர்ந்தான்...

காலையில் வழக்கம் போல் கிளம்பிய மது மிருதுளாவுடன் சென்று ஜானை அழைக்கச் சென்றாள்...

"சில்க்கி... என் உடம்பு கொஞ்சம் குறைஞ்சிருச்சுல்ல..." மூன்று சுற்று நடந்துவிட்டு மது பண்ணும் அலப்பறை இருக்கே... அது கொஞ்சம் நஞ்சம் இல்லை...

"ம்... கொஞ்சம்... கொஞ்சம்..." நமட்டுச் சிரிப்பு சிரித்தாள் மிருதுளா...

"போடி லூசு... நீ பொய் சொல்ற... நான் அத்தை கிட்டே கேட்டுக்கிறேன்..." சிலுப்பிக் கொண்டு அவள் உள்ளே சென்றாள்...

"ஜான்... மேரி ஜான்..." என்று வழக்கம் போல் கத்தி கொண்டு அவள் உள்ளே செல்ல...

"இங்கே இருக்கேன் மை டியர் ஜானு..." என்று அங்கு வந்த ஜான் வழக்கத்திற்கு மாறாய் அவளைக் கட்டிப்பிடித்து வரவேற்றான்...

"ஹா... ஹா... நண்பேன்டா..." என்று மதுவும் அவனின் தோள் பிடித்துத் தொங்கி கொண்டு குதூகலிக்க அங்கு உணவு மேசையில் அமர்ந்து உணவு உண்டு கொண்டு இருந்த மித்ரேஷ்க்குக் காதில் புகை வராத குறையாய் கடுப்பாய் இருந்தது... தம்பியை முறைத்துப் பார்த்தான்...

இதைக் கண்ட ஜான் மிருதுளாவை பார்த்துக் கட்டை விரலை உயர்த்திக் காட்டி சிரிக்க அவளும், 'நடத்து... நடத்து...' என்று சிரித்தபடி தலையை ஆட்டினாள்...

"அத்தை இன்னைக்கு என்ன ஸ்பெசல்...?" என்றவள் மித்ரேஷ் தட்டில் இருந்த குழிப்பணியாரத்தைக் கண்டதும் அவள் கண்களை அகல திறந்து,

"வாவ் குழிப்பணியாரம்..." என்று கத்தியவள் மித்ரேஷ் மீது இருந்த பகையைப் புறம் தள்ளியவளாய் அவனது தட்டில் இருந்து மூன்று பணியாரங்களைத் தனது கையில் அள்ளி கொண்டாள்...

அவன் அவளை முறைத்து பார்க்க...

"அத்தே... உங்க புள்ளைக்குச் சூடா பணியாரம் கொண்டு வந்து கொடுங்க... ரொம்பச் சூடா இருக்கான்..."

"ஏண்டி... நேத்து தான் அப்படிச் சவாலா பேசிட்டு போன இன்னைக்கு இப்படி வந்து பேசுற... உன்னை எல்லாம் எந்த ரகத்தில் சேர்ப்பது...?" மித்ரேஷ் பல்லை கடித்தான்... ஜானின் மேலுள்ள கோபத்தில் அவளிடம் காய்ந்தான்...

"சாப்பாடு விசயத்தில் நான் கொஞ்சம் முன்ன பின்னே தான்... சாப்பாடா, சாவாலான்னு வர்றப்போ எனக்கு எல்லாம் சாப்பாடு தான்ப்பா முக்கியம்..." என்றவள் அவனின் கோபத்தைக் கண்டு கொள்ளாது பணியாரத்தை வாயில் போட்டு அரைக்க...

"அப்போ சாப்பாடு கிடைச்சா நீ எல்லாத்தையும் மறந்துருவ... எல்லாத்துக்கும் சரின்னு சொல்லுவ அப்படித்தானே..." 'எல்லாத்துக்கும்' என்ற வார்த்தையை அவன் அழுத்தி சொன்னவிதத்தில் அவனின் மனப்புழுக்கம் வெளிப்பட்டது...

அவனது வார்த்தையில் மது புரியாமல் அவனைப் பார்த்தாள்...

"அப்படி என்னடி கொடுத்து அவன் உன்னைக் கவுத்தினான்...? திருநெல்வேலி அல்வா கொடுத்துக் காரியத்தைச் சாதிச்சுக்கிட்டானோ...?" சீற்றமும் கேலியுமாய் மித்ரேஷ் கேட்டான்... அவனது மனம் ஆத்திரத்தில் எரிந்து கொண்டு இருந்தது...

அவளுக்கு மட்டும் கேட்கும் குரலில் அவன் சொன்னாலும் அருகில் நின்று இருந்த ஜான், மிருதுளா காதில் அது விழத் தான் செய்தது...

அவர்கள் திகைத்து போய் மித்ரேஷை பார்த்தனர்...

மதுவும் அதிர்ந்து போய் நின்றுவிட்டாள்... கையில் இருந்த பணியாரங்கள் அவளையும் அறியாது நழுவி கீழே விழுந்தது...

அவளைப் பொருத்தவரை எந்த ஒரு வெறுப்பையும், கோபத்தையும் வெகு நேரம் இழுத்து பிடித்து வைக்க முடியாது... எந்தளவுக்குக் கோபப்படுகிறாளோ அந்தளவுக்கு அதை வெகு சீக்கிரத்தில் மறந்தும் விடுவாள்... அதே போல் தான் நேற்று மித்ரேஷ் இடத்தில் கோபப்பட்டுக் கத்திய போதும் அந்தக் கோபம் விரைவில் ஆறி விட அவன் தன்னைக் குண்டு என்று சொன்னதை மட்டும் நினைவில் வைத்துக் கொண்டு மற்றவற்றைப் புறம் தள்ளி விட்டாள்...

"நீ என்ன பேசுறேன்னு புரிஞ்சு தான் பேசுறியா...?" மதுவின் உள்ளமும், உடலும் நடுங்கியது...

"நல்லா புரிஞ்சதால தான் பேசறேன்..." என்றவன் நாற்காலியில் இருந்து எழுந்தான்...

"ஈஷ்வர்... அவள் ஏதோ விளையாட்டாய்..." ஜான் அவளுக்காகப் பரிந்து கொண்டு வர...

"நீ உன் வேலையைப் பார்... அநாவசியமா என் விசயத்தில் தலையிடாதே..." என்று அவனிடமும் காய்ந்தவன் கையைக் கழுவி கொண்டு மீண்டும் தம்பி அருகில் வந்து,

"மது கிட்ட டிஸ்டன்ஸ் மெயின்டையின் பண்றது உனக்கு நல்லது... இல்லை அது அவளுக்குத் தான் நல்லது இல்லை..." அடிக்குரலில் எச்சரிக்கும் தொனியில் பேசியவன் அங்கிருந்து நகர்ந்தான்...

அந்நேரம் பார்த்து மிருதுளாவின் அலைப்பேசி அடித்தது...

அங்குச் சூழ்நிலை சரி இல்லாததால் அதை எடுத்துக் கொண்டு வேகமாய் வெளியில் வந்தவள் ஆதியின் மீது மோதி கொண்டு நின்றாள்...

அவளைக் கீழே விழாமல் பிடித்து நிறுத்தியவன் அவளின் சிலை போன்ற நிலை கண்டு அவள் கண் முன் சொடக்கு போட்டவன்,

"ஹலோ..."

"ஆங்..." பிரம்மையில் இருந்து விழித்தவள், "சொல்லுங்க மாமா..." என்றாள் ஆசையாக...

"ஃபோன் ரொம்ப நேரமா அடிக்குது... ஏதாவது எமர்ஜன்சியா இருக்கப் போகுது..."

"உங்களை விட எமர்ஜன்சியா கவனிக்க வேண்டிய பேஷண்ட் யாரும் இல்லை..." என்றவள் அவனை விழி எடுக்காது பார்வையால் பருக துவங்க...

"உனக்கு எல்லாம் எவன் டாக்டர் பட்டம் கொடுத்தானோ தெரியலை..." என்று தலையில் அடித்துக் கொண்டவன் மித்ரேஷின் வீட்டிற்குள் நுழைந்தான்...

உள்ளே நுழைந்த ஆதியின் கண்களில் தங்கையின் ஓய்ந்த தோற்றம் விழ, "மது என்னடா... கண்ணு எல்லாம் கலங்கி இருக்கு..."

அண்ணனாய் அவள் மீது அவனுக்குப் பாசம் அதிகம்...

"அதையே தான் நானும் கேட்கிறேன் சொல்ல மாட்டேங்கிறா..." அப்போது தான் அங்கு வந்த நிஷா அவனிடம் கூறினார்...

"ஜான்... இவ ஏன் இப்படி இருக்கிறா... எப்போதும் இப்படி இருக்க மாட்டாளே...?"

"அது..." ஜான் சொல்ல துவங்கும் போது,

"அது ஒண்ணும் இல்லைண்ணா... பணியாரத்தில் இருந்த மிளகாயை கடிச்சிட்டேன்... அதான்..." இனிப்புப் பணியாரத்தை உண்டவள் மித்ரேஷின் காரமான வார்த்தைகள் மனதை சுட கண்கள் கலங்க நின்று இருந்தாள்...

அதைக் கேட்டுக் கொண்டே அங்கு வந்த மித்ரேஷ் மனதுக்குள் நிம்மதி அடைந்த போதும் அவனது பார்வை மதுவை அளவிடத் தவறவில்லை... ஆனால் அவள் மறந்தும் அவன் புறம் திரும்பவில்லை...

தங்கையின் பதிலில் வாய்விட்டு சிரித்த ஆதி, "மது... உன்னோட..." என்று மேலும் சிரிக்க...

அங்கு வந்த மிருதுளா அவனின் சிரிப்பை ஆசையுடன் பார்த்துக் கொண்டு இருந்தாள்...

அவளைக் கண்டதும் அவனின் சிரிப்பு ஸ்விட்ச் போட்டார் போன்று நின்றது...

"ஈஷ்வர்... வா போகலாம்..." ஆதி மித்ரேஷை இழுத்துக் கொண்டு வெளியில் சென்றான்...

இரு ஆண்களும் அன்பு உள்ளம் கொண்ட இரு பெண்களின் மனதையும் தெரிந்தே நோக செய்தனர்...

"சாரி மது... ஈஷ்வர் ஏதோ கோபத்தில் அப்படிப் பேசிட்டான்..." காரில் போகும் போது ஜான் அண்ணனுக்காக மதுவிடம் மன்னிப்பு கேட்டான்...

"விடு ஜான்... அவன் அப்படிப் பேசலைன்னா தான் அதிசயம்..." விரக்தியுடன் ஒலித்த அவளது குரலில் கவலையுடன் அவளைப் பார்த்தவன் பின் மிருதுளாவை பார்த்தான்...

அவளோ தனது யோசனையில் மூழ்கி இருந்தாள்... இருவரையும் கண்டு ஜான்க்கு இரு ஆண்கள் மேலும் கோபம் வந்தது...

அடுத்து வந்த நாட்கள் அமைதியாய்க் கழிந்தது...

மித்ரேஷ் தனது அலுவல் பணியில் திறம்பட நடந்து கொண்டதை பாராட்டி தனது நாளிதழில் எழுதிய மது நேரில் அவனிடம் ஒரு வார்த்தை பேசவில்லை... அந்தளவுக்குக் கோபமும், வருத்தமும் அவள் மனதில் கனன்று கொண்டு இருந்து...

அந்த வார இறுதியில் வீட்டின் உறுப்பினர் அனைவரும் அக்ஷய் வீட்டு மொட்டை மாடியில் கூடி இருந்தனர்...

பெரியவர்கள் அனைவரும் அங்கு விரிக்கப்பட்டு இருந்த பாயில் அமர்ந்து பேசி கொண்டு இருந்தனர்... மித்ரேஷும், ஆதியும் மொட்டை மாடி சுவற்றில் சாய்ந்து நின்றபடி பேசி கொண்டு இருக்க... அவர்களுக்குச் சற்று தள்ளி மது, மிருதுளா, ஜான் மூவரும் அரட்டை அடித்துக் கொண்டு இருந்தனர்...

"பசங்களா சாப்பிட வாங்க..." துளசி எல்லோரையும் அழைக்கச் சிறியவர்கள் அனைவரும் அங்கே வந்தனர்...

'ஐய்... எனக்குப் பிடிச்ச கதம்பச் சாதம்... உருளைக்கிழங்கு வறுவல்...' என்று ஆர்ப்பாட்டமாய் வந்து அமரும் பேத்தி மதுவின் அமைதி அவருக்கு அதிசயமாய் இருந்தது...

"என்ன அம்மு... அமைதியா இருக்க...? காய்ச்சல் எதுவும் அடிக்குதா...?" என்று பாட்டி கேட்டதும் மனதில் இருந்த பாரம் அவளை அழுத்த அவரது மடியில் தலை சாய்த்தாள் அவள்...

மித்ரேஷ் அமைதியாய் அவளைப் பார்த்துக் கொண்டு இருந்தான்... ஜானும், மிருதுளாவும் ஒருவரை ஒருவர் பார்த்து கொண்டனர்...

"அம்மு... ஆர் யூ ஆல்ரைட்..." அக்ஷயும் தன் பங்கிற்குப் பதற்றத்துடன் வினவ...

"பிரிஜ்ஜில் இருந்த ஐஸ்கிரீம் எல்லாத்தையும் ஒத்த ஆளா முழுங்கினா காய்ச்சல் வராம என்ன வரும்...? சொல் பேச்சுக் கேட்கிறது இல்லை..." அபி அவளைக் கடிய...

அன்னையும் தான் உண்பதை சுட்டி காட்டவும் மதுவின் கண்களில் கண்ணீர் திரண்டது...

"மாம்... ப்ளஸ்..." என்றவளை பார்த்து துணுக்குற்ற அபி அவளின் அருகில் சென்று,

"என்னாச்சு அம்மு... நீ இப்படித் தளர்ந்து இருந்து நான் பார்த்தது இல்லையே..." அன்னையின் அக்கறையில் மதுவிற்குக் கண்ணீர் பொங்கியது...

"உடம்பு ரொம்ப முடியலையாடா..." ஆம் என்பது போல் அவள் தலையசைக்க...

"போய் ரெஸ்ட் எடுக்கிறியா...?"

"வேண்டாம் இங்கேயே இருக்கேன்..." என்று மறுத்தவள் பேருக்கு ஏதோ கொறித்துவிட்டு மீண்டும் பாட்டியின் மடியில் தஞ்சம் புகுந்தாள்...

தான் பேசியது இந்தளவுக்கு அவளைக் காயப்படுத்த கூடும் என்று நினைத்து பார்த்திராத மித்ரேஷ்க்கு ஒரு புறம் சந்தோசமாய் இருந்தாலும் மறுபுறம் வருத்தமாய் இருந்தது என்னவோ உண்மை...

சாப்பிட்டுக் கொண்டு பேசியவர்களின் பேச்சு அங்கு இங்கு என்று திசை திரும்பி சென்று இறுதியில் பிள்ளைகளின் திருமணத்தில் வந்து நின்றது... ஆதி, மிருதுளா கதை எல்லோருக்கும் தெரியுமாதலால் அடுத்து மது மற்றும் மித்ரேஷ் திருமணம் பற்றிப் பேச்சு வந்தது...

"நிஷா... அடுத்து மித்ரேஷ்க்கு பொண்ணு பார்த்திரலாமா...?" அபி கேட்டதும் நிஷா,

"ஆமாம் அண்ணி... இத்தனை நாள் அவன் கஷ்டப்பட்டது போதும்... இனியாவது மனைவி, குழந்தைன்னு சந்தோசமா இருக்கணும்... நல்ல பொண்ணா இருந்தா நீங்களே பாருங்க..."

"என்ன ஈஷ்வர்... நிஷா சொன்ன மாதிரி உனக்குப் பொண்ணு பார்த்திடலாமா..." அக்ஷய் அவனிடம்

நேரிடையாய் கேட்க...

அதில் விதிர்த்துப் போய்த் திரும்பியவன் பின் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு, "ஆதி கல்யாணம் பண்ணும் போது நானும் பண்ணிக்கிறேன்..."

"அப்போ இந்த ஜென்மத்தில் ஈஷ்வர் கல்யாணம் நடக்காது..." ஜான் மிருதுளா காதில் முணுமுணுத்தான்...

"ஜான்..." அவள் அவனை முறைக்க...

"சரி... சரி... சீக்கிரம் நடக்கும் போதுமா..." என்று அவன் நக்கலாய் சிரித்தான்...

"அது எல்லாம் விடு... மதுக்கு எப்போ மாப்பிள்ளை பார்க்க போற அக்ஷய்..." துளசி மகனிடம் கேட்டார்...

அக்ஷய் யோசனையாய் மகளைப் பார்த்தவன், "மது... தான்யாவோட அப்பா என் கிட்ட பேசினார்... தருணுக்கு உன்னைப் பெண் கேட்கிறாங்க... நான் என்ன பதில் சொல்லட்டும்..."

அவ்வளவு நேரம் பாட்டியின் மடியில் படுத்து இருந்த மது எழுந்து அமர்ந்து திருதிருவென விழித்தாள்... எங்கே தன் குட்டு மித்ரேஷ் முன் வெளிப்பட்டு விடுமோ என்று பயந்தாள்... சும்மாவே அவளைக் காய்ச்சி எடுப்பவன் அவள் பொய் சொல்லியது தெரிந்தால் அவ்வளவு தான்... பந்தயத்தைக் காரணம் காட்டி அவளைப் படுத்தி எடுத்து விடுவான்...

"யாரு ஐஏஎஸ் ஆபிசரா இருக்கானே அந்தப் பையனா..." என்று ஆர்வமுடன் விசாரித்த அபியிடம் ஆம் என்று தலையசைத்தான் அக்ஷய்...

"அம்மு கிட்ட என்ன கேட்டுக்கிட்டு... நீங்களே சரின்னு சொல்லிடுங்க..." அபி சொன்னதும் அக்ஷய் மகளைப் பார்த்து,

"என்ன அம்மு... சம்மதம்ன்னு சொல்லிரவா...?" அழுத்தமாய்க் கேட்டான்...

அதே நேரம் மித்ரேஷும் அவளைத் தான் உன்னிப்பாய் கவனித்துக் கொண்டு இருந்தான்...

மது நிமிர்ந்து தந்தையைப் பார்த்தவள் பின் மித்ரேஷை பார்த்தாள்... அவனது கடின முகத்தைக் கண்டு மனதுக்குள் அஞ்சினாலும் அவனிடம் தோற்றுப் போய்விடக் கூடாது என்று மனதில் உறுதியாய் எண்ணியவள்...

"உங்க விருப்பம் டாட்..." என்க... அவளை எல்லோரும் சந்தோசமாய் அணைத்து கொண்டனர்...

எல்லோரும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதக்க மித்ரேஷ் மட்டும் எழுந்து சென்று தனியே நின்றான்...

இருள் நிறைந்த வானில் நம்பிக்கை நட்சத்திரம் எங்காவது தென்படுகிறதா என்று தேடிப் பார்த்தவனுக்கு ஏமாற்றமே எஞ்சியது...

வேதனையுடன் வானை வெறித்துப் பார்த்துக் கொண்டு இருந்தவன் மனதில் தோற்று போன உணர்வையும் தாண்டிய வேறு ஒரு உணர்வு எழுந்து அவனை வாட்டி வதைத்து உயிருடன் கொன்றது...

ஈர்க்கும்...

எல்லோரும் சந்தோசத்தில் மிதந்து கொண்டு இருக்க அனித்ராவின் முகம் மட்டும் சரி இல்லாதது போல் தோன்றியது அக்ஷய்க்கு... தங்கையின் மனவருத்தம் அவனுக்குப் புரியாமல் இல்லை... அதற்குத் தான் என்ன செய்வது என்றும் அவனுக்குத் தெரியவில்லை...

ஆதித்யாவை மிரட்டி பணிய வைத்து மிருதுளாவின் கழுத்தில் தாலி கட்ட செய்தாலும் அதன் பின் அவளுடன் வாழ போவது அவன் தான்... அதற்குப் பின் அவர்களது வாழ்க்கையின் அந்தரங்கத்தில் நுழையும் அதிகாரம் பெரியவர்களுக்கு இல்லை... இந்தத் திருமணத்தால் நாளை மிருதுளா சிறிது கண் கலங்கினாலும் அது அவளது பெற்றோரை பாதிப்பது போல் அவனையும் தான் பெரிதாய் பாதிக்கும்...

மணப்பந்தத்தில் மனப்பொருத்தம் மிகவும் அவசியம்... மனம் ஒத்து போகவில்லை என்றால் வாழ்க்கையே அலங்கோலம் ஆகிவிடும்... அதை உணர்ந்தவனாய் அக்ஷய் தங்கையைச் சமாதானப்படுத்த முயன்றான்...

"அனி... கவலைப்படாதே... எல்லாம் சரியாகும்..."

"எப்போண்ணா சரியாகும்...?" அழுகையுடன் கோபமாய் வெடித்தாள் அவள்...

"ஆதி எப்போ கல்யாணத்துக்குச் சரின்னு சொல்றது...? எப்போ என் பொண்ணு கல்யாணம் நடக்கிறது...? இப்பவே இருபத்தியாறு வயசாச்சு... நேத்து கூட என் பிரெண்ட் ஒருத்தி நக்கலா விசாரிக்கிறா... என்ன உன் அண்ணன் பையன் கூட உன் பொண்ணைக் கல்யாணம் பண்ண சம்மதிக்க மாட்டேங்கிறானாமே... உன் பொண்ணுக்கு ஏதாச்சும் பெரிய வியாதியான்னு கேலியா கேட்கிறா...? இதைக் கேட்டு எனக்கு எப்படி இருந்துச்சு தெரியுமா...? எனக்கு இன்னைக்கே ஒரு முடிவு தெரிஞ்சாகணும்... ஆதி மிருதுவை கல்யாணம் பண்ணிப்பானா மாட்டானா...? இன்னும் அவன் முடிவை மாத்திக்கலைன்னா என்

பொண்ணுக்கு நான் வேற மாப்பிள்ளை பார்க்கிறதை தவிர எங்களுக்கு வேறு வழியில்லை... எத்தனை நாளைக்குத் தான் அவள் இப்படி இருக்கிறதை பார்த்து நாங்களும் வேதனைப்படுறது..."

அனி மனதில் இருந்த துயரத்தை அண்ணனிடம் பட்டென்று போட்டு உடைத்து விட்டாள்... அவளும் என்ன தான் பண்ணுவாள் பாவம்... வெளியில் சிரித்துக் கொண்டு வளைய வந்தாலும் உள்ளுக்குள் மகள் அடையும் துயரம் அவளுக்குத் தானே தெரியும்... தன்னுடன் படித்தவர்களின் திருமண அழைப்பிதழை காணும் போது எல்லாம் மகளது கண்ணில் தோன்றும் வலியை ஒரு தாயாய் அனியும் எத்தனை நாள் தான் பார்த்துச் சகித்துக் கொண்டு இருப்பாள்...

அனியின் பேச்சினால் அங்கு இருந்த அத்தனை நேர சந்தோச மனநிலை மறைந்தது... எல்லோரும் அமைதியானார்கள்... துளசியும், கோபிநாத்தும் மிருதுளா பற்றிக் கவலைப்படாமல் இல்லை... என்ன இருந்தாலும் பேரனுக்குத் தான் பேத்தி என்ற எண்ணத்தில் அதைப் பற்றிப் பெரிதாய் யோசிக்கவில்லை... ஆனால் மகள் மனதில் இத்தனை துன்பம் இருப்பது தெரிந்து அவர்களுக்கும் வருத்தமாய் இருந்தது ஆதியின் மீது...

“ம்மா..." கெஞ்சுதலாய் அன்னையைப் பார்த்து 'பேச வேண்டாம்' என்பது போல் தலையசைத்தாள் மிருதுளா...

"அனி..." ஆதர்ஷ் மனைவியை அதட்டினாலும் மனதுக்குள் அவனுக்கும் மகளின் நிலை அறிந்து வேதனையாய் தான் இருந்தது...

"அண்ணி..." அபி அனியை ஆறுதலாய் அணைத்து கொண்டவள் ஆதியை எரித்து விடுவது போல் பார்த்தாள்...

"ஆதி... உன் மனசில் என்ன தான் நினைச்சிட்டு இருக்க...? இன்னும் எத்தனை நாளைக்கு இப்படிக் கல்யாணத்தைத் தவிர்த்துட்டு இருக்கப் போற... இது கொஞ்சமும்

சரியில்லை... உனக்காக இல்லைன்னாலும் மிருதுளாவுக்காகவாவது யோசிச்சு பாரு..."

அன்னை மற்றும் அத்தையின் பேச்சு ஆதித்யாவை பெரிதும் பாதித்தது... இந்த மிருதுளா ஏன் இப்படிப் பிடிவாதம் செய்கிறாள்...? என்று மிருதுளாவின் மீது அவனது ஒட்டு மொத்த கோபமும் திரும்பியது...

"மிருதுளா..." ஆதியின் குரல் ஓங்கி ஒலித்தது... அதில் திடுக்கிட்டு அவனைத் திரும்பி பார்த்தாள் மிருதுளா...

"உன் கிட்ட நான் என்னைக்காவது உன்னைக் காதலிக்கிறேனோ இல்லை கல்யாணம் பண்ணிக்கிறேன்னோ வாக்கு கொடுத்து இருக்கேனா...?"

அவள் இல்லை என்பது போல் தலையசைத்தாள்...

"அப்புறம் எதுக்காக நீ எனக்காகக் காத்திட்டு இருக்க... நீ என்ன பிடிவாதம் பிடிச்சாலும் என் மனசு மாறாது... நீன்னு இல்லை எந்தப் பொண்ணைக் கண்டாலும் என் மனசு மாறாது..." என்றவன் நிறுத்தி தன் தலையைக் கோதி கொண்டு தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டவன்,

"ஏன்னா என் மனசுக்குள்ள வேறு ஒரு பொண்ணு இருக்கா..." என்றான் அமைதியாக...

அவன் கூறியதை கேட்டு எல்லோரும் அதிர்ச்சி அடைந்தனர் என்றால் மிருதுளாவிற்கு இதயம் இரண்டாகப் பிளந்தது போல் வலித்தது... இந்த நொடி உயிர் தன் உடலை விட்டு பிரிந்து சென்றுவிடக் கூடாதா என்று இருந்தது அவளுக்கு...

இத்தனை வருடங்கள் காத்திருந்த அவளது காதலுக்குக் கிடைத்த பலன் இது தானா...? அவளது மனம் நொறுங்கி போனது... ஏனோ வாய்விட்டு அழ வேண்டும் போல் தோன்றியது... ஆனால் கண்களில் கண்ணீர் வரவில்லை... அந்தளவுக்கு அவனது வார்த்தைகள் அவளுக்கு அதிர்ச்சியை அளித்து இருந்தது...

"அண்ணா... இதுக்கு மேல நீங்க காத்திட்டு இருக்கிறதுல எந்த அர்த்தமும் இல்லை... மிருதுளாவுக்கு வேறு மாப்பிள்ளை பாருங்க..." அபி ஆதர்ஷிடம் சொன்னாள்...

"அத்தை நீங்களுமா...? மாமா தான் என் மனசை புரிஞ்சிக்காம கஷ்டப்படுத்துறார்ன்னா நீங்களும் என்னை வேதனைப்படுத்துறீங்களே... என் மனசு என்ன போட்டுக்கிற சட்டையா நினைச்சப்போ கழட்டிட்டு வேறு ஒண்ணை மாத்திக்கிறதுக்கு... என் காதல் உண்மையானது... அது மாமாவுக்கு மட்டுமேயானது... நான் செத்தாலும் மாமா மேல் உள்ள காதல் மறையாது... என் வாழ்க்கையில் இனி கல்யாணமே கிடையாது... என்னுடைய எல்லாக் கனவும் மாமாவோட முடிஞ்சி போச்சு... இனி என் வாழ்க்கை முழுவதும் மருத்துவத் தொழிலுக்குத் தான்..." என்று உறுதியாய் கூறியவள் பெற்றோரை பார்த்து,

"சாரி டாட், மாம்..." என்றவள் ஒன்றும் பேசாது எழுந்து கீழே சென்று விட்டாள்...

அவள் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் ஆதியின் மனதை வாள் கொண்டு அறுத்தது... முன்பு அவள் மேல் அவன் கொண்டு இருந்த கோபம் எல்லாம் அவளது வார்த்தைகளின் தாக்கத்தில் மறைந்து அவள் மீது இரக்கத்தை வரவழைத்தது...

ஆனால் வெறும் இரக்கத்திற்காக அவன் அவளைத் திருமணம் செய்ய முடியாதே...

எல்லோரும் மௌனமாய்க் கலைந்து சென்றனர்... சந்தோசமான மனநிலை மறைந்து எல்லோரின் மனதையும் கவலை பெரும் பாரமாய் அழுத்தியது...

அக்ஷய்க்கு மகன் மனதை திறந்து கூறியது நல்லது என்றே தோன்றியது... மனதை பூட்டி வைப்பதால் எந்தப் பயனும் இல்லை... இருவரின் மனநிலையும் இருவரும் புரிந்து கொள்ள உண்டான ஒரு வாய்ப்பு இது... ஆனால் இருவரும் அதைப் புரிந்து கொண்டார்களா என்பது அவனுக்கும்

தெரியவில்லை... கலகத்தில் தான் நன்மை உண்டாகும் என்றால் கலகமும் நன்மைக்கே...

அவனுக்கு மகனிடம் மனம் விட்டு பேச வேண்டும் என்று ஆசையாக இருந்தது... அவன் காதலிக்கும் பெண் யார்...? எப்படிப்பட்டவள்...? என்று அறிய ஆவலாக இருந்தது... ஆனால் கேட்டால் அதை எல்லாம் மகன் சொல்ல மாட்டான், சொல்லவும் விரும்ப மாட்டான் என்பதை அறிந்தவனாய் தானும் மொட்டை மாடியை விட்டு கீழே சென்றான்...

எல்லோரும் சென்றதும் மித்ரேஷ் நண்பன் அருகில் வந்தான்... ஆதி காதலிப்பதாய் சொன்னாலும் அவன் மகிழ்ச்சியாக இல்லை என்பதை அறிந்து கொண்டவனுக்கு ஆதியின் மனதை காதல் தோல்வி ஆட்டுவிக்கிறது என்பது நன்கு புரிந்தது...

ஆறுதலாய் ஆதியின் தோளில் கை வைத்தவன், "அந்தப் பெண்ணுக்கு என்னாச்சு ஆதி...?"

மித்ரேஷ் கேட்டதும் திகைத்து போய் அவனைப் பார்த்தான் ஆதி... "உனக்கு எப்படி...?"

"உன் முகத்தைப் பார்த்தாலே தெரியுது... நீ வாசிக்கிற சோக கீதம் எனக்குப் புரியாம இருக்குமா... காதல் வந்தால் எப்போதும் சந்தோசமா இருக்கத் தோணும்... ஒருவித பூரிப்பு வரும் முகத்தில்... ஆனால் உன் முகத்தில் டன் கணக்கில் சோகம் அல்லவா வழிந்தோடுது..." சிறு சிரிப்புடன் மித்ரேஷ் சொன்னாலும் நண்பனை நினைத்து அவனுக்குக் கவலையாக இருந்தது...

"நீ சொல்றது சரி தான் ஈஷ்வர்... நாலு வருசத்துக்கு முன்னாடி தான் அவளைப் பார்த்தேன்..." அவனது கண்கள் வானத்தை வெறித்துக் கொண்டு இருந்தது... மனம் அன்றைய காலக் கட்டத்துக்குச் சென்றது...

"நம்ம கம்பெனியில் தான் வேலைக்குச் சேர்ந்தாள்... படிப்பு முடிஞ்ச உடனே வேலைக்கு வந்த ஃபிரஷ் கேன்டிடேட்... அதனால் வேலையில் நிறையக் குளறுபடி செய்வாள்...

அப்படி ஒரு நாள் அவள் வேலையில் தப்புச் செஞ்சிருக்கத் திட்டுவதற்காக நான் அவளை வர சொல்லி கூப்பிட்டு அனுப்பினேன்... அவள் வந்ததும் திட்டுவதற்கு நினைத்து வாயை திறக்க நினைத்த நான் அவளது அழகில் அப்படியே பிரமித்துப் போயிட்டேன்... அன்னைக்கு அவளில் விழுந்தவன் தான்டா இப்போ வரைக்கும் என்னால எழ முடியலை..."

ஆதி ரசனையுடன் கூறிக் கொண்டு இருந்ததைக் கேட்டு மித்ரேஷ் மனதில் மதுவின் முகம் வந்து போனது... அன்று அந்தக் கூட்டத்தில் அவனைக் கண்டதும் ஆச்சிரியத்தில் விழி விரிய அவள் அமர்ந்து இருந்த தோற்றம் அழியாத ஓவியமாய் அவன் மனதில் ஆழப் பதிந்து இருந்தது...

ஏழு வருடத்திற்கு முன் கடைசியாய் அவன் மதுவை பார்த்த போது அவள் பதின்வயது சிறு பெண்... ஆனால் இப்போது வளர்ந்து பருவ மங்கையாய் அவளைக் கண்ட போது அவனுள் ஏற்பட்ட உணர்வின் தாக்கத்தை வார்த்தையில் வர்ணிக்க முடியாது...

"அதுக்கு அப்புறம் அவளை அடிக்கடி கூப்பிட்டு பேசினேன்... எல்லாம் ஆபிஸ் விசயமா தான்... அவள் பேசுறதை மனசுக்குள் ரசிப்பேன்... ஆனால் அவளைக் காதலிக்கிறேன்னு என்னால வாய் திறந்து சொல்ல முடியலை... ஏன்னு தெரியலை ஈஷ்வர் பிசினஸ்ல வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டு முடிவு எடுக்கத் தெரிஞ்ச எனக்கு அவ கிட்ட காதலை சொல்ற தைரியம் வரவில்லை... ஏனோ மனசுக்குள்ள என்னையும் அறியாத ஒரு படபடப்பு, ஒரு பயம்..."

காதல் வந்தால் எல்லா ஆண்களும் கோழை தான் போலும் என்று மனதில் நினைத்துக் கொண்ட மித்ரேஷ் தனக்குள் சிரித்துக் கொண்டான்...

தானும் அது போல் ஒரு கோழை தானோ... அவன் தனக்குத் தானே கேள்வி கேட்டுக் கொண்டான்... ஆனால் இல்லை என்றே அவன் மனதிடம் இருந்து பதில் வந்தது...

அவன் மதுவிடம் காதலை சொல்லாமல் இருப்பதற்கு எத்தனையோ காரணங்கள் இருக்கிறது... அது எல்லாம் இருவருக்கும் இடையில் நெருப்பு வேலியாய் எரிந்து கொண்டு அவனையும் உயிரோடு தகிக்கச் செய்து கொண்டு இருந்தது...

அவள் மட்டும் அக்ஷய், அபி மகளாய்ப் பிறக்காமல் வேறு வீட்டில் பிறந்து இருந்தால் சம்யுக்தையைத் தூக்கி கொண்டு வந்த பிருத்விராஜன் போல் அவனும் மதுவை கடத்தி சென்று தாலி கட்டி இருப்பான்... இல்லை தன் நேசத்தை அவளுக்குப் புரிய செய்து அவளைத் திருமணம் செய்து இருப்பான்...

ஆனால் நிச்சயம் இது போல் காதலை சொல்ல முடியாமல் அவஸ்தைப்பட்டுக் கொண்டு இருக்க மாட்டான்...

அவள் நெருங்கி வந்தால் கோபம் கொள்ளும் மனது, அவள் விலகி சென்றால் துடித்துக் கதறுவது ஏன் என்று தெரியாமல் அவனது மனநிலை அவனுக்கே சற்று வேடிக்கையாக இருந்தது... என்ன வேண்டுமாம் இந்த மனதுக்கு அது அவனுக்கே தெரியவில்லை...

"ஒரு வருசமா அவளை மனசுக்குள் காதலிச்சிட்டு வந்தேன் ஈஷ்வர்... ஒருவழியாய் தைரியமாய் முடிவு எடுத்து அவளிடம் என் காதலை சொன்ன போது..." சொல்ல முடியாமல் தொண்டை அடைக்க ஆதியின் கண்கள் கலங்கியது...

"வேண்டாம் ஆதி..." மித்ரேஷ் அவனை அணைத்துக் கொண்டான்...

ஆதியின் வாழ்க்கையில் என்ன நடந்தது என்பது அவனுக்குத் தெரியாது... ஆனால் அவன் துன்பப்படுவதைக் காண சகிக்கவில்லை மித்ரேஷ்க்கு...

"இல்லை ஈஷ்வர் நான் இதைச் சொல்லித்தான் ஆகணும்... மூணு வருசமா என் மனசுக்குள் பூட்டி வச்சு கிட்டத்தட்ட

பைத்தியக்காரன் மாதிரி சுத்திக்கிட்டு இருக்கேன்..." என்றவன்,

"அவ முடியாதுன்னு மறுத்துட்டா ஈஷ்வர்..." துயரத்துடன் சொன்னவனைத் திகைத்துப் போய்ப் பார்த்தான் மித்ரேஷ்...

ஆண் மகனாய் வெளி அழகில் மட்டும் இல்லாமல் புற அழகிலும் கம்பீரமாய், கண்ணியமாய் இருக்கும் ஆதியை போன்ற ஆண் மகனை ஒருத்தி வேண்டாம் என்று கூறி விட்டாளா...? அவனுக்கு ஆச்சிரியமாய் இருந்தது...

"உன்னைப் போயா வேண்டாம்ன்னு சொன்னாள்... நிச்சயம் அவளுக்குக் கண்ணு தெரியலைன்னு நினைக்கிறேன்..." என்று கோபப்பட்டான் மித்ரேஷ்...

"இல்லைடா அவள் சொன்னதிலும் ஒரு நியாயம் இருக்கு... சின்ன வயசில் இருந்து அவள் அத்தை பையனை தான் அவளுக்குப் பேசி இருந்தாங்களாம்... அதனால் அவள் அந்தப் பையனை காதலிக்கிறதாகவும், அவனைத் தான் கல்யாணம் பண்ண போறதாகவும் சொன்னாள்... அவ அப்படி நேர்மையாய் பதில் சொன்னது எனக்கு ரொம்பப் பிடிச்சு இருந்தது... ஒவ்வொரு பொண்ணுங்க மாதிரி பணத்தைக் கண்டதும் மனசு மாறாம இருந்ததில் இருந்து அவளோட அழகான உயர்ந்த குணம் எனக்குப் புரிஞ்சது... அந்தக் குணத்தால் தான்டா இன்னைக்கு வரைக்கும் அவளை மறக்க முடியாம தவிக்கிறேன்..."

"அப்போ அந்தப் பொண்ணு..."

"கல்யாணமாகி ஒரு குழந்தை கூட இருக்கு..." என்றவனை ஒரு மாதிரி பார்த்தான் மித்ரேஷ்...

அவனின் பார்வை புரிந்தார் போன்று ஆதி, "அவ இன்னும் நம்ம ஆபிசில் தான் வேலை செய்கிறாள்..."

"ஆதி..." இப்போது நண்பனின் மனநிலை அவனுக்கு நன்கு புரிந்தது...

கண் எதிரே காதலியை பார்த்து கையைக் கட்டி கொண்டு இருப்பது கொடுமை என்றால் வேறு ஒருவனைத் திருமணம் செய்து கொண்டு அவள் அவன் கண் முன்னால் வலம் வருவது என்பது...??? மித்ரேஷால் அதை நினைத்து கூடப் பார்க்க முடியவில்லை...

அந்தப் பெண் இடத்தில் மதுவை வைத்து பார்த்தவனுக்கு மனதில் பாரமேறிய ஓர் உணர்வு ஏற்பட்டது...

"கல்யாணம் ஆனவளை போய் இன்னமும் நினைச்சிட்டு இருக்கிறது நீ அவளுக்குப் பண்ற துரோகம் ஆதி... அவளை மறந்துட்டு நீ மிருதுவை கல்யாணம் பண்ணிக்கிறது தான் உனக்கு நல்லது..."

"ஈஷ்வர் நீயே என்னைப் புரிஞ்சிக்காம பேசினா எப்படி...? பட்டு பேசினதை நீ கேட்ட தானே... அவளை மாதிரி தான்டா நானும்... காதல் என்பது ஒரு முறை தான் வரும்... அது என் வாழ்க்கையில் வானவில் போல் வந்து மறைஞ்சிருச்சு... இதுக்கு மேல் காதல், கல்யாணம் எல்லாம் யோசிக்க எனக்குப் பிடிக்கலை... பெண் மட்டும் தான் காதலில் உறுதியாய் இருக்க முடியுமா... ஆணால் அந்த மாதிரி இருக்க முடியாதா...? இவ்வளவு ஏன் நீ ஒரு பெண்ணைக் காதலிச்சிட்டு வேறு ஒரு பெண்ணைக் கல்யாணம் பண்ணுவியா...?"

ஆதியின் கேள்விக்கு அவனிடத்தில் பதில் இல்லை... மதுவை தவிர்த்து அவனது வாழ்வில் வேறு பெண்ணா... அவனால் அதைக் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியவில்லை... அதே சமயம் அவள் தன்னை விட்டு விலகி செல்வதை அவன் உணர்ந்து தான் இருந்தான்...

ஏதாவது அதிசயம் நடந்து மது தன்னிடத்தில் வந்து சேர மாட்டாளா என்று அவன் மனம் ஏங்கியது... ஆனால் அதற்கான முயற்சிகளில் இறங்க அவனது மனம் முரண்டியது... அதை விடத் தனது நிலையை எண்ணி அவன் மௌனம் காத்தான் என்பதே மிகச் சரி...

"ஆனாலும் மனசுக்குள் ஒரு சின்ன வருத்தம் இருந்துட்டே தான் இருக்கு... என்னையும் ஒரு பெண் வேண்டாம்ன்னு மறுத்துட்டாளே என்று... ரொம்பக் கஷ்டமா இருக்கு ஈஷ்வர்... சில சமயம் எங்கேயாவது கண் காணாத இடத்துக்கு ஓடி போயிடலாம்ன்னு கூடத் தோணுது..."

முகத்தில் வேதனையைத் தேக்கி வானத்தைப் பார்த்துக் கொண்டு பேசிய ஆதியை அணைத்துக் கொண்டான் மித்ரேஷ்... அவன் ஆதிக்கு ஆறுதல் சொன்னானா இல்லை ஆதியின் அணைப்பில் அவன் ஆறுதல் தேடினானா அது அவனுக்கே வெளிச்சம்...

மறுநாள் வழக்கம் போல் ஜான், மிருதுளா, மது மூவரும் காரில் வேலைக்குக் கிளம்பி சென்று கொண்டு இருந்தனர்... மிருதுளா சோகமாய் அமர்ந்து இருப்பதைக் கண்டு மதுவிற்குப் பொறுக்கவில்லை...

"சில்க்கி அவனை மறக்கிறது தான் உனக்கு நல்லது... என் அண்ணன் தான் இருந்தாலும் சொல்றேன்... உலகத்துல அவன் மட்டும் தான் ஆம்பிளையா... உன் அழகுக்கு, படிப்புக்கு ஆதியை விடச் சூப்பரான மாப்பிள்ளை வருவான் பாரு... லூசு மாதிரி அவனை நினைச்சு வருத்தப்பட்டுட்டு இருக்காதே... கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை... அது மாதிரி அவனுக்கு உன்னோட அருமை தெரியலை..."

"ஏய்... சந்தடி சாக்கில் என் ஆளை கழுதைன்னு சொல்றியா...? உதை விழும்..." ஆள் காட்டி விரலை நீட்டி மிருதுளா மதுவை எச்சரிக்க...

"தோடா... உன் ஆளை கழுதைன்னு சொன்னதும் அவனுக்கு ஜோடியா நீயும் கழுதையா மாறி என்னை உதைக்கப் போறியா... ஆஹா... என்ன பொருத்தம் உங்க ரெண்டு பேருக்குள்ளும்..." என்று கிண்டல் செய்தவள் பின்,

"சில்க்கி... சீரியசா தான் சொல்றேன்... அவனை மறந்துட்டு உன் வாழ்க்கையை நீ வாழப் பாரு... உன்னைக் கல்யாணம் பண்ண அவனுக்குத் தான் கொடுத்து வைக்கலை..."

"மது... என் ஃபீலிங்ஸ் புரியறதுக்கு நீ யாரையாவது காதலிச்சு இருக்கணும்..."

"நல்லவேளைப்பா நான் யாரையும் காதலிக்கலை... காதல் இவ்வளவு கஷ்டத்தைக் கொடுக்கும்ன்னா கருமம் பிடிச்ச காதல் எனக்குத் தேவையே இல்லை... உவ்வே..." அருவருப்பில் வாந்தி எடுப்பது போல் அவள் சைகை செய்ய...

"மது... காதல் ஒரு அழகான பீலிங்... உனக்குத் தெரியலைன்னா வாயை மூடிட்டு வா..." ஜான் அவளை அதட்ட...

"இங்கே பாருடா... காதல் மன்னன் பேச வந்துட்டாரு... சைட் அடிக்கிற பொண்ணுங்களை எல்லாம் முறைச்சே ஓட விட்ட நீ காதலை பத்தி பேசாதே..." அவனையும் வாரினாள் மது...

"சரி என் கதையை விடு... உனக்குத் தருணை கல்யாணம் பண்ண சம்மதமா...? மாமா சொன்னாங்ககிறதுக்காகச் சரின்னு சொல்லிட்டியா...? இல்லை நீ அவனைக் காதலிக்கிறியோ...?" ஜான் அவளை ஆழம் பார்த்தான்...

"என்னைப் பத்தி உனக்குத் தெரியாதா ஜான்... அந்தத் தருண் கிட்ட ஏற்கெனவே நான் நோன்னு சொன்னவ... இப்போ டாட் சொன்னதுக்குத் தான் சம்மதம் சொல்லி இருக்கேன்... நானாவது காதலிக்கிறதாவது..." அசட்டையாகத் தோளை குலுக்கினாள் மது...

"ஏன் மது... இது நாள் வரை எந்த ஒரு ஆணும் உன் மனதை தொட்டது இல்லையா... ம்... அதை லவ்வுன்னு கூட நீ நினைக்க வேண்டாம்... கிரஷ்ன்னு சொல்லுவாங்களே அந்த மாதிரி ஏதாவது..."

"நோ வே... என் மனசை தொடுற அளவுக்கு எந்த ஒரு ஆணையும் நான் சந்திக்கலை..." என்றவள்

"ஆனா என் மனசை காயப்படுத்துற ஆணை நான் சந்திச்சு இருக்கேன்... அதான் உன் அண்ணன் அந்த வளர்ந்து கெட்ட மித்து... அவனைத் தான் சொல்றேன்... என் மனசை

வார்த்தையால் கொல்றது மட்டுமே தொழிலா வச்சிருக்கான்... அன்னைக்கும் அப்படித்தான்... இப்போதும் அப்படித்தான்... அவன் மாறவே இல்லை..." சொல்லும் போதே அவளது கண்கள் கலங்கியது..

மிருதுளா, ஜானின் கண்கள் அர்த்தத்துடன் சந்தித்து மீண்டது...

"நான் பிரெண்ட்லியா பேசினா கூட அவனால் மட்டும் எப்படிடா தப்பா நினைக்க முடியுது... நான் எதைச் செஞ்சாலும் திட்டுறது தான் அவன் வேலை... அன்னைக்கு அவனையும் ஒரு மனுசனா மதிச்சு தான் தருணோட லவ்வை வேண்டாம்ன்னு சொன்னேன்... அதைக் கூட அவன் புரிஞ்சிக்காம அன்னைக்குத் தருணோட என்னைச் சேர்த்து வச்சு பேசி என்னைக் காயப்படுத்திட்டான்... இப்பவும் அதே மாதிரி தான் பேசுறான்..."

"நீயும் கொஞ்சம் யோசிச்சு பாரு மது... அவன் அப்படி நடந்து கிட்டதுக்கு என்ன காரணம்...? நீ இப்படி நினைக்கிறதுக்கு என்ன காரணம்ன்னு...?" ஜான் நேரிடையாய் கேட்டான்...

"என்ன யோசிக்க இருக்கு... சின்ன வயசில் அத்தை கிட்ட சொல்லி அவனுக்கு அடி வாங்கிக் கொடுத்ததை இன்னமும் மனசில் வச்சிக்கிட்டு என்னைப் பழிவாங்குறான்... உன் அண்ணனுக்குப் பழிவாங்க சொல்லியா கொடுக்கணும்...?"

சின்ன வயதில் இருந்து மித்ரேஷிடம் பட்ட மனக்காயங்கள் மதுவை அதற்கு மேல் சிந்திக்க விடவில்லை...

ஜானும் ஒன்று பேசாது வண்டியை ஓட்டினான்... இதற்கு மேல் அவனாலும் ஒன்று செய்ய முடியாது... மதுவின் மனதை சுட்டி காட்ட அவனுக்கு ஒரு நொடி போதாது... ஆனால் காதல் உணர்ந்து வர வேண்டும்... அடுத்தவர் சொல்லியோ, திணித்தோ வர கூடாது... அதில் அவன் உறுதியாய் இருந்தான்...

அன்று மது விஷ்ணுவை அழைத்துக் கொண்டு மக்கள் புழக்கம் நிறைந்த பேருந்து நிலையத்திற்குச் சென்றாள்...

அரசு கொண்டு வந்து இருந்த புதிய திட்டங்கள் பற்றிப் பொதுமக்களிடம் எந்தளவுக்கு வரவேற்பு இருக்கிறது... அது பற்றி மக்களுக்கு எந்தளவுக்கு விழிப்புணர்வு இருக்கிறது என்பதை அறிவதற்காகப் பொதுஜனத்திடம் பேட்டி எடுக்க வந்து இருந்தாள்...

பெரியவர்கள் முதல் இளைஞர்கள் வரை எல்லோரையும் பேட்டி எடுத்து அவர்களின் கருத்துக்களை அவள் தனது அலைப்பேசியில் பதிந்து கொள்ள விஷ்ணு அவர்களைப் புகைப்படம் எடுத்துக் கொண்டான்... அன்றைய சம்பவத்திற்குப் பின் இப்போது எல்லாம் பேட்டியை அலைப்பேசியில் பதிந்து கொள்கிறாள்... குறிப்பேட்டில் எழுதினால் எழுத்துப் பயிற்சி வேகமாகும் என்று அதைப் பயன்படுத்தியவள் இப்போது நவீன முறைக்கு மாறி இருந்தாள்..

இன்னும் யாரை பேட்டி எடுக்கலாம் என்று எண்ணி சுற்றும் முற்றும் பார்த்தவள் கண்ணில் சிறு பெண் குழந்தையுடன் நின்று இருந்த ஒரு பெண் வித்தியாசமாகத் தெரிந்தாள்... ஏனெனில் அவள் பிச்சைக்காரி போல் கிழிந்த ஆடை உடுத்தி அழுக்காய் இருக்கக் கையில் இருந்த குழந்தையோ நல்ல கொழு கொழுவென்று அழகாக நல்ல ஆடை உடுத்தி இருந்தது... அதோடு மட்டும் இல்லாமல் அந்தக் குழந்தை ஆழ்ந்த உறக்கத்தில் வேறு இருந்தது...

"விஷூ... அந்த லேடியை ஃபோட்டோ எடு... எனக்கு என்னமோ அந்த லேடி மேல சந்தேகமா இருக்கு..." நண்பனை அவசரப்படுத்தினாள்...

அவள் சொன்னதற்காக விஷ்ணு அந்தப் பெண்ணைப் புகைப்படம் எடுத்தவன், "ஃபோட்டோ எடுத்து நியூஸ் பேப்பரில் போடுறதால எந்த யூசும் இல்லை மது..."

"அப்போ வா... அந்தப் பொண்ணைத் தட்டி கேட்போம்..." அவள் அவனை அழைக்க...

"வேண்டாம் மது... அவசரப்பட்டு நாம இதில் இறங்கினா ஆபத்து நமக்குத் தான்... இது ஒரு பெரிய நெட்வொர்க்...

இதுல சம்பந்தப்பட்டவங்க இங்கே நம்மைச் சுத்தி தான் இருப்பாங்க... நாம அந்தப் பொண்ணு கிட்ட போனோம்ன்னா நிச்சயம் அவங்க நம்மளை சூழ்ந்துக்குவாங்க... வேண்டாம் இந்த விபரீத விளையாட்டு..." விஷ்ணு அவளை அங்கிருந்து அழைத்துச் செல்ல முயன்றான்...

மது அந்தக் குழந்தையைத் திரும்பி திரும்பி பார்த்துக் கொண்டு சென்றாள்... கள்ளம் கபடம் இல்லாமல் இருந்த குழந்தையின் முகத்தைப் பார்க்க பார்க்க அவளுக்குத் துயரமாய் இருந்தது...

இன்று பிச்சை எடுக்க விடுபவர்கள் நாளை அந்தப் பெண் குழந்தையை வேறு தொழிலுக்குப் பழக்கவும் செய்யலாம்... சிறுமிகளைக் கூடப் பாலுணர்வோடு பார்க்கும் காலமிது... அதற்கு மேல் சிந்திக்க முடியாமல் அவளது மனம் ஒருவித திடுக்கிடலோடு தன் எண்ணவோட்டத்தை நிறுத்தி கொண்டது...

"விஷூ... நீ வேணா போ... இதுக்கு ஒரு முடிவு தெரியாம நான் வர மாட்டேன்..." அவள் பிடிவாதமாய்க் கூற...

"மது சொன்னா கேளு... நமக்கு எதுக்கு வீண் விபரீதம்..." அவன் அவளை எச்சரித்தாலும் உடன் இருந்தான்...

"இப்படிப் பயந்துட்டு இருந்தா நாம ஜர்னலிஸ்ட் வேலைக்கு வந்ததில் அர்த்தம் இல்லை..."

"நீ சொல்றது சரி தான்... ஆனா நமக்கும் குடும்பம் இருக்கு மது..." என்றவனை முறைத்து பார்த்தவள் தனது அலைப்பேசியை எடுத்து அந்தப் பெண்ணையும், குழந்தையும் புகைப்படம் எடுத்தவள் அதை உடனே மித்ரேஷ்க்கு அனுப்பி வைத்தாள்...

பின்பு நேரடியாக அவனைத் தொடர்பு கொண்டாள்...

மித்ரேஷ் தனது அலைப்பேசியில் குறுஞ்செய்தி வந்ததற்கான ஒலி கேட்க அதை எடுத்து பார்த்தால் மது அனுப்பிய குறுஞ்செய்தி வந்து இருந்தது... அதைப்

பிரித்துப் பார்த்ததும் அவனுக்கும் விசயம் புரிந்துவிட்டது... அவன் மேலே யோசிக்கும் முன் மதுவே அவனை அழைத்தாள்... உடனே அதை அவன் எடுத்தான் உதவி ஆணையராய்...

"மித்து..." என்று அழைத்தவள் பின், "சாரி சார்..." என்க...

"முதல்ல விசயத்தைச் சொல்லு..." என்றான்...

அந்தப் பெண்மணி மீதான தன் சந்தேகத்தைக் கூறியவள் தான் இருக்கும் இடத்தையும் கூறினாள்...

"பாவம் மித்து... பெண் குழந்தை வேறு..." அவள் சொல்லி முடிக்கும் முன் அவளது அழைப்பு துண்டிக்கப்பட்டு இருந்தது...

அவன் அந்தப் பக்கம் அழைப்பை துண்டித்ததை எண்ணி மனம் நொந்து போனாள் அவள்...

'எந்த நேரத்தில் கோபப்படணும்ன்னு இவனுக்குத் தெரியாதா...? என் மேல் இருக்கும் கோபத்தைச் சின்னக் குழந்தையிடம் போய்க் காட்டுகிறானே...' மனம் வெதும்பி நின்றவளுக்கு அந்த இடத்தை விட்டு போக மனம் இல்லாமல் அந்தக் குழந்தையைக் கண்களால் தொடர்ந்து கொண்டு இருந்தாள்...

அடுத்தப் பத்தாவது நிமிடம் இரு காவலர்கள் வந்து அந்தப் பெண்ணைக் கைது செய்து உடன் அழைத்துச் சென்றனர்... அதைக் கண்டவளுக்கு மனதில் நிம்மதி எழ அந்த இடத்தை விட்டு அகன்றாள்...

செல்லும் போது மித்ரேஷ்க்கு குறுஞ்செய்தி அனுப்பவும் அவள் மறக்கவில்லை...

'நீ கொஞ்சமே கொஞ்சம் நல்லவன் தான்டா... ஒரு பெண் குழந்தை தவறான பாதையில் செல்ல இருந்ததைத் தடுத்து காப்பாத்தி இருக்க... தேங்க்ஸ்... தேங்க்ஸ்... லட்சம், கோடி தேங்க்ஸ்...'

அதை அவனுக்கு அனுப்பிவிட்டு அலைப்பேசியை முத்தமிட்டவள், "மித்து... உனக்குள்ளேயும் ஒரு நல்லவன் இருக்கான்டா..." என்று சொல்லியவள் தனக்குள் சிரித்துக் கொண்டாள்...

அவனது நல்ல செயலில் அவன் மீதான அவளது கோபம் காணாமல் போயிருந்தது... இது தான் மது... கோபமும், வெறுப்பும் எல்லாம் கொஞ்ச நேரம் தான்...

அதே நேரம் மித்ரேஷ் அவளது குறுஞ்செய்தியை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டு இருந்தான்...

அவளது பாராட்டு கண்டு அவனுக்கு விருது வாங்கியது போல் அத்தனை சந்தோசமாய் இருந்தது... முதல் முறையாய் அவளது பார்வையில் அவன் நல்லவனாகி இருக்கிறான்... சிறகில்லாமல் விண்ணில் பறப்பது போது போல் மகிழ்ச்சியில் திளைத்தான் அவன்... அந்தளவுக்கு அவள் தன்னை நல்லவிதமாக நினைக்க வேண்டும் என்று அவன் மனதுக்குள் ஏங்கி போய் இருந்தான்... அது இன்று தான் நிறைவேறி உள்ளது...

அலைப்பேசியில் இருந்த அவளது புகைப்படத்தை எடுத்துப் பார்த்தான்... அன்று ஒரு நாள் அவள் தோட்டத்தில் உலாவி கொண்டு இருந்த போது அவளுக்குத் தெரியாமல் அவன் எடுத்த புகைப்படம் தான் அது...

பச்சை நிற புல்வெளி பின்னணியில் இளம் ஆரஞ்சு வண்ண சுடிதாரில் அவள் அழகுற நின்று இருந்த விதம் அவன் மனதை மயக்கியது...

"ஐ லவ் யூ அம்மு..." என்று முணுமுணுத்தபடி அலைப்பேசி எடுத்து அவளது பிம்பத்துக்கு முத்தத்தைத் தனது காதலின் பரிசாக அளித்தான்...

அந்நேரம் அவனது மேசையில் இருந்த தொலைப்பேசி ஒலிக்க அதில் தன்னுணர்வு அடைந்தவன் தன் நிலை கண்டு வெட்கி அவசரமாய் அதைக் கையில் எடுத்தான்...

அதன் பின் அடுத்தடுத்து வேலைகள் அவனை ஆக்கிரமித்த போதும் அவனது மனம் என்றுமில்லாத அளவுக்கு உற்சாகமாய் இருந்தது...

அதே உற்சாகத்துடன் வீட்டிற்கு வந்தவனை அவன் மனம் கவர்ந்தவள் வீட்டின் வாயிலில் இருந்து வரவேற்றாள் புன்சிரிப்புடன்...

ஈர்க்கும்...

மித்ரேஷ் ஜீப்பில் இருந்து இறங்கும் முன் அவனிடம் குதித்துக் கொண்டு ஓடினாள் மது... அவன் அருகில் வரும் வரை எல்லாம் அவளுக்குப் பொறுமை இல்லை...

"மித்து..." சந்தோசமாய் அழைத்தவளை அவன் கண்டிப்பான பார்வை பார்க்க அதில் கப்சிப் என்று வாயை மூடி கொண்டாள் மது...

என்ன தான் அவனிடம் கோபப்பட்டுக் கத்தினாலும் அவனின் ஒற்றைப் பார்வைக்கு அவள் அடங்கிப் போய்விடுவது அதிசயம் தான்... எப்போதும் அவன் அந்த மாதிரி பார்க்க மாட்டான்... அவள் தவறு செய்யும் நேரத்தில் அவனது கண்டிப்பான பார்வை அவளை உக்கிரமாய் உறுத்து விழிக்கும்... சிறுவயது முதல் அவனோடு சேர்ந்து வளர்ந்து இருந்ததினால் என்னவோ அவனின் கண்டிப்பான பார்வைக்குச் சற்று அடங்கிப் போவாள்...

ஓட்டுநரை அனுப்பி வைத்துவிட்டு அவள் புறமாய்த் திரும்பியவன் என்ன என்பது போல் சாதாரணமாய்ப் பார்த்தான்... அதில் குதூகலமானவள்,

"மித்து அந்தக் குழந்தை இப்போ எப்படி இருக்கு...? எங்கே இருக்கு...? காலையில் அதைப் பார்த்ததில் இருந்து என் மனசே சரியில்லை தெரியுமா... ஆனாலும் நீ சூப்பர் ஃபாஸ்ட் தான்..." பாராட்டாய் அவனது புஜத்தில் செல்லமாய்க் குத்தியவளை அவன் கண்ணிமைக்காமல் பார்த்தான்...

அந்த இரவு நேரத்தில் மங்கிய விளக்கு ஒளியில் புன்சிரிப்புடன் பேசி கொண்டு இருந்தவளின் ஒவ்வொரு அசைவும் அவனது மனதை அசைத்து பார்த்து அவனின் இளமைக்குப் பெரும் சோதனையைக் கொடுத்தது... கஷ்டப்பட்டுக் கண்களை அவள் புறம் இருந்து திருப்பி வேறு பக்கம் பார்த்தான்...

'கடவுளே... இவள் என்னிடம் இருந்து விலகி இருப்பது தான் நல்லது போலவே... இவள் இப்படி அருகில் வந்தால் நான் என் வசம் இழப்பது உறுதி... அதற்குப் பின் நடக்கும் பின் விளைவுகளுக்கு நான் பொறுப்பு இல்லை...' மனதுக்குள் புலம்பியவன் மிகவும் முயன்று அவள் தருணுக்குச் சொந்தமாகப் போகிறவள் என்பதை மனதில் பதிய வைத்துக் கொண்டு மீண்டும் அவளைத் திரும்பி பார்த்தான்...

இப்போது அவனால் அவளை வெறுமையாய் பார்க்க முடிந்தது... ஏனெனில் அவனின் மனம் விரக்தியில் வெறுமையாய் இருந்தது...

"சொல்லு மித்து..." அவள் உலுக்கவும் தான் அவனுக்கு அவள் பேசி கொண்டு இருக்கும் விசயம் புரிய,

"நல்லா இருக்கு... இப்போ காப்பகத்தில் இருக்கு..."

இன்று அவ்வளவு வேலைப்பளு அவனை அழுத்திய போதும் அவன் அந்தக் குழந்தையைக் காண்பதற்காகவே அந்தப் பகுதி காவல் நிலையத்துக்குச் சென்றான்... தன் மனங்கவர்ந்தவள் மனதை பாதித்த குழந்தையைக் காண அவனுக்கும் ஆவலாய் இருந்தது...

சுமார் இரண்டு வயது தான் இருக்கும் அந்தப் பெண் குழந்தைக்கு... பார்ப்பதற்கு மிகவும் அழகாகக் கொள்ளை கொள்ளும் வெள்ளைச் சிரிப்புடன் சிரித்து விளையாடி கொண்டு இருந்தது அங்கிருந்த காவலர்களுடன்...

ஏனோ அதைப் பார்க்கும் போது மது சின்ன வயதில் இருந்தது போல் அவனுக்குத் தோன்ற அவனையும் அறியாமல் அவன் அந்தக் குழந்தையை ஆசையுடன் கையில் அள்ளி கொண்டான்...

பிறகு அந்தப் பெண்ணைப் பிடித்து விசாரித்து இதற்குப் பின் இயங்கும் கும்பலை பிடிக்கச் சொல்லி உத்தரவிட்டவன் அந்தக் குழந்தையின் பெற்றோரை தேடி கண்டு பிடிக்குமாறு காவலர்களிடம் உத்தரவிட்டான்...

தனது சொந்த செலவில் நாளிதழில் விளம்பரம் கொடுக்க ஏற்பாடு செய்தவன் அந்தக் குழந்தையைப் புகைப்படம் எடுத்து தனது சமூக வலைத்தளத்தில் பகிர்ந்து கொண்டு பொதுமக்களிடம் அதன் பெற்றோரை தேடி கண்டுபிடித்துக் கொடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொண்டான்...

அதே போல் வேலை விட்டு வரும் போதும் குழந்தையைப் பார்த்துவிட்டு தான் வந்தான்... அவன் வேலையில் இது மாதிரி விசயங்கள் நடப்பது சகஜம் தான் என்றாலும் வீட்டிற்கு வந்ததும் மது குழந்தையைப் பற்றி ஏதாவது கேட்டால்...? அதற்காகவே அதன் நலம் மற்றும் பாதுகாப்பு பற்றி விசாரித்து விட்டு வந்தான்... அவனது கணிப்பு பொய்த்து போகவில்லை... அவன் நினைத்தது போல் மது அவனுக்காகக் காத்திருந்து குழந்தையைப் பற்றிக் கேட்கிறாள்...

"நல்ல காரியம் பண்ணினே மித்து... அந்தக் குழந்தையைப் பார்த்ததும் எனக்குப் பகீர்ன்னு ஆகிருச்சு... அதுவும் பெண் குழந்தை வேறு... நாளைக்கு யார் கையிலாவது மாட்டி..." அந்தப் பயங்கரத்தை மனக்கண்ணில் நினைத்தவளாய் உடல் சிலிர்த்தவள்,

"தேங்க் காட்... நீ வந்து காப்பாத்திட்ட..." அவள் நன்றி சொன்னது கூட அவன் காதில் விழவில்லை... அந்தளவுக்கு அவன் தனக்குள் இறுகி போயிருந்தான்...

"முடிஞ்சதா உன் புராணம்... வீட்டுக்குள் போகக் கூட விடாமல் வாசலில் வைத்துக் கூத்தடிக்காமல் வழியை விட்டு விலகி நில்லு..." அவன் கடுகடுத்தான்...

அவனின் கோபம் கண்டு ஏனோ அவளுக்குக் கோபம் வரவில்லை... மாறாகப் புன்சிரிப்புடன் அவனை நெருங்கியவள்,

"ரொம்பக் கெட்டவன் மாதிரி நடிக்க வேண்டாம்டா..." என்றவளை அவன் திகைத்துப் போய்ப் பார்க்கும் போதே,

"இப்போ எனக்குத் தெரியும் நீ கொஞ்சமே கொஞ்சம் நல்லவன் தான்னு..." கலகலத்து சிரித்தபடி குதித்துக் கொண்டு அவள் திரும்பி செல்லும் போது அவளின் விரித்து விடப்பட்ட நீண்ட கூந்தல் அவனது நெஞ்சை தழுவி சென்றது...

அவளது கூந்தலில் இருந்து வந்த நறுமணமும், அவளது மேனியில் இருந்து வந்த சுகந்தமும் அவனது இத்தனை நேர உறுதியை பரிச்சீத்துப் பார்த்தது...

அவ்வளவு நேரம் இருந்த மனதின் இறுக்கம் சற்று தளர அவனது முகத்தில் புன்னகை அரும்பியது... அந்தச் சிரிப்புடனே வீட்டிற்குள் நுழைந்தவனை ஜான் அதிசயமாய்ப் பார்த்தவன் வேகமாய் வெளியில் வந்து எட்டி பார்த்தான்...

மது அவளது வீட்டிற்குள் சென்று கொண்டு இருப்பது தெரிந்தது... மீண்டும் உள்ளே வந்தவன்,

"மாம்... நான் மதுவை பார்த்திட்டு வர்றேன்..." என்று வேண்டும் என்றே குரல் கொடுக்க...

அதில் மித்ரேஷ் அவனை முறைத்துப் பார்த்தான்...

"இதுக்கு எல்லாமா என் கிட்ட பெர்மிசன் கேட்ப... போடா..." என்ற நிஷா,

"ஈஷ்வர்... குளிச்சிட்டு வந்து சாப்பிடு கண்ணா..." என்றபடி உணவு எடுத்து வைக்க உள்ளே சென்றாள்...

வேண்டும் என்றே வெளியில் செல்வது போல் திரும்பிய ஜானை மித்ரேஷ் அழைத்தான்...

"ஜான்..." அவனது இறுகிய குரலில் திரும்பி பார்த்த ஜானுக்கு அண்ணன் முகம் போன விதத்தைக் கண்டு சிரிப்பு தாங்கவில்லை... சிரமப்பட்டு அடக்கி கொண்டான்...

"இந்த நேரத்தில் அவளை எதுக்குடா பார்க்க போற...? வேற ஏதாவது உருப்படியான வேலை இருந்தா அதைப் போய்ப் பாரு..." மித்ரேஷ் சிடுசிடுத்தான்...

"அது சரி... மதுவை பார்க்க போற உருப்படியான வேலை எல்லாம் நீங்க மட்டும் தான் பார்க்கணுமா... ஏன் நான் பார்க்க கூடாதா...?"

"பார்க்க கூடாதுன்னா... பார்க்க கூடாது தான்..." அழுத்தமாய் உரைத்த மித்ரேஷ் விறைப்பாய் உள்ளே செல்ல...

"அடேங்கப்பா... மனசுக்குள்ள இவ்வளவு காதலை வச்சிக்கிட்டு வெளியில் எப்படித் தான் இவனால் இப்படி அழுத்தமா இருக்க முடியுதோ...?" என்றவன்,

"டேய் ஜான்... எல்லோருடைய இதயத்தையும் பார்த்து நோயை கண்டுப்பிடிக்கிற... ஆனா உன் இதயத்தை யாரும் கண்டுக்கக் கூட மாட்டேங்கிறாங்களேடா... டூ சேட்..." தனக்குத் தானே புலம்பி கொண்டு அறைக்குள் சென்றான்...

அன்று அலுவலகத்தில் மும்முரமாய் வேலை செய்து கொண்டு இருந்தான் ஆதித்யா... அப்போது அவனது அறைக் கதவு தட்டுப்பட,

"எஸ்... கம் இன்..."

கம்பீரமான வசீகரமான அவனது குரலை ரசித்தபடி உள்ளே நுழைந்தாள் மிருதுளா...

"ஆனாலும் இந்த நைட் நேரத்திலும் நீங்க இவ்வளவு சுறுசுறுப்பா வேலை செய்யக் கூடாது மாமா..."

திடுமென ஒலித்த மிருதுளாவின் குரலில் கையில் இருந்த கோப்பில் ஆழ்ந்து இருந்தவன் நிமிர்ந்து பார்த்தான்... அங்கே அவளைக் கண்டதும் அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை...

இத்தனை நாளாய் கோபத்துடன் அவளைப் பார்த்து வந்தவனுக்கு அன்று அவளது மனம் தெரிந்ததில் இருந்து கோபம் சற்று மறைந்து அவளைக் கண்டு பரிதாபம் மட்டுமே மனதில் நிலைத்து இருந்தது...

"நீ இங்கே எங்கே ப... மிருதுளா...?" பட்டு என்று அழைக்க வந்தவன் அந்த வார்த்தை தரும் நெருக்கத்தை விரும்பாதவனாய் அதைக் கவனமாய்த் தவிர்த்தான்...

"பரவாயில்லை மாமா... பட்டுன்னே கூப்பிடுங்க... நமக்கு எது பழக்கமோ அதைத் திடீர்ன்னு மாத்த வேண்டாம்..." என்றவள் அவன் உட்கார சொல்லாமலே எதிரில் இருந்த நாற்காலியில் அமர்ந்தாள்...

"சாரி பட்டு... திடீர்ன்னு உன்னைப் பார்த்ததில் திகைச்சுப் போய்ட்டேன்... உட்கார கூடச் சொல்லலை..." உண்மையில் வருத்தப்பட்டவனாய் சொன்னவனைப் பார்த்தவள்,

'இது தான் மாமா நீங்க... சின்னச் செயலில் கூட என்னை வருத்தப்பட வைக்கக் கூடாதுன்னு நினைப்பீங்க... இத்தனை நாள் நீங்க கோபப்பட்டது கூட என் மேலுள்ள அன்பினால் தான்... நான் வேற யாரையாவது கல்யாணம் பண்ணி நல்லா இருக்கணும்ன்னு தான் நீங்க இப்படிக் கோபமாய்ப் பேசி என்னை வெறுப்பேத்தினீங்க... நான் நல்லா இருக்கணும்ன்னு நினைக்கிற உங்களோட இந்த அன்பு ஒண்ணு போதாதா மாமா... என் வாழ்க்கை முழுமைக்கும்... இந்த அடிப்படை புரிதல் தான் மாமா திருமண வாழ்க்கைக்கு வேணும்...' மனதில் நினைத்து கொண்டவள் இமைக்காமல் அவனைப் பார்த்தாள்...

"பட்டு... சாப்பிட ஏதாவது கொண்டு வர சொல்லவா...?"

"வேண்டாம் மாமா... எனக்கு உங்க கூடக் கொஞ்சம் பேசணும்..."

அவளின் வார்த்தைக்கு என்ன பதில் கொடுப்பது என்று தெரியாமல் தலையைக் கோதி கொண்டவன் பின்,

"நமக்குள் பேச ஒண்ணும் இல்லை பட்டு... பேசினா வீணா மனவருத்தம் தான் மிஞ்சும்..." என்று மறுத்தவனை நோக்கி,

"ஈஷ்வர் அண்ணா எல்லாம் சொன்னார்..." தான் வந்த விசயத்தைப் பட்டென்று போட்டு உடைத்தாள் அவள்...

"ஓ..." அவனின் குரலில் சுருதி இறங்கியது... முகம் அவமானத்தில் கன்றிப் போனது... அவளின் முகம் காண முடியாமல் தலையைக் குனிந்து கொண்டான்...

அவனது நிலை அவளின் மனதை வருத்த எழுந்து அவன் அருகில் சென்று அவனது தோளில் கை வைத்தவள்,

"ப்ளீஸ் மாமா... இதுல அவமானப்படுறதுக்கோ, வேதனைப்படுறதுக்கோ ஒண்ணும் இல்லை... இதை மறந்துட்டு நீங்க பழையபடி கம்பீரமா, தைரியமா வலம் வரணும்... அதைப் பார்த்து நான் ரசிக்கணும்..."

அவளது வார்த்தைகள் அவனது காயம் அடைந்த மனதுக்கு இதமாக இருந்த போதும் கடைசியாய் அவள் சொன்ன வார்த்தைகள் அவனுக்குக் கொஞ்சமும் ரசிக்கவில்லை...

"நீ எதுக்கு என்னை ரசிக்கணும்... நீ உன் கணவனை ரசித்தால் போதுமானது..." என்றான் பட்டென்று...

'அதைத் தான் மாமா பண்ணிக்கிட்டு இருக்கேன்...' அவன் தலை குனிந்து இருந்ததால் அவனது கரிய சிகை அவளது கண்ணில் பட்டு அதில் விரல் விட்டு கோதி விளையாட அவளது கை துடித்தது... முயன்று மனதை கட்டுப்படுத்திக் கொண்டு,

"நான் உங்க கூடப் பேசணும்ன்னு சொன்னேன்..." தான் வந்ததன் நோக்கத்தை மீண்டும் அவனுக்கு வலியுறுத்தினாள்...

எப்படியும் பேசி முடிவு எடுக்கத்தான் வேண்டும் என்று மனதில் நினைத்தவன், "வா..." என்று அவளை அழைத்துக் கொண்டு கிளம்பினான்...

இருவரும் வெளியில் வரும் போது சுமார் இருபத்தைந்து வயது மதிப்புடைய பெண் ஒருத்தி இவர்கள் முன் வந்தாள்... அவளைக் கண்டதும் ஆதியின் முகம் உணர்வுகளைத் துடைத்தார் போல் மாறியது... கவனமாய்த் தனது உடல் மொழியை மாற்றிக் கொண்டவனை மிருதுளாவும் கவனித்தாள்...

"இவங்க தான் அவங்களா...?" மிருதுளா கிசுகிசுப்பாய் கேட்டாள் அவனிடம்...

"ம்..." என்று தலையாட்டியவன் மறந்தும் அந்தப் பெண் புறம் திரும்பவில்லை...

"ஹாய்..." அந்தப் பெண்ணிடம் வலிய சென்று பேசினாள் மிருதுளா...

அவள் சங்கடத்துடன் ஆதியை பார்த்துவிட்டு மிருதுளா பக்கம் திரும்பி, "ஹாய்..." என்று சிரித்தாள்...

"நான் ஆதியோட மாமா பெண்... கூடிய சீக்கிரம் நாங்க ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிக்கப் போறோம்..." ஆதியின் கரத்தோடு தன் கரத்தை கோர்த்துக் கொண்டு சொன்னாள் மிருதுளா...

மிருதுளா சொன்னதைக் கேட்டு ஆதி அதிர்ச்சியுடன் அவளைப் பார்த்தான்...

அந்தப் பெண்ணோ சந்தோசத்துடன் இருவரையும் பார்த்தவள் அவனிடம், "கங்கிராட்ஸ் சார்..." என்றவள் முகத்தில் பழைய சங்கடம் மறைந்து நிம்மதி தோன்றியது...

அவள் தன்னிடம் பேசியது கண்டு ஆதிக்கு சற்று ஆச்சிரியமாய் இருந்தது...

"சார் ரொம்ப நல்லவங்க மேடம்..." மிருதுளாவிடம் அவள் சொல்ல...

"எனக்கேவா... சின்ன வயசில் இருந்து மாமாவை பார்த்து வளர்ந்து இருக்கேன்... என்னை விட என் மாமாவை புரிஞ்சிக்கிட்டவங்க இந்த உலகத்தில் யாரும் இல்லை..."

என்ன தான் மருத்துவராய் இருந்தாலும் அவளும் ஒரு பெண் அல்லவா... பெண்ணுக்கே உரிய உரிமை குணம் தலைத் தூக்கியது அவளுள்...

"ரொம்பச் சந்தோசம் மேடம்... வர்றேன் சார்... பை மேடம்..." என்றவள் விடைப்பெற்று செல்ல...

"உப்..." அதுவரை இழுத்துப் பிடித்திருந்த மூச்சை மெல்ல விட்டுத் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டான் ஆதி...

"அவங்க பேரு என்ன...?"

"பிருந்தா..." என்றவன், "அவ கிட்ட ஏன் அப்படிச் சொன்ன...? உனக்குக் கொஞ்சமாவது அறிவு இருக்கா...?" படபடவெனப் பொரிந்தவனைக் கூர்மையாய் பார்த்தவள்,

"அவள் முகத்தில் சங்கடம் மறைஞ்சு நிம்மதி தோணுச்சே அதுக்காகத் தான்... இப்போ உங்க மனசில் இருந்த குற்ற குறுகுறுப்பு நீங்கி போயிடுச்சே அதுக்காகத் தான்... அவ உங்க கிட்ட நார்மலா பேசியதை பார்த்துச் சந்தோசப்பட்டீங்களே அதுக்காகத் தான்..."

தன் மனதை கண்ணாடி போல் எடுத்துரைக்கும் மாமன் மகளைப் பிரமிப்பாய் பார்த்தான் ஆதி...

"மாமா... இதுக்கே இப்படி ஒரு ரியாக்சன் காண்பிச்சா எப்படி...? கைவசம் நிறைய ஸ்டாக் இருக்கு... அப்பப்போ எடுத்து விடறேன்... இப்போ நாம போகலாமா..." மிருதுளா சொன்ன பாணியில் வாய்விட்டு சிரித்தவன்,

"போகலாம்..." என்க... அவள் அவனுடன் இணைந்து நடந்தாள் அவனின் கரத்தை பற்றியவாறு...

அவன் அதை உணராது அவளுடன் சேர்ந்து நடந்தான்...

"எங்கே போகலாம்...?" காரை கிளப்பியவன் அவளைப் பார்த்து கேட்க...

"பீச்சுக்கு போகலாமா..." கண்ணில் ஆர்வம் மின்ன கேட்டவளை ஏமாற்ற மனம் வரவில்லை அவனுக்கு...

கடற்கரை வந்ததும் காரை நிறுத்தி விட்டு இருவரும் இறங்கி நடந்தனர்...

"ரொம்பத் தூரம் போக வேண்டாம்... இங்கேயே உட்காரலாம்..." அவன் சொல்லவும் மறுத்துப் பேசாமல் அவள் அங்கேயே அமர்ந்தாள்...

நாகரீகமாக இடைவெளி விட்டு அவள் அருகில் அமர்ந்தான் ஆதி...

'தயிர் சாதம்... தயிர் சாதம்...' மானசீகமாகத் தலையில் அடித்துக் கொண்டாள் அவள்...

இருவருக்கும் இடையில் மௌனம் நிலவியது... அவள் பேச வேண்டிய விசயத்தை ஒத்திகை பார்த்துக் கொண்டே கைகளால் மண்ணைக் குவித்துக் கொண்டு இருந்தாள்... அவனோ என்ன பேச போகிறாளோ என்று ஒருவித பயத்தில் திகிலோடு அமர்ந்து இருந்தான்...

ஆனாலும் அவளது கை விரல்கள் மணலில் விளையாடுவதைப் பார்த்து ரசிக்கத் தான் செய்தான்... சின்ன வயதில் இருந்து மிருதுளா அப்படித் தான்...

"சொல்லு என்ன விசயமா பேச வந்த..." அவனே ஆரம்பித்தான்...

"அண்ணா எல்லாம் சொன்னாங்க..." அதற்கு அவன் அமைதியாய் அமர்ந்து இருந்தான்...

"இதுக்காகவா மாமா என்னை வேண்டாம்ன்னு சொன்னீங்க...?"

அவளது கேள்விக்கு என்ன பதில் கூறுவது என்று தெரியாமல் தூரத்தில் தெரிந்த கடலின் மீது பார்வையைப் பதித்தான்...

"அவ வேற ஒருத்தனை கல்யாணம் பண்ணிட்டு சந்தோசமா இருக்கா... ஆனா நீங்க ஏன் இன்னமும் அவளை மறக்காம இருக்கீங்க...?"

அவளைத் திரும்பி ஒரு பார்வை பார்த்தவன் மீண்டும் கடலில் தன் பார்வையைப் பதித்தவாறு, "சில விசயங்கள் உனக்குப் புரியாது பட்டு..."

"மாமா... நான் ஒண்ணும் சின்னக் குழந்தை இல்லை... இருபத்தியாறு வயசாச்சு... டாக்டரா வேற இருக்கேன்...

எனக்கா புரியாது... சும்மா சொல்லுங்க மாமா... புரியலைன்னாலும் புரிய முயற்சிக்கிறேன்..."

"ம்ப்ச்... சொன்னா கேட்க மாட்டியா..." எரிச்சலாய் மொழிந்தவன் இரு கைகளால் தன் தலையைத் தாங்கியவாறு,

"காதலிச்ச காலத்தில் அவளை என் மனைவியாய் நினைச்சு மனசுக்குள் வாழ்ந்து இருக்கேன்... இப்போ அப்படி இல்லைன்னாலும் அந்தக் காதல் வாழ்க்கை அழியாமல் என் மனசுக்குள்ள இன்னமும் பசுமையா இருக்கு... அந்தக் காதலை வேறு யாரு கூடவும் பங்கு போட நான் தயாரா இல்லை..." வேதனையுடன் சொன்னவன்,

"அதான் நான் சொன்னேன்... நான் உனக்கு வேண்டாம்ன்னு... உனக்கு என்னை விட எல்லா விதத்திலும் பொருத்தமானவன் கணவனா அமைவான்... எனக்காக நீ காத்து இருப்பதில் அர்த்தம் இல்லை..."

அவன் பேசியதும் அவளிடம் இருந்து சிறிது நேரம் சத்தம் வரவில்லை...

"என்ன பட்டு...?"

அதற்கும் பதில் பேசாது குனிந்து இருந்த அவள் முகத்தை ஒற்றை விரலால் நிமிர்த்தினான்... அவளது கண்களில் வழிந்த கண்ணீரை கண்டு மனம் பதறிப் போனான் அவன்...

"பட்டு இப்போ எதுக்கு இந்த அழுகை...?" அவன் அவளைக் கடிந்தாலும் அவளது கண்ணீரை துடைக்க மறக்கவில்லை...

சிறு பிள்ளையில் அவள் ஓடி வரும் போது கீழே விழுந்து அழுதால் அப்போதும் இது போல் தான் ஓடி வந்து அவளைத் தூக்கி விட்டு,

"பார்த்து வர கூடாதா பட்டு..." என்று அவளைக் கடிந்து கொண்டே அவளது கண்ணீரை துடைப்பான்...

அந்த நினைவு அவள் நெஞ்சை தாக்க அவனது கையைத் தன் இரு கைகளால் அழுத்தி பிடித்துக் கொண்டவள்,

"நீங்க அவளோடு வாழ்ந்த மாதிரி... நான் இப்போதும் உங்க கூட மனசால வாழ்ந்துட்டு இருக்கேன் மாமா... நான் எப்படி உங்களை விட்டு வேறு ஒருவனை..." இதைச் சொல்லும் போதே அவளது முகம் எந்தளவுக்கு வேதனையைத் தாங்கியதோ அதே போல் அருவருப்பையும் சேர்த்துத் தேக்கியது...

"என்னோட காதலை உங்களைத் தவிர வேறு யார் கூடவும் பங்கு போட நான் தயாராய் இல்லை..." அவளது வார்த்தையில் அதிர்ந்து போய் அவன் தன் கையை அவளது பிடியில் இருந்து உருவி கொண்டான்...

மீண்டும் அவர்களிடையே அழையா விருந்தாளியாய் மௌனம் வந்து குடி கொண்டது...

"இதுக்கு என்ன தான் முடிவு மாமா...?"

"தெரியலை பட்டு..." அவனிடம் இருந்து பெருமூச்சு கிளம்பியது... இப்போது அவளின் மனதை அவனால் நன்கு புரிந்து கொள்ள முடிந்தது...

"எத்தனை நாளைக்குப் பெரியவங்களை ஏமாத்த முடியும்...? என்னைக்காவது ஒரு நாள் நம்மளை மிரட்டி கல்யாண பந்தத்தில் சிக்க வைக்கத் தான் போறாங்க... அதுக்குப் பதிலா நாமளே அதுக்குச் சரின்னு சொல்லிட்டா...?"

அவள் கூறுவதைப் பொறுமையுடன் கேட்டுக் கொண்டு இருந்தவன், "என்னால் உன் வாழ்க்கை பாழாய் போறதை நான் விரும்பலை..."

'நீங்க தானே மாமா என் வாழ்க்கை...' மனதுக்குள் மருகியவள்,

"நீங்க ஆண் இப்படியே இருந்துட முடியும்... என்ன தான் நான் வீரப்பாய் பேசினாலும் பெண் என்னைச் சுலபமா கல்யாண பந்தத்தில் சிக்க வச்சுருவாங்க... உங்களைத்

தவிர என்னால் வேறு யாரையும் கல்யாணம் பண்ண முடியாது... அதனால..." என்று நிறுத்தியவளை,

"அதனால...?" கேள்வியாய் ஆதி பார்த்தான்...

"நீங்க ஏன் எனக்கு வாழ்க்கை கொடுக்கக் கூடாது...?"

என்ன தான் அவனை மனதில் கணவனாய் வரித்து இருந்தாலும் அவனிடத்தில் இப்படிக் கேட்க அவளது பெண் மனம் உள்ளுக்குள் கூசி போனது மிகுந்த அவமானத்தில்... காதலுக்காக இந்த அளவுக்கு இறங்கி போய் விட்டோமே என்று அவளது மனம் பாரமாய்க் கனத்துப் போனது... ஆனால் இதை விட்டால் அவளுக்கும் வேறு வழி தெரியவில்லை...

"என்ன உளர்ற...?" அவனுள் கோபம் எழுந்தது...

"ப்ளீஸ் கோபப்படாம நான் சொல்றதை கொஞ்சம் புரிஞ்சிக்கோங்க மாமா... இந்தக் கல்யாணத்துக்கு அடிப்படை காதல் கிடையாது... நட்பு மட்டும் தான்... ஆமாம் மாமா... நம்ம ரெண்டு பேருக்குமே கல்யாண வாழ்க்கை வேண்டாம்... அதே சமயம் நம்ம இரு வீட்டுப் பெரியவங்களைத் திருப்திப்படுத்தவும் வேணும்... அதுக்கான காரணமா நம்ம கல்யாணம் ஏன் அமைய கூடாது...? கல்யாணத்துக்கு அப்புறம் உங்களை நான் எந்த விதத்திலும் தொந்திரவு பண்ண மாட்டேன்... நீங்க நீங்களா இருக்கலாம்..."

அவள் அவனது கையை எடுத்து அதன் மீது தன் கையை வைத்து, "சத்தியமா சொல்றேன்... என்னை நம்பலாம்... நான் எந்த விதத்திலும் உங்களைத் தொந்திரவு பண்ண மாட்டேன்..." உண்மையாய் அழுத்தி சொன்னவள்,

"வெளியில் தான் நாம கணவன் மனைவி... உள்ளுக்குள் நாம பிரெண்ட்ஸ்... சாகுற வரைக்கும் பிரெண்ட்சாவே இருப்போம்..." அவனிடத்தில் சொல்லியவள்,

'சாகும் வரை உங்க அருகில் இருக்கும் பாக்கியம் கிடைச்சால் போதும்...' என்று மனதுக்குள் சொல்லி

கொண்டாள்...

அவனின் அமைதி அவளைப் பயமுறுத்தியது...

"இன்னும் என்னை நம்பலையா...? நான் பொய் சொல்ல மாட்டேன்னு உங்களுக்கு நல்லாவே தெரியும்..."

"ச்சே... அப்படி எல்லாம் நான் நினைக்கலை... உன்னைப் பத்தி எனக்குத் தெரியாதா...?" என்று தலையசைத்து மறுத்தவன்,

"ஆனா இந்தக் கல்யாணம் எப்படி...? இது சரியா வருமா...?" குழப்பத்துடன் கேட்டான்...

தாலி என்று கட்டி மனைவியாய் ஒரு பெண்ணை ஏற்றுக் கொண்ட பின் அவளை ஏமாற்றுவது என்பது திருமணப் பந்தத்திற்கே இழுக்கு அல்லவா... திருமணச் சடங்கின் போது எடுத்துக் கொள்ளும் உறுதிமொழிக்கும் என்ன அர்த்தம் இருக்கிறது... அதனால் தான் அவன் இது வரை திருமணத்தை மறுத்து வந்தது...

"எல்லாம் சரியா வரும்... நாமளும் இந்தப் பிரச்சினையில் இருந்து ஈசியா தப்பிக்க முடியும்... பெரியவங்களையும் திருப்திப்படுத்த முடியும்..."

அப்போதும் அமைதியாய் யோசித்துக் கொண்டு இருந்தவனைக் கண்டு மனதுக்குள் வருத்தமாக இருந்த போதும்...

"நீங்க இந்தளவுக்கு யோசிக்கும் அளவுக்கு நான் ஒண்ணும் கெட்டவள் இல்லை மாமா..." கேலி போல் கூறினாலும் அவளது உள்ளத்து வலி அவளது வார்த்தையில் அப்பட்டமாய்த் தெரிந்தது...

"என்ன பேச்சு பேசற... நீ கெட்டவளா... உண்மையில் நீ ரொம்ப நல்ல பெண்..." என்றவனின் முகம் கவலையில் ஆழ்ந்தது...

"அதனால் தான் உன் வாழ்வு வீணாய் போவது குறித்துக் கஷ்டமா இருக்கு..."

இப்போது அவனின் மீது கோபம் வந்தது அவளுக்கு... தான் இவ்வளவு தூரம் எடுத்து சொல்லியும் அவன் தன்னைப் புரிந்து கொள்ள மாட்டேங்கிறானே என்று ஆதங்கமாக இருந்தது அவளுக்கு...

ஈர்க்கும்...

"நான் உங்களைத் தவிர வேறு யாரையும் கல்யாணம் பண்ண மாட்டேன்... எனக்கு வேண்டியது உங்க காதல் இல்லை... எனக்கு வேண்டியது உங்க அன்பு தான்... காலம் முழுவதும் அன்போடு கை கோர்த்துட்டு என்னுடன் வர உங்களோட கை வேண்டும்... மனசு கஷ்டப்பட்டா ஆறுதலா தோள் சாய உங்க தோள் வேண்டும்... நான் கண்ணீர் விட்டு அழுதா இப்போ பதறி போய்த் துடிச்சீங்களே அந்தத் தூய்மையான பாசம் வேணும்... இது மட்டும் தான் நான் உங்க கிட்ட இருந்து எதிர்பார்க்கிறேன்..."

தெளிவாய் தன் பதிலை எடுத்து உரைத்தவள் அமைதியாய் கடலை வெறித்துக் கொண்டு அமர்ந்து இருந்தாள்...

ஆதி ஒன்றும் பேசாது எழுந்தான்... அவள் திகைத்து போய் அவனை ஏறிட்டாள்... அவனது பேச்சற்ற மௌனம் அவள் மனதை காயப்படுத்த கண்களில் கண்ணீர் திரண்டது...

அப்போது அவனது கரம் அவள் முன் நீண்டது... கேள்வியாய் அவனைப் பார்த்தவளை கண்டு வசீகரமாய்ச் சிரித்தவன்,

"நான் முடிவு பண்ணிட்டேன்... காலம் முழுவதும் உன் கை கோர்த்து தோழனாய் வருவதற்கு..." அவனது வார்த்தையில் அழுகையும் மகிழ்ச்சியும் அவளிடம் ஒருங்கே தோன்றியது...

கண்களில் கண்ணீர் வழிய அதற்கு நேர்மாறாய் முகம் மலர அமர்ந்து இருந்தவளை கண்டு, "வா..." என்றான் கை நீட்டி நட்பாய்...

அவள் சந்தோசத்துடன் அவனது கரம் பற்றி எழுந்தாள்...

"உன் கண்ணீரை பாசத்தோடு துடைக்க நான் தயாராகி விட்டேன் தோழனாய்..." என்றவனது கரம் அவளது கண்ணீரை பாசத்தோடு துடைத்துவிட்டது...

அதில் மனம் நெகிழ்ந்து போய் அவள் அவனது தோள் சாய்ந்தவள் கண்களை மட்டும் மலர்த்தி அவனை ஏறிட்டவள்,

"ஆறுதலாய் உங்க தோள் சாய்ந்து விட்டேன் தோழியாய்..." என்று தன் மனதின் தன்மையையும் அவனுக்கு வலியுறுத்தினாள்...

அதில் நிம்மதி அடைந்தவனின் கை அவளின் கையை இறுக பற்றிக் கொண்டது...

இந்தச் சின்னப் புரிதல் தங்களது வாழ்க்கையை நிம்மதியாய்க் கொண்டு செல்லும் என்று இருவரும் நம்பினர்...

"இப்போதைக்கு வீட்டில் எதுவும் சொல்ல வேண்டாம்..." காரிலேறிய ஆதி அதைக் கிளப்பிக் கொண்டே அவளைப் பார்த்துச் சொன்னான்...

"ஏன்...?" புரியாமல் பார்த்தாள் அவள்...

"என் அப்பாவுக்கு லேசர் கண்ணு... சின்ன அசைவில் கூட நம்மளை கண்டு பிடித்துவிடக் கூடிய வாய்ப்பு இருக்கு... அதனால் கொஞ்ச நாள் போகட்டும்... நாம நல்லா சிரிச்சு பேசி பழகுவதைப் பார்த்த பிறகு அவர்களே நம் நடிப்பை நம்பி கல்யாணத்தை முடிக்கட்டும்..."

"சரி..." என்றவள் மனதில் பெரும் போராட்டம் எழுந்தது...

மனம் நிறையக் காதலை வைத்துக் கொண்டு காலம் முழுவதும் அவளால் நடிக்க முடியுமா...? குழப்பமாய் இருந்தது அவளுக்கு...

'இல்லை... எனக்கு மாமாவோட அருகாமை வேண்டும்... காலம் முழுவதும் அவர் கூடவே இருக்கணும்... அதுக்கு இதை விட்டா வேறு வழியில்லை... திருமண வாழ்க்கைக்குத் தாம்பத்தியம் மட்டும் தான் அடித்தளமா... ஏன் நட்பாக வாழ முடியாதா... என் மாமாவுக்காக அவர் நிம்மதிக்காக நான் அவருடன் கடைசி வரை நட்பாய் வாழுவேன்... ஒரு தோழியாய் அவருடன் இருப்பேன்...' மனதில் உறுதியாய் நினைத்த பிறகு தான் அவளுள் இருந்த கலக்கம் மறைந்தது...

"பட்டு... அங்கே பாரு குல்பி..." தெருவோரம் நின்று இருந்த குல்பி ஐஸ் வண்டியை அவன் சுட்டி காட்டினான்...

"மாமா... மாமா... ப்ளீஸ்... வாங்கிக் கொடுங்க..." சிறு குழந்தையாய் நச்சரித்தவளை கண்டு சிரித்தபடி அவன் அதன் அருகில் சென்று காரை நிப்பாட்டினான்...

அவளுக்குப் பிடித்த மாம்பழ குல்பி இரண்டு வாங்கி வந்து இரண்டையும் அவளிடம் நீட்டினான்...

"எனக்கு என்ன பிடிக்கும்ன்னு இன்னமும் உங்களுக்கு நியாபகம் இருக்கா...?" ஆச்சிரியமாய்க் கேட்டவள் அவனின் கையில் இருந்து குல்பியை வாங்கிச் சுவைத்தாள்...

"ஏன் நியாபகம் இல்லை... நல்லா நியாபகம் இருக்கு..." என்று அவள் அருகில் வந்தவன் அவளது சுவைத்துக் கொண்டு இருந்த குல்பியை தன் புறமாய் இழுத்து அதை ஒரு கடி கடித்து விட்டு,

"இதுவும் நல்லா நியாபகம் இருக்கு..." என்று முன் எச்சரிக்கையுடன் அவளது கை படாமல் தள்ளி நின்று கொண்டு சொன்னவனைக் கண்டு அவளுக்குக் கண்கள் கரித்தது...

அவள் மாமா எதையும் மறக்கவில்லை... அவளையும் மறக்கவில்லை... இது போதும் அவளுக்கு...

தன்னைச் சமாளித்துக் கொண்டு வேண்டும் என்றே அவனை முறைத்து பார்த்தவள், "உங்களை..." என்றபடி

அவனைத் துரத்த அவன் சிரித்தபடி அவள் கையில் அகப்படாமல் ஓடினான்...

தொழிலதிபர் என்பதை மறந்து அவனும், மருத்துவர் என்பதை மறந்து அவளும் இருவரும் தங்களது தகுதியை மறந்தவர்களாய் இளம் பிராயத்து நேசத்தை மட்டும் மனதில் கொண்டு விளையாடி கொண்டு இருந்தனர்...

ஆதி வரும் வரை தவிப்புடன் காத்திருந்தான் மித்ரேஷ்... மிருதுளா ஆதியை சென்று காணும் விசயம் அவனுக்குத் தெரியும்... நண்பன் அவள் மீது கோபம் கொள்வானோ இல்லை தன் மீது கோபம் கொள்வானோ என்று தெரியாமல் அவன் நின்று இருந்தான்...

கார் வந்து நின்றதும் முதலில் இறங்கிய மிருதுளா அவனிடம் வந்து, "ரொம்பத் தேங்க்ஸ்ண்ணா..." முகம் மலர கூறியவளின் மலர்ச்சியே ஆதியின் மனமாற்றத்தை கட்டியம் கூறியது...

"ரொம்பச் சந்தோசம்மா..." அவன் தானும் மகிழ்ந்தவனாய்...

"மீதியை உங்க பிரெண்ட் கிட்டேயே கேட்டுக்கோங்க... குட் நைட்..." என்றபடி அவள் செல்ல...

மித்ரேஷ் ஆதியின் வருகையைப் பார்த்துக் கொண்டு இருந்தான்...

"சாரி ஆதி... சிஸ்டர் ரொம்ப வற்புறுத்தி கேட்கும் போது என்னால் ஒண்ணும் பண்ண முடியலை... மிருது கஷ்டப்படுறதை என்னால் பார்க்க முடியலைடா..."

மித்ரேஷ் தயங்கி தயங்கி விளக்கம் கொடுக்க ஆதி அவனைச் சந்தோசமாய் அணைத்துக் கொண்டான்...

"எனக்கு நல்லது தானே பண்ணி இருக்க... தேங்க்ஸ்டா..." என்ற நண்பனை கண்டு மித்ரேஷுக்கும் நிம்மதியாய் இருந்தது...

ஆதி நண்பனிடத்தில் இருந்தும் உண்மையை மறைத்தான்...

அதாவது தானும் மிருதுளாவும் நட்பின் அடிப்படையில் திருமணம் செய்ய இருப்பதை... இது அவர்கள் இருவருக்குமான ரகசியம் என்று நினைத்தான்... இதிலே அவன் திருமணத்துக்கான முழுத் தகுதியையும் பெற்று விட்டான்...

****

அன்று தீபாவளி பண்டிகை என்பதால் எல்லோரது வீட்டிலும் மகிழ்ச்சி நிறைந்து இருந்தது... அன்று புதிதாய் எடுத்து இருந்த புடவையைக் கட்டி கொண்டு மது தனது அறையில் இருந்து வெளியில் வந்தாள்...

நேரே தன் பெற்றோர் அறைக்குச் சென்று அக்ஷயிடம் தன்னைச் சுற்றி காண்பித்தவள், "டாட்... நான் எப்படி இருக்கேன்..."

புடவையில் அழகாய் இருந்த மகளைக் கண்டு அக்ஷயின் மனம் நெகிழ்ந்தது...

"உனக்கு என்னடா நீ எப்பவும் அழகு தான்..." அவன் வாஞ்சையுடன் அவளது தலையை வருடி கொடுக்க...

"அப்போ மாம்..." அப்போது அறைக்குள் நுழைந்த அபியை சுட்டி காட்டி கேலியாய் அவள் கேட்க...

"என்னை மாட்டி விடுறதுலேயே குறியா இருக்கியே அம்மு... இது உனக்கே நல்லா இருக்கா..." பயப்படுவது போல் நடித்தவனைக் கண்டு அபி முறைக்க... மதுவோ கலகலகவென்று சிரித்தாள்...

"உண்மையைச் சொல்லுங்க டாட்... நான் அழகா... மாம் அழகா...?" இதற்கு எந்தத் தகப்பனும் பதில் சொல்வது கடினம்...

"நீ தான்டா அம்மு அழகு..." அவன் சொல்லவும்,

"ஏய்..." என்று அவள் சந்தோசத்தில் ஆர்ப்பரிக்க...

"ஆனால் உன் அம்மா பேரழகு..." என்க...

"ஓ..." காற்று போன பலூனாய் முகத்தைச் சுருக்கினாள் மது...

"அப்படிச் சொல்லைன்னா உங்கம்மா எனக்குச் சாப்பாடு போட மாட்டா... வீட்டை விட்டு விரட்டி விட்டுருவா..." என்று அவன் அபியை பார்த்து கண்சிமிட்டி சிரிக்க அபி தலையில் அடித்துக் கொண்டாள்...

"அப்பாவுக்கு மகளுக்கும் விவஸ்தை கிடையாது..." என்றபடி அபி வெளியில் செல்ல... தந்தையும் மகளும் அவளைப் பின் தொடர்ந்தனர்...

"இன்னைக்காவது பூ வையேன் மது..." என்ற அபி அவளை வற்புறுத்தி அவளது நீண்ட சடையில் பூவை சூடி அழகு பார்த்தாள்...

"இப்போ தான் பொண்ணு மாதிரி அழகா இருக்க..." என்று அவள் கன்னம் வழித்துத் திருஷ்டி கழித்தாள்...

அப்போது மிருதுளாவும் அவளது பெற்றோருடன் அங்கு வந்தாள்... அவளும் அழகிய பட்டு புடவையில் எழிலுற அழகாய் இருந்தாள்...

"ஆச்சி, தாத்தா... என்னை ஆசிர்வாதம் பண்ணுங்க..." என்று மிருதுளா பெரியவர்களின் காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்குவதற்காகக் கீழே குனிய அதே நேரம் ஆதித்யாவும்,

"என்னையும் ஆசிர்வாதம் பண்ணுங்க..." என்றபடி அவளுடன் சேர்ந்து கீழே குனிந்தான்...

மிருதுளா இனிய அதிர்ச்சியுடன் குனிந்தபடி அவனைப் பார்க்க அவனோ மாயக்கண்ணனாய் கண்சிமிட்டி சிரித்தான்...

இருவரின் செய்கையும் கண்டு பெரியவர்கள் மனம் குளிர்ந்தது... கொஞ்ச நாட்களாகவே இருவரிடத்திலும் காணும் நெருக்கம், அந்நியோன்யம் அவர்களுக்குச் சிறு நிம்மதியை கொடுத்தது... அக்ஷய் கூட இவர்களை

முழுதாய் நம்பினான்... ஏனெனில் சிறு வயது முதல் ஒன்றாய் வளர்ந்து பழகியதால் அவர்களால் அவர்களது இயல்பு மாறாமல் தங்களது அன்பை மற்றவர்களுக்கு உணர்த்த முடிந்தது... அதனால் மற்றவர்களையும் எளிதில் நம்ப வைக்க முடிந்தது...

"நல்லா இருங்க ரெண்டு பேரும்..." பெரியவர்கள் ஆசிர்வாதம் செய்ய இருவரும் எழுந்தனர்...

"என்னடி நடக்குது இங்க...? இது பூலோகம் தானா... இது என் வீடு தானா...?" மயக்கம் வருவது போல் நடித்த மதுவின் தோளில் தட்டிய மிருதுளா,

"உன் வீடு இல்லைடி... நம்ம வீடு..." என்று முகம் சிவக்க கூற...

"ஓகோ கதை அப்படிப் போகுதா..." என்று மிருதுளாவின் தோளில் இடித்து அவள் நமட்டுச் சிரிப்பு சிரிக்க அதைக் கேட்டு பெரியவர்களும் சிரித்தனர்...

"பட்டு..." அவளை அழைத்த ஆதி அவளது கையில் அழகிய நகைப் பெட்டியை வைத்தான்...

திறந்து பார்த்தவள் அதில் ஒளிர்ந்த வைர நெக்லசை கண்டு திகைத்து போய் அவனை நிமிர்ந்து பார்க்க,

"உனக்குத் தான் பட்டு..." என்றான் புன்னகை மாறாமல்...

"டேய் அண்ணா இது எல்லாம் ஓரவஞ்சனை சொல்லிட்டேன்... எனக்கு எங்கேடா கிப்ட்..." ஆதியிடம் மது கோபத்தில் குதிக்க...

"வாலு உனக்கு இல்லாததா..." என்றபடி அவளிடமும் ஒரு நகைப் பெட்டியை கொடுத்தான்...

"ஐய்... சூப்பர்..." அதில் இருந்த வைர நெக்லசை பார்த்து கூவியவள் உடனே அதை எடுத்துக் கழுத்தில் போட்டு பார்த்தவள்,

"நான் அத்தை கிட்ட போய்க் காட்டிட்டு வர்றேன்..." என்று நிஷா வீட்டிற்கு ஓடி விட்டாள்...

பெரியவர்கள் அவர்கள் வேலையைப் பார்க்க வெளியில் வந்த ஆதியின் பின் மிருதுளாவும் வந்தாள்...

"எதுக்கு இவ்வளவு உயர்ந்த விலையில் நகை எல்லாம்...? எனக்கு இது வேண்டாம்..." எப்படிச் சொல்வது என்று தெரியாமல் நிறுத்தினாள்...

"பட்டு... நான் பெரியவங்களுக்காக நடிப்பதற்காக இதைக் கொடுக்கலை... மனசாரத் தான் கொடுக்கிறேன்... இப்போ கொஞ்ச நாளா நான் சந்தோசமா சிரிச்சிட்டு இருக்கேன்னா அதுக்குக் காரணம் நீ தான்... என் மனசுல உள்ள கஷ்டத்தைப் புரிஞ்சிக்கிற உன்னை மாதிரி ஒரு பிரெண்ட் கிடைக்க நான் கொடுத்து வச்சிருக்கணும்... இது ஒரு ப்யூர்லி பிரெண்ட்ஷிப்க்காகக் கொடுத்தது தான்... நீ தப்பா நினைக்கிற மாதிரி அடுத்தவங்களுக்காகக் கொடுக்கலை..."

அவனது நீண்ட விளக்கத்தில் அவளது முகம் தெளிந்தது...

"தேங்க்ஸ் மாமா..."

"இந்தத் தேங்க்ஸ் சொல்ற பார்மாலிட்டி எல்லாம் இனி நமக்குள் வேண்டாம்..." என்றவன் வெளியில் செல்ல அவனைப் பார்த்துக் கொண்டு இருந்தவள் மனதில் வெளிச்ச நம்பிக்கை தோன்றியது...

"அத்தை..." ஆர்ப்பாட்டமாய் மித்ரேஷ் வீட்டிற்குள் நுழைந்தாள் மது...

"ஷ்..." வாயில் விரல் வைத்து அமைதி காக்கும் படி ஜான் சொல்ல...

"என்ன விசயம்...?" கிசுகிசுப்பாய் கேட்டபடி அவள் அவன் அருகில் சென்று அமர்ந்தாள்...

"ஈஷ்வருக்கும் மாம்க்கும் ஒரு சின்னப் பிரச்சினை..."

"அந்த வளர்ந்து கெட்டவனுக்கு என்ன தான் வேணுமாம்... எல்லோர் கிட்டேயும் பிரச்சனை பண்ணிக்கிட்டு இருக்கான்...? ஒரு நாள் இல்லை ஒரு நாள் என் கிட்ட வாங்கிக் கட்ட போறான் பாரு..." நிஷாவிடம் பிரச்சினை செய்த மித்ரேஷை எதிரியாய் உருவகம் செய்து கறுவினாள் அவள்...

'இந்தப் பிரச்சினைக்குக் காரணமே நீ தானே...' மனதுக்குள் நினைத்தவன்,

"காலையில் மாம் ஈஷ்வரோட கல்யாண பேச்சை எடுத்தாங்க..."

"ஐய் சூப்பர்... சூப்பர்..." என்று குதூகலித்தவளை ஜான் விசித்திரமாய்ப் பார்த்தான்...

"ஜான்... அவனுக்குப் பொண்ணு பார்க்கிறப்போ கொஞ்சம் சிரிச்ச முகத்தோட பொண்ணைப் பார்க்க சொல்லு... இவன் தான் சிரிக்க மாட்டான்... வர போற பொண்ணாவது சிரிச்சிக்கிட்டே இருக்கட்டும்..."

அவள் சொன்னதில் ஜானுக்குச் சிரிப்பு வந்தது...

"அந்தப் பொண்ணு எப்போ பார்த்தாலும் சிரிச்சிக்கிட்டே தான் இருக்கும்..." என்றவன் அவளை அளவிடுவது போல் பார்த்துவிட்டு மேலும் சிரிக்கத் துவங்க...

"ஓ... பொண்ணு பார்த்தாச்சா... சூப்பர்..." என்றவள் பின் யோசித்தவளாய், "ஏண்டா... எப்போ பார்த்தாலும் சிரிச்சுக்கிட்டே இருக்கும்ன்னா பொண்ணு என்ன லூசா...?"

தன்னைத் தானே பைத்தியம் என்று கூறும் மதுவை கண்டு அவனால் சிரிப்பை அடக்க முடியவில்லை... அமர்ந்து இருந்த சோபாவில் புரண்டு புரண்டு அவன் சிரிக்க...

"ஏய்... லூசு சிரிக்காம பதில் சொல்லுடா..." அவள் அவனது தோளில் தட்ட...

"ஒரு லூசு இன்னொரு லூசை லூசு என்கிறதே... அடடா ஆச்சிரியக்குறி..." அவன் கிண்டலடிக்க...

"உன்னை..." மேலும் அவனை அடிக்கப் போக அதற்கு அவள் அணிந்து இருந்த புடவை ஒத்துழைக்காததால்,

"ச்சு... அத்தை எங்கேடா...?"

"ஈஷ்வர் கல்யாணத்துக்குச் சம்மதிக்காததால் மாம் உள்ளே அழுதுட்டு இருக்காங்க..."

"பன்னி... இதை முதல்லேயே சொல்லி தொலைய வேண்டியது தானே..." அவனது தலையில் நறுக்கென்று கொட்டி விட்டு மனம் பொறுக்காமல் உள்ளே விரைந்தாள்...

"அத்தை..." அவளது அழைப்பில் கண்ணில் வழிந்த கண்ணீரை துடைத்துக் கொண்டு நிமிர்ந்த நிஷா,

"வாம்மா மது..." என்று வரவேற்றவள்,

"சேலை ரொம்ப அழகாயிருக்குடா..." அவளது கன்னத்தில் முத்தமிட்டார்...

என்ன தான் மகிழ்ச்சியாய் காட்டி கொண்டாலும் நிஷாவின் கண்களில் இருந்த சோகம் அவளைத் தாக்கியது... அவளது கோபம் எல்லாம் மித்ரேஷ் மேல் திரும்பியது...

'ஏழு வருசமா காணாம போய் அத்தையை நோகடிச்சான்... இப்போ திரும்பி வந்து வார்த்தையால நோகடிக்கிறான்... இவன் திருந்தவே மாட்டானா...?' மனதுக்குள் நினைத்தவள் நிஷாவிடம்,

"எல்லாம் சரியா போகும் அத்தை..." என்று ஆறுதலாய் கூறி அவளைத் தேற்ற...

"எங்கேம்மா... கல்யாணப் பேச்சு எடுத்தாலே சாமி ஆடுறான்... அவ்வளவு கோபம் வருது..." என்றவர் காலையில் நடந்த விசயத்தை அவளிடம் கூறினார்...

நிஷாவின் வார்த்தையில் மதுவின் துப்பறியும் நிருபர் மூளை வேகமாய் வேலை செய்தது...

'ஒருவேளை பையன் யார் கிட்டேயாவது கமிட் ஆகியிருப்போனோ...? ம்... இருக்கலாம்... யார் கண்டா...? ஆனால் அந்தச் சிடுமூஞ்சியைப் போய் யார் லவ் பண்ணுவா...? நிச்சயம் அவளும் சிடுமூஞ்சியா தான் இருக்கணும்...' மனதில் நினைத்து கொண்டவள் நிஷாவிடம் ஆறுதல் கூறிவிட்டு வெளியில் வந்தாள்...

அவளுக்கு எப்படியாவது மித்ரேஷிடம் பேசியே ஆகவேண்டும்...

"உன் அண்ணன் எங்கே ஜான்...?" ஜானிடம் கேட்க...

"அவன் ரூமில்..." அவன் மாடியை நோக்கி கையைக் காண்பித்தான்...

விறுவிறுவென மாடிப்படியில் ஏறி போகும் அவளைப் பார்த்து மனதுக்குள் சிரித்துக் கொண்டான் அவன்...

'டேய் ஈஷ்வர்... இன்னைக்கு நீ செத்தேடா...' மனக்கண்ணில் அண்ணனின் நிலையை எண்ணி பார்த்தவனுக்கு நின்று இருந்த சிரிப்பு மீண்டும் எழுந்தது...

மித்ரேஷின் அறைக் கதவு மூடி இருப்பதைக் கண்டு, 'சொர்க்க வாசல் மாதிரி எப்ப பாரு மூடி வச்சிட்டு... அப்படி என்ன தான் உள்ளே பண்ணுவானோ...' மனதில் சலிப்பாய் நினைத்தவள் கதவை தட்டினாள்...

தனது குடும்ப உறுப்பினர் தான் என்று நினைத்த மித்ரேஷ், "திறந்து தான் இருக்கு..." என்று குரல் கொடுக்க அவள் கதவை திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள்...

வெகு சுத்தமாய் நேர்த்தியாய் இருந்த அறையைக் கண்டு மனதுக்குள் மெச்சியவள், 'பயப்புள்ள நம்மளை விடச் சுத்தமா தான் வச்சிருக்கு... ஆனா இங்கு இருந்து போகும் போது இந்தளவுக்குத் திருத்தமாய் இருக்கலையே...' எண்ணமிட்டவளாய் கண்களால் அவனைத் தேடினாள்...

பால்கனியில் நின்று கொண்டு வெளியில் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தவனைக் கண்டு 'க்கும்...' என்று

அவள் தொண்டையைச் செரும அதில் திரும்பி பார்த்தவன் அங்கு நின்று இருந்த மதுவை கண்டு கண்ணிமைக்க மறந்தான்...

புடவையில் தேவதை போல் நின்று இருந்தவளை கண்டு கனவோ கற்பனையோ என்று எண்ணி பெருமூச்சு விட்டபடி அவன் கண்களை மூடி திறந்தான்...

அவனது செய்கையைப் புரியாமல் பார்த்துக் கொண்டு இருந்தாள் மது...

அவளது உருவம் கலையாமல் இருப்பதை உணர்ந்து அவன் அறைக்குள் வருவதற்குள் பொறுமை இல்லாத மது பால்கனிக்கு வந்தாள்...

"ஒருத்தி உன்னைத் தேடி உன் ரூமுக்கு வந்து இருக்காளே... வான்னு கூப்பிட வேண்டாமா...?" அவள் அதட்டலாய் வினவ...

சிறு குழந்தை ஒன்று அதட்டுவது போல் அவனுக்குத் தோன்ற மெல்ல புன்னகைத்தவன், "வா..." என்றான்...

'அட... முசுடு சிரிக்குது... ஒருவேளை அவன் லவ்வரை நினைச்சுக் கனவு கண்டுட்டு இருந்திருப்பானோ...?' தெளிவாய் குழம்பினாள்...

'அது நமக்கு எதுக்கு...? வந்த வேலையைப் பார்ப்போம்...' மனதுக்குள் நினைத்தவள்,

"நீ ஏன் எப்போ பார்த்தாலும் அத்தையை அழ வைக்கிற...?" அதிகாரமாய்க் கேட்டவளின் வார்த்தையில் அவன் முகம் உணர்ச்சியைத் தொலைத்து இறுகி போனது...

"ம்ப்ச்... அதை விடு அம்மு..." என்றான் அவனையும் அறியாமல்... அதை உணர வேண்டியவளோ உணரவில்லை...

"என்னத்தை விடச் சொல்ற...? அத்தை சொன்னா கல்யாணம் பண்ணிக்க வேண்டியது தானே... எதுக்கு அவங்களைக் கஷ்டப்படுத்துற..."

படபடவெனப் பொரிந்து கொண்டு இருந்தவளை கைகளைக் கட்டி கொண்டு பார்த்தவன் ஒன்றும் பேசவில்லை... பேசினால் வார்த்தைகள் தாறுமாறாய் வெளிவந்து அவனுக்கும் அவளுக்கும் வீணாய் மனக்கசப்பை உண்டாக்கும்... நல்ல நாள் அதுவுமாய்ப் பிரச்சினையை வளர்க்க அவன் விரும்பவில்லை...

அன்னையிடமும் இப்படிச் சுமூகமாய்ப் போகத்தான் அவன் நினைத்தான்... அவர் மிகவும் வற்புறுத்தவும் கோபமாய்ச் சத்தம் போட்டுவிட்டு வந்துவிட்டான்...

அன்னையின் மீது அளவில்லாத அன்பு இருந்தாலும் அவருக்காக மனதில் ஒருத்தியை நினைத்துக் கொண்டு வேறு ஒருத்தியை திருமணம் செய்ய அவனால் எப்படி முடியும்...?

"ஒருவேளை நீ யாரையாவது லவ் பண்றியோ...?" அவனை உற்று நோக்கி கேட்டவளை கண்டு அவன் உள்ளுக்குள் அதிர்ந்து போனான்...

"நான் வேணா அத்தை கிட்ட ரெகமெண்ட் பண்ணவா...?" கண்சிமிட்டி கேட்டவளின் பாவத்தில் அவனது இதயம் ஒரு முறை தொலைந்து மீண்டும் மீண்டது...

அவளின் பால் மனம் சாய்வதை உணர்ந்தவனுக்குத் தன் மேல் எரிச்சல் வந்தது... அதை அடக்க முடியாமல் அவளிடம் காட்டினான்...

"நீ ஒண்ணும் ரெகமெண்ட் பண்ண வேண்டாம்... என்னைப் பார்த்துக்க எனக்குத் தெரியும்... நீ உன் வேலையைப் பாரு..." அறைக் கதவை நோக்கி கையைக் காட்டினான்...

அதில் அவளது தன்மானம் சீண்டப்படச் சண்டைக் கோழியாய் சிலிர்த்து நின்றாள்...

"என் வேலையைப் பார்க்க எனக்குத் தெரியும்... இதுக்கு மேல அத்தையை நீ அழ வச்சேன்னா... நான் மனுசியா இருக்க மாட்டேன்... நான் என்ன பண்ணுவேன்னு எனக்கே தெரியாது..."

அவளை இமைக்காது பார்த்தவன் அவள் அருகே நெருங்கி வர அவள் பின்னால் நகர்ந்தாள் அன்னிச்சை செயலாக...

"என்னடி பண்ணுவ...?" என்றான் திமிராய்...

"அத்தைக்கு ஒண்ணுன்னா நான் எது வேணும்ன்னாலும் செய்வேன்...” என்று சொன்னவள் அதை எப்படி அவனுக்குப் புரிய வைப்பது என்று தெரியாமல் நிறுத்தியவள் பின்,

“உன் உயிர் எடுக்கவும் தயங்க மாட்டேன்... ஏன்னா எனக்கு அவங்களை ரொம்பப் பிடிக்கும்..."

அவனது அன்னை மீதான அவளது அன்பை அவனிடத்தில் அவள் சொல்ல அதில் அப்படியே அசையாது நின்றவன் பின் அவளைப் பார்த்து,

"சரி... நான் கல்யாணத்துக்குச் சம்மதிக்கிறேன்..." என்றவனை மகிழ்ச்சியாய் பார்த்தவள்,

"நிஜமாவா மித்து...? யூ ஆர் சோ ஸ்வீட் டா..." என்று குதூகலித்தவளை ஆழ்ந்து பார்த்தவன் பின் அந்த வார்த்தையைக் கூறினான்...

அதில் அவள் அதிர்ந்து போய் அவனைப் பார்த்தாள்...

"மணப் பெண்ணாய் நீ வருவதாக இருந்தால்..."

ஈர்க்கும்...

மித்ரேஷ் வார்த்தைகளில் முதலில் மது அதிர்ந்து தான் போனாள்... 'என்ன சொல்கிறான் இவன்...?' என்று மனதுக்குள் பெரும் குழப்பம் சூழ்ந்தது அவளுக்கு... அதன் பின் பயம் எழுந்தது அவள் மனதில்...

'இவன் பழைய நிகழ்வுகள் எதையும் மறக்கவில்லையோ...? அதனால் தான் இப்படிப் பேசுகிறானோ...? டாட் எனக்குத் தருணை திருமணத்திற்குப் பேசி முடித்து இருக்கிறார்கள்... நிஷா அத்தை இவனுக்கு என்று வேறு பெண் பார்த்து வைத்து இருக்கிறார்கள்... இப்படி இருக்கும் நேரத்தில் இவன் ஏன் இப்படி ஒரு வார்த்தை சொல்கிறான்...?' அவளுக்கு அச்சமாக இருந்தது இரு குடும்பங்களின் நட்பை நினைத்து...

மித்ரேஷ் வார்த்தைகள் இரு குடும்பங்களிலும் பெரிய அளவில் சூறாவளியை உண்டு பண்ணி விடும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை... இன்று நட்பில் பின்னி பிணைந்து இருக்கும் இரு குடும்பத்து உறவிலும் இதனால் விரிசல் ஏற்பட்டு விட்டால்...? அதைக் கற்பனையில் கூட நினைத்து பார்க்க விரும்பவில்லை அவள்...

"என்ன சம்மதமா...?" இரு கைகளையும் கட்டி கொண்டு அமர்த்தலாகக் கேட்டவனைக் கண்டு பயத்தில் தன்னிச்சையாய்ப் பின்னால் நகர்ந்தாள் மது...

அவளது செயலில் அவனது பார்வை கூர்மையாய் அவளைத் துளைத்து எடுத்தது...

பின்னால் நகர்ந்து கொண்டே சென்றவள் கதவில் முட்டி கொண்டு தடுமாறி நிற்க,

"ஹேய்... பார்த்து..." என்று பதறியபடி அருகில் வந்தவனைக் கண்டு பதட்டம் அடைந்தவள் சட்டென்று அங்கிருந்து ஓடி விட்டாள் அவள்...

அவளது அதிர்வு, குழப்பம், பயம் எல்லா வித உணர்வுகளும் அவனைப் பெரிதாகப் பாதித்தது... அதிலும் அவளது

மௌனம் அவன் மனதை வாள் கொண்டு அறுத்தது...

எல்லாம் கொஞ்ச நேரம் தான்... பின் வழக்கம் போல் அவனது முரட்டுத்தனமான பிடிவாத குணம் தலைத் தூக்கியது...

'அன்று மட்டும் பெரிய இவள் மாதிரி பேசினாள்...? இன்று ஏன் இதற்கு இவ்வளவு அதிர்ச்சி அடைய வேண்டும்...? என்னைக் கல்யாணம் பண்றது இவளுக்கு என்ன அவ்வளவு பெரிய அதிர்ச்சியாகவா இருக்கிறது...? இல்லை நான் அந்தளவுக்குப் பார்க்க சகிக்கவில்லையா...?' அவனது மனம் குமுறியது...

'ஓ... அந்தத் தருணை விட நான் சுமாராக இருப்பதால் அப்படி நினைக்கிறாளோ...? அவனை மாதிரி நான் இல்லை என்று நினைக்கிறாளோ...?' அவனாக ஒரு கற்பனை செய்து கொண்டு அவள் மீது கோபம் கொண்டான்...

அவனது ஆழ்மனதுக்குத் தெரியும்... அவனை விட எல்லாவற்றிலும் பல மடங்கு உயர்ந்தவன் தருண் என்று... ஆனாலும் அதை ஏற்றுக் கொள்ள அவனது காதல் மனம் தயாராக இல்லை...

இவ்வளவு நாள் தனது தகுதியை எண்ணித்தான் அவன் அமைதியாக இருந்தது... அவனுக்கு இருக்கும் தகுதிக்கு அவனாக அவளைப் பெண் கேட்கவும் முடியாது... அவளைக் காதலிப்பதாய் அவளிடம் சொல்லவும் முடியாது... இது இரண்டும் இல்லாமல் வேறு என்ன தான் வழி...? என்று யோசித்தவனுக்கும் இதற்கான தீர்வு புலப்படவில்லை...

சற்று முன்னர் அதைத் தான் அவன் யோசித்துக் கொண்டு இருந்தான்... அந்தச் சமயம் தான் தேவதை போல் அவள் அங்கு வந்தாள்... என்றும் போல் இன்றும் அவளது அழகு அவனது மனதை தடுமாறச் செய்தது... அதிலும் அதிசயமாக அவளே அவனது திருமணம் பற்றிப் பேசவும் கிடைத்த சந்தர்ப்பத்தைக் கெட்டியாய் பிடித்துக் கொண்டான் அந்தக் கெட்டிக்காரனாய்...

ஆம்... அவளை அவன் திருமணம் செய்ய ஒரே வழி அவள் அவனைக் காதலிப்பதாய்ச் சொன்னால் தவிர வேறு வழி கிடையாது... வீட்டின் மகாராணியான அவள் சொன்னால் அவளது தந்தை மட்டும் அல்ல அவனது தந்தையாலும் அவர்களது திருமணத்தை மறுக்க இயலாது...

அதனால் தான் நொடி பொழுது கூடத் தாமதிக்காமல் அவளிடம் அப்படிக் கேட்டு விட்டான்...

அதை எல்லாம் விட அவள் தன் அன்னை மீது கொண்டு இருந்த அளவில்லாத அன்பு கண்டு அவள் தான் தன் அன்னைக்கு ஏற்ற மருமகள் என்ற தீர்மானத்துக்கும் அவன் வந்துவிட்டான்... மதுவை விட அவனது தாயை அன்பாய் பார்த்துக் கொள்ளும் மருமகள் கிடைப்பது என்பது அரிது... அது அவனுக்கும் புரிந்து தான் இருந்தது...

எந்த ஒரு காரணத்திற்காகவும், யாருக்காகவும் அவளை விட்டு விடக் கூடாது, விடவும் முடியாது என்று அவனது உள்ளம் உறுதியாய் எண்ணியது...

தீர்மானம் எடுத்த பின் மனம் சிறிது லேசாக அவன் தன் அறையை விட்டு வெளியில் வந்தான்... கீழே வந்தவன் அங்குக் கண்ட காட்சியில் இன்ப அதிர்ச்சி அடைந்தவனாய் அவ்வளவு நேர மனதின் பாரம் மறைய அவனது மனம் லேசாகக் காற்றில் மிதப்பது போல் அங்கு வந்து நின்றான்...

அங்குப் பூஜையறையில் மது விக்டர், நிஷா காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கிக் கொண்டு இருந்தாள்...

"நல்லா இரும்மா... அடுத்தத் தீபாவளிக்கு உன் கணவனோடு வந்து ஆசிர்வாதம் வாங்கணும்..." நிஷா கூற அதில் மது விதிர்த்து போய் எழ அங்குப் பூஜையறை வாசல் நிலை மீது சாய்ந்து நின்று அவளை விழி எடுக்காமல் பார்த்துக் கொண்டு இருந்த மித்ரேஷ் அவளது கண்ணில் விழுந்தான்...

அவளது பார்வை உணர்ந்தார் போன்று அவனும் அவள் மீது இருந்து தன் பார்வையை விலக்காதவனாய் அவளை ஆழ்ந்து பார்த்துக் கொண்டு இருந்தான்...

'ஐயோ... என்ன இது... மாமா, அத்தை முன்னாடி இப்படிப் பார்க்கிறான்...? அவங்க என்ன நினைப்பாங்க...?' மனதில் புலம்பி கொண்டு இருந்தவள் நெற்றியில் விக்டர் சிலுவை குறியிட்டு ஆசிர்வாதம் செய்ய, நிஷா அவளது நெற்றியில் குங்குமம் வைத்து அவளது கன்னத்தில் அன்போடு முத்தமிட்டாள்...

"வர்றேன் மாமா, அத்தை..." என்றவள் பூஜையறையை விட்டு வெளியில் வர மித்ரேஷ் சிறிதும் நகராமல் அங்கேயே நிற்க...

அதுவரை தலை குனிந்து நின்ற மது அவனை ஏறிட்டு பார்த்தாள்... அவன் அந்த மாதிரி பேசி இருக்கா விட்டால் அவள் அவனை இடித்துக் கொண்டு கேலியாய் சிரித்தபடி சென்று இருப்பாள்... ஆனால் இப்போது அவன் பேசிய வார்த்தைகள் அவளுள் படபடப்பை ஏற்படுத்த 'எப்படிச் செல்வது...?' என்று தெரியாமல் விழித்தவளது பாவனையில் என்ன கண்டானோ அவனே வழியை விட்டு விலகி நின்றான்...

அதற்கு மேல் அங்கு நிற்க முடியாமல் தனது வீட்டிற்குச் செல்ல முயன்றவளை ஜானின் குரல் தடுத்து நிறுத்தியது...

"ஓய்... எங்கே ஓடுற...? பட்டாசு எல்லாம் வெடிக்க வேண்டாமா... வா..." என்று அவளை அழைக்க அதில் முகம் மலர்ந்தவள்,

"போகலாமே..." மித்ரேஷ் பேசியது மறந்து ஜானோடு அவள் வெளியில் செல்ல... ஒன்றும் பேசாது மித்ரேஷும் அவர்களைப் பின் தொடர்ந்தான்...

வெளியில் சென்று இருந்த ஆதியும் அந்நேரம் வந்திருக்கச் சின்னவர்கள் நால்வரும் பட்டாசு வெடிப்பதில் ஆர்வம்

காட்டினர்... மித்ரேஷ் மட்டும் அமைதியாய் கையைக் கட்டி கொண்டு வேடிக்கை பார்த்தான்...

அவனது பார்வை தன்னை விடாமல் துளைத்து எடுப்பதை உணர்ந்த மதுவுக்கு உள்ளுக்குள் நடுக்கம் ஏற்பட்டது... சரவெடியை எடுத்து வைத்தவள் அதைப் பற்ற வைக்க முடியாமல் அவளது கை நடுங்கியது...

எப்போதும் வெடியை விடாமல் போட்டு ஆர்ப்பரிக்கும் அவள் இன்று ஒற்றை வெடி போடுவதற்குள் உடல் நடுங்க நின்று இருப்பதைக் கண்டு ஜான் அவளைக் கேலி செய்தான்...

"இவ்வளவு தான் உன் தைரியமா...? இங்கே என்னைப் பார்..." என்று அவன் அடுத்தடுத்து வெடியை பற்ற வைத்து அதை வெடிக்கச் செய்ய... அதில் கலங்கி போய் நின்ற மதுவை நோக்கி அழுத்தமான காலடிகளுடன் நெருங்கி வந்தான் மித்ரேஷ்...

'இவன் எதுக்கு இங்கே வர்றான்...?' அதற்கும் பயந்து போய் அவள் நிற்க...

அவள் அருகில் வந்த மித்ரேஷ் தனது கையால் அவளது கையைப் பற்றிக் குனிந்து வெடியை பற்ற வைத்தான்... ஏனோ அவனது அருகாமை அவளை மூச்சடைக்க வைத்தது... முன்பு என்றால் என்ன மாதிரியாய் உணர்ந்து இருப்பளோ தெரியவில்லை... இப்போது அவன் அவளை மணக்க கேட்டதில் இருந்து அவனைக் கண்டாலே அவளுள் பயமும், தடுமாற்றமும் சேர்ந்தே எழுந்தது...

அவளை அணைத்தார் போன்று நின்று இருந்த மித்ரேஷின் மனமும் அவளது அருகாமையில் தடுமாறிக் கொண்டு தான் இருந்தது...

ஆனாலும் தன்னைச் சுதாரித்துக் கொண்டவன் வெடி வெடிக்கும் முன் அவளை அப்புறப்படுத்த நினைத்து இன்னமும் நகராமல் நின்று இருந்தவளின் கையைப் பிடித்து இழுத்து வந்து தனது வீட்டின் வாயிலில்

நிறுத்தினான் மித்ரேஷ்... அடுத்த நொடி பெருஞ்சத்தத்துடன் சரவெடி வெடிக்க ஏதோ நினைவில் இருந்தவள் திடுமென எழுந்த சத்தத்தில் காதையும், கண்களையும் இறுக மூடி கொண்டாள்...

வெடிச்சத்தம் நின்று கண்ணைத் திறந்து பார்த்தவள் முன் மித்ரேஷ் கையைக் கட்டி கொண்டு நின்று இருந்தான்... அவனது லேசர் பார்வை அவளைத் துளைத்து எடுத்தது... அந்தப் பார்வையில் மனம் பயம் கொள்ள அவள் திரும்பி செல்ல முயன்ற போது அவன் தனது இரு கரங்களால் அவளைச் சிறை செய்தான்...

"மித்து... என்ன இது... யாராவது பார்த்துவிடப் போறாங்க...?" அவளுக்குப் பயத்தில் வியர்த்து வடிந்தது...

மற்றைய நாளாக இருந்து இருந்தால் அவனோடு சந்திர மண்டலம் வரை கூடப் பயப்படாமல் சென்று இருப்பாள்... ஆனால் இப்போது அவனது மனதில் கல்மிசம் வந்த பின் அவனோடு தனியே இருப்பதற்கு அச்சமாக இருந்தது அவளுக்கு...

"யாரும் நம்மைப் பார்க்க மாட்டாங்க..." அவன் சொன்னதும் தான் அவள் சுற்றும் முற்றும் பார்த்தாள்...

அவனது வீட்டில் இருந்த மல்லிகை பந்தல் கீழ் சுவரோரமாய் இருவரும் நின்று இருந்தார்கள்... அடர்ந்து விரிந்து இருந்த பந்தலின் கீழ் இருப்பது யாருக்கும் தெரியாது...

'எப்படி இங்கே வந்தேன்...?' அவள் யோசிக்கும் போதே...

"நான் தான் உன்னைத் தள்ளிட்டு வந்தேன்..." என்று சிரித்தவனின் சிரிப்பு அவளுக்கு வில்லன் சிரிப்பு போலவே இருந்தது...

"இது தப்பு மித்து..." விட்டால் அழுது விடுபவள் போல் இருந்தவளை கண்டு அவனுக்குக் கோபம் வந்தது...

"எதுடி தப்பு...? நான் உன்னைக் கல்யாணம் பண்ண கேட்டது தப்பா...?"

"முதல்ல நீ கையை எடு..." அவனின் கோபமான பேச்சு கண்டு அவளுக்கும் லேசாகக் கோபம் எட்டி பார்த்தது...

"நான் என்ன உன்னைக் கட்டியா பிடிச்சிட்டு இருக்கேன்... கையை எடுன்னு சொல்ற..."

அவன் சொன்னதைக் கேட்டு அவள் முறைத்தாள்...

அவன் சொல்வதும் சரி தான்... அவளின் இரு புறமும் அணைத்தார் போன்று சுவற்றில் கையை வைத்துக் கொண்டு நின்று இருந்தவனின் கை அவளைச் சிறிதும் தொடவில்லை...

"அந்தத் தருணா இருந்தா இப்படி முறைப்பியா...? முப்பத்தி இரண்டு பல்லையும் ஈன்னு காட்டி பேசுவ தானே... இதே இது நானா இருந்தா உனக்கு முறைக்கத் தோணுதோ...?"

அவனது பேச்சில் மௌனம் காத்தவள் தனது பார்வையை வேறு புறம் திருப்பிக் கொண்டாள்... அங்கே சிவப்பு ரோஜா ஒன்று காற்றில் அழகாய் தலையசைத்து நடனமாடி கொண்டு இருந்தது... அவளது பார்வை ரசனையுடன் அதைப் பார்த்துக் கொண்டு இருந்தது...

இவனது பேச்சை கேட்பதற்குப் பூவை ரசிப்பது எவ்வளவோ தேவலை என்றே அவளுக்குத் தோன்றியது... பின்னே என்ன சொன்னாலும் புரிந்து கொள்ளாமல் சண்டை போடும் அவனை என்ன தான் செய்வது...?

அவளது மௌனம் அவனது ஆத்திரத்தை மேலும் அதிகரித்தது...

"நான் பேசிட்டே இருக்கேன்... நீ பாட்டுக்கு பேசாம இருந்தா என்ன அர்த்தம்...?"

"பேச பிடிக்கலைன்னு அர்த்தம்..." என்றாள் பட்டென்று முகத்தில் அடித்தார் போன்று...

"இந்தத் திமிருக்கு என் கிட்ட நல்லா படப் போறடி..." அவள் பேசினாலும் அவனது ஆத்திரம் அதிகரிக்கத் தான் செய்தது...

"இது தான் நீ... நீ கொஞ்சம் கூட மாறவே இல்லை... முன்ன இருந்த மாதிரி தான் இருக்கே... கல்யாணத்துக்கு அடிப்படை காதல்... அந்தப் பொருத்தம் நமக்குள் சுத்தமா இல்லை... நம்ம ரெண்டு பேருக்கும் எப்பவுமே ஒத்து போகாது... அடுத்து ஒருத்தர் மேல் ஒருத்தர் வைத்து இருக்கும் நம்பிக்கை... உனக்கு என் மேல் நம்பிக்கை என்பது எப்போதுமே கிடையாது... நான் யார் கூடப் பேசினாலும் நீ சந்தேகக் கண்ணோடு தான் பார்ப்ப... இந்த லட்சணத்தில் நீயும் நானும் கல்யாணம் பண்ணி குடும்பம் நடத்தினா குடும்பம் விளங்கிடும்... ஒரே நாள்ல டிவோர்ஸ் வாங்க கோர்ட் படி ஏற வேண்டியது தான்..." படபடவெனப் பொரிந்தவள்,

"எதுக்காக வேணும்ன்னாலும் கல்யாணம் பண்ணலாம்... ஆனால் பழிவாங்குவதற்காக எல்லாம் கல்யாணம் பண்ண முடியாது... நீ என் கிட்ட விட்ட சேலன்ஜில் ஜெயிக்கிறதுக்காகக் கல்யாணம் பண்ண நினைக்கிற... என்னால அதுக்காக எல்லாம் உன்னைக் கல்யாணம் பண்ண முடியாது... சரி என்னை விடு... நம்ம ரெண்டு குடும்பத்தையும் நினைச்சு பாரு... நீ எடுத்து இருக்கிற முடிவால ரெண்டு குடும்பத்துக்கு இடையே வீண் பிரச்சினை ஏற்பட்டால்...? புரிஞ்சிக்கோ மித்து... நட்புக்குள் கல்யாணம்ங்கிற பேச்சு வரவே கூடாது... அது கொஞ்சமும் சரியில்லை..."

அவனுக்குப் புரியும்படி எடுத்து சொன்னாள்... ஆனால் அவனுக்கு அதெல்லாம் தலையில் ஏறினால் அல்லவா...

தன்னை நிராகரிக்க அவள் பொய்யாய் தகுந்த காரணங்களைத் தேடி தேடி அடுக்குகிறாள் என்றே நினைத்தான்...

"நீ என்ன சொன்னாலும் என் முடிவு மாறாது... உன்னிடம் தோற்று போக நான் விரும்பவில்லை... இல்லை அப்படிச்

சொல்வது கூடச் சரியில்லை... நீ தான் சவால் விட்டு என்னிடம் தோற்றுப் போயிருக்க... அதனால் இனி நான் சொல்வதைத் தான் நீ கேட்கணும்... இதில் மறுத்து பேசவும், எதிர்த்து பேசவும் உனக்கு எந்தத் தகுதியும் இல்லை... நானா உன் கிட்ட என் கல்யாணத்தைப் பத்தி பேச வரலை... நீ தான் பேச வந்த... உன் கிட்ட கேவலமா தோத்துட்டு நான் வேறு ஒருத்தியை எப்படிக் கல்யாணம் பண்ண முடியும்... ஒண்ணு நீ கல்யாணத்துக்கு ஒத்துக்கோ... இல்லை எனக்குக் கல்யாணமே வேண்டாம்... நான் இப்படியே இருந்துட்டு போறேன்... உங்கத்தை நல்லா அழுதுட்டு இருக்கட்டும்... உனக்கு அது தானே வேணும்..."

அவனுக்குத் தன் காதலை அவளிடம் சொல்ல ஒரு நொடி போதாது... ஆனால் அதில் பல சிக்கல்கள் இருக்கின்றது... முதலில் மது அவன் அவளைக் காதலிப்பதை நம்ப வேண்டும்... நம்புவாளா என்பது சந்தேகமே... அதையும் மீறி அவள் நம்பினாலும் அவனது காதலுக்கு முதல் எதிரி அவனது தந்தை... அவர் ஒருவர் போதும் ஏதோ தேவதூதன் போல் மதுவை அவனிடம் இருந்து காப்பது போல் ஓவராய் ஆக்ட் கொடுப்பார்...

தந்தை தனது காதலை என்றுமே ஏற்றுக் கொள்ளப் போவது இல்லை... அது அவனுக்குச் சர்வ நிச்சயமாய்த் தெரியும்... இதற்கு ஒரே தீர்வு மதுவே அவனைத் திருமணம் செய்து கொள்ளச் செய்வது தான்... அதற்கு ஒரே வழி அவனது தாய்... அவனது அன்னை மேல் அவள் உயிரையே வைத்து இருப்பது ஒன்று தான் இப்போதைக்கு அவனுக்கு இருக்கும் ஒரே சாதகமான விசயம்... அதைத் தான் அவன் துருப்புச்சீட்டு போல் பயன்படுத்த எண்ணினான்...

"அத்தை பாவம் தான்... அதுக்காக..." அவள் இழுத்தாள்...

எதற்கு எதற்கு எல்லாமோ திருமணம் செய்து கொள்கிறார்கள்... ஆனால் பழி தீர்க்க திருமணம் செய்ய விழையும் மித்ரேஷை கண்டு என்ன செய்வது என்று அவளுக்குத் தெரியவில்லை...

தான் அவ்வளவு சொல்லியும் பதில் பேசாமல் இருக்கும் அவளைக் கண்டு கோபம் தலைக்கேற அவனது கை அவளது தாடையில் அழுத்தமாய்ப் பதிந்து அவளது முகத்தை நிமிர்த்தியது... அவளது கண்களுக்குள் தனது பார்வையைக் கலக்க விட்டவன்,

"ஏழு வருசமா என் மனசுக்குள் எரிஞ்சிக்கிட்டு இருக்கிற தீ நம்மளோட கல்யாணம்... இதை நீயா ரெண்டு வீட்டிலும் சொன்னா நல்லது... இல்லை நான் உன்னைக் கடத்திட்டு போய் எங்கேயாவது கோவிலில் வைத்துக் கட்டாயத் தாலி கட்டி உன்னை என் மனைவியாக்கி கொள்வேன்... ரெண்டு வீட்டு பெரியவங்க ஆசிர்வாதத்தோட நம்ம கல்யாணம் நடக்கணுமா... இல்லை யாருமே இல்லாம அநாதை போல் நடக்கணுமா...? எது வசதின்னு நீயே முடிவு பண்ணிக்கோ..."

"மித்து..." இரண்டு குடும்பத்துக்கும் சண்டை இழுத்து விடாமல் இவன் ஓய மாட்டான் போலிருக்கே என்று நினைத்தவள் அதிர்ந்து போய் நின்று இருந்தாள்...

"நீ ஒரு போலீஸ் ஆபிசரா இருந்துட்டு இப்படிப் பேசறது கொஞ்சமும் சரியில்லை..." அதிர்ச்சியை மறைத்துக் கொண்டு அவனிடத்தில் நியாயம் பேச...

"நான் வெளியில் தான் போலீஸ் ஆபிசர்... ஆனா உள்ளுக்குள் அதே பொறுக்கி ஈஷ்வர் தான்... அன்னைக்கும் சரி இன்னைக்கும் சரி... உன்னைப் பொருத்தவரையில் நான் பொறுக்கி தான்..." என்றவனுக்கு அந்த வார்த்தைகள் எந்தளவுக்கு வலியை கொடுத்தது என்பது அவனது மனதுக்கு மட்டும் தான் தெரியும்...

தகுதி இல்லாத ஒரே காரணத்துக்காக அவனும் எத்தனை முறை தான் தாழ முடியும்... அவளது பார்வையில் தான் பொறுக்கியாக இருந்தாலும் பரவாயில்லை அவளைத் தான் இழந்து விட மட்டும் முடியவே முடியாது... இப்படித்தான் நினைத்தது அவனது மனது...

அதற்கு மேல் அவன் அங்கு நிற்கவில்லை... விறுவிறுவெனச் சென்றுவிட்டான்...

செல்லும் அவனது முதுகை பார்த்துக் கொண்டு இருந்தவள் தனது தாடையைத் தடவி விட்டு கொண்டாள்... உடும்பு பிடியாய் அவன் பிடித்து இருந்தது அவ்வளவு வலித்தது அவளுக்கு...

அவனது பேச்சிற்கு அவளிடம் பதில் இல்லை... பதில் இல்லை என்பதை விட அவனுடனான திருமணத்தைப் பற்றி அவள் யோசிக்கவே இல்லை எனலாம்... அதைக் கற்பனை பண்ணி கூடப் பார்க்க முடியவில்லை அவளால்...

காதல் திருமணமும் இல்லாமல், பெற்றோர் பார்த்து சம்மதித்த திருமணமாகவும் இல்லாமல் இது என்ன இப்படி ஒரு வினோத திருமணம் செய்ய வற்புறுத்துகிறான் என்று மிகவும் குழம்பி போனாள்...

அதை விட அவனது தீவிரமான பேச்சு அவளது மனதில் அச்சத்தைத் தோற்றுவித்தது... சொன்னது போல் அவன் தன்னைக் கடத்தி கொண்டு போய்த் திருமணம் செய்து விட்டால்... அந்த நினைவே கசந்தது அவளுக்கு...

அவளது அன்பு பெற்றோர் என்ன நினைப்பார்கள்... அதிலும் அன்னை அவளை அறவே வெறுத்து ஒதுக்கிவிடுவார்... ஒழுக்கத்தை உயிர் போல் கருத வேண்டும் என்று சிறு வயதில் இருந்து சொல்லி கொடுத்து வளர்த்தவர் அவர்...

ஏதோ நினைவில் யோசித்துக் கொண்டே தனது வீட்டிற்குச் சென்றவள் அங்கு அக்ஷய் அமர்ந்து இருப்பதைக் கண்டு அவனது அருகில் சென்று அமர்ந்து கொண்டாள்...

"என்ன மது டல்லா இருக்கே...?" அக்ஷய் மகள் முகம் தெளிவில்லாமல் இருப்பதைக் கண்டு விசாரித்தான்...

"நத்திங் டாட்..." என்றவள் அவனது தோளில் சாய்ந்து கொண்டாள்...

அக்ஷய் முகம் யோசனையில் ஆழ்ந்தது... அவள் விக்டர் வீட்டில் இருந்து வருவதை அவன் பார்த்துக் கொண்டு தான் இருந்தான்...

அன்றிரவு மூன்று குடும்பங்களும் சேர்ந்து இரவு உணவிற்காக வெளியில் சென்றனர்... வெள்ளை சுடிதாரில் அழகாய் இருந்த மதுவின் மீது பதித்த தன் கண்களை அகற்ற முடியாமல் மிகவும் சிரமப்பட்டான் மித்ரேஷ்...

மற்ற நாளாய் இருந்து இருந்தால் அவனது பார்வையை அவள் தவறாக எடுத்து இருக்க மாட்டாள்... ஆனால் காலையில் அவன் பேசிய பேச்சு அவனைத் தவறாக நினைக்க வைத்தது... அவனது பார்வையில் இருந்து தப்பிப்பதற்காக அவள் தனது அன்னையின் பின் மறைந்து கொண்டு நின்றாள்... ஆனாலும் அவனது துளைக்கும் பார்வை அவளை விட்டு அகலுவதாய் இல்லை...

அவர்கள் ஹோட்டலுக்கு நுழையும் போது தருணும் தனது நண்பர்களுடன் அங்கு வந்து மித்ரேஷின் வயிற்றெரிச்சலை வாங்கிக் கட்டி கொண்டான்...

பரஸ்பர நலன் விசாரிப்புக்குப் பின், "தருண் உனக்கு இராமநாதபுரத்தில் தானே போஸ்ட்டிங்...?" அக்ஷய் அவனைப் பார்த்து கேட்க...

"ஆமாம் அங்கிள்..." என்றவனிடம் அக்ஷய் சிறிது நேரம் பேசி கொண்டு இருந்தான்...

"எங்களோடு டின்னர் சாப்பிட வரலாமே..." அக்ஷய் அவனை அழைக்க...

"ஓ... தாராளமாய்..." என்றவன் நண்பர்களிடம் சொல்வதற்காகச் சென்றான்...

'எப்படா சான்ஸ் கிடைக்கும்ன்னு அலைஞ்சுட்டு இருந்தான் போல... அதான் சார் சொன்னதும் பல்லை காண்பிச்சுட்டு வந்துட்டான்...' மித்ரேஷ் மனதிற்குள் அவனை வறுத்து எடுத்தான்...

அதற்குள் தருண் வந்துவிட எல்லோரும் உள்ளே சென்றனர்...

உணவு மேசை முன் அமரும் போது மது இடம் இல்லாமல் தந்தைக்கும் தருணுக்கும் இடையில் அமர போக மித்ரேஷ் யாருக்கும் தெரியாமல் அவளின் கையைப் பிடித்துத் தடுத்தவன் தன் அருகில் அமர்ந்து இருந்த ஜானை கண்களால் எழும்பச் சொன்னவன் அந்த நாற்காலியில் அவளை உட்கார சொல்லி சைகை காண்பித்தான்...

தருண் அருகில் சென்று அவள் அமருவது அவனுக்கு அறவே பிடிக்கவில்லை...

"மது இங்கே வா..." அக்ஷய் அழைக்க மது மித்ரேஷின் கையை விடுவித்துக் கொண்டு தந்தை அருகே இருந்த நாற்காலியில் அதாவது தருணுக்கு அருகில் அமர்ந்து மித்ரேஷின் காதில் புகையை வரவழைத்தாள்...

அவள் தந்தை வார்த்தைக்கு மதிப்பு கொடுத்தாள்... ஆனால் அதையும் மித்ரேஷ் மிகச் சரியாகத் தவறாகத் தான் நினைத்தான்...

"ஹலோ ஏஞ்சல்... எப்படி இருக்க...? உன் துப்பறியும் வேலை எல்லாம் எப்படிப் போகுது...?" தருண் நட்பாய் அவளைப் பார்த்து கேட்க... அவன் அவளைப் பார்த்து வெகு நாட்கள் ஆகிவிட்டது...

"ம்... நல்லா இருக்கேன்..." புன்னகையுடன் சொன்னவளை பார்வையால் எரித்துக் கொண்டு இருந்தான் மித்ரேஷ்...

"என்ன உன் ஹீரோ உன்னைப் பார்வையால் எரிக்கிற மாதிரி இருக்கு...?"

"யாரை சொல்றீங்க...?" மது திரும்பி பார்க்க...

"வேறு யார் ஈஷ்வர் தான்..." தருணின் வார்த்தையில் அவளையும் அறியாமல் அவளது கண்கள் மித்ரேஷை திரும்பி பார்த்தது...

உறுத்து விழித்துக் கொண்டு இருந்தவனைக் கண்டு பயந்து போய்க் கண்களைத் திருப்பிக் கொண்டாள் அவள்...

"எனக்கு என்னமோ அவன் உன்னை லவ் பண்றான்னு தோணுது..." தருணின் வார்த்தையில் அவளையும் அறியாது ஒரு பெருமூச்சு கிளம்பியது...

'லவ்வா...? யாரு அவனா...? பண்ணிட்டாலும் விளங்கிடும்...' என்று நினைத்தவள் அமைதியாய் இருந்தாள்...

"தருண் நம்ம மதுவுக்கு ஏத்த ஜோடி தான்... இல்லையா பட்டு... ரெண்டு பேருக்கும் நல்ல பொருத்தமா இருக்கு..." ஆதி வேறு நேரம் காலம் தெரியாமல் உளற...

மிருதுளா ஆராய்ச்சியாய் மித்ரேஷை பார்த்தாள்... அவனது கண்ணில் தெரிந்த பொறாமை உணர்வை கண்டு முடிவு செய்து விட்டாள் அவன் மதுவை காதலிப்பதை...

"இங்கே ஏதோ தீயிற வாசனை வருது இல்லை மிருது..." ஜான் அண்ணனை பார்த்துக் கொண்டே மிருதுளாவிடம் கூற...

மித்ரேஷ் தம்பியை முறைத்தான்...

"அதோ அங்கே தந்தூரி சிக்கன் செய்யற இடத்தில் இருந்து தான் வருதுன்னு நினைக்கிறேன்..." சற்று தள்ளி துரித உணவு வகைகளுக்கு என்று தனியாக இருந்த இடத்தைச் சுட்டி காட்டி சொல்லியவன் சகோதரனின் கோபத்தில் இருந்து தப்பித்துக் கொண்டான்...

அக்ஷய் தருணிடம் பேசி கொண்டு உணவு அருந்த நடுவில் அமர்ந்து இருந்த மதுவும் வேறு வழியில்லாது தருணிடத்தில் பேச வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது...

வீட்டுப் பெரியவர்கள் இருவரது ஜோடி பொருத்தத்தைக் கண்டு மனதுக்குள் மகிழ்ந்தவர்களாய் வெளியில் ஒன்றும் காட்டி கொள்ளாமல் உணவு அருந்தினர்...

மித்ரேஷ் மட்டும் எதிலும் ஒட்டி உறவாட முடியாமல் தனித்து விடப் பட்டது போல் முள் மேல் அமர்ந்து இருப்பது போன்று அவஸ்தையுடன் அமர்ந்து இருந்தான்... அவன் இருந்த மனநிலையில் ஒரு பருக்கை கூட அவனால் உண்ண

முடியவில்லை... தட்டில் இருந்த உணவை கரண்டியினால் அளைந்து கொண்டு இருந்தான்...

ஒரு வழியாய் உணவு உண்டு முடிந்து எல்லோரும் வீட்டிற்குச் செல்லும் நேரம் வர நிம்மதி பெருமூச்சுடன் எழுந்தான் அவன்...

"அந்தத் தருண் நம்ம மதுவுக்கு ஏத்த பையன் தான்... கலெக்டர்ங்கிற பந்தா இல்லாம ரொம்பத் தன்மையா பழகுறான்..." காரில் வரும் போது நிஷா சொன்னதைக் கேட்டு மித்ரேஷ் வெறுப்பின் உச்சிற்கே சென்றுவிட்டான்...

அன்று இரவு முழுவதும் ஒரு பொட்டு கூடத் தூங்காமல் விடிய விடிய யோசித்தவன் காலையில் ஒரு முடிவு எடுத்தவனாய் எப்போதும் போல் அலுவலகத்திற்குக் கிளம்பியவன் நேரே மதுவின் வீட்டிற்குள் நுழைந்தான்...

அங்கே உணவு மேசையில் அன்னை செய்து வைத்து இருந்த வெண் பொங்கலை தட்டில் வைத்து சாம்பாரை அதில் தாராளமாய் ஊற்றி,

"இன்னும் கொஞ்சம் நெய் விட்டு இருக்கலாம் மாம்..." என்று குறை சொல்லி கொண்டு பொங்கலை உள்ளே தள்ளி கொண்டு இருந்தவளை கண்டு அவனது ஆத்திரம் அதிகரித்தது...

'மனுசன் என்ன டென்சன்ல வர்றேன்... அது தெரியாம சாப்பாட்டை உள்ளே தள்ளிக்கிட்டு இருக்கிறதை பாரு... சரியான தின்னி பண்டாரம்... சாப்பாட்டு ராமி...' மனதுக்குள் அவளை அர்ச்சித்தபடி அவள் அருகே வேகமாய் வந்தான் அவன்...

"ஈஷ்வர்... சாப்பிடுறியாப்பா..." அபி கேட்க... தலையசைத்து மறுத்தவன்,

"மது எழுந்திரு..." அவன் அதிகாரமாய் அவளைப் பார்த்து சொல்ல அவனது குரலில் மது மட்டுமல்ல அபியுமே திகைத்து போனாள்...

என்றும் இல்லாத திருநாளாய் அவன் குரலில் இருந்த உரிமை, ஆளுமை அபியை சற்று யோசிக்க வைத்தது...

"எதுக்கு...?" மது கேட்கும் போதே அவள் கைப்பிடித்து எழுப்பியவன் வாஷ்பேசின் அருகே அவளை அழைத்துச் சென்று,

"உம்... சீக்கிரம் கையைக் கழுவு..." அவனது அதிகாரத்தில் அவளையும் அறியாமல் அவளது கைகள் அவன் சொன்ன வேலையைச் செய்தது...

அடுத்த நொடி அவன் அவளை அழைத்துக் கொண்டு அக்ஷய் முன் வந்து நின்றவன் மதுவை ஒரு பார்வை பார்த்துவிட்டு,

"சார்... நானும், மதுவும் ஒருத்தரை ஒருத்தர் காதலிக்கிறோம்..." என்றான் சிறிதும் அச்சப்படாமல்... பொய் சொல்கிறோம் என்று மனம் கூச்சப்படாமல்...

அவனது வார்த்தையில் மது தான் 'ங்கே' என்று விழித்தாள்...

ஈர்க்கும்...

அக்ஷயிடம் தனது மனதை எடுத்து உரைப்பதற்கு மித்ரேஷ்க்கு எந்தப் பயமும் இல்லை... காதலிப்பது என்ன அவ்வளவு பெரிய குற்றமா என்று தான் அவன் நினைத்தான்... இது நாள் வரை தருணுடன் மதுவின் திருமணத்தைப் பற்றிப் பேசிய போது எல்லாம் மனதுக்குள் வேதனை எழுந்தாலும் தன் காதலை வெளிக்காட்டி கொள்ளாமல் உள்ளுக்குள் புதைத்துக் கொண்டு அமைதி காத்தான் தன் நிலையை எண்ணி..

ஆனால் நேற்று தருணையும் மதுவையும் இணைந்து பார்த்ததில் இருந்து அவனால் அந்த மாதிரி கையைக் கட்டி கொண்டு வேடிக்கை பார்க்க முடியவில்லை... அந்த நொடி அவனுக்கு ஒன்று புரிந்தது மதுவை யாரிடத்திலும் விட்டு கொடுக்க முடியாது என்று... அப்போது தீர்மானித்தான் காதலுக்குத் தகுதி தேவையில்லை... காதலிக்கும் நல்ல மனது தான் தேவை என்று... அந்த மனது தன்னிடத்தில் இல்லையா என்ன... அவன் தனக்குத் தானே கேள்வி கேட்டுக் கொண்டான்...

அதை எப்படி இரு வீட்டாரிடமும் கூறுவது என்று தான் அவன் மிகவும் யோசித்தது... ஆனால் இரு வீட்டாருக்காக யோசித்து இனியும் மதுவை இழக்க அவன் தயாராக இல்லை... அதனால் தான் தைரியமாக முடிவு எடுத்தவனாய் அக்ஷயிடம் கூறிவிட்டான் தானும் அவளும் காதலிப்பதாய்...

ஆம்... தான் மட்டும் என்றால் நிச்சயம் எதிர்ப்பலைகள் கிளம்பும் என்று அவனுக்கு நிச்சயமாய்த் தெரியும்... அதனால் தான் அவன் மதுவையும் இடையில் இழுத்து விட்டான்... இதற்கு அவளின் பதில் என்னவாக இருக்கும்...? அவள் மறுத்து பேசுவாளா...? என்பது பற்றி எல்லாம் அவன் பெரிதாய் யோசிக்கவில்லை... மது அவனுக்கு வேண்டும் அது ஒன்றை மட்டுமே கருத்தாக எண்ணி காரியத்தில் இறங்கினான்...

அப்படியே அவள் எதிர்த்தாலும் அவளை வாயடைக்கச் செய்ய அவனுக்கா தெரியாது... இருவருக்கும் இடையில் உள்ள பந்தயத்தை நியாபகப்படுத்த வேண்டியது தான்...

அவனின் வார்த்தையில் பாவம் மது தான் செய்வதறியாது முழித்தாள்... அதுவும் அவன் மட்டும் காதலிப்பதாய் சொல்லி இருந்தால் கூடப் பரவாயில்லை... தானும் அவனைக் காதலிப்பதாய் சொல்லியது தான் கொடுமை, வேதனையும் கூட...

இப்படிப் புரிந்து கொள்ளாமல் நடந்து கொள்கிறானே என்று அவனை நினைத்து வருத்தம் தான் எழுந்தது அவளுக்கு... ஏனோ அவனின் செயலில் அவளுக்குக் கோபம் வரவில்லை... ஒருவேளை அவளது அன்புக்குரிய நிஷா அத்தையின் மகன் என்பதாலா இல்லை சிறு வயது முதல் உடன் வளர்ந்தவன் என்பதாலா... ஏன் என்று காரணம் தெரியவில்லை...

அவளையும் அறியாமல் அவளது பார்வை தந்தையிடம் சென்றது... தந்தையின் உணர்ச்சி துடைத்த முகத்தில் இருந்து அவளால் எதுவும் கண்டுபிடிக்க முடியவில்லை... அடுத்தது தாய்... அபியின் மீது கண்களைச் செலுத்தியவள் அன்னையின் அதிர்ந்த முகத்தைக் கண்டு அவளது கண்களில் அவளையும் அறியாமல் குற்றவுணர்ச்சியில் கண்ணீர் சொட்டு சொட்டாய் வழிந்தது...

அன்னையை நினைத்து உள்ளுக்குள் பயத்தில் நடுங்கி போனாள்... ஆம் பயமே... அன்று பதினாலு வயதில் உடன் படிக்கும் ஒருவன் கொடுத்த காதல் கடிதத்திற்கு அன்னையிடம் வாங்கிய அடியை இன்றுவரை அவள் மறக்கவில்லை... அதே சமயம் தாயின் கண்டிப்பின் முன் தந்தையின் கனிவு செல்லாது என்பதையும் அவள் நன்கு அறிவாள்... அதனால் தான் அவள் எப்போதுமே அன்னையின் ஒழுக்கக் கோட்பாடுக்குக் கட்டுப்பட்டுத் தான் இது நாள் வரை வாழ்ந்து இருக்கிறாள்... ஆனால் அதை எல்லாம் ஒரு நொடியில் அழித்து விட்டானே இந்த மித்ரேஷ்...

பெற்றோர் முகத்தைப் பார்க்க பயந்து தலை குனிந்து நின்றவள் கண்களில் கண்ணீர் மட்டும் நிற்கவில்லை...

அதைக் கண்டு மித்ரேஷின் மனதில் கோபம் எழுந்தது...

'இவளும் காதலிப்பதாய் சொல்ல மாட்டாள்... நான் சொன்னாலும் அழுது ஆர்ப்பாட்டம் பண்ணுகிறாள்... இவள் அழுவதைப் பார்த்து யாராவது சந்தேகப்பட்டுக் கேள்வி கேட்டால்...? என் கிட்ட தனியா மட்டும் மாட்டினே உனக்கு இருக்குடி... நான் உன் கிட்ட தோத்து போனா உனக்குச் சந்தோசம் அப்படித் தானே... ஆனால் நான் தோற்க மாட்டேன்டி... உன்னை வெல்லாமல் விட மாட்டேன்டி...' மனதில் அவளை நினைத்துக் கறுவி கொண்டான்...

அக்ஷயின் கண்கள் மகளை அளவிட்டது கூர்மையாய்... அவளின் அழுகை அவனது மனதை வேதனைப் படுத்தியது... கடைசியில் இந்தப் பாழாய் போன காதல் தன் மகளை வருத்தப்படச் செய்துவிட்டதே என்று துயரமாக எண்ணி கொண்டான்...

அன்று தான் அபிக்கு செய்த துரோகத்தை இன்று மித்ரேஷ் செய்வதை உணர்ந்தான்... காலங்கள் மாறினாலும் என்றும் பெண்கள் பாதிக்கப்படுவது மட்டும் மாறாது போலும்...

அவனுக்குத் தெரியும் மகளின் மனது பற்றி... அவள் இரு குடும்பத்து நட்பில் நிச்சயம் காதலை கலக்க விட மாட்டாள் என்று... அதே போல் மித்ரேஷின் காதல் மனமும் தெரியும்... மித்ரேஷை மறுக்கவும் பெரிதாய் காரணங்கள் ஏதும் இல்லை... ஆகையால் அவன் தனது மருமகனாய் வருவதில் அக்ஷய்க்கு பெரிதாய் வருத்தம் ஏதும் இல்லை...

எவ்வளவு தூரம் மித்ரேஷ் செல்கிறான் என்று பார்க்கத் தான் மதுவிற்கு அவன் தருணை மணம் முடிக்கப் பேசி இருப்பதாய்ச் சொன்னது... அப்போதும் அமைதி காத்த மித்ரேஷை கண்டு அவன் ஆச்சிரியம் அடைந்தான்... நேற்றும் தருண் அருகில் வேண்டும் என்றே தான் மதுவை உட்கார வைத்தது... அவனுக்குத் தெரியும் காதலில் பொறாமை முக்கியப் பங்கு வகிக்கும் என்று... ஆனால் அது

இவ்வளவு சீக்கிரம் வேலை செய்யும் என்று அவன் நினைக்கவில்லை...

அக்ஷய் செய்த ஒரே தவறு... மித்ரேஷின் காதலை மட்டும் மனதில் இருத்தி கொண்டு யோசித்தவன் மகளைப் பற்றிச் சிறிதும் யோசிக்காமல் போய்விட்டான்...

யோசிக்காமல் இல்லை என்பதற்கில்லை... மித்ரேஷ் மதுவை மணக்க சம்மதம் கோரி தன்னைத் தேடி வருவான் என்று தான் அவன் எதிர்பார்த்தது... ஆனால் மித்ரேஷ் இப்படித் தடாலடியாய் இருவரும் காதலிப்பதாய்க் கூறுவான் என்பதை அவன் நிச்சயம் எதிர்பார்க்கவில்லை... இந்தப் பொய்யான விசயத்தினால் மதுவின் மனம் எந்தளவிற்குப் பாடுபட்டு இருக்கும் என்று தகப்பனாய் அவனால் உணர முடிந்தது...

ஏதேச்சையாய் அங்கு வந்த ஜான் அண்ணன் செய்து வைத்த காரியத்தில் திகைத்து போனவனாய் ஓடி சென்று தனது பெற்றோரை அழைத்து வந்து விட்டான்... விக்டர், நிஷா, ஜான் மூவரும் அக்ஷய் வீட்டினுள் நுழையும் சமயம் அக்ஷய் மகளைப் பார்த்து அந்தக் கேள்வி கேட்டான்...

"அம்மு... நீ ஈஷ்வரை லவ் பண்றியா...?"

"டாட்..." அழுது கொண்டே ஏதோ பேச வாய் திறந்தவளின் கரத்தை மித்ரேஷ் அழுத்தமாய்ப் பற்றினான்... அதில் அவளுக்குக் கை வலி எடுத்தது...

தந்தை கேட்கும் கேள்விக்கு அவளால் உண்மையும் சொல்ல முடியவில்லை... பொய்யும் சொல்ல முடியவில்லை... உண்மை சொன்னால் மித்ரேஷ் மாட்டி கொள்வான்... தந்தையைப் பற்றி அவளுக்கு நன்கு தெரியும்... அக்ஷய் நண்பனுக்கு நண்பன்... எதிரிக்கு எதிரி... இதனால் விக்டர், நிஷாவுக்குப் பாதிப்பு வந்துவிடக் கூடாதே என்று அமைதி காத்தாள்... இதில் மித்ரேஷ் வேறு கையைப் பிடித்து அழுத்துகிறான் பெரிய இவன் மாதிரி... அடுத்து பொய் பேச அவளுக்குச் சுத்தமாய்ப் பிடிக்காது...

"சார்... என்ன கேள்வி கேட்டுட்டீங்க... நம்ம மதும்மா அப்படி எல்லாம் செய்ற பொண்ணா...? மதும்மா சொன்னாலும் நீங்க நம்பாதீங்க... எல்லாம் இவன் செய்யும் வேலை தான்... சின்னப் பெண்ணை மிரட்டி கூட்டிட்டு வந்திருப்பான்..." விக்டர் மதுவுக்காகப் பரிந்து கொண்டு வர...

'வந்துட்டார்டா பதினெட்டு பட்டி நாட்டாமை... யார் இவரை வர சொன்னது...? சின்னப் பெண்ணாம் சின்னப் பெண்... முதல்ல உங்க கண்ணைச் செக் பண்ணுங்க... குண்டு பூசணிக்கா மாதிரி இருக்கிறவளை போய்ச் சின்னப் பொண்ணாம்...' மனதில் கேலியாய் நினைத்துக் கொண்டே எரிச்சலுடன் தந்தையைப் பார்த்தான் மித்ரேஷ்...

"ஆமாம் அண்ணா... மது அப்படி எல்லாம் செய்ய மாட்டாள்..." நிஷாவும் மதுவுக்குப் பரிந்து கொண்டு வந்தவள் மகனிடத்தில்...

“ஈஷ்வர்... எது எதில் விளையாடணும்ன்னு ஒரு அளவு இல்லை...” மகனை கடியவும் தவறவில்லை...

அதில் மது மித்ரேஷின் கையை உதறிவிட்டு, "அத்தை..." என்ற கூவலுடன் அவளை அணைத்து கொண்டாள்...

அந்தக் கனமான கணத்திலும் மதுவின் செயலில் மித்ரேஷின் முகம் மென்மையானது...

மதுவிற்கோ தன்னை நம்பிய நிஷாவிடத்தில் அவளையும் அறியாது அவளது மனம் தஞ்சம் அடைந்தது...

"ஈஷ்வர்... யார் வீட்டுப் பொண்ணை யார் வந்து பெண் கேட்பது...? உன் தகுதி என்னன்னு மறந்துட்டியா...? என்ன தான் சார் நம்மைக் கோபுரத்தில் உட்கார வைத்தாலும் நாம குப்பை மேடு தான் என்பதை நீ மறந்துவிடாதே..." விக்டர் மகனை எச்சரித்தான்...

இன்று என்று அல்ல ஏழு வருடங்களுக்கு முன்னும் மகனை இது போல் தான் எச்சரித்தான்... அவன் அன்றும் இன்றும் அக்ஷய் குடும்பத்து மேல் வைத்து இருக்கும் விசுவாசம் ஒரே மாதிரியானது தான் அது கொஞ்சமும் மாறவில்லை...

தந்தையின் பேச்சு மித்ரேஷுக்கு எரிச்சலை உண்டு பண்ணியது என்றால் ஜானுக்குச் சுத்தமாய் ஒன்றும் புரியவில்லை... அண்ணன் காதலை தந்தை ஏன் இந்தளவுக்கு எதிர்க்க வேண்டும்...? என்ற கேள்வி அவனுள் வண்டாய்க் குடைந்தது...

"சும்மா சும்மா அதையே சொல்லி என்னை ஏன் மிரட்டுறீங்க...? இப்போ எனக்கு என்ன குறைச்சல்... நல்ல வேலையில் இருக்கேன்... கை நிறையச் சம்பாதிக்கிறேன்... காலம் முழுவதும் மதுவை கண் கலங்காம வச்சு காப்பாத்த என்னால் முடியும்... சார் அளவுக்கு இல்லைன்னாலும் என் வருமானத்தில் அவளை ராணி மாதிரி வச்சிக்க என்னால் முடியும்... இதை விட ஒரு ஆண் மகனுக்கு என்ன தகுதி வேண்டும்..."

மித்ரேஷின் ஆக்ரோசமான, கம்பீரமான வார்த்தையில் அழுது கொண்டு இருந்த மது கண்களை மலர்த்தி அவனை ஆச்சிரியமாய்ப் பார்த்தாள்... அவன் கூறிய வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவளது மனதில் ஆணியடித்தது போல் பதிந்து அவளது மனதை அசைத்துப் பார்த்தது...

இதை எல்லாம் ஓரமாய் அமர்ந்து வேதனையுடன் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தனர் கோபிநாத்தும், துளசியும்...

"டாட்... ஈஷ்வர் சொல்றதுல என்ன தப்பு இருக்கு... அவன் எந்த விதத்திலும் மதுவுக்குக் குறைந்தவன் இல்லை... தாராளமாய் மதுவை அவனுக்கு மணம் முடிக்கலாம்..." ஆதி நண்பனுக்காகத் தந்தையிடம் பேசியவன் மித்ரேஷ் தோள் மீது கை போட்டு அணைத்து தனது ஆதரவை நண்பனுக்குத் தெரிவித்தான்...

இது நாள் வரை ஆதி அந்த மாதிரி மித்ரேஷை நினைத்தது இல்லை... நண்பனின் காதல் தெரிந்த மறு நொடி அவனை விடவா வேறு ஒருவன் தங்கைக்குப் பொருத்தமான மாப்பிள்ளையாக வர போகிறான் என்றே அவனுக்குத் தோன்றியது...

நிஷாவின் மனமோ மது காதல் விசயத்தில் சிக்க மாட்டாள் என்று நம்பினாலும் மகனது மது மீதான காதல் விவகாரம் ஒரு பக்கம் மகிழ்ச்சி என்றாலும் மறுபக்கம் தங்களது நிலையை எண்ணி துக்கமாய் இருந்தது...

அவர்களின் தகுதிக்கு மது மாதிரி தேவதை பெண் மருமகளாய்க் கிடைப்பது என்பது அரிய வரம்... ஆனால் அதை வேண்டி நிற்பதும் தவறு என்றே தோன்றியது...

ஆனால் மகனின் காதலுக்காக ஒரு தாயாய் மனம் பரிதவிக்கத் தான் செய்தது... அது மகனின் காதல் நிறைவேற வேண்டும் என்று கடவுளை பிரார்த்திக்கத் தான் செய்தது...

"ஆதி... இதில் நாம் ஒன்றும் செய்ய முடியாது... முடிவு மதுவின் கையில் தான் இருக்கு..." என்ற அக்ஷய் மித்ரேஷிடம்,

"ஈஷ்வர்... நீ சொன்னதை நம்பி என் மகளைச் சந்தேகப்பட நான் ஒண்ணும் முட்டாள் இல்லை... எனக்கு என் மகளைப் பத்தி நல்லாவே தெரியும்..." என்றான் ஒரு மாதிரி குரலில்...

"சார்..." மித்ரேஷ் விளக்கம் கொடுக்க முயல... கையை உயர்த்தித் தடுத்த அக்ஷய்,

"போதும் ஈஷ்வர்..." என்றான் கடுமையாக...

தந்தையின் குரலில் பதறி போன மது பயத்துடன் இருவரையும் மாறி மாறி பார்த்தாள்... பின்பு நிஷாவை பார்த்தாள்... ஆசையுடனும் நிராசையுடனும் நின்று இருந்த அவளின் தோற்றம் மதுவின் மனதை பிசைந்தது...

கண்டிப்பு காட்டி வளர்த்த அன்னையை விட அரவணைத்துக் கண்டிப்பை கூட அன்போடு காட்டிய நிஷாவிடத்தில் அவளுக்கு எப்போதுமே கூடுதல் ஒட்டுதல் உண்டு...

நிஷாவின் முகத்தைப் பார்த்தவள் பின்பு முடிவு எடுத்தவளாய்,

"டாட்... நானும் தான் மித்துவை காதலிக்கிறேன்..." என்றாள் மெல்லிய குரலில்... மறந்தும் அன்னையின் புறம் திரும்பவில்லை அவள்...

இப்போது மகளின் மீது மெச்சிய பார்வை ஒன்றை பதித்தான் அக்ஷய்... அழகில் மட்டுமல்ல குணத்திலும் தான் தேவதை தான் என்று நிரூபித்து விட்டாளே அவனது செல்ல மகள்...

மதுவின் வார்த்தை கேட்டு மித்ரேஷுக்கு மயக்கம் வராத குறை தான்... அவன் காதுகள் கேட்ட செய்தி உண்மை தானா... கண்கள் பார்த்த காட்சி மெய் தானா... எதையும் நம்ப முடியாமல் நின்று இருந்தான்... ஆனாலும் மதுவின் வார்த்தைகளில் அவனுக்கு நம்பிக்கை இல்லை... அவன் ஆராய்ச்சியாய் அவளைப் பார்த்தான்...

"மதும்மா... கொஞ்சம் யோசிச்சுப் பதில் சொல்லும்மா... உங்க குடும்பம் பரம்பரை பரம்பரையா கௌரவம், அந்தஸ்து, புகழ் உடையது... ஆனால் நாங்க..." விக்டர் மேலே பேசும் முன் அக்ஷய்,

"விக்டர்..." என்று அடிக்குரலில் அவனை எச்சரித்தான்...

விக்டர், நிஷாவினது ரகசியம் அவனையும், அபியையும் தவிர வேறு யாருக்கும் தெரியாது... அதனால் தான் அக்ஷய் விக்டரை எச்சரித்தது...

"அனிக்கு ஒரு மகன் இருந்து இருந்தால் நான் மதுவை அவனுக்குக் கல்யாணம் பண்ணி கொடுப்பது போல் தான் எனது இன்னொரு தங்கையான நிஷாவோட மகன் ஈஷ்வருக்குக் கல்யாணம் பண்ணி கொடுப்பதும்... எனக்கு அனியும், நிஷாவும் வேறு வேறு இல்லை..."

"அண்ணா...", "சார்..." நிஷாவும், விக்டரும் அவனது அன்பில் நெகிழ்ந்தனர்...

அக்ஷய் தனது மனைவியிடம் வந்தான்...

"ரக்ஷி... நீ என்ன சொல்ற...? எனக்கு நம்ம மதுவை ஈஷ்வருக்குக் கல்யாணம் பண்ணி கொடுப்பதில் முழுச் சம்மதம்... உனக்கு...?"

கணவன் அப்படிக் கேட்டதும் அபியால் மறுத்து பேச முடியவில்லை... அது மட்டும் அல்லாமல் கணவனது குரலில் இருந்த அழுத்தம் அவளை மறுத்து பேச விடவில்லை...

சம்மதம் என்பது போல் தலையசைத்தாள்... ஆனாலும் மனம் சமாதானம் ஆகவில்லை அவளுக்கு...

மித்ரேஷ் நடப்பது அனைத்தையும் நம்ப முடியாமல் பார்த்துக் கொண்டு நின்று இருந்தான்... இப்படி ஒரு அதிசயம் நிகழும் என்றால் அவன் இத்தனை நாள் மனதில் வேதனையுடன் காலத்தைக் கழித்து இருக்க மாட்டானே... தன் காதல் இவ்வளவு எளிதாய் கை கூடும் என்பதை அவனே அறிந்து இருக்கவில்லை...

மதுவின் நிலை தான் இருதலைக் கொள்ளி எறும்பின் நிலையை ஒத்து இருந்தது...

இரு குடும்பத்துக்கும் இடையில் பூசல் வந்துவிடக் கூடாதே என்றும், நிஷாவின் நிம்மதிக்காகவும் தான் மித்ரேஷை தான் காதலிப்பதாய்ச் சொன்னது... ஆனால் இதைச் சொன்னதற்காக அன்னையிடத்தில் நிச்சயம் அடி உண்டு என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை... அடி வாங்குவதற்குக் கூட அவள் கவலைப்படவில்லை... ஆனால் அன்னையின் பார்வையில் தான் தரம் இறங்கி போனோமே என்று அவளுக்குத் துக்கமாய் இருந்தது...

"மது ரொம்பச் சந்தோசமா இருக்கும்மா... நீயே என் மருமகளா வருவது குறித்து..." நிஷா உளமார சொல்லியவள் சந்தோசம் அடைந்தாள்...

ஆதி மித்ரேஷை சந்தோசத்துடன் அணைத்துக் கொண்டான்...

"மது... நீ எனக்கு அண்ணியா... என்னால் நம்ப முடியலையே..." ஜான் போலியாய் அதிர்ச்சி அடைவது போல் பாசாங்கு செய்தான்...

"அண்ணா... மதுவை நான் எங்க வீட்டுக்கு அழைச்சிட்டு போகட்டுமா...?" நிஷா அக்ஷயிடம் கேட்டாள்...

"அதுக்கு என்ன தாராளமா கூட்டிட்டு போம்மா..." அக்ஷய் சொன்னான்...

மித்ரேஷ் ஆர்வத்துடன் மதுவின் முகத்தைப் பார்த்தான்... ஆனால் அவள் யோசனையுடன் தயங்குவதைக் கண்டு அவனது முகத்தில் பழைய இறுக்கம் வந்தது... மனமும் பழையபடி சுருண்டு போனது...

"நீங்க போங்க அத்தை... நான் கொஞ்ச நேரத்தில் அங்கே வர்றேன்..." மது சொன்னதும் அதுவரை அடக்கப்பட்டு இருந்த அவனது கோபம் மெல்ல திரும்பலானது...

சரி என்றபடி நிஷா செல்ல மற்றவர்களும் அவளைப் பின் தொடர்ந்து தங்களது வீடு நோக்கி சென்றனர்... விக்டர் மகனை முறைத்து பார்க்க தயங்கவில்லை...

விக்டர் குடும்பம் சென்றதும் கோபிநாத் மகனிடம், "அக்ஷய்... நம்ம மதுவை அந்தப் பையனுக்குப் பேசி முடித்தது எனக்குச் சுத்தமா பிடிக்கலை... உனக்கு அவங்களைப் பிடிச்சு இருந்தா என்ன உதவி வேணும்ன்னாலும் செய்... அதுக்காக நம்ம பொண்ணை அவங்க பையனுக்குக் கல்யாணம் பண்ணி கொடுக்க நினைக்கிறது கொஞ்சமும் சரியில்லை..."

"டாட்... நான் ஏற்கெனவே சொன்னது தான்... அனியும், நிஷாவும் எனக்கு ஒண்ணு தான்... மித்ரேஷும் நல்ல பையன் தான்... மதுவுக்கு எல்லா விதத்திலும் பொருத்தமானவன் தான்..."

"தருணை விடவா..."

தந்தை கேட்டதின் அர்த்தம் அவனுக்குப் புரியாமல் இல்லை... தருணின் குடும்பம் அவர்களது குடும்பத்தைப் போல் பரம்பரை பரம்பரையாய் அந்தஸ்து உடைய குடும்பம்...

ஆனால் அதற்காக ஒருவனது காதலை பலியிட அவனால் முடியவில்லை... ஏனெனில் அவனும் காதலுக்காக எந்தளவுக்குத் தவித்தான் என்பது அவனுக்கு மட்டுமே தெரியும்... அதனால் தான் மித்ரேஷின் காதலை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது...

"இருக்கலாம்... ஆனால் வாழ்க்கைக்குப் பணம், அந்தஸ்து இதை எல்லாம் விடக் காதலும் அவசியம் டாட்..." என்றவனது பார்வை அவனையும் அறியாது அபியின் மீது நிலைத்தது...

அதன் அர்த்தம் புரிந்தவளாய் அபி அவனைப் பார்த்து ஆமோதிப்பது போல் புன்னகைத்தாள்... அந்தப் புரிதலில் அவனது மனம் எல்லையற்ற நிம்மதி அடைந்தது... அந்த மாதிரி ஒரு நிம்மதியை தான் அவன் தனது மகளுக்குத் தேடித் தர விரும்புகிறான்...

"என்னமோ செய்ப்பா..." என்றபடி கோபிநாத் உள்ளே செல்ல...

"அக்ஷய்... எதைப் பத்தியும் யோசிக்காதே... யாருக்கு யார்ன்னு அந்தக் கடவுள் தான் முடிச்சு போடுறார்... ஈஷ்வரும் நல்ல பையன் தான்... சீக்கிரம் ஆதி, மது இரண்டு கல்யாணத்தையும் ஒண்ணா நடத்தும் வழியைப் பாரு..." துளசி மகனுக்கு ஆதரவாய் பேசிவிட்டு சென்றார்...

"மாம்..." மது அபியை அழைக்க அவளோ காது கேளாதவள் போல் தங்களது அறைக்குச் சென்றாள்...

"டாட்..." பரிதாபமாய்த் தந்தையைப் பார்த்தாள் மது...

"இங்கே வா அம்மு..." மகளை அழைத்தவன் அவள் அருகில் வந்ததும் அவளை அரவணைப்பாய் அணைத்துக் கொண்டான்...

"நான் அம்மா கிட்டே பேசறேன்... வா..." மகளுடன் இணைந்து நடந்தான்...

அறைக்குள் நுழைந்த மது அன்னையின் அருகில் சென்று மண்டியிட்டு அமர்ந்தவள், "மாம்..." என்க...

"பேசாதடி..." ஒற்றை விரல் நீட்டி மகளை எச்சரித்த அபி,

"எவ்வளவு தைரியம் இருந்தா லவ் பண்றேன்னு எங்க முன்னே வந்து சொல்லுவ..." கோபத்துடன் சத்தம் போட...

"கூல் பேபி..." அக்ஷய் அவளைச் சமாதானப்படுத்த... அவனது பேபி என்ற அழைப்பில் அபி அவனை முறைத்தாள்... பிள்ளைகள் முன்னால் இந்த மாதிரி பேசுவது அவளுக்கு அறவே பிடிக்காது...

'சாரி...' கண்களால் கெஞ்சினான் அவன்...

"ஏன் ரக்ஷி ஈஷ்வரை உனக்குப் பிடிக்கலையா...?"

"ச்சு... அவனும் நான் வளர்த்த பையன் தான்... அவனைப் பிடிக்காமல் போகுமா...? ஆனால் இவங்களுக்கு இடையில் எப்படிக் காதல் வந்தது...? அது தான் எனக்குப் பிடிக்கவில்லை... அவ்வளவு நாள் நட்பா பழகிட்டு இப்போ வந்து காதல்ன்னு சொன்னா கேட்க அசிங்கமா இருக்கு..."

அபிக்கு காதல் விவகாரம் அறவே பிடிக்கவில்லை... ஒருவேளை காதல் அவளைப் படுத்திய பாடு கண்டு அதைப் பார்த்து பயந்து போனாளோ என்னமோ...

"மாம்..." எப்படித் தன்னைப் புரிய வைப்பது என்று மதுவுக்கும் தெரியவில்லை... அதே சமயம் உண்மையைச் சொல்லவும் பயமாய் இருந்தது...

இப்போதே இப்படிப் பேசும் அன்னை உண்மை தெரிந்தால் மித்ரேஷ் மீது கோபப்படுவதுடன் அவனது குடும்பம் மீதும் அவரது கோபம் திரும்பும்... அதனால் அமைதி காத்தாள்...

"ரக்ஷி... நட்பு என்பது நம் இரு குடும்பத்துக்கு இடையில் தான்... இவங்களுக்கு இடையில் இல்லை... சின்ன வயசில்

இருந்து பார்த்து வளர்ந்து இருக்காங்க... நிச்சயம் இவங்க காதல் புரிதலுடன் இருக்கும்... வாழ்க்கையும் சந்தோசமா அமையும்..."

தந்தையின் வார்த்தையில் மதுவின் மனம் ஆயாசம் அடைந்தது... உண்மையில் காதல் இருந்தால் அல்லவா இது எல்லாம் நடக்கச் சாத்திய கூறுகள் இருக்கிறது... இங்கே தான் அடிப்படைக் காதலே இல்லையே...

அக்ஷயின் வார்த்தையில் அபி சற்றுக் கோபம் தணிந்து இறங்கி வந்தாள்... மகள் மனம் போல் மணந்து மகிழ்ச்சியுடன் வாழ்ந்தால் அதை விட வேறு என்ன சந்தோசம் இருக்கிறது ஒரு தாய்க்கு...

அன்னையைச் சமாதானப்படுத்தி விட்ட நிம்மதியில் மது மித்ரேஷ் வீட்டிற்குச் சென்றாள்... எப்போதும் எந்த வித தயக்கமும் இல்லாமல் செல்லும் அவளால் இன்று தைரியமாய் உள்ளே செல்ல முடியவில்லை...

"அதான் வந்துட்டியே இன்னும் என்ன தயக்கம்...?" மித்ரேஷின் வார்த்தையில் விதிர்த்து போய் நிமிர்ந்தவள் அவனது கோபமான முகத்தைக் கண்டு திகைத்தாள்...

"நீ என்னை லவ் பண்றேன்னு சொன்னதும் அதை அப்படியே நம்பி ஏமாந்து சந்தோசத்தில் துள்ளி குதிக்கிற அளவுக்கு நான் ஒண்ணும் முட்டாள் இல்லை... எப்படிப் பார்த்தாலும் தோத்தது நீ தான்..." கொஞ்சம் கூட இரக்கம் இல்லாமல் வார்த்தையால் அவளைக் குத்தி கிழித்தான்...

"தெரியுதுல்ல அப்புறம் என்ன...?" தலையைக் குனிந்து கொண்டே இருந்தால் மேலும் மேலும் கொட்டி கொண்டே தான் இருப்பான் என்று எண்ணி தலை நிமிர்ந்து தைரியமாய்க் கேட்டாள்...

"உனக்கே தெரியுது நான் உன்னைக் காதலிக்க மாட்டேன்னு... அது என்னவோ உண்மை தான்... இந்த விசயத்தில் மட்டும் நீ என் மனசை சரியா புரிஞ்சிக்கிட்ட... அதுவரைக்கும் எனக்கு ரொம்பச் சந்தோசம்... நம்ம ரெண்டு

குடும்பத்துக்கு இடையில் பிரச்சினை வந்திர கூடாதுன்னும், நிஷா அத்தைக்காகவும் தான் நான் அப்படிச் சொன்னது... மத்தபடி உன் மேல் காதலால் கசிந்துருகி நான் ஒண்ணும் சொல்லலை..." அவளுக்கும் கோபம் வந்தது அவன் செய்து வைத்த காரியத்தால்...

ஆனால் ஒன்றை யோசிக்க மறந்துவிட்டாள்... மித்ரேஷை யாரிடமும் காட்டி கொடுக்க அவள் முயலவில்லை... அது எதனால் என்பதைப் பற்றி அவள் சிறிதும் யோசிக்கவில்லை...

அவளது வார்த்தையில் அவனது முகம் கன்றிப் போனது...

"எது எப்படி இருந்தாலும் நான் ஜெயிச்சது ஜெயிச்சது தான்... நீ என் மனைவியாய் காலம் முழுவதும் என்னைச் சகிச்சிக்கத் தான் வேண்டும்..." ஆனாலும் தன்னைச் சமாளித்துக் கொண்டு அவன் பதிலடி கொடுக்க...

"இப்ப சொன்னியே இது தான் உண்மை... உண்மையில் உன்னை எல்லாம் கணவனாய் சகிக்க வேண்டிய கொடுமை எனக்கு... எல்லாம் என் நேரம்..." சலித்துக் கொண்டது போல் கூறியவளின் பேச்சில் அவனுக்குக் கொலைவெறி ஏறாவிட்டால் தான் அதிசயம்...

"மது வாம்மா... ஏன் வாசலிலேயே நின்னுட்டு இருக்க..." நிஷா அழைக்கவும்...

"உங்க புள்ளை இப்படி அய்யனார் மாதிரி வழி மறிச்சிட்டு நின்னுட்டு இருந்தா நான் எப்படி உள்ளே வர்றது அத்தை..."

அதில் அவளை முறைத்து பார்த்தவன், "குண்டு பூசணிக்கா மாதிரி உடம்பை வளர்த்து வச்சிருந்தா இப்படித் தான்... எவ்வளவு இடம் இருந்தாலும் பத்தாது..." இருவருக்கும் இடையில் இருந்த இடைவெளியை சுட்டி காட்டி பேசியவன் நக்கலாய் அவளைப் பார்த்தான்...

ஒரு ஆள் போகும் அளவிற்கு இடைவெளி இருந்தாலும் அவனை இடித்துக் கொண்டு செல்ல விருப்பம் இல்லாமல் அவள் நின்று இருந்தாள்...

அவன் தன் உடல்வாகை சொல்லவும் அவளுக்கு ரோசம் வந்தது...

"இந்தக் குண்டை கல்யாணம் பண்ண தான் ஏழு வருசம் காணாம போய் இப்ப திரும்பி வந்து ரெண்டு குடும்பத்துக்கும் இடையே போராடிட்டு இருக்க... அப்போ எல்லாம் தெரியலையா நான் குண்டுன்னு..." அவனுக்கு மட்டும் கேட்கும் குரலில் கேலியாய் கேட்டவள் அவனை இடித்துக் கொண்ட உள்ளே சென்றாள்...

அவளது வார்த்தையில் அவன் குழம்பி போய் நின்று இருந்தான்... அவள் உணர்ந்து சொல்கிறாளா இல்லை தெரியாமல் உளறிவிட்டு போகிறாளா என்று...

ஆனால் அவன் உள்ளே வந்து பார்த்த காட்சியில் மது உளறிவிட்டு தான் வந்து இருக்கிறாள் என்று நூறு சதவீதம் நம்பினான்...

"அத்தை... நீங்க செஞ்ச கேசரி சூப்பர்... எவ்வளவு நெய் விட்டு கிண்டி இருக்கீங்க பாருங்க... இந்தக் கைப்பக்குவத்தை மிஸஸ். அக்ஷய்க்கும் சொல்லி கொடுங்க... இன்னைக்குக் கூடப் பொங்கல்ல நெய் விடவே இல்லை..." அன்னையைக் குறை சொல்லி கொண்டே நிஷா செய்து வைத்து இருந்த கேசரியை மொக்கி கொண்டு இருந்தாள் மது...

மகனது காதல் விசயம் தெரிந்ததில் அந்தச் சந்தோசத்தைக் கொண்டாட நிஷா மதுவுக்குப் பிடித்த கேசரியை செய்து வைத்து அவளுக்காகக் காத்திருந்தாள்... அதைத் தான் சப்பு கொட்டி சாப்பிட்டுக் கொண்டு இருந்தாள் மது...

அதைக் கண்டு மித்ரேஷ் மனம் வெறுத்துப் போனான்... 'என்ன பொண்ணுடா இவ...? புது மாதிரி டிசைனா இருக்காளே...' என்று அவனால் எண்ணாமல் இருக்க முடியவில்லை...

"அண்ணியாரே... இன்னும் கொஞ்சம் கேசரி வச்சிக்கோங்க..." ஜான் அவளைக் கிண்டல் அடித்தவாரே

கேசரியை அள்ளி மதுவின் தட்டில் வைக்க...

"என் மனம் அறிந்து நடக்கும் கொழுந்தனாரே..." 'நார்' என்ற வார்த்தையில் அழுத்தம் கொடுத்தவள், "நீவிர் வாழ்க... நின் குலம் வாழ்க..." அவள் தனது வலது கையை உயர்த்தி ஜானை ஆசிர்வாதம் செய்வது போல் சைகை செய்ய...

"அடிங்... நீ எல்லாம் எனக்கு அண்ணியா... நீ எனக்கு எப்போதும் மது தான்..." என்று ஜான் அவளை அடிக்க வர...

அவன் அடிக்க முடியாதபடி மது ஓடினாலும் கையில் இருந்த தட்டோடு ஓடியதை கண்ட ஜான்,

"ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணா இருக்கிறதை பாரு..." கிண்டல் செய்தான்...

"அத்தை உங்க சின்னப் புள்ள என்னைய கிண்டல் பண்றான் பாருங்க..." அவள் நிஷா புறம் வந்து பாதுகாப்பாய் நின்று கொண்டு ஜானை பார்த்துப் பழிப்பு காட்டினாள்...

இருவரும் பண்ணும் அலம்பலில் மித்ரேஷ்க்கு சுள்ளென்று கோபம் எழுந்தது...

"எப்ப பாரு சாப்பிட்டுட்டு இருந்தா கிண்டல் பண்ணாம என்ன பண்ணுவான்...? கொஞ்சம் உடம்பை குறை... இல்லைன்னா கல்யாணத்து அன்னைக்கு மணவறை ஒருபக்கமா சரிந்து விழுந்துட போகுது..." மித்ரேஷ் பேசிய பேச்சு அவளுக்குச் சுருக்கென்று தைக்கத் தன் கையில் இருந்த தட்டை அங்கு இருந்த மேசை மீது வைத்து விட்டு கிளம்பிவிட்டாள்...

அவளது முகம் சுருங்கி போனது வருத்தத்தில்...

"டேய்... உனக்கு மதும்மா பக்கத்துல கூட நிற்க அருகதை இல்லை... நீ எல்லாம் மதும்மாவை கிண்டல் பண்ற அளவுக்கு வந்துட்டியா...? போயும் போயும் உன்னையும் மனுசனா நினைச்சு லவ் பண்ணிய மதும்மாவை சொல்லணும்..." அதுவரை அமைதியாய் நடப்பதை

பார்த்துக் கொண்டு இருந்த விக்டர் மகனது பேச்சில் வெகுண்டு எழுந்தான்...

"மதும்மா... நான் சொல்றேன் இவன் உனக்கு வேண்டாம்மா... சார் கிட்ட சொன்னா மாப்பிள்ளையை வரிசையில் கொண்டு வந்து நிறுத்துவார்..." விக்டர் மதுவுக்கு அறிவுரை கூறவும் தவறவில்லை...

தந்தையின் வார்த்தையில் முகம் சிறுத்து போய் நின்று இருந்தான் மித்ரேஷ்... ஏதோ கோபத்தில் அவளை அப்படிப் பேசிவிட்டான் அதற்காகத் தந்தை அவனை அப்படிப் பேசியது அவனுக்குச் சுத்தமாய்ப் பிடிக்கவில்லை...

'அந்த அருகதை இல்லாத நிலையை எனக்கு உருவாக்கியது யார்...? நீங்கள் இருவரும் தானே...' கோபத்தில் பதில் பேச போனவன் தாயை எண்ணி நாவை கட்டுப்படுத்திக் கொண்டான்...

அமைதியாய் பார்த்து பழகிய விக்டரின் கோபம் கண்டு மது அரண்டு விட்டாள்... தன்னால் இருவருக்குள்ளும் சண்டை எதற்கு என்று எண்ணியவள் மித்ரேஷ் அருகில் வந்தவள்,

"மாமா சும்மா சும்மா மித்துவை சத்தம் போடாதீங்க... அவன் ரொம்ப நல்லவன் தான்... மித்துவை விட எனக்குப் பொருத்தமானவன் வேறு யார் இருக்கா மாமா... எனக்கு அவனைத் தான் ரொம்ப ரொம்பப் பிடிச்சிருக்கு..." என்றவள் அவனது கரத்தோடு தன் கரத்தை கோர்த்துக் கொண்டு,

"அப்படித்தானே மித்து..." அவனை ஏறிட்டு பார்த்தவளின் கண்கள் கலங்கி இருந்தனவோ...

அதற்கு மேல் அவளது கண்களை அவனால் சந்திக்க முடியவில்லை... அவளது கரத்தில் இருந்து தனது கரத்தை விடுவித்துக் கொண்டவன் விறுவிறுவென வெளியில் சென்றுவிட்டான்...

அவன் பின்னேயே ஓடி சென்றவள், "ஒரு நிமிசம்..." என்றபடி அவன் முன் வந்து நின்றாள்...

"மாமா சொன்னதுக்காக வருத்தப்படாதே... எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை... உன்னைப் போல் ஒரு அடிமை வலிய வந்து சிக்கும் போது எனக்கு என்ன கவலை... அதனால் நீ கவலைப்படாதே..." சிரித்தபடி சொன்னவளின் முகத்தில் மருந்துக்குக் கூடச் சிரிப்பு இல்லை... மாறாக வேதனையே மிகுந்து இருந்தது...

"ரெண்டு வீட்டு பெரியவங்களுக்காகவாவது கொஞ்சம் நடிக்க முயற்சி பண்ணு மித்து... அதாவது என்னை மாதிரி..." அவனிடம் கூறியவள் அவனைத் திரும்பியும் பாராமல் செல்ல முயல...

தன் உள்ளத்து வலியை மறைத்துக் கொண்டு தனக்காகப் பேசிவிட்டுச் செல்லும் அவளின் கையைப் பிடித்துத் தடுத்து நிறுத்தியவன் அவளை மல்லிகை பந்தலுக்குக் கீழே இழுத்துச் சென்றான்...

“ஏய்... என்ன பண்றடா... விடு என்னை...?” அவள் தன் கையை உதறினாள்...

சுவர் ஓரமாய் யாரும் பார்க்காத மாதிரி அவளை அழைத்துக் கொண்டு வந்தவன் அவளைச் சுவற்றோடு அழுத்தி தானும் அவள் மீது சாய்ந்து நின்று அவளது விழிகளுக்குள் தனது விழியைக் கலக்க விட்டான்...

அவனது இந்தப் பார்வை அவளுக்குப் புதிது... அதில் மூச்சடைத்து போய் நின்று இருந்தாள் அவள்...

இரு தேகங்களும் உரசி கொண்டு நின்றதில் அவளது மனதில் தீ மூண்டது... இது நாள் வரை இது போன்ற ஒரு உணர்வை அவள் உணர்ந்தது இல்லை... அனுபவித்தது இல்லை... ஏதோ ஒருவித உணர்வு அடி வயிற்றில் இருந்து சில்லென்று எழும்பி உடல் முழுவதும் பரவி அவளைச் சிலிர்க்க வைத்தது...

கண்ணிமைக்க மறந்து அவனைப் பார்த்துக் கொண்டு இருந்தாள் அவனது விழியின் வசீகரப் பார்வையில் வசீகரிக்கப்பட்டு...

அவளது முகத்தைத் தன் இரு கைகளில் தாங்கியவன் அவளது நெற்றியில் மென்மையாய் முத்தமிட்டு,

"சாரி..." என்றான் மனதார...

அவனது மென்மையான இதழ் ஒற்றல் அவளுள் ஏற்படுத்திய உணர்வலைகளைத் தாங்க முடியாது தன் இரு கண்களையும் இறுக மூடி கொண்டு சுவற்றோடு சாய்ந்து நின்றாள்...

வன்முறையாளனான அவனிடத்தில் இத்தகைய மென்மையான அணுகுமுறையைச் சத்தியமாய் அவள் எதிர்பார்க்கவில்லை...

முதல் முறையாய் அவளைப் பெண்ணாய் உணர செய்தான் அவன்...

ஈர்க்கும்...

மதுவின் மனதில் ஆழிப் பேரலையாய் உணர்வுகள் எழுந்து ஆர்ப்பரித்தது... மித்ரேஷ் ஒன்றும் அவளுக்குப் புதியவன் அல்ல... எத்தனையோ முறை அவனோடு அடித்துப் பிடித்துத் தொட்டு விளையாடி இருக்கிறாள் தான்... அப்போது எல்லாம் உணர்ந்திராத இந்த உணர்வு பேதம் இப்போது மட்டும் ஏன்...? விடை தெரியாது திகைத்து நின்று இருந்தாள் அவள்...

தன் கைகளில் தாங்கி இருந்த மதுவின் முகத்தை ஆழ்ந்து பார்த்துக் கொண்டு இருந்தான் மித்ரேஷ்... கண்கள் இறுக மூடியிருக்க, உதடுகள் உணர்ச்சியில் துடிக்க அவள் நின்று இருந்த விதம் அவன் மனதை மயங்கச் செய்தது...

அவளது துடிக்கும் இதழை தனது விரலால் மென்மையாய் வருடி விட்டவன், "இப்போ நீ எவ்வளவு அழகா இருக்கத் தெரியுமா...?" என்றான் கிசுகிசுப்பாய்...

அதில் கண்களைத் திறந்து அவனைப் பார்த்தவள் அவனின் கண்ணில் இருந்த ஏதோ ஒன்றில் ஈர்க்கப்பட்டு அவனையே பார்த்தாள்...

'என்ன...?' என்பது போல் ஒற்றைப் புருவத்தை உயர்த்திக் கேட்டவனின் செய்கையில் தன்னுணர்வு அடைந்தவள் தனது கை கொண்டு அவனைத் தள்ளினாள்...

"விலகி நில்லு மித்து..."

"முடியாது..." என்றவன் முன்பை விட இப்போது இன்னும் அதிகமாய் அவளுடன் ஒட்டி உறவாடி நிற்க...

அவனது மூச்சுக் காற்றை அவளது நெற்றி உணர்ந்தது...

'கடவுளே... இம்சை செய்கிறானே...' அவனது செய்கையில் மனதுக்குள் பரிதவித்தவள் அவனைப் பரிதாபமாய் ஏறிட்டாள்...

"ப்ளீஸ் மித்து..." கெஞ்சியவளை பார்த்து,

"ஓகே... ஓகே..." என்று சிரித்தபடி அவன் தன் இரு கைகளையும் சரணடைவது போல் தூக்கி கொண்டே விலக... அதில் நிம்மதி அடைந்தாள் அவள்...

ஏனோ அவனது முகத்தைப் பார்க்க மனம் வெட்கியது... அவனது ஏறிட்டு பார்க்க முடியாமல் விலகி போனவளை கைப்பிடித்துத் தடுத்தவன்,

"இந்த நடிப்பு போதுமா..." என்றான் சீண்டலாய்...

அவனது வார்த்தையில் அவ்வளவு நேரம் இருந்த இதம் காணாமல் போக அப்படியே அசையாது நின்றாள்... ஏன், எதற்கு என்று தெரியாமல் உள்ளுக்குள் ஏமாற்றமும், அழுகையும் போட்டி போட்டு எழுவதை அவளால் தடுக்க முடியவில்லை...

ஆனாலும் தன்னைச் சமாளித்துக் கொண்டு அவனைத் திரும்பி பார்த்தாள்... ஏனெனில் நடிப்பதற்காகப் பிள்ளையார் சுழி போட்டது அவள் தானே... அதைத் தான் அவன் செய்து இருக்கிறான்... இதில் அவன் தவறு ஏதும் இல்லையே...

"ம்... போதும்..." என்றவள், "ரொம்ப நல்லாவே நடிக்கிற மித்து..." வலிய வரவழைத்துக் கொண்ட சிரிப்புடன் அவனைப் பாராட்டினாள்...

"தேங்க்ஸ்..."

"அதுக்காக நீ பொய் சொல்லவும் தேவையில்லை..." கேள்வியாய் பார்த்தவனைக் கண்டு,

"இந்தக் குண்டு பெண்ணை நீ கஷ்டப்பட்டு அழகா இருக்கேன்னு சொல்ல தேவையில்லை... அது போல் இந்த முத்தம் கொடுக்கிறது, தொட்டுப் பேசுறது இதெல்லாம் இனி நீ செய்யாதே... அது எனக்குப் பிடிக்கலை..."

அவளது வார்த்தைகள் அவனுக்கு மிகுந்த மனவருத்தத்தை அளித்தது...

அவள் தனக்காகத் தனது தந்தையிடம் கூட விட்டுக் கொடுக்காமல் பேசியது அவனுக்கு அவ்வளவு சந்தோசமாக இருந்தது... ஆனால் அவளது கலங்கிய விழிகளைக் கண்டு தன்னைத் தானே நொந்தவனாய் அவளைப் பார்க்க முடியாமல் வெளியில் வந்து விட்டான்...

தான் அவளைக் கிண்டல் அடித்துக் கேலி பேசியதும் சற்று அதிகப்படி தானோ என்று அவன் மனதுக்குள் குமைந்து கொண்டு இருக்கும் போது அவளாய் வலிய வந்து பேசிய போதும் அவளது வருத்தத்தைக் கண்டு அவன் வருத்தப்படத் தான் செய்தான்...

அதில் மனம் நெகிழ்ந்து போய் அவளைச் சமாதானப்படுத்த எண்ணி தான் அவளைத் தனியே அழைத்து வந்தது... தனது அருகாமையில், முத்தத்தில் கண் மூடி அவள் நின்று இருந்த விதம் அவனையும் மயக்கத் தான் செய்தது... ஆணாய் கர்வப்படத் தான் வைத்தது...

அதிலும் தனது முகம் காண முடியாமல் தலை குனிந்து சென்றவள் தோற்றம் அவனுக்குச் சிரிப்பை வரவழைக்க அவளைச் சகஜமாக்கும் பொருட்டுத் தான் அவன் அவ்வாறு பேசி அவளைச் சீண்டி விட்டது... அதற்கு அவள் இப்படி ஒரு பதில் கொடுப்பாள் என்று அவன் கொஞ்சமும் நினைக்கவில்லை...

'நான் தொடுவது அவளுக்குப் பிடிக்கவில்லையா...?' ஆணாய் அவனது தன்மானம் அடிப்பட்டுப் போனது அந்த இடத்தில்... அதுவும் தனது மனதுக்குப் பிடித்தவளிடத்தில் இருந்து இப்படி ஒரு வார்த்தையை அவன் சத்தியமாய் எதிர்பார்க்கவில்லை...

இதற்குப் பதிலடி கொடுக்காமல் இருந்தால் அவன் ஆண் மகன் அல்லவே...

அவளை உற்று நோக்கியவன், "இதுக்கே இப்படிப் பிடிக்கலைன்னு சொன்னா எப்படி...? இனி தானே எல்லாமே இருக்கு..." 'எல்லாமே' என்ற வார்த்தையை அவன் அழுத்தி

சொன்ன விதத்தில் அவள் அரண்டு போய் அவனைப் பார்த்தாள்...

"பின்னே கல்யாணம்ன்னா சும்மாவா... சும்மா கையைக் கட்டி கொண்டு உன்னை வேடிக்கை பார்த்துக் கொண்டு இருப்பதற்கா நான் உன்னைக் கல்யாணம் பண்ண நினைக்கிறேன்... கணவனாய் என் தொடுகையை நீ சகித்துக் கொள்ளத்தான் வேண்டும்... வேறு வழியே இல்லை... இதில் நான் நடிப்பதாய் இல்லை..." உதட்டை பிதுக்கி தோள்கள் இரண்டையும் அலட்சியமாகக் குலுக்கியவனைக் கண்டு அதிர்ந்து போய் நின்று இருந்தாள்...

இது போல் அவஸ்தையைத் தினமும் அவள் அனுபவிக்க வேண்டுமா...? அதை நினைக்கும் போதே அவளுக்குப் பயமாக இருந்தது...

"என்ன முட்டை கண்ணை விரிச்சு பார்க்கிற...? இது தான் நிதர்சனம்... நீ சொன்ன மாதிரி கல்யாண விசயத்தில் என்னால் நடிக்க முடியாது... பிடிக்குதோ இல்லையோ நாம கணவன், மனைவியா வாழ்ந்து தான் ஆகணும்..." என்று முறைப்புடனே அவளைப் பார்த்துச் சொன்னான்...

எதுவும் பேச தோன்றாது அவள் திரும்பி செல்ல முயன்ற போது அவனது குரல் அவளைத் தடுத்து நிறுத்தியது...

"என்ன சம்மதமா...?" அதற்கும் ஒன்று பேசாது நின்றவளை கண்டு,

"மௌனம் சம்மதத்துக்கான அறிகுறியாய் எடுத்துக்கலாமா...?" அவன் கேட்கவும் அதற்கு மேல் அங்கு நிற்க முடியாமல் வேகமாய்ச் சென்றுவிட்டாள்...

வழக்கம் போல் மூவரும் காரில் செல்லும் போது ஜான் அவளைக் கேலி செய்து ஓட்டி எடுத்தான்...

"மிருது... மேடம் இன்னைக்கு மல்லிகைப் பந்தல் கீழே ஒரே ரொமான்ஸ் தான்..."

அவன் வீட்டை விட்டு வெளியில் வரும் போது தான் மது தன் வீட்டில் இருந்து செல்வதைப் பார்த்தான்... பின்னாலேயே மல்லிகை பந்தல் கீழே இருந்து அண்ணனும் செல்வதைக் கண்டு வியப்புடன் பார்த்தான் அவன்... சம்திங் சம்திங் என்று புரிந்து கொண்டவன் மனதுக்குள் சிரித்துக் கொண்டான்... அதைச் சொல்லி தான் மதுவை கிண்டல் செய்து கொண்டு இருந்தான்...

"ஜான்..." அழுது விடுபவள் போல் மது அவனைப் பார்த்தாள்...

"ஏய்... சின்னப் பையன் நீ ரொமான்ஸ் பத்தி பேசுறது எல்லாம் ரொம்பத் தப்பு தம்பி..." மிருதுளா அவனை மிரட்டியவள் மதுவை ஆதரவாய் அணைத்து கொண்டாள்...

அவளுக்கு மித்ரேஷ், மது காதல் விவகாரம் தெரிந்ததில் ரொம்பச் சந்தோசம் அடைந்தாள்...

"நான் சின்னப் பையனா... அதுவும் என்னை விடச் சின்னப் பொண்ணு என்னைப் பார்த்து சொல்கிறாள்... எல்லாம் உன் நேரம்டா ஜான்..." தனக்குத் தானே கூறி கொண்டவனைக் கண்டு மதுவுக்கும் சிரிப்பு எட்டி பார்த்தது...

"மது... என் அண்ணனங்கிறதுக்காகச் சொல்லலை ஈஷ்வர் நல்லவன் தான்... என்ன கொஞ்சம் கோபம் அதிகம்... மத்தபடி அவன் உன்னை நல்லா வச்சுக்குவான்..." ஜான் சொன்னதைக் கேட்டு மது அமைதியாய் இருந்தாள்...

சற்று நேரத்திற்கு முன் மித்ரேஷ் சொன்ன வார்த்தைகள் அவள் காதில் ஒலித்துக் கொண்டு இருந்தது... இப்போது திருமணத்தை நினைத்து அவளுள் பயம் எழுந்தது... மனம் பொருத்தம் இல்லாமல் வெறும் உடல் பொருத்தத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு திருமணம் செய்வது என்பது எந்தளவுக்குச் சரியாக வரும்... யோசிக்க யோசிக்க அவளுக்குத் தலை வலிக்கும் போல் இருந்தது...

அவளையும் அறியாமல் அவளது கை விரல் தலையைத் தடவி கொண்டது... அந்த நொடி மித்ரேஷ் அவளது முன்னுச்சியில் பதித்த முத்திரை நியாபகம் வந்தது... இன்னமும் அந்த இடத்தில் அவனது ஸ்பரிசத்தை உணர்ந்தவளுக்கு உள்ளம் குறுகுறுத்தது... விரலால் அழுத்தி தேய்த்து அதை அழிக்க நினைக்க அது அவளால் முடியவில்லை... சோர்ந்து போய் இருக்கையில் சாய்ந்து கொண்டு வெளியில் வேடிக்கை பார்த்தாள்... மனதுக்குள் குழப்ப மேகம் முகாமிட்டது...

அன்று இரவு உணவு முடித்து விட்டு எல்லோரும் படுக்கச் சென்று விட அக்ஷய் மகளைத் தேடி அவளது அறைக்கு வந்தான்... அறைக் கதவை தட்டி விட்டு அவன் காத்திருக்க ஐந்து நிமிடங்கள் ஆகியும் மதுவிடம் இருந்து எந்தப் பதிலும் வராத காரணத்தால் அவனே கதவை திறந்து கொண்டு உள்ளே சென்றான்...

அறையில் மகளைக் காணாது திகைத்தவன் அவசரமாய்ப் பால்கனிக்கு சென்று எட்டி பார்த்தான்... அவன் நினைத்தது போல் அவனது செல்ல மகள் அங்கே தான் இருந்தாள்... ஆனால் அவள் இருந்த நிலை தான் அவன் மனதை பெரிதும் பாதித்தது...

பால்கனி ஓரமாய்த் தரையில் அமர்ந்து இருந்த மது முழங்காலில் முகம் புதைத்து இருந்தாள்... அருமை மகள் இப்படி நிர்கதியாய் அமர்ந்து இருப்பதற்குத் தானும் ஒரு காரணமோ என்று மனம் பதைபதைக்க வேகமாய் அவள் அருகில் சென்று அமர்ந்தான்...

யாரோ அருகில் அமர்வதை உணர்ந்து முகத்தை நிமிர்த்திய மது அங்கே தந்தையைக் கண்டதும், "டாட்..." என்ற கூவலுடன் அவனை அணைத்து கொண்டாள்...

அவ்வளவு நேரமும் அவள் அழுது கொண்டு இருந்து இருக்கிறாள் என்பதைத் தெரிந்து கொண்ட அக்ஷய்க்கு மிகவும் வேதனையாக இருந்தது...

"அம்மு... அப்பா இருக்கும் போது நீ இப்படி அழலாமா... உனக்கு ஏதாவது ஒண்ணுன்னா நான் சும்மா விட்டிருவேனாடா..." அவளின் முகத்தைப் பற்றி அவளது கண்ணீரை துடைத்து விட்டான்...

"டாட்..." ஏதோ சொல்ல துடித்தது அவளது உதடுகள்...

"எதுவா இருந்தாலும் தயங்காம சொல்லு..."

"நான் உங்க கிட்ட பொய் சொல்லிட்டேன்... ஆனா அதைச் சொன்னதில் இருந்து என்னால் நிம்மதியா இருக்க முடியலை... ஐம் சாரி டாட்..." தேம்பி கொண்டு சொன்னவளின் மனம் அவனுக்குப் புரிந்து போனது...

"நான் மித்துவை லவ் பண்ணலை டாட்... நீங்க எதுவும் கோபப்பட்டுப் பேசி விடுவீங்களோன்னு பயத்தில் தான் நான் அப்படிச் சொன்னேன்... மத்தபடி நான் உங்க பொண்ணு டாட்... உங்களுக்குத் தெரியாம இந்த மாதிரி காதல் எல்லாம் பண்ண மாட்டேன்..."

அவள் சொல்வதிலும் நியாயம் இருக்கிறது... மதுவிற்குக் கொஞ்சம் ஓட்டை வாய் தான்... எந்த ஒரு ரகசியமும் அவளிடத்தில் தங்காது... அதனால் அவளைச் சுற்றி நடக்கும் விசயத்தைத் தினமும் தந்தை இடத்தில் ஒப்புவிக்கா விட்டால் அவளுக்குத் தூக்கம் வராது... அப்படிப்பட்டவளா காதல் விசயத்தைத் தந்தையிடம் இருந்து மறைத்து இருக்கப் போகிறாள்...

"என் பெண்ணைப் பத்தி எனக்குத் தெரியாதா அம்மு..." என்றவனை அவள் ஆச்சிரியத்துடன் பார்த்தாள்...

"டாட்..." மகிழ்ச்சியுடன் நோக்கியவளை கண்டு புன்னகைத்தவன்,

"உன் மேல் எனக்கு நூறு சதவீதம் இல்லை இல்லை லட்சம், கோடி தடவை நம்பிக்கை இருக்கும்மா... ஏன்னா நீ அபியின் வளர்ப்பாயிற்றே..." மகளை நினைத்துப் பெருமைப் பட்டவனுக்கு அதே சமயம் மனைவியை நினைத்தும் பெருமையாக இருந்தது...

"சரி அதை விடு... உனக்கு ஈஷ்வரை பிடிச்சிருக்கா... இல்லை அவனைக் காப்பாத்த தான் அப்படிச் சொன்னியா...?"

என்ன என்று அவள் சொல்வாள்...? போட்ட பந்தயத்தில் வெற்றி பெறுவதற்காகத் திருமணம் செய்ய நினைக்கும் அவனை மனம் விரும்பியா திருமணம் செய்ய முடியும்... தந்தையிடம் கூட அந்தப் பந்தயத்தைப் பற்றிக் கூற அவளால் முடியவில்லை... வீணாய் தந்தை மனது கஷ்டப்படுமோ என்று அமைதி காத்தாள்...

"நான் உனக்குப் பார்த்த மாப்பிள்ளையா இந்த ஈஷ்வர் இருந்தா உன்னோட பதில் என்ன...?"

"டாட்..." நம்ப முடியாமல் தந்தையைப் பார்த்தாள் அவள்...

"எஸ் அம்மு... நான் உனக்கு ஈஷ்வரை தான் கல்யாணம் பண்ணி வைக்கலாம்ன்னு இருந்தேன்..."

தந்தையின் வார்த்தையில் அதுவரை மனதை உறுத்திய குற்றவுணர்வு அவளிடத்தில் இருந்து நீங்கியது... மனதின் பாரம் வடிந்து லேசானது போல் தோன்றியது...

"அப்போ தருண்...?" கேள்வியாய் பார்த்தாள்...

"அது ஒரு நாடகம்..." என்று சிரித்தவன் மித்ரேஷின் பொறாமையைத் தூண்டி விடத் தான் ஆடிய நாடகத்தைக் கூறினான்...

"இப்போ சொல்லு ஈஷ்வரை கல்யாணம் பண்ண உனக்கு விருப்பமா...?"

"ம்... ம்..." என்று முனங்கியவள் தந்தையின் தோளில் சாய்ந்து அமர்ந்தாள்...

"அவன் மேல் உனக்கு ஏதும் கோபம் இல்லையே...?"

‘இல்லை’ என்பது போல் தலையசைத்தவளை கண்டு நிம்மதியுற்றவன்,

"அம்மு... அவன் வாழ்க்கையில் ரொம்பக் கஷ்டப் பட்டுட்டான் டா... இனிமேலாவது நீ அவனைச் சந்தோசமா வச்சுக்கணும்... உன்னால் மட்டும் தான் அவனைச் சந்தோசமா வச்சுக்க முடியும்... அதனால் தான் உன்னை அவனுக்குக் கல்யாணம் பண்ணி கொடுக்க முடிவு பண்ணினேன்..." என்ற தந்தையை ஆச்சிரியமாகப் பார்த்தாள்...

"உங்களுக்கு எப்படி இது எல்லாம் தெரியும்...?"

"எப்படியோ தெரியும்...? வருங்காலத்தில் உனக்கும் தெரிய வரும்... நீ அவன் மனைவியானதுக்கு அப்புறம் அவன் உன்னிடத்தில் எதுவும் மறைக்க மாட்டான்னு நினைக்கிறேன்..." என்றவன்,

"ஏன்னா அவன் உன்னை விரும்பறான் அம்மு..."

"யாரு மித்துவா...? என்னையவா... போங்க டாட்... சும்மா காமெடி பண்ணாதீங்க..."

"இல்லை அம்மு... அவன் உன்னைக் காதலிக்கிறான்... அது எனக்கு நல்லா தெரியும்..." தருணை வைத்து தான் போட்ட நாடகத்தின் பின்னணியை அவன் கூற...

'அட போங்க டாட்... சும்மா இருந்த சிங்கத்தை இப்படிச் சொரிஞ்சு விட்டுட்டீங்களே... அவனுக்குச் சும்மாவே தருணை பிடிக்காது... இதில் நீங்க இந்தப் பந்தயத்தையும் சேர்த்து அவனுக்கு நியாபகப்படுத்தி இப்படி ஒரு சிக்கலை உண்டு பண்ணிட்டீங்களே...' மனதுக்குள் நினைத்தவள் வாய் விட்டு சொல்லவில்லை...

மித்ரேஷை நம்பும் தந்தையை ஏமாற்ற அவளுக்கு விருப்பம் இல்லை... ஆனால் அக்ஷய்க்கு நடந்த விசயம் எல்லாம் தெரியும் என்பதை அவள் அறியவில்லை...

"சரி டாட்... அப்படியே இருக்கட்டும்..." விட்டேற்றியாய் சொன்னவளை பார்த்த அக்ஷய்,

"கல்யாண வாழ்க்கையில் காதல் அவசியம் அம்மு... அதை நானும் ரொம்ப லேட்டா தான் புரிஞ்சிக்கிட்டேன்..." தனது வாழ்கையை ஒரு நொடி நினைத்து பார்த்தவனாய்...

"ஈஷ்வர் உன்னை நல்லா வச்சுக்குவான்னு எனக்கு நம்பிக்கை இருக்கு... அதே சமயம் நீயும் அவனைப் புரிந்து நடந்துக்கணும்... இன்னும் நீ சின்னப் பொண்ணு இல்லை... நாளைக்குக் கல்யாணமானா ஒரு குடும்பத்தை நிர்வகிக்கிற அளவுக்குப் பொறுப்போட இருக்கணும்... அதுக்கு நீ ஈஷ்வர் மனசை புரிஞ்சிக்கிறது ரொம்ப அவசியம்... புரிஞ்சிப்ப தானே..."

கவலையுடன் கேட்ட தந்தையைப் பார்த்து புன்னகைத்தவள், "நிச்சயமா டாட்... நீங்களே அவனை எனக்காகத் தேர்ந்து எடுத்து இருக்கீங்கன்னா அவன் சம்திங் ஸ்பெசல் தான் இல்லையா... உங்களுக்காகச் சொல்றேன்னு நினைக்காதீங்க... அவனுக்காக அவனைப் புரிந்து கொள்ள முயற்சிக்கிறேன்..."

"ஈஷ்வரை பார்த்தா கொஞ்சம் பிடிவாதம், கோபம் எல்லாம் அதிகமா இருக்கும் போல... நீ தான் அனுசரித்துப் போகணும்... உன்னோட அன்பு அவன் குணத்தை மாத்தணும் மது..."

"கொஞ்சம் இல்லை நிறைய..." இரண்டு கைகளையும் அகல விரித்துக் கொண்டு சொன்ன மகளைக் கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது...

"நானும் ஒரு காலத்தில் அப்படித் தான் இருந்தேன்... என்ன உன்னால நம்ப முடியலையா... இன்னும் சொல்ல போனால் அவனையும் விட மோசமாய்..." என்ற தந்தையைக் கண்டு அவளது விழிகள் விரிந்தது ஆச்சிரியத்தில்...

"சும்மா பொய் சொல்லாதீங்க டாட்..."

"உண்மையா தான் அம்மு... ஆனா என்னை இப்படி மாத்தினது உன் அம்மாவோட அன்பு தான்..."

"பின்னே ட்ரில் மாஸ்டர் இல்லையா அவங்க... அவங்க பேச்சு கேட்டு நீங்க மாறாம இருந்தா தான் டாட் அது அதிசயம்..." என்று கிண்டல் அடித்த மகளின் தலையில் வலிக்காமல் கொட்டிய அக்ஷய்,

"வாலு... உனக்கு உன் அம்மாவை வம்பு இழுக்கலைன்னா தூக்கம் வராதே..."

"உங்களுக்கும் உங்க பொண்டாட்டியை சப்போர்ட் பண்ணலைன்னா தூக்கம் வராதே..." அவனைப் போல் பேசி அவனைக் காலை வாரினாள் அவனது செல்ல மகள்...

"நீ சொல்ற மாதிரி உன் பொண்ணு வந்து சொல்லணும்... அந்தளவுக்கு நீ ஈஷ்வர் மேல அன்பு காட்டணும்..." என்ற தந்தையின் கை மீது தனது கையை வைத்து,

"கண்டிப்பா டாட்..." மகளின் புரிதலான வார்த்தையில் அவனுக்கு மனம் நிம்மதி அடைந்தது...

"அம்மு... நான் உன்னை ரொம்பக் கஷ்டப்படுத்துறனோ டா..."

"அப்படி எல்லாம் இல்லையே டாட்..."

"உனக்குப் பிடிச்சவனா பார்த்துக் கல்யாணம் பண்ணி வைக்காம ஈஷ்வரை கல்யாணம் பண்ண சொல்லி வற்புறுத்துகிறேனோ..." அக்ஷய்க்கு மகளைக் குறித்துக் கவலை எழுந்தது...

அதே சமயம் மித்ரேஷை எண்ணியும் மனம் வேதனை அடைந்தது... தகுதி இல்லாத காரணத்துக்காக ஒருவனது காதல் நிராகரிக்கப்படுவது என்பது எவ்வளவு பெரிய கொடுமை... அதுவும் மித்ரேஷையும், அவனது குடும்பத்தைப் பற்றியும் நன்கு தெரிந்த தான் அந்த மாதிரி நடந்து கொண்டால் தனது மனசாட்சியே தன்னை மன்னிக்காது...

அதனால் தான் மித்ரேஷ் காதல் நிறைவேற தனது மகளை அவனுக்கு மனைவியாக்க அவனும் பாடுபடுகிறான்...

அதற்காக மித்ரேஷும் எந்த விதத்திலும் குறைந்தவன் அல்ல... அவனது மருமகனாக, அவனது மகளுக்குக் கணவனாக வர எல்லாத் தகுதியும் இருக்கிறது அவனுக்கு...

"அப்படி நீங்க நினைச்சீங்கன்னா இந்த ஜென்மத்தில் என் கல்யாணம் நடக்காது... ஏன்னா நான் தான் காதலிக்கவே போறதில்லையே... எனக்கு என் அப்பா, அம்மா பார்த்து வச்ச பையனை கல்யாணம் பண்ணிட்டு அவனை மனசாரக் காதலிச்சிட்டு சேஃப்ட்டியான வாழ்க்கையை வாழணும்... இந்தக் காதல் பண்ணிட்டு அப்புறம் அதுக்காக ரிஸ்க் எடுக்கிற வேலை எல்லாம் எனக்குச் சரிப்படாதுப்பா..."

தந்தை முகம் இன்னமும் தெளிவில்லாமல் இருப்பதைக் கண்டு, "மித்துவுக்கு என்ன குறைச்சல் டாட்... அவன் எனக்குப் பொருத்தமானவன் தான்... நீங்க இந்தளவுக்கு யோசிக்க இதில் ஒண்ணும் இல்லை..." என்றவள்,

"டாட் உங்களுக்காக நான் என் கொள்கையைக் கொஞ்சம் தளர்த்தலாம்ன்னு இருக்கேன்..."

"என்ன அம்மு...?" ஆர்வமாய்க் கேட்டான் அக்ஷய்...

"நான் கல்யாணத்துக்கு முன்னாடி மித்துவை காதலிக்கலாம்ன்னு முடிவு பண்ணி இருக்கேன்..." என்று சிரித்த மகளை வாஞ்சையுடன் பார்த்தான் அக்ஷய்...

இந்தப் புரிதல் குணம் தான் மற்ற பெண்களிடம் இருந்து அவளைத் தனித்து அடையாளம் காட்டுகிறது... ஒருவேளை இதைக் கண்டு தான் ஈஷ்வரும் இவளுக்காகக் காதல் தவம் செய்கிறானோ மனதுக்குள் நினைத்துக் கொண்டான்...

மித்ரேஷின் தவத்திற்கேற்ற வரம் தான் மது என்று அவன் மனம் பெருமையாய் மகளை நினைத்தது...

"ரொம்ப யோசிக்காதீங்க டாட்... அவன் கொஞ்சமே கொஞ்சம் நல்லவன் தான்..." கலகலத்துச் சிரித்தவளிடம்,

"ரொம்பச் சந்தோசம் அம்மு... இப்பவும் சொல்றேன் உன் வாழ்க்கையில் எது நடந்தாலும் இந்த அப்பா உன் பக்கம் தான்... எதையும் மறைக்காம என் கிட்ட சொல்லணும்..."

"எஸ் டாட்..." என்று தலையசைத்தவளின் கண்கள் கலங்கியது... இந்த அன்புக்காகவாவது அவள் மித்ரேஷை மனமார ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டும்...

"குட் நைட் அம்மு..." என்ற அக்ஷய் எழுத்து செல்ல மது வானத்தைப் பார்த்துக் கொண்டு அங்கேயே அமர்ந்து இருந்தாள்...

தந்தையிடம் சொல்லியது போல் அவளால் மித்ரேஷை அவ்வளவு எளிதாய் காதலித்து விட முடியுமா...? அவளது மனது கேள்வி கேட்டது...

முடியணும்... முடிந்து தான் ஆகவேண்டும்... அவனுக்கும் அவளுக்குமான திருமணம் உறுதி செய்யப்பட்ட ஒன்று... அதை மறுக்கவும் முடியாது... அதைக் கண்டு பயந்து ஓடி ஒளியவும் முடியாது... தைரியமாக அதைச் சந்தித்துத் தான் ஆகவேண்டும்...

அதை ஏன் வெறுப்போடு எதிர் கொள்ள வேண்டும்... மனம் நிறையக் காதலோடு திருமணத்தை எதிர் கொண்டால் என்ன தவறு... தனது அன்பு, காதல் அவனது உள்ளத்தை மாற்றாதா...? அவனையும் தன்னைக் காதலிக்க வைக்காதா...?

அப்படி அவன் தன்னைக் காதலிப்பானா...? மிகப் பெரிய கேள்வி எழுந்தது அவளுள்... விடை தான் கிடைக்கவில்லை அவளுக்கு...

அடுத்து வந்த சில தினங்கள் அமைதியில் கழிந்தது... அன்று ஆதி - மிருதுளா, மித்ரேஷ் - மது திருமணம் பற்றி எல்லோரும் பேசி கொண்டு இருந்தனர்...

மித்ரேஷும் அதில் ஆர்வமாய்க் கலந்து கொண்டான்... தன்னவள் தன் துணைவியாக மாறும் அந்த அழகிய தருணத்திற்காக அவனும் ஆவலுடன் காத்து இருந்தான்...

அப்போது மது எழுந்தவள், "அண்ணா கல்யாணத்தை வேணும்ன்னா இப்போ நடத்துங்க... எங்க கல்யாணம் கொஞ்ச நாள் கழிச்சு வச்சுக்கலாம்..."

அவள் சொன்னதைக் கேட்டு மித்ரேஷ் அதிர்ந்து போனான்... திட்டமிட்டே அவள் தன்னைப் பழிவாங்குவதாய் எண்ணினான்... குமுறிக் கொண்டு இருந்த மனதை யாருக்கும் தெரியாமல் மறைத்துக் கொண்டு வெளியில் அமைதியாய் அமர்ந்து இருந்தான்...

அக்ஷய் மகளின் மனம் புரிந்தார் போன்று அமைதியாய் இருந்தான்...

கடைசியில் வரும் மாதத்தில் ஒரு முகூர்த்த நாளில் ஆதி, மிருதுளா திருமணம் முடிவு செய்யப்பட்டது...

எல்லோரும் எழுந்து சென்று விட மித்ரேஷ் எரிமலையாய் பொங்கிய கோபத்தை அடக்க முடியாமல் நேரே தோட்டத்தில் சென்று அமர்ந்தான்...

மரத்தடியில் கால் நீட்டி அமர்ந்தவனுக்கு உள்ளம் குமுறிக் கொண்டு இருந்தது...

'எவ்வளவு திமிர் இருந்தால் திருமணத்தைத் தள்ளி போடுவாள்...? அப்படி எத்தனை நாள் தள்ளி போட முடியும்...? என்றாவது ஒரு நாள் என் மனைவியாக வந்து தானே ஆகணும்... அப்போ எங்கே ஓடி ஒளிய போகிறாளாம்...? இல்லை இடைப்பட்ட காலத்தில் எங்கேனும் ஓடி ஒளிய உத்தேசித்து இருக்கிறாளா...?' அந்த நினைவே அவனது கோபத்தை அதிகரிக்கப் போதுமானதாய் இருந்தது...

"மித்து..." மது அவனைக் கூப்பிடுவது தெரிந்தும் அவன் அவளை ஏறிட்டு பார்க்கவில்லை...

அவனது கோபம் புரிந்தவளாய் அவன் அருகில் அமர்ந்தாள்...

"கோபமா இருக்கியா மித்து..."

"இல்லை ரொம்ப... ரொம்ப... சந்தோசமா இருக்கேன் போதுமா..." பற்கள் அத்தனையும் ஈ என்று இளித்துக் காண்பித்தான்...

எப்படி அவனது கோபத்தை மலை இறக்குவது என்று அவளுக்குத் தெரியவில்லை...

"நான் ஏன் கல்யாணத்தைத் தள்ளி போட்டேனா...?" அவள் சொல்லி முடிக்கும் முன்,

"ஓ... நல்லா தெரியும்... என்னைக் கழட்டி விட்டுட்டு அந்தத் தருணை கல்யாணம் பண்ணிக்கலாம்ன்னு நினைச்சு இருப்ப..." வார்த்தை எனும் கத்தியால் அவளைக் குத்தி கிழித்தான்...

எப்போதும் அவனால் காயம் அடையும் அவள் மனது இன்றும் வெகுவாய் காயம் அடைந்தது... முதலில் இருந்த மதுவாக இருந்து இருந்தால் பதிலுக்குப் பதில் பேசி அதே வார்த்தையால் அந்தக் காயத்திற்கு மருந்தும் போட்டு இருப்பாள்...

ஆனால் இன்று அவனை அவ்வாறு பேச முடியாமல் ஏதோ ஒன்று அவளைத் தடுத்தது... ஒருவேளை மனதில் எடுத்து இருந்த முடிவினால் கூட இருக்கலாம்...

"ப்ளீஸ் மித்து... புரிஞ்சிக்கோ..."

"சரி புரிஞ்சிக்கிறேன்... அப்போ கல்யாணத்துக்கு ஓகே சொல்லு..." அதற்குப் பதில் பேச முடியாமல் தயங்கியவளை கண்டு,

"உன்னால முடியாதுல்ல... அப்ப நான் சொன்னது சரி தானே..." கூர்மையாய் அவளைப் பதம் பார்த்தது அவனது வார்த்தைகள்...

அவனைப் புரிந்து கொள்ளத் தான் அவளும் கால அவகாசம் கேட்கிறாள்... அவனை மனதார காதலிக்கத் தான் அவள் கால அவகாசம் கேட்கிறாள்... அவன் கட்டும்

தாலியை மனம் நிறைந்த காதலுடன் கழுத்தில் வாங்கிக் கொள்ளத் தான் அவள் கால அவகாசம் கேட்கிறாள்...

ஆனால் அதை எல்லாம் புரிந்து கொள்ளாமல் அவன் வேண்டும் என்றே கோபத்தில் தாம் தூம் என்று குதிக்கிறானே...

அவள் என்ன செய்தால் அவன் மனம் மாறும்... அவனது கோபம் குறையும்... என்ன செய்வது என்று தெரியாமல் சற்று நேரம் அமைதியாய் அமர்ந்து இருந்தாள்...

பின் முடிவு எடுத்தவளாய் அவன் அருகில் நெருங்கி அமர்ந்தாள் அவள்... அதில் அவன் அவளைத் திரும்பி பார்த்து முறைத்தான்...

அதைக் கண்டு கொள்ளாமல் அவனது கரத்தோடு தனது கரத்தை கோர்த்தவள் அவனது கண்களை நேராய் சந்தித்து,

"சரி... உன் விருப்பப்படி நாம கல்யாணம் பண்ணிக்கலாம்... இப்ப உனக்குச் சந்தோசம் தானே..." என்றவளின் வார்த்தையில் அவன் இமைக்க மறந்து அமர்ந்து இருந்தான்...

திருமண வாழ்க்கையில் காதலை விடப் புரிந்துணர்வோடு விட்டு கொடுத்து வாழ்வது அவசியம் என்பதை அவள் வெகு சீக்கிரமாய் உணர்ந்து கொண்டாள்... இந்தப் புரிந்துணர்வு விரைவில் அவன் மீது காதலாய் மாறும் என்ற நம்பிக்கை அவளுள் எழுந்தது...

ஈர்க்கும்...

"நீ சொல்ற படி நான் கேட்கிறேன் மித்து..." மதுவின் வார்த்தையில் மித்ரேஷ் பேச்சற்று போய் அமர்ந்து இருந்தான்...

வீட்டின் மகாராணி, அக்ஷயின் செல்ல மகள் அவள் தனது விருப்பத்திற்குக் கட்டுப்படுகிறாளா...? அவனுக்கு வியப்பாய் இருந்தது... அதே சமயம் மனதுக்கு இதமாகவும் இருந்தது... அவனது கோபம் மெல்ல குறைய ஆரம்பித்தது...

"மித்து..." அவன் பதில் பேசாது இருப்பது கண்டு யோசனையுடன் அவள் அழைத்தாள்... இன்னமும் அவனது கோபம் குறையவில்லையோ என்று உள்ளுக்குள் அவளுக்குச் சற்று உதறலாகத் தான் இருந்தது...

"நீ உண்மையில் என்னைக் கல்யாணம் பண்ணிக்க விரும்புறியா...?" மெதுவாய் கேட்டான் அவன்... மறந்தும் அவள் முகத்தைத் திரும்பி பார்க்கவில்லை...

"என்னை எந்த ஒரு காரியத்தையும் வற்புறுத்தி பண்ண வைக்க முடியாதுன்னு உனக்கு நல்லா தெரியும் மித்து..." நேரிடையாய் பதில் சொல்லாமல் மறைமுகமாய்ச் சொன்னாள்...

"கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி கல்யாணம் வேண்டாம்ன்னு சொன்ன... இப்ப இப்படிச் சொல்ற...? இதுல எதை நான் நம்புறது...?"

"மித்து... யாராவது ஒருத்தர் விட்டு கொடுத்துப் போனா தான் நல்லது... இப்படி ரெண்டு பேரும் முட்டி மோதிக்கிட்டு இருந்தா அது நம்ம வாழ்க்கையையும் பாதிக்கும்... நம்மளோட பெற்றோர்களையும் பாதிக்கும்... எல்லோருடைய சந்தோசத்துக்காக நான் என்னை மாத்திக்கிறதுல எந்தத் தப்பும் இல்லை... இப்ப கூட உனக்காக, உன் சந்தோசத்துக்காகத் தான் கல்யாணத்துக்குச் சம்மதிக்கிறேன்..."

"அன்னைக்கு அப்படிப் பேசிட்டு போன... இப்ப இப்படிப் பேசுற...? அப்போ என் சந்தோசத்துக்காக எது வேணும்ன்னாலும் செய்வியா...?" ஒரு மாதிரி குரலில் கேட்டான் அவன்...

"ம்... எது வேணும்ன்னாலும் செய்வேன்..." அவனிடம் சொன்னவளை பார்த்து,

"என்ன வேணும் என்றாலுமா...?" அழுத்தி கேட்டவனை அதை விட அழுத்தமாய்ப் பார்த்தவள்,

"என்ன வேணும்ன்னாலும்..."

அவள் சொல்லி முடிக்கும் அவளது முகத்தை வலது கையால் பற்றித் தன்னருகே இழுத்தவன், "நான் கேட்கிறதை நீ மறுக்காமல் கொடுப்பியா...?"

அவன் கேட்ட விதத்தில் அவளது கண்ணில் அச்சம் படர்ந்தது... எதுவும் இடக்கு மடக்காய் அவன் கேட்டு விட்டால்...??? அதை நினைக்கும் போதே அவளது மேனி அதிர்ந்தது... உள்ளம் குலுங்கியது...

அதே நேரம் தந்தை சொன்ன வார்த்தைகளும் அவளது காதில் ஒலித்தது...

'வாழ்க்கையில் அவன் ரொம்பக் கஷ்டப்பட்டுட்டான்... உன்னால் மட்டுமே அவனைச் சந்தோசமா வச்சுக்க முடியும்...'

அடுத்த நொடி கொஞ்சமும் யோசிக்காது சம்மதமாய்த் தலையை ஆட்டினாள்...

"அப்போ இங்கே ஒரு முத்தம் கொடு பார்க்கலாம்..." என்று அவன் தனது உதட்டை சுட்டி காட்டினான்...

அவனாய் முத்தமிட்டால் கூட அவள் மனதை சமன்படுத்திக் கொண்டு அவனுக்கு உடன்படுவாள்... ஆனால் அவளாய் எப்படி அவனிடம் செல்வாள்... மிகவும் தயக்கமாய் இருந்தது அவளுக்கு... முத்தம் கொடுக்காவிட்டால் மீண்டும் கோபம் கொள்ளவானோ என்ற பயமும் அவளை அலைக்கழித்தது...

காதல் செய்வது இவ்வளவு கொடுமையாக இருக்குமா... அவளுக்கு அத்தனை கஷ்டமாய் இருந்தது...

அவளையே பார்த்துக் கொண்டு இருந்த அவனின் பார்வையில் வேறு வழியின்றி அவன் முகம் அருகே தன் முகத்தைக் கொண்டு சென்றவள் அடுத்து தான் செய்யப் போகும் காரியத்தில் உடல் நடுங்க கண்களை இறுக மூடி கொண்டவள் மனதுக்குள்,

'ஒன்... டூ... த்ரீ...' என்று எண்ணி கொண்டு வந்தவள் மூன்று எண்ணியதும் அவனது உதட்டின் மீது தனது உதட்டை பொருத்தும் நேரம் அவனது கை இரு உதட்டுக்கும் இடையில் வந்து தடுப்பு சுவராய் தடுத்து நின்றது...

அதில் கண்களைத் திறந்தவள் கலக்கமாய் அவனைப் பார்த்தாள்... அவளது விழிகளில் தெரிந்த கலக்கத்தைக் கண்டு அவன் மனதுக்குள் அத்தனை வேதனைப்பட்டான்... அவளைக் கலங்க செய்வதற்காகவா அவன் அவளை உருகி உருகி காதலித்தது... இத்தனை போராட்டங்களைப் போராடி அவளைக் கைப்பிடிக்க நினைத்து அதில் வெற்றிப் பெற்றது...

காதலித்தவரை காதல் காயப்படுத்தாது... ஆனால் தான் அவளை எந்தளவிற்குக் காயப்படுத்தி இருக்கிறோம் என்பதை அந்நேரம் உணர்ந்தான் அவன்...

இத்தனை நாள் அவளைக் காதலிக்கிறேன் என்று அவன் சொன்னாலும் ஒரு நாளும் அவளையோ, அவளின் மனதையோ அவன் புரிந்து கொண்டு நடந்தது இல்லை... எப்போது அவளுடன் பேசினாலும் ஒரே சண்டை தான், சச்சரவு தான்... இன்று தான் அவளது விழி மொழியைப் படித்தான் நல்ல காதலனாய்...

அவனது அமைதி அவளுள் கலவரத்தை உண்டு பண்ணியது...

"மித்து..." அவனை அழைத்தவள்,

"நீ சொன்ன மாதிரி நம்ம கல்யாணம் பொம்மை கல்யாணம் மாதிரி பொய் இல்லையே விளையாடுவதற்கு... இது இரு வீட்டோட சந்தோசம்... நம்ம ரெண்டு பேரோட சந்தோசம்... இதுல பொய்யாய் நடிக்க நானும் விரும்பலை..." தீர்க்கமாய்ப் பேசியவளை கண்டு அவன் மனதில் என்ன மாதிரி உணர்ந்தான் என்று அவனுக்கே தெரியவில்லை...

"நான் மனதார தான்..." அதை எப்படி அவனிடம் சொல்வது என்று அவளுக்குத் தெரியவில்லை...

அவளது வார்த்தையில் மித்ரேஷ் சிறிது நேரம் ஒன்றும் பேசாமல் அமர்ந்து இருந்தான்...

மது திருமண வாழ்க்கைக்குத் தயாராகி விட்டாள் என்பது தெரிந்ததுமே இத்தனை நாள் அவனது மனதை ஆட்டுவித்துக் கொண்டு இருந்த சஞ்சலம் முழுமையாய் அகன்றுவிட்டது...

தனக்காக எதையும் இழக்கத் தயாராக இருக்கும் அவளின் செயல் அவனை உலுக்கி எடுக்கத்தான் செய்தது... இதை விட வேறு என்ன வேண்டும் அவனுக்கு...

ஒன்றும் பேசாது எழுந்தவன் அவள் எழுவதற்காகத் தன் கையை அவளின் முன் நீட்டினான்... யோசனையுடன் அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டு அவனது கையைப் பற்றியபடி எழுந்தாள் அவள்...

"மித்து... கோபமா... நான் தான் சரின்னு சொல்றேன்ல..." என்றவளின் உதட்டில் மேல் விரல் வைத்து தடுத்தவன்,

"உன் விருப்பப்படி நம்ம கல்யாணத்தைக் கொஞ்ச நாள் கழிச்சு வச்சுக்கலாம்..." என்றவன் அவளது பதிலை எதிர்பாராமல் சென்றுவிட்டான்...

செல்லும் அவனைப் பார்த்துக் கொண்டு இருந்தவளுக்கு அவனின் வார்த்தை அத்தனை மகிழ்ச்சியை ஏற்படுத்தியது...

அவன் அவளது வார்த்தைக்கு மதிப்பு கொடுத்து பேசியது அத்தனை ஆச்சரியமாய் இருந்தது அவளுக்கு...

முதல் முறையாய் இருவரும் சண்டை போடாமல் சமாதானமாய்ப் பேசி இருக்கிறார்கள்... ஏன் என்று அவள் யோசிக்கும் போதே அதற்கு விடையும் கிடைத்தது...

இன்று தான் அவளும் அவனது வார்த்தைக்கு மதிப்பு கொடுத்த சமாதானமாய்ப் பேசி இருக்கிறாள்... அதனால் தான் அவனும் அவளைப் புரிந்து கொண்டு பேசிவிட்டுச் செல்கிறான்...

அதுவும் அவள் திருமணத்தைத் தள்ளி போட்டதற்கான காரணத்தைக் கூட விசாரிக்காமல், அதைப் பற்றி ஆராயாமல் அவளின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு அவன் பேசியது அவளுக்கு மிகவும் பிடித்து இருந்தது...

'ம்... மது இதுவும் நல்லா தான் இருக்கு... லவ் இல்லைன்னா என்ன... இந்த மாதிரி சின்னச் சின்னப் புரிதல் உன் வாழ்க்கையைச் சந்தோசமாக வச்சிருக்கும்...' மனதுக்குள் நினைத்தவள்,

"மித்து... நீ கொஞ்சமே கொஞ்சம் நல்லவன் தான்டா..." என்று வாய் விட்டு சொன்னவள் தனது வீட்டிற்குச் செல்ல துவங்கினாள்...

அங்கே தனது அறைக்கு வந்த மித்ரேஷும் மனதுக்குள் உற்சாகமாய் உணர்ந்தான்... அவனது உற்சாகத்திற்குக் காரணம் மது என்றால் அது மிகையில்லை...

'என்னவாயிற்று இவளுக்கு...? என்னவெல்லாமோ பேசுகிறாள்...? எனக்காக எதையும் செய்வியாடி அம்மு... நான் என்ன கேட்டாலும் தருவியா...? எப்படி இப்படி ஒரு மாற்றம் உன்னிடத்தில் வந்தது...? எது எப்படியோ நீ இந்த மாதிரி பேசும் போது எனக்கு எவ்வளவு சந்தோசமா இருக்கு தெரியுமா...?' மனதில் நினைத்தவன் சந்தோசத்துடன் படுக்கையில் சாய்ந்தான்...

அவன் மனதில் இருந்த தாழ்வு மனப்பான்மை, எங்கே அவள் தனக்குக் கிடைக்க மாட்டாளோ என்ற பயம் எல்லாமும் சேர்த்து அவனை அவளிடத்தில் காதலை கூடக் கோபமாய்க் காட்ட வைத்து விட்டது... அவளும் அவனைப் புரிந்து கொள்ளாமல் பேசியது அவனது ரணமான மனதுக்கு இன்னமும் வேதனையை அளித்தது... ஆனால் அது எல்லாம் இன்று அவள் புரிந்து கொண்டு பேசியதில் சூரியனை கண்ட பனித்துளி போல் மாயமாய் மறைந்து போய்விட்டது...

"ஐ லவ் யூ அம்மு..." சொல்லியவன் மனக்கண்ணில் வெள்ளைச் சிரிப்புடன் அவனவள் தோன்றி அவன் மனதை கொள்ளை கொண்டாள்...

அத்தனை நாள் இருந்த மனவருத்தம் மறைந்தது இருவருக்கும்...

அவளின் மனம் அவனுக்குத் தெரியாது... அவனின் மனம் அவளுக்குத் தெரியாது... ஆனாலும் ஒருவருக்காக ஒருவர் புரிந்து கொண்டு விட்டு கொடுத்து வாழ முடிவு செய்து விட்டனர்... காதலின் முதல் படியும் அது தானே...

****

மறுநாள் காலையில் வழக்கம் போல் மித்ரேஷ் வேலையில் மூழ்கி இருந்த சமயம் அவனது அலைப்பேசி அழைத்தது... மது என்றதும் வேகமாய் அதை உயிர்ப்பித்தான்...

"மித்து..." ரகசியம் பேசுவது போல் ஒலித்தது அவளது குரல்...

"சொல்லு மது..."

"இங்கே என் பிரெண்ட் வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு கும்பல் யாருக்கும் தெரியாமல் விபசாரத்தில் ஈடுபடுறாங்க... அங்கே வர்ற கஸ்டமர் எல்லாம் பெரிய பெரிய பணக்காரர்கள், நல்ல பதவியில் உள்ளவர்களாம்... அதனால் அவங்களை ஒண்ணும் பண்ண முடியலை... நீ

உடனே ஆக்சன் எடு மித்து... இவங்களால அந்த ஏரியாவில் இருக்கிற மத்தவங்களையும் தப்பா பார்க்கிறாங்க..."

அவள் சொல்லி முடித்ததும் அவனது முகம் ஆத்திரத்தில் இறுகி போனது...

"நான் பார்த்துக்கிறேன்... நீ ஃபோனை வை..." என்றவன் அதற்கான நடவடிக்கையை உடனே மேற்கொண்டான்...

அவன் ஐபிஎஸ் பயிற்சி முடித்துப் பதவி ஏற்ற நாளில் இருந்து இந்த மாதிரி விபச்சாரத்தில் ஈடுபடுகிறவர்களை எல்லாம் துரத்தி துரத்தி பிடித்தான்... யாரையோ பழிவாங்க முடியாதவனாய் அவன் வெறிக் கொண்டு செயல்பட்டான் இந்த விசயத்தில்...

இதுவரை நூற்றுக்கணக்கான பெண்களை மறுவாழ்வு இல்லத்தில் சேர்த்து இருக்கிறான்... சிலருக்குக் கைத்தொழில் செய்வதற்கு உதவி செய்து இருக்கிறான்... அந்தப் பெண்களின் முகத்தில் தன்னம்பிக்கையான சிரிப்பை காணும் போது அவனுக்கு அத்தனை மகிழ்ச்சியாய் இருக்கும்...

அந்நேரம் தான் படித்த படிப்பு வீண் போகவில்லை என்றே அவனுக்குத் தோன்றும்... மண்ணில் பிறவி எடுத்தற்குத் தான் நியாயம் செய்துவிட்டதாய் எண்ணினான்...

இங்குச் சென்னைக்கு மாற்றலாகி வந்தும் அந்தப் பணியை அவன் விடாமல் செய்து கொண்டு தான் இருந்தான்...

எத்தனையோ குற்றவாளிகளைப் பிடித்து இருக்கிறான், எத்தனையோ பேரை என்கவுண்ட்டர் என்ற பேரில் சுட்டு கொன்று இருக்கிறான்... நாட்டின் புற்று நோயான குற்றவாளிகளை அவன் களை எடுத்த போது எல்லாம் வராத நிம்மதி நகரத்தில் விபச்சார ஒழிப்பை செயலில் கொண்டு வரும் போது தான் அவனுக்குக் கிடைத்தது... அதில் அவனுக்கு ஆத்ம திருப்தி ஏற்பட்டது என்றே சொல்லலாம்...

மது சொன்னது போல் அந்த வீட்டை கண்டுபிடித்து முற்றுகையிட்ட போது அங்குப் பட்டப் பகலில் ஜோராக விபச்சாரத் தொழில் நடந்து கொண்டு இருந்தது... உடனே செயலில் இறங்கி அத்தனை பேரையும் கையும் களவுமாகப் பிடித்த போது மாட்டிக் கொண்ட பெண்கள் பத்து பேரும் வேறு மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் என்றால் அவர்களோடு இருந்த ஆண்கள் பத்து பேரும் நகரத்தில் பெரிய புள்ளிகள் மற்றும் பெரிய புள்ளிகளின் வாரிசுகள்...

இந்த மாதிரி காவல்துறையில் திடீர்சோதனை செய்தாலும் அதில் பெரும்பாலும் மாட்டி கொள்பவர்கள் பெண்கள் தான்... உடலை விற்ற பாவத்திற்கு அவர்கள் கைது செய்யப்பட்டு, செய்தித்தாளில் புகைப்படம் போட்டு பிறகு நீதிமன்றத்தில் நிறுத்தி பணம் கட்டி வெளியில் வர வேண்டும்... எல்லோருக்கும் காட்சி பொருளாய் அவர்கள் இருப்பது ஒன்றும் புதிது அல்ல... இது தினப்படி நடவடிக்கை என்பதால் யாரும் இதைப் பெரிதாக எடுத்து கொள்ளவில்லை...

ஆனால் அவர்கள் மித்ரேஷை பற்றி அறியாதவர்கள் அதனால் அவ்வாறு நினைத்தனர்...

ஆண்கள் அனைவரும் தங்கள் பணம், பதவி பலத்தைக் கூறி தப்பிச் செல்ல நினைக்க மித்ரேஷ் அமைதியாக நின்று இருந்தான்...

சற்று நேரத்தில் செய்தியாளர்கள் வரிசையாக வர எல்லா ஆண்களும் திகைத்து போயினர்...

மித்ரேஷ் செய்தியாளர்களைப் பார்த்து, "எப்போதும் எந்த ஒரு செயல் செய்தாலும் பாதிக்கப்படுவது பெண்கள் தான்... அதில் விபச்சாரத்தில் ஈடுபடும் பெண்களின் நிலை மிகவும் மோசம்... எல்லாப் பெண்களும் இதில் விரும்பி இறங்குவது இல்லை... சமய சந்தர்ப்ப சூழ்நிலையால் தான் அப்படிப் பாதிக்கப்படுகின்றனர்... இனிமேலாவது அவர்களைப் புகைப்படம் எடுத்து உங்கள் பத்திரிக்கையில் போட்டுப் பத்திரிக்கை விற்பனையைப் பெருக்காமல் இதோ அதை ஊக்குவிக்கும் இந்த மாதிரியான

ஆண்களைப் புகைப்படம் எடுத்துப் போடுங்கள்... இதைப் பார்த்தாவது இனி எந்த ஒரு ஆண்மகனும் பெண்களைப் போகப் பொருளா பார்க்கிறதை நிறுத்தணும்... இந்த மாதிரி விபச்சார விடுதிக்கு வர்றதை தவிர்க்கணும்..."

"இந்தப் பெண்கள் இப்படித் தொழில் பண்றதால தானே இந்த மாதிரி நடக்குது... பெண்கள் கிட்ட தப்பு இல்லாத மாதிரி நீங்க பேசுறீங்க..." துணிந்து ஒருவன் குரல் கொடுக்க...

"நாளடைவில் அது அவங்களுக்குப் பழகி போய் இதே தொழிலில் இருக்கலாம்... ஆனால் எதற்கும் முதல் தடவை என்று உண்டு இல்லையா... அந்த முதல் தடவை வராமல் தடுப்பதற்காகத் தான் நான் இதைச் சொல்வது..." அழுத்தி சொல்லியவன் அங்கிருந்த அனைத்து ஆண்களையும் புகைப்படம் எடுக்க அனுமதித்தான்... அதற்குத் துணை போன தரகர்களையும் அவர்களோடு சேர்த்து நிற்க வைத்தான்...

ஆனால் ஒரு பெண்களையும் புகைப்படம் எடுக்க அவன் அனுமதிக்கவில்லை...

அன்றிரவு மது வந்து அவனைப் பாராட்டிய போதும் அவன் ஒன்று பேசாமல் மரமாய் நின்று இருந்தான்...

'என்னாச்சு இவனுக்கு...? என்னைய திட்டுறதுக்காகக் கூட வாயை திறக்க மாட்டேங்கிறானே...' அவளும் அவனைப் புதினமாய்ப் பார்த்துக் கொண்டு சென்றுவிட்டாள்...

மறுநாள் பிடிப்பட்ட அத்தனை ஆண்களின் புகைப்படமும் நாளிதழில் வந்து இருந்தது... அதில் ஒருவன் வரதராஜன்... நகரத்தில் பெரும் பணக்காரன்... நிறையச் செல்வாக்கு உடையவன்... அத்தனை இருந்தும் மித்ரேஷ் முன்னால் எதுவும் செல்லுபடியாகாமல் போனது அவனுக்கு...

அவனை அந்தளவுக்கு மிகவும் கேவலப்படுத்தி விட்டான் மித்ரேஷ்... அதைக் கண்டு அவனது மனைவியும், இரு

மகள்களும் அவமானம் தாங்க முடியாமல் தற்கொலை செய்து கொண்டனர்...

முடிந்தது எல்லாம் முடிந்தது... மூவருக்கும் காரியம் பண்ணிவிட்டு வீட்டில் வந்து அமர்ந்த வரதராஜனுக்கு அங்குச் சூழ்ந்து இருந்த தனிமை பெரிதாய் அச்சுறுத்தியது...

வரதராஜன் பெண் விசயத்தில் சபலம் உள்ளவன் தான் என்றாலும் குடும்பத்தின் மீது பாசம் உள்ளவன்... அதுவும் மனைவியை விட இரு மகள்கள் மீது உயிரையே வைத்து இருந்தான்... அவர்கள் முன் தன் நிலை தாழ்ந்து போனதை எண்ணி அவன் வருந்தும் போதே அவர்களை இழந்தது அவனுக்குப் பேரதிர்ச்சியாக இருந்தது...

நம் நாட்டில் இது போல் வரதராஜன்கள் தான் ஏராளம்... தன் வீட்டுப் பெண்ணைப் பூட்டி வைத்து போற்றும் அவர்கள் அடுத்த வீட்டுப் பெண்ணைப் போகப் பொருளாய் பார்க்க தவற மாட்டார்கள்... இருட்டில் மட்டுமே வீரம் பேசும் கோழைகள் அவர்கள்...

அவர்களுக்கு எல்லாம் மித்ரேஷ் மாதிரி ஆட்கள் தான் சரி... அவர்களின் தோலை உறித்துச் சமுதாயத்தின் முன் இப்படி வெளிச்சம் போட்டுக் காட்டினால் தான் இனி மேல் ஒருவனுக்கும் தவறு செய்யும் தைரியம் வராது...

எல்லா ஆண்களுமே நல்லவர்கள் என்றால் நாட்டில் விபச்சாரத் தொழில் கொடி கட்டி பறப்பது ஏன்...? எல்லாப் பெண்களும் தன் கணவன் நல்லவன் என்று எண்ணும் போது காமம் தீர்க்க விலைமாதுவை தேடி போகும் ஆண்கள் எல்லாம் யார்...? நிச்சயம் அவர்கள் வீட்டில் அவர்கள் நல்ல மகனாக, நல்ல கணவனாக, நல்ல தந்தையாகத் தான் இருப்பார்கள்...

மித்ரேஷை பொருத்தவரை தவறு ஆண்கள் பக்கம் இருந்து தான் ஆரம்பிக்கிறது என்பதில் தெளிவாக இருந்தான்... அதனால் தான் அவர்களை வெறிக் கொண்ட

வேங்கையாய் வேட்டை ஆடினான்... இன்னும் ஆடுவான்... அது அவன் உயிர் உள்ள வரை தொடரும்...

வரதராஜனின் கோபம் எல்லாம் மித்ரேஷ் மீது திரும்பியது...

"என் குடும்பத்தைச் சின்னாப்பின்னாமாக்கிட்டல்ல... உன்னை விட மாட்டேன்டா..." வெறியோடு நினைத்தவன் மனதில் மித்ரேஷை பழிவாங்கும் எண்ணம் பற்றி எரிந்தது...

அன்று திருமணத்திற்காக உடைகள் எடுப்பதற்காக எல்லோரும் குடும்பத்துடன் வெளியில் வந்து இருந்தனர்... எல்லாம் மதுவின் பிடிவாதத்தின் பேரில் தான் கடைக்கு வந்து இருந்தனர்... எந்தப் பொருள் வாங்க வேண்டும் என்றாலும் அந்தக் கடையை வீட்டிற்கு வரவழைக்க அக்ஷய் தயாராக இருந்த போதும் மது நிர்தாட்சண்யமாய் அதை மறுத்து விட்டாள்...

"போங்க டாட்... நாலு சுவத்துக்குள்ள உட்கார்ந்துட்டு ஷாப்பிங் பண்றதுல என்ன இன்ரஸ்ட் இருக்கு... நாலு கடை ஏறி இறங்கி செலக்ட் பண்ணினா தான் ஷாப்பிங் போன திருப்தி இருக்கும்..." என்ற செல்ல மகளை அதற்கு மேல் மறுத்து பேச அக்ஷயால் முடியுமா... அவன் உடனே சம்மதித்தான்...

அதனால் சின்னவர்கள் ஐவரும் அபி, அனியுடன் வந்து இருந்தனர்... தந்தையர் மூவரும் ஏதோ ஒரு வேலையைச் சொல்லி தப்பித்துக் கொண்டனர்...

பொதுவாக நிஷா அவ்வளவாக வெளியில் வருவது இல்லை... தனது பாவத்தின் நிழல் பிள்ளைகள் மீது விழுவதை அவள் விரும்பவில்லை... அதை உணர்ந்தார் போன்று விக்டரும் அவளை வற்புறுத்த மாட்டான்... அவனும் இந்த மாதிரி வெளியில் செல்வதை அவளுக்காகத் தவிர்த்து விடுவான்...

பெண்கள் நால்வரும் புடவையைப் பார்த்துக் கொண்டு இருக்க ஆதி மித்ரேஷுடன் பேசி கொண்டு இருந்தான்...

ஜான் அவர்கள் அருகில் அமர்ந்து அமைதியாக வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தான்...

மிருதுளாவிற்கான முகூர்த்த புடவையை எடுப்பதற்காகப் பட்டு சேலைகளைக் கொண்ட வர சொல்லி அதை எல்லாம் எடுத்து அவள் மீது வைத்து அழகு பார்த்துக் கொண்டு இருந்தனர் அபி மற்றும் அனி...

நட்பாகக் காலம் முழுவதும் வாழ்வதற்காகத் தான் இந்தத் திருமணம் என்றாலும் வாழ்க்கையில் ஒரு முறை வரும் இந்த நிகழ்விற்கான உடையை ஆதித்யாவின் விருப்பத்திற்கு எடுக்க வேண்டும் என்று மிருதுளாவின் காதல் மனம் தவித்தது... அதற்காக அவனை அழைக்கவும் அவளால் முடியவில்லை...

நட்பாய் இருப்பேன் என்று உறுதி அளித்து விட்டு இப்படி அவனை அழைத்தால் என்ன நினைப்பானோ இல்லை இந்தத் திருமணமே வேண்டாம் என்று மறுத்து விட்டால் என்ன செய்வது... மனம் கலங்கியவள் ஆதியை திரும்பி திரும்பி பார்த்துக் கொண்டு இருந்தாள்...

ஏதேச்சையாகத் திரும்பி பார்த்த ஆதி தன்னைப் பார்த்துக் கொண்டு இருந்த மிருதுளாவின் பார்வையில் யோசனையில் ஆழ்ந்தான்...

"ஈஷ்வர்... இதோ வந்துடறேன்..." என்றபடி அவன் எழுந்து மிருதுளா அருகே சென்றான்...

"ம்ஹூம்... காதலி கடைக்கண் பார்வையில் எல்லாவனும் துண்டைக் காணோம் துணியைக் காணோம்ன்னு பயந்து போய் ஓடுறாய்ங்க... ஜான் வருங்காலத்தில் நீயும் இப்படி மாறிவிடாதே... பீ ஸ்ட்ராங் மேன்..."

ஜான் பேசியதை கேட்டு மதுவின் மீது பார்வையை நிலைக்க விட்டு இருந்த மித்ரேஷ் அவசரமாய்க் கண்களை விலக்கி கொள்ள அதைக் கண்டு பொங்கி வந்த சிரிப்பை அடக்கி கொண்டு மறுபக்கமாய்த் திரும்பி அமர்ந்த ஜான் குலுங்கி குலுங்கி சிரித்தான்...

அவனை முறைக்க முயன்று தோற்ற மித்ரேஷ் விட்ட தன் பணியைச் செவ்வனே செய்ய ஆரம்பித்தான்...

ஆதி மிருதுளா அருகே வந்து, "பட்டு... அந்தக் கலர் உனக்குச் சூட் ஆகலை... இந்தக் கலர் நல்லா இருக்கும்... இதை வச்சு பாரு..." அவள் கையில் இருந்ததை எடுத்து விட்டு தான் எடுத்ததை அவள் கையில் திணித்தான்...

மருமகள் மீதான மகனின் அக்கறையைப் பெருமையுடன் பார்த்துப் பூரித்துப் போனாள் அபி... தந்தையைப் போல் உருவத்தில் மட்டும் அல்லாது குணத்திலும் தந்தையைக் கொண்டு இருப்பவனைக் கண்டு 'இவன் என் மகன்' என்று தாயாய் கர்வம் கொண்டது அவளது தாய் மனம்...

அனிக்கும் இந்தக் காட்சியைக் கண்டு மிகவும் சந்தோசமாய் இருந்தது...

"ம்... நல்லா இருக்கு மாமா..." அவன் கொடுத்த புடவையைப் பார்க்காமல் அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டு தலையாட்டிய அவளின் செயல் அவன் மனதை கரைத்தது...

"உனக்கும் பிடிச்சு எடுக்கணும் பட்டு... எனக்காக உன் விருப்பத்தை மாத்திக்கக் கூடாது..."

"உங்களுக்காக என்னையே மாத்திக்குவேன் மாமா... என் விருப்பத்தை மாத்திக்க மாட்டேனா...?"

'எனக்காக வாழ்க்கையை விட்டு கொடுக்கும் அளவுக்கு அப்படி என்ன என் மீது காதல் உனக்கு...?' அவனது மனம் கேள்வி எழுப்பியது...

"அப்போ நான் இதையே எடுக்கவா...?" ஆர்வத்துடன் கேட்டவளை கண்டு அவனது தலை தானாய் சம்மதமாய் ஆடியது அவனையும் அறியாமல்...

சந்தோசமாய் அந்தப் பட்டுப் புடவையை எடுத்து கொண்டாள் மிருதுளா... ஆதியும் அவளது மகிழ்ச்சிக்காக அவளை விட்டு எங்கும் போகவில்லை... அவள் புடவை எடுத்து முடிக்கும் வரை உடன் இருந்தான்... பின்னர்

அவனுக்கு உடை வாங்குவதற்காக அவளை அழைத்துப் போனவன் அவளது விருப்பத்திற்கு வாங்கவும் மறக்கவில்லை...

அவள் தேர்ந்து எடுத்துக் கொடுத்த கோட் சூட்டை அணிந்து வந்து அவள் முன் நின்றவன்,

"எப்படி இருக்கு...?" என்றான் மாடல் போல் தன்னை முன்னும் திருப்பிக் காண்பித்து...

ஆடர் நீல நிற கோட் சூட்டில் கம்பீரமாய் இருந்த அவனது அழகு தோற்றம் அவளது மனதில் பசுமையாய்ப் பதிந்தது...

"சூப்பர்..." முகம் மலர்ந்து சொன்னவளின் வார்த்தையில் அவனது முகமும் மலர்ந்தது...

அவளது ஒற்றைப் பாராட்டு அவனை அந்தளவுக்குக் குளிர்வித்தது...

"பொய் சொல்லையே..." ஆனாலும் வேண்டும் என்றே அவன் சந்தேகமாய் அவளைப் பார்க்க...

"அய்யோ... நிஜமா மாமா..." என்று கண்கள் கலங்க பதறியவளை கண்டு அவனுள் தோன்றிய உணர்வு புதிதாய் இருந்தது...

"உங்களுக்கு என்ன மாமா... உண்மையில் நீங்க அழகு தான்..."

அத்தனை நாள் தனது தோற்றத்தை பற்றிச் சிந்திக்காதவன் இப்போது அங்கு இருந்த கண்ணாடியில் தன் உருவத்தைப் பார்த்தான்...

"நான் உண்மையைத் தானே சொன்னேன்..." அவன் அருகில் வந்து சொன்னவளை கண்ணாடி வழியே ஏறிட்டவன்,

"உன்னை விட அப்படி ஒண்ணும் நான் அழகாய் இல்லை..."

அவனது வார்த்தைகள் பனி மலைச் சாரலாய் அவளது நெஞ்சில் சில்லென்று ஊடுருவியது...

பதில் பேசாது நின்று இருந்தவளை மீண்டும் ஏறிட்டு பார்த்தவன் கண்ணாடியில் தெரிந்த இருவரது தோற்றத்தையும் பார்த்து கண்ணிமைக்க மறந்தான்...

உலகில் உள்ள எல்லா மனிதனின் அடி மனதின் தேடலும் அன்பு தான் போலும்... ஆதியின் ஆழ்மனது தேடல் மிருதுளாவின் அன்பின் மூலம் நிறைவுற வேண்டும் என்பது தான் ஆண்டவன் கணக்கோ...

"அம்மு... சீக்கிரம் ஏதாவது ஒண்ணை எடு... அடுத்து வேறு நிறைய வாங்க வேண்டி இருக்கு..." அபி மகளை அவசரப்படுத்தினாள்...

"எல்லாமே நல்லா தான் இருக்கு... இதில் எதை எடுக்க..." மது மலைப்பாய் தன் முன் குவிந்து இருந்த புடவை குவியலை கண்கள் விரிய பார்த்துக் கொண்டு இருந்தாள்...

"ஜான் இங்கே வா..." அவள் ஜானை அழைக்க... மித்ரேஷ் அமைதியாய் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தான்...

ஜான் அருகில் வந்ததும், "நீயே செலக்ட் பண்ணுடா..." மது சொல்ல...

அவனோ ஒவ்வொரு புடவையாய் அவள் மீது வைத்து, "இது டிசைன் நல்லா இல்லை... இது கலர் நல்லா இல்லை..." என்று சொல்லி மித்ரேஷை வெறுப்பேற்றிக் கொண்டு இருந்தான்...

ஒரு கட்டம் வரை பொறுத்து பார்த்த மித்ரேஷ் அதற்கு மேல் பொறுக்க முடியாதவனாய் இருவர் அருகிலும் வந்தவன் அங்கிருந்த புடவைகளில் ஒன்றை தேர்ந்து எடுத்து மதுவிடம் நீட்டி,

"இதைத் தான் நீ எடுக்கணும்..." என்றான் உத்தரவாய்...

"அய்யே... இந்தக் கலர் எனக்குப் பிடிக்கலை..." மது எப்போதும் போல் விளையாட்டுத்தனமாய்க் கூற அதில்

முகம் சுருங்கியவனாய் மித்ரேஷ் ஒன்றும் பேசாது புடவையை வைத்து விட்டு திரும்பி சென்றான்...

மது கண்களால் ஜானிடம், 'என்ன...?' என்பது போல் சைகை செய்ய... அவனோ 'எனக்கு எதுவும் தெரியாது...' என்று தோளை குலுக்கினான்...

"அம்மு... நீ புடவையைச் செலக்ட் பண்ணிட்டு வா... நாங்க ஜென்ட்ஸ் செக்சன் போகிறோம்..." என்று அபி, அனி எழுந்து சென்று விட...

ஜான் மதுவிடம், "நீ இன்னும் வளரணும் பேபி..." என்று கிண்டல் அடித்தபடி அபி பின்னால் சென்றுவிட்டான்...

மது மித்ரேஷ் எடுத்து கொடுத்த புடவையைக் கையில் வைத்து பார்த்தவள் பின் அவனைத் திரும்பி பார்த்தாள்... அவன் அவளைப் பார்க்காமல் வேறு எங்கோ பார்த்துக் கொண்டு இருந்தான்...

அவள் புடவையைக் கையில் தாங்கி கொண்டு அவன் பக்கம் வந்து அவன் முன் வந்து நின்றவள்,

"சாரி மித்து..." அதற்குப் பதில் பேசாமல் அவன் இருக்க...

"நான் இந்தப் புடவையை எடுத்துக்கிறேன்... நீ கோபம் மட்டும் படாதே..." அவளின் வார்த்தையில் அவன் அவளைத் திரும்பி பார்த்தான்...

"ப்ளீஸ் மித்து... கோபப்படாதே..." அவள் சொன்னதில் அவனது கோபம் மட்டுப்பட்டது...

கோபம் என்று இல்லை சிறு வருத்தம் தான்... அதுவும் அவள் ப்ளீஸ் போட்டதில் அப்படியே காணாமல் போய்விட்டது...

அவள் மீது ஊடுருவும் பார்வையைச் செலுத்தியவன் தீர்க்கமான குரலில்,

"நீ கட்டும் புடவையில் இருந்து நீ செய்யும் ஒவ்வொரு விசயத்திலும் என்னோட விருப்பம் இருக்கணும்..." அவனது

ஆளுமையான வார்த்தையில் அவள் பிரமித்துப் போய் நின்றாள்...

"ஏன்னா நீ எனக்கு மட்டும் சொந்தமானவள்..."

அவனின் சொந்தமான அந்த வார்த்தைகள் அவளுள் சுகமாய் இறங்கியது... இது ஒன்று போதாதா அவளுக்கு...

காதலை கூடக் கடுமையாய்க் காட்டினான் அந்தக் காவல்துறை அதிகாரி...

வரதராஜன் முன் மித்ரேஷ் குடும்பப் பின்னணி அடங்கிய கோப்பு இருந்தது... அதில் இருந்த அவனது குடும்பப் புகைப்படத்தை எடுத்து பார்த்தவன் அதிர்ந்து போனான்... பின் மெல்ல அவனது முகத்தில் எள்ளல் சிரிப்பு வந்து அமர்ந்தது...

"டேய் மித்ரேஷ் இப்போ உன் குடுமி என் கையில்டா..." என்று வாய்விட்டு சிரித்தவனின் முகம் விகாரமானது...

ஈர்க்கும்...

"மித்து..." தன் முன் குதித்துக் கொண்டு வந்து நின்ற மதுவை பார்த்து முறைத்த மித்ரேஷ்,

"உனக்கு எத்தனை தடவை சொல்றது இப்படிக் குதிக்காதேன்னு...?" என்று கடிய...

அதில் அவளது முக மலர்ச்சி மறைய அமைதியாய் திரும்பி நடக்க முயன்றவளின் கையைப் பிடித்துத் தடுத்து நிறுத்தியவன்,

"எதுக்குக் கூப்பிட்ட சொல்லு...?"

"ஒண்ணும் இல்லை... சும்மா தான்..." என்றவள் அமைதியாய் இருக்க...

"பொய் சொல்லாதே... நான் கேட்டா உண்மையான பதில் சொல்லணும்..."

"உண்மையில் ஒண்ணும் இல்லை தான்... என் கையை விடு..."

"சொன்னால் தான் விடுவேன்..." வம்படியாய் பிடிவாதம் பிடித்தவனை நோக்கி திரும்பியவள் தன் கைகள் இரண்டையும் அவன் முன் விரித்துக் கண்பித்தாள்...

அவன் புரியாமல், "என்ன...?" என்றான்...

அவள் கோபத்தில் அவனை உறுத்து விழித்தவள் தன் கைகளை அவன் முகத்திற்கு நேரே தூக்கி பிடித்துக் காண்பித்தாள்...

அப்போதும் அவனுக்கு ஒன்றும் புரியவில்லை...

"என்னன்னு சொல்லுடி...? நீ என்ன ஊமையா சைகையில் பேசுறதுக்கு...?"

"போடா ட்யூப் லைட்... உன் கிட்ட போய் நான் காட்ட வந்தேன் பாரு... என்னைச் சொல்லணும்... போடா..." என்று சிலிர்த்துக் கொண்டு அவள் கிளம்ப முயன்றாள்...

அவள் கூறியதில் அவனுக்குப் பல்ப் துரித கதியில் எரிய வேகமாய் அவள் முன் வந்து வழி மறிப்பது போல் நின்றவன் அவளின் கையைப் பிடித்துத் தூக்கி பார்த்தான்...

"ஹய்யோ... லைட் ரொம்பப் பிரகாசமா எரியுதே..." என்று அவனைக் கிண்டல் அடித்தவள் இரு கரங்களின் உள்ளங்கையைச் சேர்த்து வைத்து அவனிடத்தில் நீட்டினாள்...

இடது கையில் பாதி இதயம் மருதாணியினால் வரையப்பட்டு அவளின் பெயர் எழுதி இருக்க, வலது கையில் பாதி இதயம் வரையப்பட்டு அவனின் பெயர் எழுதி இருக்க இரண்டு கைகளையும் சேர்த்து வைத்து பார்க்கும் போது ஒரே இதயத்தில் இருவரின் பெயரும் இணைந்து

எழுதி இருந்தது போல் பார்க்க அத்தனை அழகாக இருந்தது...

அவளின் வெள்ளை நிற கைகளில் மருதாணி சிவப்பில் அவர்களது பெயர்களும் எடுப்பாய் அழகுற தெரிந்தது...

அதைக் கண்டு மனம் நெகிழ அவன் அவளை நிமிர்ந்து பார்க்க,

"நல்லா இருக்கா மித்து..."

அவன் ஆமோதிப்பாய் தலையசைத்தான்...

"சில்க்கி அண்ணா பெயரை அவள் கையில் வரைஞ்சாளா அதைப் பார்த்து நானும் உன் பெயரை வரைஞ்சிக்கிட்டேன்... அழகா இருக்குல்ல..." சிறு பிள்ளையின் குதூகலத்துடன் சொன்னவளை கண்ணிமைக்காமல் பார்த்தவன் சட்டென்று அந்தக் காரியத்தைச் செய்தான்...

அவளது கையை மென்மையாகப் பற்றியவன் அவளது உள்ளங்கையில் தன் இதழை ஒற்றினான்...

அவனது செய்கையில் மனம் குறுகுறுக்க நின்று இருந்த மது அந்த உணர்வை தாங்க முடியாது தன் கையை அவனின் பிடியில் இருந்து இழுத்து கொண்டவள் அடுத்த நொடி அங்கிருந்து ஓடி விட்டாள்...

"பார்த்துடி குண்டு பூசணிக்கா... நீ ஓடுற வேகத்தில் வீடு இடிஞ்சு விழுந்துடாம..." அவனது கேலி அவளைத் துரத்திய போதும் ஒன்றும் பேசாது அவள் சென்றுவிட்டாள்...

இருவரது பெயரையும் இணைத்து மருதாணி இட்டுக் கொண்ட மதுவின் உள்ளங்கை அவன் கண் முன் நிழலாடியது... மனதுக்குள் மகிழ்வாய் உணர்ந்தவன் தன் வீட்டிற்குள் சென்றான்...

வீட்டிற்கு வந்து தான் மதுவின் வேகம் மட்டுப்பட்டது... நேரே தனது அறைக்கு வந்து கட்டிலில் அமர்ந்தவளுக்கு ஓடி வந்ததில் மூச்சு வாங்கியது...

திடீரென்று அவன் அப்படிச் செய்ததில் அவள் கொஞ்சம் அதிர்ந்து தான் போனாள்...

அன்று முத்தமிட்ட போது என்ன மாதிரி உணர்ந்தாளோ அந்த மாதிரி ஒரு உணர்வு இப்போதும் அவளைத் தாக்கியது... சிறிது நேரம் அவள் மூளை வேலை செய்ய மறுத்தது...

தன் உள்ளங்கையை விரித்து வைத்து பார்த்தவளுக்கு அவனது இதழ் ஸ்பரிசத்தின் குறுகுறுப்போடு, அவனது மீசையின் குறுகுறுப்பும் சேர்ந்து அவளை இம்சை செய்தது...

முதல் முறையாய் அவளது முகத்தில் வெட்கத்தின் சாயல்...

தனது இரு கரம் கொண்டு முகத்தை மூடி கொண்டவள் மனதில் படபடப்பு மட்டும் அடங்கவே இல்லை... மனதுக்குள் ஆயிரம் பட்டாம்பூச்சி ஒன்று சேர்ந்து பறப்பது போல் அத்தனை பரவசமாய் இருந்தது...

'இது என்ன புது அவஸ்தை...' அவளது உள்ளம் நிலை கொள்ளாமல் தவித்தது...

அன்று அவன் மீது இருந்த வருத்தத்தில், கோபத்தில் அவனது இதழ் ஒற்றலை பற்றிப் பெரிதாய் ஆராயாமல் இருந்தவள் இன்று அதைப் பற்றி எண்ணி எண்ணி இன்பத்தில் சுகமாய்த் திளைத்தாள்...

பரவசமும் சந்தோசமும் கலந்த மனநிலையைத் தாங்க முடியாதவளாய் கட்டிலின் தலைப்பகுதியில் சாய்ந்து கண்களை மூடியவள் கண்ணில் மித்ரேஷின் புன்னகை முகமே வலம் வர... அதில் விதிர்த்துப் போய்க் கண்களைத் திறந்தவள் மனதில் அவனது எண்ணங்களே நிறைந்து இருந்தது...

அன்று முழுவதும் அவனது நினைவுகளே அவளை அவஸ்தை செய்து அவளைக் கொல்லாமல் கொன்றது... அந்த அவஸ்தைக்குப் பெயர் தான் என்னவென்று அவளுக்குத் தெரியவில்லை...

அதை யாரிடம் கேட்பது என்றும் அவளுக்குத் தெரியவில்லை...

நிலை கொள்ளாமல் அங்கும் இங்கும் சுற்றிக் கொண்டு இருந்தவளை ஜான் பிடித்து வைத்து, "மது... என்ன உன் முகம் தெளசண்ட் வாட் பல்ப் போட்ட மாதிரி வெளிச்சமா இருக்கு...?" என்று விசாரித்தான்...

"அது..." என்று இழுத்தவள், "ஒண்ணும் இல்லைடா..." என்று அவளது வாய் சொன்னாலும் அவளது முகச்சிவப்பு அவளின் மனதை அப்பட்டமாய்க் காட்டி கொடுத்து எட்டப்பன் வேலையைச் செவ்வனே செய்தது...

"சம்திங்... சம்திங்..." என்று ராகம் போட்டவனைத் தோளில் அடித்தவள்,

"என்னடா சம்திங்... சம்திங்..." என்று கோபமாய்க் கேட்க...

"அல்லிராணியான உன்னையும் காதல் நோய் தாக்கி விட்டதே..." அங்கலாய்ப்பது போல் அவன் அவளைக் கிண்டல் அடித்தான்...

"போடா உளறாதே..." என்று அவள் அங்கிருந்து நகர்ந்தாள்...

ஆனாலும் மனதில் அவன் கூறிய வார்த்தைகளே மீண்டும் மீண்டும் நியாபகம் வந்தது...

'இது தான் காதலா...?' தனக்குத் தானே கேள்வி கேட்டு கொண்டவளுக்குக் காதலே விடையாய் வர அதில் இன்னமும் தடுமாறி போனாள்...

'மித்துவின் மீது எனக்குக் காதலா...? இது எப்போது இருந்து...? எப்போது பார்த்தாலும் என்னைத் தேடி வந்து வம்பிழுத்துச் சண்டை போடும் அவன் மீது எனக்கு எப்படிக் காதல் வந்தது...? அவன் பிரிந்து சென்ற இந்த ஏழு வருடங்களாக அவனை நினைத்து நினைத்து வருந்தி அந்த வருத்தமே காதலாய் மாறி போனதோ... இல்லை டாட் எனக்குப் பார்த்த மாப்பிள்ளை என்கிற உரிமையில்,

உறவில் வந்த காதலா... இல்லை அவனை மனதார ஏற்றுக் கொள்ள நான் எடுத்த முயற்சியின் விளைவா...?' எது என்று அவளால் உறுதியாய் கூற முடியவில்லை...

ஆனால் முன்பு மித்ரேஷ் மீது இருந்த கோபம் இப்போது இல்லை என்றே சொல்லலாம்... இப்போது எல்லாம் அவனைப் பார்த்தாலே ஒருவித படபடப்பு தான் அவள் மனதை ஆக்கிரமிக்கிறது...

ஒன்று மட்டும் புரிந்தது அவள் மனதில் அவளது மித்து அவளையும் அறியாமல் நுழைந்து விட்டான் என்று... உணர்ந்த செய்தி அவள் மனதை சந்தோசத்தில் ஆழ்த்தியது...

இதோ அதோ என்ற ஆதித்யா, மிருதுளா திருமணம் நாளை வந்தே விட்டது... ஏனோ மிருதுளாவிற்கு மனம் சரியில்லாதது போல் தோன்றியது... ஒருவித பயம் அவள் மனதை ஆட்டுவித்தது... தான் செய்யப் போகும் காரியம் எந்தளவிற்குச் சரியாய் வரும் என்று...

மனம் நிறையக் காதலை வைத்துக் கொண்டு ஆதியுடன் ஒரே அறையில், அவனது அருகாமையில்... நினைக்கும் போதே அவளுக்கு மூச்சு மூட்டியது... நண்பனை வேண்டுமானால் காதலனாய் பார்க்கலாம்... ஆனால் காதலனை எப்படி நண்பனாய் பார்க்க முடியும்... அவளுக்கு மனதுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது...

ஆனால் அவனது நிழலில் காலம் முழுவதும் வாழ்வதற்கு இதை விட்டால் அவளுக்கும் வேறு வழியில்லையே...

தான் கொடுத்த வாக்குறுதியை அவளால் காப்பாற்ற முடியுமா...? அது அவளுக்கே சந்தேகமாக இருந்தது...

ஏனோ ஓவென்று அழ வேண்டும் போல் இருந்தது அவளுக்கு... மெல்ல எழுந்தவள் மொட்டை மாடிக்கு வந்தாள்... யாரும் இல்லாத தனிமை இருளில் அவளது துக்கம் பொங்கி கொண்டு எழுந்தது... சுவரோரமாய் அமர்ந்தவள் கதறி அழ துவங்கினாள்...

அதே நேரம் ஆதிக்கும் மனம் பாரமாய் இருக்க அவனும் மொட்டை மாடிக்குச் சென்றான்... மூன்று வீடுகளும் தனித்தனியாக இருந்த போதும் மொட்டை மாடிப்பகுதி மட்டும் மூன்று வீட்டுக்கும் இணைக்கப்பட்டு இருந்தது...

முதலில் அவன் அவளைக் கவனிக்கவில்லை... வானில் உலாவிய நிலாவை ஏறிட்டு பார்த்துக் கொண்டு இருந்தவனுக்கு மனதில் ஒருத்தியை நினைத்துக் கொண்டு இன்னொருத்திக்கு எப்படித் தாலி கட்டுவது என்று மனம் கூச செய்வதறியாது நின்று இருந்தான்...

திருமணம் அதன் பின் வரும் நிகழ்வுகள் என்று அவனது அனைத்து கற்பனையும் இதுநாள் வரை பிருந்தாவை சார்ந்து இருந்தது... ஆனால் இப்போது அந்த இடத்தில் மிருதுளாவை வைத்து பார்க்க அவனது மனது சம்மதிக்க மறுத்தது...

பொம்மை திருமணம் என்ற போதும் அவன் தாலி கட்டி மிருதுளாவை மனைவியாக ஏற்றுக் கொள்வது ஒன்றும் பொய் இல்லையே... அவன் சாகும் வரை அவள் தான் அவன் மனைவி... அவனில் பாதி... அதை யாராலும் மறுக்க முடியாதே...

என்ன முயன்றும் அவனால் திருமணத்தை விளையாட்டு பொருளாய் எடுக்க முடியவில்லை... அதற்கு என்று ஒரு மதிப்பு இருப்பதைத் தன் பெற்றோரின் வாழ்க்கையைக் கொண்டு அவன் உணர்ந்து இருந்தான்... அப்படிப்பட்ட பாசக் கூட்டில் இருந்து வந்தவன் இந்த மாதிரி செய்வது அவனுக்கே சற்று அவமானமாய் இருந்தது...

அப்போது அவனது காதில் விசும்பல் ஒலி கேட்க திரும்பி பார்த்தான்... 'யார் அழுவது...?' சுற்றும் முற்றும் கண்களை ஓட்டியவன் அங்கு ஒரு ஓரமாய் மிருதுளா முழங்காலில் முகம் புதைத்து அமர்ந்து இருப்பதைக் கண்டான்...

'பட்டு இங்கே என்ன செய்கிறாள்...?' என்று நினைக்கும் போதே அழுகை ஒலி காதில் விழ அவளை நோக்கி விரைந்தான்...

"பட்டு..." அவள் அருகில் சென்று அழைக்க...

திடுமென ஒலித்த அவனது குரலில் பதறி போய்த் தலையை நிமிர்த்தியவள் அங்கு ஆதியை கண்டதும்,

"மாமா... நீங்களா...?" என்றபடி எழ முயல...

"வேண்டாம்... உட்காரு..." என்றவன் தானும் அவள் அருகே அமர்ந்தான்...

"பட்டு... நீ அழுகிறாயா..." அவனது கேள்வியில் அவள் தன் கண்களைத் துடைத்து கொண்டாள்...

"இல்லையே..." என்று அவள் சிரிக்க... அவளது சிரிப்புக் கண்களை எட்டவில்லை... மெல்லிய விளக்கு ஒளி கசிந்ததில் அது அவன் கண்ணில் இருந்தும் தவறவில்லை...

அவனது கரங்கள் அவளது விழிகளைத் துடைத்து விட்டது...

"என்னடா பிரச்சினை...?" அவன் கேட்டதில் அவள் விழிகள் மீண்டும் உடைப்பெடுத்தது...

"ச்சு... என்ன பட்டு..." என்று அவளைக் கடிந்தவன் அவளை ஆதரவாய் தன் தோளில் சாய்த்துக் கொண்டான்...

அவளது முதுகு மௌனமாய்க் குலுங்கியது அழுகையில்... அவளது அழுகை ஓயும் வரை அவன் அவளது முதுகை நீவி கொண்டு இருந்தான்...

அவளது அழுகைக்கான காரணம் அவனுக்குப் புரிந்து தான் இருந்தது...

தன்னிடத்தில் இவ்வளவு அன்பு வைத்து இருக்கும் அவளது அழுகைக்குத் தான் காரணமாகி விட்டோமே என்று அவனுக்கு வருத்தமாய் இருந்தது...

அவளது அழுகையை நிறுத்தும் சக்தி அவனுக்கு இல்லையே என்று அவன் மனம் பரிதவித்தது... ஆனால்

அவளுக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்று அவனது உள்ளம் பரபரத்தது...

'என்ன செய்வது...?' என்ற கேள்வி அவன் மனம் முழுவதும் வியாபித்து இருந்தது...

அதே சமயம் 'என்ன செய்ய முடியும்...?' என்ற கேள்வியும் அவனுள் எழாமல் இல்லை...

அவள் வேறு எதையும் கேட்டால் கூட அவன் அள்ளி அள்ளி கொடுக்கத் தயாராகத் தான் இருக்கிறான்... ஆனால் அவள் அவனது காதலை அல்லவா கேட்கிறாள்... அது இன்னமும் அவனிடத்தில் இருக்கிறதா என்ன...?

"பட்டு... ப்ளீஸ் அழாதே... நாம ரொம்ப நேரம் இங்கே இருக்க முடியாது... யாராவது பார்த்தா வம்பா போயிடும்..."

அவனது வார்த்தையில் அவள் நிமிர்ந்தாள்...

"நீங்க போங்க மாமா..."

ஆனால் அவனால் அவளைத் தனியே விட்டு விட்டு செல்ல முடியவில்லை... அழுது கரையும் அவளின் நிலை அவனுக்குப் பரிதாபமாய் இருந்தது...

"நீயும் வீட்டுக்கு போ..." அவன் சொல்லவும் அவள் மெல்ல எழுந்தவள்,

"குட் நைட் மாமா..." என்றபடி அவள் நடக்க அவன் அவளையே பார்த்துக் கொண்டு நின்று இருந்தான்...

அவனுக்காகப் பார்த்து பார்த்து அவனது மனம் நோகாமல் அவள் நடந்து கொள்ளும் விதம், அவனை ஆர்வமாய்ப் பார்க்கும் அவளது பார்வை, அவனுக்கு ஒன்று என்றால் மனம் கலங்கி போகும் அவளது நல்ல மனம் என்று அவனது மனதில் மிருதுளாவின் எண்ண ஊர்வலமே...

தனக்காக வாழும் அவளுக்காகத் தான் என்ன செய்யப் போகிறோம்... மிகப் பெரிய கேள்வி அவன் மனதில் எழுந்தது...

இரவு எல்லாம் யோசித்தவன் விடியலின் தறுவாயில் ஒரு முடிவுக்கு வந்தான்...

திருமண நாள் அன்று மித்ரேஷ் எடுத்து கொடுத்த புடவையை அணிந்து கொண்டு கண்ணாடியில் தன்னைப் பார்த்த மது பிரமித்துப் போனாள்...

இளஞ்சிவப்பு மற்றும் தங்க நிறமும் கலந்து இருந்த பட்டுப் புடவையில் கொடி போல் தங்க சரிகைகள் உடல் எல்லாம் இழையோட மிகவும் அழகாக இருந்த அந்தப் புடவை அவளது உடலில் வெகுபாந்தமாய்ப் பொருந்தி இருந்தது...

அவள் எடுத்து இருந்தால் கூட இந்தளவுக்குச் சரியாய் தேர்வு செய்து இருப்பாளோ என்னமோ...

'டேய் மித்து... உன் செலக்சன் சூப்பரா தான்டா இருக்கு... அன்னைக்கு சரியா பார்க்காம பிடிக்கலைன்னு சொல்லிட்டேன்... இப்போ அதை வாபஸ் வாங்கிக்கிறேன்...' அவனை மனதுக்குள் மெச்சி கொண்டவள்,

'ஆனாலும் எனக்கு ஒரு சந்தேகம்டா... உனக்குள்ள எப்படி இப்படி ஒரு ரசிகன் இருக்கான்னு... ஒருவேளை பொண்ணுங்களை ரொம்பச் சைட் அடிப்பியோ... ம்... யார் கண்டா... நீ பண்ணினாலும் பண்ணுவ... அதான் இவ்வளவு அழகா செலக்ட் பண்ணி இருக்க... ஆனா இனிமேல் யாரையாவது அப்படிப் பார்த்த உன் கண்ணு முழி ரெண்டையும் நோண்டிருவேன்... சொல்லிட்டேன்...'

அவள் மனதுக்குள் பேசி கொண்டு இருக்கும் போது அவளது அலைப்பேசி அழைத்தது...

"என்ன மாம்...?" அபி தான் பேசினாள்...

"அம்மு கிளம்பிட்டியா...?"

"இல்லை மாம்... இன்னும் கொஞ்சம் டச்அப் வேலை இருக்கு..." கண்ணாடியில் பார்த்தபடி முகத்துக்குப் பவுண்டேசன் பூசி கொண்டு இருந்தாள்...

"இதுக்குத் தான் மிருது கூடச் சேர்ந்து ப்யூட்டி பார்லர்ல இருந்து வர்றவங்க கிட்ட மேக்கப் போட சொன்னேன்... கேட்டா தானே..."

"மாம்... அவங்க பேய் மாதிரி மேக்கப்பை அள்ளி பூசி விட்டிருவாங்க... தன் கையே தனக்கு உதவி... என் கையே எனக்கு உதவி..."

"சரி அப்போ நாங்க எல்லோரும் கிளம்பறோம்... நீ ஜான் கூட வந்திரு..."

அபி சொன்னதும் சரி என்றபடி மது அலைப்பேசியை அணைத்தவள் தன் ஒப்பனையை ஆரம்பித்தாள்...

"ஜான்... நீ இருந்து அம்முவை அழைச்சிட்டு வாப்பா... நாங்க முன்னாடி போறோம்..."

"சரி அத்தை..." ஜான் சொல்ல...

"ஏன் அத்தை... நான் மதுவை கூட்டிட்டு வர மாட்டேனா... ஏன் என் கிட்ட சொல்ல மாட்டேங்கிறீங்க...?" மித்ரேஷின் குரலில் அபி திகைத்து போய் அவனைப் பார்த்தாள்...

கடந்த ஏழு வருடங்களாக அவள் ஜானை தான் எந்த ஒரு உதவிக்கும், ஒத்தாசைக்கும் கூப்பிட்டுப் பழக்கம்... அந்தப் பழக்கத்தில் தான் அவள் அப்படிச் சொன்னது...

"யார் மறந்தாலும் நீங்க என்னை மறக்கலாமா அத்தை..." மித்ரேஷின் குரலில் அவளது கண்கள் கலங்கியது...

அவன் சொல்வதும் உண்மை தானே... அவன் இங்கிருக்கும் வரை மூச்சுக்கு முன்னூறு தடவை அவனை அழைப்பவள் அவள் தானே... வீட்டில் எது சமைத்தாலும் சரி, ஆதிக்கு எந்த உடை எடுத்தாலும் சரி அதில் மித்ரேஷிக்கும் ஒரு பங்கு எடுத்து வைப்பவள் அவளாயிற்றே... அப்படிப்பட்டவள் எப்போது அவனை மறந்தாள் அவளுக்கே அது தெரியவில்லை...

ஏழு வருடம் பிரிந்து இருந்ததாலா இல்லை மீண்டும் அவன் திரும்பி வந்த போது அவன் பதவி கொடுத்த

மரியாதையாலா ஏனோ அவள் அவனிடம் மனம் விட்டு பேச முடியாமல் போனது...

கண்கள் கலங்க அவன் அருகே சென்றவள் அவனின் கன்னம் தடவி, "ஆதி போல் நீயும் எனக்கு இன்னொரு மகன் தான்ப்பா... இந்த அத்தை உன்னை எப்பவும் மறந்தது இல்லை... ஏதோ தெரியாம பண்ணிட்டேன்... மன்னிச்சுக்கோப்பா..." அவள் மனமுவந்து மன்னிப்பு கேட்க...

"என்ன அத்தை... நீங்க போய் என் கிட்ட மன்னிப்பு எல்லாம் கேட்டுட்டு..." அவளை அன்பாய் கடிந்தவன்,

"நீங்க கிளம்புங்க... நான் மதுவை கூட்டிட்டு வர்றேன்..." என்று அவன் அவர்களை வழியனுப்பி வைத்துவிட்டு மதுவிற்காகக் காத்திருக்கலானான்...

மது கிளம்பியவள் ஜானை தேடி அவனது வீட்டிற்குச் சென்றாள்...

"ஜான் மேரி ஜான்..." வழக்கம் போல் கத்தி கொண்டே உள்ளே வந்தவள் அங்கு வரவேற்பறையில் அமர்ந்து இருந்த மித்ரேஷை கண்டு தயங்கி நின்றாள்...

இத்தனை நாள் அவனை நேரில் கண்ட போது அவனைச் சாதாரணமாய் எதிர் கொண்டவளால் இன்று அவனை அப்படிச் சாதாரணமாய் எதிர் கொள்ள முடியவில்லை...

மனதில் கள்ளத்தனமாய்ப் புகுந்த காதல் அவனது முகத்தைப் பார்க்க விடாமல் தடுக்க நாணத்தில் தலை குனிந்து அவள் நின்றாள்...

"அவன் உன்னோட ஜான்னா... அப்போ நான் யார்...?" வெகு அருகில் கேட்ட மித்ரேஷின் குரலில் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தவள் அவன் தன் அருகில் நிற்பதை கண்டு திகைத்து போனாள்...

"சொல்லு நான் யார்...?" அவன் மீண்டும் கேட்டதில் அவளது முகம் செவ்வானமாய்ச் சிவந்து போனது...

அவனைக் காண முடியாது தன் கண்களை வேறுபக்கம் அலைப்பாய விட்டாள்...

அவளின் முகச்சிவப்பை அதிசயமாய்ப் பார்த்தவன் அப்போது தான் அவளை நன்கு கவனித்தான்...

தான் தேர்ந்து எடுத்த புடவையில் அலங்காரம் செய்து அழகுற நின்று இருந்தவளின் அழகு அவனின் சித்தத்தைத் தடுமாறச் செய்தது...

தன்னை மறந்து அவளது அருகில் அவன் செல்ல... அவனின் வருகையை உணர்ந்து அவள் பின்னால் நகர அவனோ அவளது இடையில் கை கொடுத்து தன்னருகே இழுத்தான்...

இடையில் பதிந்த அவனது கரத்தின் ஸ்பரிசம் அவளை மெழுகாய் உருக செய்தது...

"அம்மு..." கிறக்கமாய் வந்தது அவனது குரல்...

"ம்..." அதை விடக் கிறங்கி போய் ஒலித்தது அவளது குரல்...

"அழகா இருக்கேடி..."

"உண்மையா...?"

"சத்தியமா அம்மு..."

"உனக்கு என்னைப் பிடிச்சியிருக்கா மித்து..."

"ம்... ரொம்ப..." அவனது வார்த்தையில் அவள் அவனை ஏறிட்டு பார்த்தாள்...

"என்னைக் குண்டு பூசணின்னு சொல்லுவ... இந்தக் குண்டை பிடிச்சியிருக்கா உனக்கு...?"

"அது தான்டி உனக்கு அழகு... ஆனா இப்ப கொஞ்சம் மெலிஞ்ச மாதிரி இருக்கு..." என்றபடி அவனது இரு கைகள் அவளது இடையை அளவு எடுத்தது...

"உனக்கு நான் குண்டா இருக்கிறது பிடிக்கலைன்னு வெயிட் குறைக்கிறேன்... தினமும் வேலை முடிஞ்சு ஜிம்முக்கு போய்ட்டு தான் வீட்டுக்கு வருவேன்... இது யாருக்கும் தெரியாது..." கண்களை உருட்டி ரகசியம் பேசியவளை கண்டு அவனது மனம் மயங்கியது...

“எனக்காகவா...?” கிசுகிசுப்பாய் கேட்ட அவனது குரலில் அவளது மனமும் மயங்க,

“உனக்காகத் தான்...”

“ஏன்...?”

“தெரியலை...” உதட்டை பிதுக்கியவளை கண்டு அவனது மனம் உற்சாகம் ஆனது...

ஏனென்று தெரியா விட்டாலும் தனக்காகத் தன்னை மாற்றிக் கொள்ளும் அவளது அன்பு அவனைச் சுண்டி ஈர்த்தது அவள் புறமாய்...

"யேய் லூசு அது விளையாட்டுக்குச் சொன்னது... அதை எல்லாம் உண்மைன்னு நம்பிருவியா...?" அவன் அவளது நெற்றியை முட்டினான் விளையாட்டாய்...

இருவரது மனதிலும் இருந்த காதல் இருவரையும் மனம் விட்டு பேச வைத்தது... ஆனால் அதை இருவரும் உணரவில்லை... அவளின் சகஜமான பேச்சை பற்றி அவன் யோசிக்கவில்லை... அவனது மனம் திறந்த பேச்சு அவளது மூளையில் ஏறவில்லை... இருவரும் அவரவர் மனதில் தகித்த காதல் வெப்பத்தில் குளிர் காய்ந்து கொண்டு இருந்தனர்...

"போடா நீ தான் லூசு... இதுக்காக என் வாயை கட்டி, வயத்தைக் கட்டி... ம்ப்ச்... ரொம்பக் கஷ்டப்பட்டேன் தெரியுமா... நான் சரியா சாப்பிட்டு முழுசா ஒரு மாசமாகப் போகுது..." என்று ஒற்றை விரல் நீட்டி பரிதாபமாய்ச் சொன்னவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது...

"இனி நோ டயட்... ஓகேவா..." அவன் சொல்ல... அதில் அவளது முகம் மலர்ந்தது... பின் முகம் கூம்பியவள்,

"இல்லை அன்னைக்கு மாதிரி நீ கிண்டல் அடிப்ப... மணவறை சரிஞ்சிரும் அப்படி இப்படின்னு..."

"அப்படியே சரிஞ்சா என்ன... ஐபிஎஸ் ட்ரையினிங் எதுக்கு எடுத்து இருக்கேன்... பாய்ஞ்சி வந்து உன்னைத் தூக்கிர மாட்டேன்..." என்றான் சின்னச் சிரிப்புடன்...

"நிஜமா...?"

"நிஜமா..." அவளது முகத்தோடு முகம் வைத்து தன் மூக்கின் நுனியால் அவளது மூக்கின் நுனியை உரசியவனின் செய்கையில் அத்தனை நேரம் இருந்த இயல்பு நிலை அவளிடம் இருந்து சொல்லாமல் கொள்ளாமல் விடைப்பெற,

"ப்ளீஸ் மித்து... கொஞ்சம் தள்ளி நில்லேன்..."

"ம்ஹூம்... முடியாது..."

"அங்க மண்டபத்துல நம்மளை தேட போறாங்க..."

"நீ மட்டும் சரின்னு சொல்லி இருந்தா இன்னைக்கு நம்ம கல்யாணமும் சேர்ந்து நடந்து இருக்கும்..." மெல்லிய பெருமூச்சுப் புறப்பட்டது அவனிடத்தில் இருந்து...

"இப்போ வேணும்ன்னா நாம கல்யாணம் பண்ணிக்கலாமா...?" என்றவளை கூர்ந்து பார்த்தவன்,

"உனக்குச் சம்மதம்ன்னா சொல்லு நான் ரெடிப்பா..."

சம்மதமாய்த் தலையசைத்தவளை ஆச்சிரியமாய்ப் பார்த்தவன் அடுத்த நொடி அவளது மலர் முகத்தைக் கையில் ஏந்தி,

"உனக்கு என்னமோ ஆச்சு... அன்னைக்கு என்னடான்னா எல்லாத்துக்கும் சரின்னு சொல்ற... இப்ப கல்யாணம் பண்ணிக்கலாம்ன்னு சொல்ற..."

அவனின் பேச்சிற்கு அவளிடத்தில் இருந்து மௌனமே பதிலாய் வர...

"இருந்தாலும் இந்த அம்முவை எனக்குப் பிடிச்சு தான் இருக்கு... ஐ லக் யூ அம்மு..."

அப்படிச் சொன்னவனை இமைக்காது பார்த்தவள் அடுத்து, 'ஐ லவ் யூ அம்மு' என்று சொல்ல மாட்டானா என்று ஏக்கத்துடன் பார்த்தாள்...

அந்நேரம் அவனது அலைப்பேசி அழைத்தது... அபி என்றதும் மதுவை விட்டு விலகி தள்ளி நின்றவன்,

"சொல்லுங்கத்தை..." என்றான் பவ்யமாக...

அவனது பவ்யத்தைக் கண்டு மனதுக்குள் சிரித்தபடி நின்று இருந்தாள் மது...

மித்ரேஷ் எப்போதும் அப்படித் தான்... அவளைக் கண்டால் கோபமாய்க் கத்துபவன் அபியிடத்தில் மட்டும் அத்தனை பவ்யமாய்ப் பேசுவான்...

"இதோ கிளம்பிட்டோம்..." என்றவன் அலைப்பேசியை அணைத்து விட்டு,

"அம்மு வா போகலாம்..." என்றபடி அவளை அழைத்துக் கொண்டு கிளம்பினான்...

திருமண மண்டபம் வரும் வரை மௌனமே ஆட்சி செய்தது...

மது காரில் இருந்து இறங்கும் முன் அவனைப் பார்த்தவள், "ஆனாலும் மித்து நீ சுத்த வேஸ்ட்டுடா..." என்று கலகலத்து சிரித்தவள் காரில் இருந்து இறங்க முயல...

அவள் இறங்க முடியாமல் அவளது சடையைப் பிடித்து இழுத்து இருந்தான் மித்ரேஷ்...

"ஷ்... வலிக்குதுடா..." என்றபடி அவள் பழைய மாதிரி இருக்கையில் அமர...

"என்னடி பழசை எல்லாம் மறந்துட்டியா..." அவனது பேச்சில் அவள் கலவரமாய் அவனை ஏறிட்டாள்...

அவனது முகமோ குறும்பாய் அவளைப் பார்த்தது... அவன் தன் கையில் இருந்த அவளது சடையைச் சுட்டி காட்டி சிரித்தான்... அதில் நிம்மதி அடைந்தவள்,

"ம்க்கும்... நீ பிடிச்சு இழுக்கத்தான் நான் முடி வளர்க்கிறேன் பாரு... போடா..." என்றவள் மனதில் தினமும் முடியை வாரும் போது அவனது நினைவு எழுவது இப்போது நியாபகத்தில் வந்தது...

"சரி எதுக்கா வேணும்ன்னாலும் இருந்துட்டு போகட்டும்... என்னை ஏன் சுத்த வேஸ்ட்டுன்னு சொன்ன...?"

அவள் பதில் பேசாமல் மாட்டிக் கொண்ட உணர்வில் திருதிருவென விழித்தாள்...

அவளது முகம் அருகே குனிந்தவனை அவள் ஒருவித திகிலோடும், எதிர்பார்ப்போடும் பார்த்துக் கொண்டு இருக்க அவனோ அவளின் கன்னம் பற்றி மென்மையாய் முத்தமிட்டவன்,

"இதுக்கு மேலே போக ஆசையா தான் இருக்கு... ஆனா அது இப்போ வேண்டாம்... நம்ம கல்யாணம் முடியட்டும் நான் வேஸ்ட்டா இல்லை யூஸ்புல்லான்னு நீயே பிராக்டிக்கலா தெரிஞ்சுக்குவ..."

அவனது பேச்சில் முகம் சிவந்தவள், "ச்சீ... அசிங்கமாய்ப் பேசாதே மித்து..."

"இது அசிங்கமாடி... இதுவும் ஒரு கலை தான்..."

"போடா நீயும் உன் கலையும்..." அவனது தலையில் வலிக்காமல் கொட்டியவள் மீண்டும் அவன் சடையைப் பிடிக்கும் முன் அதை முன்னால் எடுத்து போட்டவள் அவனுக்குப் பழிப்பு காட்டிவிட்டுக் கார் கதவை திறந்து கொண்டு வெளியில் ஓடினாள்...

"ஏய் நில்லுடி..." தானும் இறங்கியவன் காரை பூட்டிவிட்டு அவளைத் தொடர்ந்தான்..

அப்போது எதிரில் வந்தவர் மேல் அவன் தெரியாமல் மோதி விட, "சாரி..." என்றவன் மேலே செல்ல முயல...

"என்ன தம்பி... சௌக்கியமா இருக்கீங்களா...?" என்ற குரலில் நின்றவன் அந்தக் குரலுக்குச் சொந்தக்காரரை திரும்பி பார்த்தான்...

அங்கு வரதராஜன் வாயெல்லாம் பல்லாக இரு கையையும் கூப்பியபடி இளித்துக் கொண்டு நின்று இருந்தான்...

ஈர்க்கும்...

வரதராஜனை பார்த்த உடன் அடையாளம் தெரியவில்லை மித்ரேஷ்க்கு... ஒருவேளை அவன் சென்னையில் இருந்து இருந்தால் அவனை மாதிரி பெரிய ஆட்களை அடையாளம் தெரிந்து இருக்கும்... இப்போது அவனுக்குச் சென்னை புதுசு... அதிலும் அவனைக் கைது செய்தது மித்ரேஷ்க்கு சுத்தமாய் நினைவில் இல்லை... அவனைப் போல் நிறையப் பேரை தினமும் பார்ப்பதினால் குறிப்பிட்டு அவனை அடையாளம் தெரியவில்லை...

"நீங்க...?" புருவங்களை நெறித்து அவன் யோசனையுடன் கேட்கும் போதே...

"பார்த்த உடனே அடையாளம் தெரியற அளவுக்கு நான் ஒண்ணும் சார் மாதிரி பெரிய பதவியிலா இருக்கேன்... நான் ரொம்பச் சின்ன ஆளுங்க... ஆனா சார் நீங்க அப்படிங்களா... அதுவும் ஏசிபி சாரை எனக்குத் தெரியாம இருக்குமா...? அதான் உங்க நலம் விசாரிச்சேன்..."

அவன் பேசிய விதம் சரியில்லை என்ற போதும் திருமண வீட்டில் எதற்கு வீண் சச்சரவு என்று எண்ணி அமைதியாக,

"அப்படிங்களா... ரொம்ப நல்லது... நான் வர்றேன்..." என்றவன் மேலே நடக்க...

'போடா போ... இன்னும் கொஞ்ச நேரத்தில் உன்னைக் கதற வைக்கல என் பேரு வரதராஜன் இல்லை...' மனதில் கறுவியபடி திருமண மண்டபத்தினுள் காலடி எடுத்து வைத்தான்...

அங்கே வரவேற்பில் நின்று கொண்டு இருந்த மதுவின் அருகில் வந்த மித்ரேஷ், "எங்கேடி தப்பிச்சு ஓடுற...? என் கிட்ட இருந்து அவ்வளவு லேசில் தப்பிக்க முடியுமா...? இல்லை தப்பிக்கத் தான் நான் விட்டிருவேனா..." என்றபடி யாருக்கும் தெரியாமல் பின்னால் கை விட்டு அவளின் சடையைப் பிடித்து இழுத்தவன் முன்னால் பார்ப்பதற்கு

ஒன்றும் அறியாத பிள்ளை போல் முகத்தை வைத்துக் கொண்டு நின்றான்...

"மித்து... இது ரிசப்சன்..." என்று சிணுங்கியபடி அவனின் கையில் இருந்து தன் நீண்ட பின்னலை விடுவிக்கப் போராடினாள் அவள்...

அண்ணனின் புன்னகை முகமும், மது உடலை நெளித்துக் கொண்டு இருந்த விதமும் ஜான்க்கு எதையோ உணர்த்தியது...

"கிழக்கும் மேற்கும் எப்போ ஒண்ணா சேர்ந்தீங்க... அதிசயமா இருக்கு..." ஜான் கிண்டல் அடிக்க...

"மித்து... ஜானை பாரு... கிண்டல் பண்றான்..." மது ஜானை மித்ரேஷிடம் போட்டு கொடுக்க...

"என்னடா உடம்பு எப்படி இருக்கு...? என் வொய்ப்பை கிண்டல் பண்ற வேலை எல்லாம் வச்சுக்காதே..." மதுவின் தோளில் கை போட்டு அணைத்தபடி சொன்ன மித்ரேஷை ஜான் வாயை பிளந்தபடி பார்த்தான் என்றால் மதுவோ ஆனந்த அதிர்ச்சியோடு அவனை ஏறிட்டு பார்த்தாள்...

அவனின் மனதில் என்ன இருக்கிறது என்று அவளுக்குத் தெரியாது... ஆனால் அவன் எதற்காகத் தன்னைக் கைப்பிடிக்க எண்ணுகிறான் என்று அவளுக்குத் தெளிவாகத் தெரியும்... இருந்தாலும் சற்று முன் அவன் பேசிய இணக்கமான நிலையும், இதோ இப்போது அவன் கூறிய 'என் மனைவி...' என்ற உரிமையும் அவளை அவன் பால் ஈர்த்தது என்னவோ உண்மை...

"சார்... இவங்க உங்க வொய்ப்பா...? அழகா இருக்காங்க..." என்றபடி வந்த வரதராஜனை கண்டு மித்ரேஷ் முகம் சுருங்கியது...

'ஆளும் சரியில்லை... பேச்சும் சரியில்லையே...' என்று அவன் யோசித்துக் கொண்டு இருக்கும் போதே வரதராஜன் உள்ளே சென்றுவிட்டான்...

"மித்துக் கையை எடு..." நெளிந்தபடி சொன்ன மதுவை பார்த்தவன்,

"ம்ஹூம்... முடியாது..." என்று அவன் வம்பு செய்ய...

"சில்க்கி என்னைக் காணோம்ன்னு தேடுவாள்... ப்ளீஸ்..." முகம் சிவந்து அவனைப் பார்க்க வெட்கப்பட்டுக் கொண்டு வேறு எங்கோ பார்த்தபடி சொன்னவளின் வெட்கம் கண்டு சிரித்தபடி கையை எடுத்தவன்,

"மிருது பேரை சொன்னதால் தப்பிச்சே..." புன்னகையுடன் கூறியவனை நொடி நேரத்திற்கும் குறைவாய் நிமிர்ந்து பார்த்தவள் வேகமாய் அங்கிருந்து சென்று விட்டாள்...

இருவரையும் பார்த்துக் கொண்டு இருந்த அக்ஷய் விக்டரை பார்த்து சிரிக்க அவனும் நிம்மதியுடன் புன்னகை புரிந்தான்...

"சில்க்கி... எவ்வளவு அழகா இருக்க... என் அண்ணன் மட்டும் இப்போ உன்னைப் பார்த்தான் மணவறையிலேயே மயங்கி விழுந்திடுவான்..." மது மிருதுளாவை கட்டி அணைத்துக் கொள்ள...

"மது... அவள் புடவையைக் கசக்காதே..." அபி அவளை அதட்ட...

"ஏன் அதுக்கு உங்க மகனுக்கு மட்டும் தான் உரிமை இருக்கா...?" கேலி பேசிய மகளை...

"அடிக்கழுதை... உன்னை..." அபி அடிப்பது போல் பாவனைச் செய்தாலும் அவளது முகத்திலும் புன்னகையின் சாயல்...

"ஆச்சி... என்னைக் காப்பாத்துங்க..." துளசியின் பின்னே சென்று ஒளிந்தவள் அன்னையைப் பார்த்துப் பழிப்பு காண்பித்தாள்...

அவளின் செய்கை கண்டு அனி, நிஷா எல்லோரும் சிரிக்க மிருதுளா மட்டும் கலக்கத்துடன் அமர்ந்து இருந்தாள்...

முகூர்த்த நேரம் நெருங்க நெருங்க ஒருவித பதட்டத்துடன் இருந்தாள் அவள்... மணவாழ்க்கை என்ன மாதிரியான வலி, வேதனைகளைத் தரப் போகின்றதோ என்ற எண்ணத்தில் தவித்துக் கொண்டு இருந்தாள்... மனதுக்குப் பிடித்தவன் கையால் தாலி வாங்க போகிறோம் என்ற போதிலும் அவளின் மனதின் அமைதியின்மை மட்டும் சற்றும் குறையவில்லை... திகில் பரவிய மனநிலையில் அவள் இருந்தாள்...

மணப்பெண்ணை அழைத்து வர சொல்லி அய்யர் சொன்னதும் மது மிருதுளாவை அழைத்துக் கொண்டு சென்றாள்... ஏற்கெனவே அங்கு நின்று இருந்த மித்ரேஷின் கண்கள் அவளை விடாமல் மொய்த்தது... அவனின் பார்வை உணர்ந்தார் போன்று மது குனிந்த நல்ல நிமிரவில்லை... அதில் அவனுக்குச் சந்தேகம் வந்தது... இதில் யார் மணப்பெண் என்று...

'ம்ஹூம்...' மெல்லியதாய் பெருமூச்சு ஒன்று அவனிடம் இருந்து புறப்பட்டு அந்த இடத்தைத் தகிக்கச் செய்தது...

மணவறையில் மிருதுளாவை அமர செய்துவிட்டு மது நிமிர்கையில் அவள் அருகே வந்து நின்ற மித்ரேஷ் அவளது கையோடு தன் கையைக் கோர்த்துக் கொண்டு நிற்க...

"மித்து... எல்லோரும் பார்க்கிறாங்க..." சங்கடத்துடன் சொன்னவளை அழுத்தமாய்ப் பார்த்தவன்,

"பார்த்தால் தான் என்ன...?" அவனின் குரலில் இருந்த அழுத்தத்தில் அவள் வாயடைத்து போனாள்...

ஆதியின் வாய் மந்திரத்தை உச்சரித்த போதும் அவனது கண்கள் மிருதுளாவை கண்காணிக்கத் தவறவில்லை... அவளது கலக்கம் சுமந்த முகத்தைக் கண்டு அவனுள் இரக்கம் சுரந்தது...

அவளது கலக்கத்தைப் போக்க எண்ணி அவன் மனம் தவித்த போதும் அதை எப்படி அவளிடத்தில் சொல்வது

என்று தெரியாமல் விழித்தான்... ஏனெனில் மிருதுளா குனிந்த தலை நிமிராமல் அல்லவா அமர்ந்து இருந்தாள்...

முகூர்த்த நேரம் நெருங்க ஆதி மாங்கல்யத்தைத் தன் கைகளில் எடுத்து அவளின் கழுத்தை நெருங்கும் போது அவளையும் அறியாமல் அவளது கண்ணில் இருந்து இரு சொட்டுக் கண்ணீர் மாலையில் விழுந்தது...

அதைக் கண்ட ஆதிக்கு அதற்கு மேல் மனம் தாங்கவில்லை... ஒரு நொடி தனது கரத்தின் செயலின் வேகத்தைச் சற்று குறைத்தவன் மிருதுளாவின் காதின் அருகில் குனிந்து,

"உனக்குக் கட்டும் தாலிக்கு நான் உண்மையா இருப்பேன்... உனக்கு ஒரு நல்ல கணவனாகவும் இருப்பேன்..."

அவன் கூறியதில் வியப்பும், திகைப்புமாய் நிமிர்ந்து பார்த்தவளின் கண்களில் கண்ணீரின் தடங்கள்...

ஆதி கண்களை மூடி திறந்து ஆமோதிப்பாய் தலையசைக்க அவளது உதடுகள் அசைந்தது...

"தேங்க்ஸ் மாமா..."

அடுத்த நொடி சற்றும் தாமதிக்காமல் ஆதி மிருதுளாவின் கழுத்தில் மங்கல நாணை கொண்டு சென்று இறுக்கமாய் முடிச்சிட்டான்...

"அம்மு... அடுத்த முடிச்சு நீ போடு..." அபியின் குரலில் மது மித்ரேஷின் கரத்தில் இருந்து தன் கரத்தை உருவ முயல...

அவனோ "ப்ச்..." என்ற சத்தத்துடன் அவளது கையை விடுவித்தான்...

அதற்குள் ஆதி, "என் மனைவிக்கு மூன்று முடிச்சும் நான் தான் போடுவேன்..." என்று கூறிவிட்டு மீதமிருந்த இரு முடிச்சையும் போட்டுத் தங்கள் இருவரது பந்தத்தையும் முப்பெரும் தேவர்கள் சாட்சியாய் அவன் உறுதி செய்தான்...

அதில் செவ்வானமாய்ச் சிவந்து, மகிழ்ச்சியில் மலரென மலர்ந்தது மிருதுளாவின் முகம்...

மித்ரேஷின் கை மீண்டும் மதுவின் கரத்தை இறுக பற்றிக் கொள்ள அவளும் முகம் நாணி அவனின் கரத்தில் தன் கரத்தை விருப்பமாய் ஒப்படைத்தாள்...

மிருதுளாவின் நெற்றியில் குங்குமத்தை வைத்த ஆதி அவளது முகத்தில் நிலவிய சந்தோசத்தில் தானும் நிம்மதி அடைந்தான்...

தன்னால் அடுத்தவர் மனக்கஷ்டம் அடைவதை என்றுமே அவனால் பொறுத்துக் கொள்ள முடியாது... அதிலும் தன்னைக் காதலித்த பாவத்திற்காக மிருதுளா அடையும் வேதனையைச் சும்மா பார்த்துக் கொண்டு இருக்க அவனால் முடியவில்லை...

அதனால் தான் தன் துக்கத்தை மனதுக்குள் போட்டு புதைத்தவன் அவளுக்காகத் தன்னை மாற்றிக் கொண்டு அவளின் சந்தோசத்திற்காக வாழ முடிவு எடுத்தான்... தனது சோகம் ஆயுள் முழுமையும் மறையாது... அதற்காக அவளை ஏன் வருத்த வேண்டும் என்று அவன் எண்ணினான்... அவனது இந்த அனுசரணையான அணுகுமுறையே வருங்காலத்தில் அவனை அவள் மீது காதல் கொள்ளச் செய்யுமோ...

மணமக்களை அனைவரும் வந்து வாழ்த்தினர்... சந்தோசமான மனநிலையில் குதூகலமாக எல்லோரும் இருப்பதை ஒருவித குரூர எண்ணத்துடன் பார்த்துக் கொண்டு இருந்தான் வரதராஜன்...

எப்போதடா நிஷா அங்கு மணமக்கள் அருகில் வருவாள் அந்த நேரம் அவளை அவமானப்படுத்த வேண்டும் என்று எண்ணி அவளின் வரவிற்காகக் காத்திருந்தான்...

நாலு பேர் முன்னிலையில் மித்ரேஷ் கண் எதிரே அவனின் அன்னையை அவமானப்படுத்த அவன் நினைத்தான்...

அந்நேரம் மணமக்களை வாழ்த்த தருண் அங்கு வந்தான்...

"அப்பா, அம்மா வரலையாப்பா..." அக்ஷய் கேட்க...

"அவங்க சொந்தக்காரங்க மேரேஜ்க்கு ஊருக்கு போயிருக்காங்க... அதான் நான் வந்தேன்..." என்றவன் ஆதியையும், மிருதுளாவையும் வாழ்த்திவிட்டுச் செல்லும் போது மித்ரேஷ், மதுவை கண்டு அங்கு நின்றான்...

அவனைக் கண்டதும் மித்ரேஷின் கை தன்னையும் அறியாமல் மதுவின் கையைப் பிடித்து இறுக்கியது... அதில் வலியை உணர்ந்தவள் அதைத் தாங்கி கொண்டு தருணை கண்டு புன்னகைத்தாள்...

"வாங்க தருண்... எப்படி இருக்கீங்க...? தான்யாவை அழைச்சிட்டு வந்திருக்கலாமே..."

"அவள் அப்பா, அம்மா கூட வேறு திருமணத்துக்குப் போயிருக்கிறாள்..." என்று அவளுக்குப் பதிலளித்தவன் இணைந்து இருந்த இருவரின் கைகளையும் பார்த்துவிட்டு,

"என்ன நான் சொன்னது போல் நடந்ததா மது...? என்ன சொல்றார் உன் ஹீரோ...?"

அவன் அப்படிக் கேட்டதும் அவள் கலக்கத்துடன் மித்ரேஷை பார்த்தாள்...

ஏதோ இன்று தான் இருவரும் பழையது எல்லாம் மறந்து சற்றுச் சந்தோசமாய்ப் பேசி சிரித்து இருக்கின்றனர்... இந்த நேரத்தில் தருண் வந்து வேண்டாது புதையுண்டு போன நினைவுகளைத் தோண்டி எடுக்கின்றானே... மித்ரேஷ் என்ன சொல்வானோ என்று அவனின் முகத்தைக் குழப்பத்துடன் பார்த்துக் கொண்டு இருந்தாள்...

"நான் சொல்லலை மது... சார் உன்னை லவ் பண்றாருன்னு... இப்போவாவது உனக்குப் புரிஞ்சதா...?" என்று அவளிடத்தில் தருண் சொல்ல அவளுள் துக்கம் பொங்கியது...

என்ன தான் தந்தைக்காக, இரு குடும்பத்துக்காக என்று மனதை உருப் போட்டுத் திருமணத்திற்குச் சம்மதித்தாலும்,

மித்ரேஷ் மீதான காதலை அவள் உணர்ந்து இருந்தாலும் இதுவரை அவனின் மனதில் அவள் மீது காதல் வரவில்லையே...

என்றோ அவள் செய்த தவறுக்கு இன்று பழி தீர்க்கவே அவளைத் திருமணம் செய்ய அவன் விரும்புகிறான் என்று பேதை நெஞ்சம் உள்ளுக்குள் குமைந்து நொறுங்கி போனது...

அத்தனை நேர இருந்த சந்தோசம் அவளுள் வடிந்து போனது...

"சார்... எனக்கு முன்னமே தெரியும்... என்னைக்கு இருந்தாலும் மது உங்களைத் தான் கல்யாணம் பண்ணி கொள்வாள் என்று..." தருணின் பேச்சில் மித்ரேஷ் குழம்பி போய் அவனைப் பார்த்தான்...

மதுவோ தனக்குள் யோசித்துக் கொண்டு நின்று இருந்தாள்...

"என்ன சார் ஆச்சிரியமா பார்க்கிறீங்க... மது உங்க கிட்ட சொல்லலையா...? நான் அவக்கிட்ட என் லவ்வை சொன்ன போது அவள் அதை ஏத்துக்கவே மறுத்துட்டாள்... ஏதோ என்னால ஏற்பட்ட பிரச்சினையில் தான் நீங்க கோச்சிக்கிட்டு வீட்டை விட்டு போயிட்டதா ரொம்ப வருத்தப்பட்டவ நீங்க வந்து எனக்கு ஓகே சொன்னால் தான் என்னைக் கல்யாணம் பண்ண சம்மதிப்பேன்னு சொல்லிட்டா..." தருண் சொல்ல சொல்ல ஆச்சிரியத்துடன் மித்ரேஷ் மதுவை பார்த்தான்...

அவள் அவனை நிமிர்ந்து பார்த்தால் அல்லவா... அவள் குனிந்த தலை நிமிரவில்லை...

"அதுக்கு அவள் சொன்ன காரணம் தான் எனக்கு ரொம்பப் பிடிச்சு இருந்தது... 'என்னோட கல்யாணம் எல்லோரும் சம்மதிச்சு சந்தோசத்துடன் நடக்கணும்... மித்துவுக்கு ஏனோ உங்களைப் பிடிக்கலை... மித்துவுக்குப் பிடிக்காததால எனக்கும் நீங்க வேண்டாம்... ஒருவேளை அவனுக்கும்

பிடிச்சு சரின்னு சொன்னா மட்டும் தான் நாம கல்யாணம் பண்ண முடியும்... இல்லைன்னா ஐம் சாரி... நாங்க எப்படிப் பிரெண்ட்ஸா இருக்கிறோமோ அது மாதிரி எங்க குழந்தைகளும் கடைசிவரை பிரெண்ட்ஸா இருக்கணும்... அதுக்கு மித்துவோட சம்மதம் அவசியம்'ன்னு சொல்லிட்டு வந்துட்டா..."

அப்போதே தன் மீது அவளுக்கு இத்தனை அன்பா...? மித்ரேஷ்க்கு அத்தனை சந்தோசமாய் இருந்தது... அன்றைய மதுவின் மனநிலையை இன்று உணர்ந்தவன் மனதில் அதுநாள் வரை பெருஞ்சுமையாய் ஏறி இருந்த பாரம் சட்டென்று இறங்கி லேசான மாதிரி இருந்தது...

"அப்போதே தெரியும் அவளோட மனசில் நீங்க தான் இருக்கீங்கன்னு... இப்போ உங்க ரெண்டு பேர் கல்யாணம் விசயம் கேள்விப்பட்டு எனக்கு ரொம்பச் சந்தோசமா இருக்கு... உங்க ரெண்டு பேருக்கும் என்னுடைய வாழ்த்துக்கள்..." தருண் வாழ்த்த...

"தேங்க்ஸ்..." என்று சிரித்தபடி அவனின் வாழ்த்தை ஏற்றுக் கொண்ட மித்ரேஷ் மதுவின் தோளில் மெல்ல இடித்தான்...

அதில் ஸ்மரணை அடைந்து நிமிர்ந்தவள் மித்ரேஷை கேள்வியாய் பார்க்க அவன் தருணை விழிகளால் சுட்டி காட்டினான்... அப்போது தான் கவனித்தாள் தருணை... விடைப்பெற தயாராக இருந்தவனைப் பார்த்து சிரித்தபடி வழியனுப்ப... தருணும் புன்னகையுடன் அங்கிருந்து நகர்ந்தான்...

"மித்து..." கலக்கமாய் அவனை ஏறிட்டவளை அள்ளி அணைக்க வேண்டும் போல் இருந்தது அவனுக்கு...

"தேங்க்ஸ்டி..." என்று புன்னகைத்தவனைப் புரியாமல் நோக்கியவளை கண்டு கண்சிமிட்டியவன்,

"இப்ப சொன்னா உனக்குப் புரியாது... தனியா இருக்கும் போது சொல்றேன்..." என்றவனைக் கண்டு அவளின் இதயம் தடம் புரண்டது...

அவளது மாண்ட மகிழ்ச்சி மீண்டும் மீண்டது... அவனது சந்தோசத்தில் தானும் சந்தோசம் அடைந்தவளாய் அவனது கரத்தோடு தன் கரத்தை இறுக்கமாய்க் கோர்த்து கொண்டாள்...

காதலை பகிர்ந்து கொள்ளாமல் இரு இதயங்களும் காதலில் கட்டுண்டு பின்னி பிணைந்து இருந்தது...

"மித்து... அத்தை ஃபோட்டோ எடுக்கக் கூட வர மாட்டேங்கிறாங்க... நான் போய்க் கூட்டிட்டு வரவா...?" அவனின் சம்மதம் வேண்டி நின்ற மதுவை பார்த்து புன்னகைத்தவன்,

"ம்... போ..." என்றான் சம்மதமாய்...

வர மாட்டேன் என்ற நிஷாவை வற்புறுத்தி அழைத்து வந்த மது அவளை மணமக்கள் அருகில் நிறுத்தி தானும் உடன் நின்று குடும்ப உறுப்பினர்கள் அனைவருடனும் புகைப்படம் எடுத்து கொண்டாள்...

இது தான் சமயம் என்று எண்ணிய வரதராஜன் மணமேடைக்கு வந்தான்...

அவன் இத்தனை நாள் காத்திருந்தது இதற்குத் தானே... அவன் கண்காணித்த வரை நிஷா எங்கேயும் வெளியில் வருவதாய்த் தெரியவில்லை... அதனால் தான் மித்ரேஷை பழிவாங்க நிஷாவை அவமானப்படுத்த இந்தத் திருமண வீட்டை தேர்ந்து எடுத்தான்...

மணமக்களிடம் பரிசு பொருளை கொடுப்பது போல் வந்த வரதராஜன் நிஷாவை அப்போது தான் பார்ப்பது போல்,

"ஹலோ... நீ நிஷா தானே...?" என்று வேண்டும் என்றே தெரியாதவன் போல் கேட்டான்...

"ஆமாம்..." என்றவள் தலையில் அவன் கூடை நெருப்பை அள்ளி கொட்டுவான் என்று அவள் கனவிலும் நினைத்து இருக்க மாட்டாள்...

"நான் உன் பழையைக் கஸ்டமர்... என்னைத் தெரியலையா... உன்னை எப்படி மறக்க முடியும்... உன்னோட அபார ஒத்துழைப்புக்காகவே உன்னைத் தேடி அடிக்கடி வந்தவனாயிற்றே நான்..." அவன் சொல்லி முடிக்கும் முன் அவனின் முகத்தில் ஓங்கி ஒரு குத்து விட்டான் மித்ரேஷ்...

அங்கு நின்று இருந்த மற்ற நான்கு சின்னவர்களும் அதிர்ந்து போய் நின்று இருந்தனர்... அதில் ஜான் நிலை தான் பரிதாபமாய் இருந்தது... ஸ்தம்பித்துப் போய் நின்று இருந்தான்...

கோபத்தில் கொந்தளித்துக் கொண்டு இருந்த விக்டரின் கையைப் பிடித்துச் சமாதானம் செய்து கொண்டு இருந்தான் அக்ஷய்...

அபியை தவிர மற்ற பெரியவர்கள் அனைவரும் திகைத்து போய் நின்று இருந்தனர்...

"என்னடா என்னைய அடிக்கக் கையை ஓங்கிற... வீட்டிலேயே விபச்சாரியை வச்சுக்கிட்டு நீ நாட்டில் உள்ள விபச்சாரத்தை ஒழிக்கப் போறியா... சபாஷ்... இதோ இப்பவும் இவனுக்கு முந்தி விரிச்சு தான் உன் குடும்பத்தைக் காப்பாத்திட்டு இருக்கா உன் அம்மா..." என்று அக்ஷயை சுட்டி காட்டி நிஷாவுடன் கேவலமாய் இணைத்து வைத்து பேசியவனை மேலும் கோபமாய் உதைத்து துவைத்து எடுத்தான் மித்ரேஷ்... அவனுடன் ஜானும் சேர்ந்து கொண்டு வரதராஜனை அடிக்க ஆரம்பித்தான்...

அதில் வரதராஜன் தான் அவமானப்பட்டுப் போனான்...

கல்யாண வீடு சிறிது நேரத்தில் கலவர வீடாய் மாறிப் போனது...

அக்ஷய் தான் மூவரையும் தடுத்து நிறுத்தினான்... அவன் குனிந்து வரதராஜனை தூக்கி விட்டவன் கசங்கி இருந்த அவனது சட்டையை நீவி விட்டபடி,

"நீங்க வேறு யாரையோ நினைச்சிட்டு வந்து இங்கே பேசுறீங்க... இவள் என் தங்கை நிஷா... இவர் என் மச்சான்... இவர் என்னோட மாப்பிள்ளையா வர போறவர்... என்னோட குடும்பத்தைப் பத்தி உங்களுக்கே நல்லா தெரியும்... தேவையில்லாம என் தங்கையைப் பத்தி தரக்குறைவான வார்த்தைகள் பேசினா நான் பார்த்திட்டு சும்மா இருக்க மாட்டேன்... என்னைப் பத்தி தொழில் வட்டாரத்தில் எல்லாருக்கும் தெரியும்... உங்களுக்கும் தெரியும்ன்னு நினைக்கிறேன்... என்னை எதிர்த்து சுண்டு விரலை அசைச்சா கூட நான் அவங்களை இல்லாம பண்ணிருவேன்... நீங்க என் தங்கையை ரொம்பக் கேவலமா பேசிட்டீங்க... இதுக்கான விளைவுகளை நீங்க கட்டாயம் சந்திச்சு தான் ஆகணும்... இது என் மகனோட கல்யாணம்... இங்கே எந்தப் பிரச்சினையும் வேண்டாம்... முதல்ல நீங்க வெளியில் போங்க... இல்லை கழுத்தை பிடிச்சு தள்ள வைக்கவா..."

அக்ஷய் வரதராஜன் மீது தன் சுண்டு விரலால் கூடத் தொடவில்லை... ஆனால் அவனது அழுத்தமான வார்த்தையில் வரதராஜனுக்குப் பீதியை கிளப்பியது...

"இன்னும் இங்கே என்ன பார்வை... ம்... கிளம்பு..." அக்ஷயின் கர்ஜனையில் பின்னங்கால் பிடறியில் பட ஓடி போனான் அவன்...

"ரக்ஷி... ஆதியையும், மிருதுவையும் வீட்டுக்கு கூட்டிட்டு போ..." எதுவும் நடவாதது போல் அக்ஷய் அபிக்கு உத்தரவிட அங்கு மீண்டும் திருமண வீடு கலகலப்பு வந்த போதும் எல்லோர் முகத்திலும் ஒருவித இறுக்கம் இருந்தது என்னவோ உண்மை...

இரவில் மணமக்களை அவர்களது அறைக்கு அனுப்பி வைத்து விட்டு வீட்டில் இருந்த மற்றவர்கள் அனைவரும் வரவேற்பறையில் குழுமி இருந்தனர்... கோபிநாத் தான் அனைவரையும் வர சொல்லி இருந்தார்...

நிஷா விசயம் பற்றிக் கேள்விப்பட்ட அவர் மனம் கொந்தளிக்க அமர்ந்து இருந்தார்...

"அவன் பேசியது எல்லாம் உண்மையா...?" நிஷாவை பார்த்து நேரடியாகக் கேட்டார் கோபிநாத்...

"டாட்... அது பொய்..." அவசரமாய்ச் சொன்னான் அக்ஷய்...

இந்த விசயம் பிள்ளைகள் மனதில் தேவையில்லாத பாதிப்புகளை உண்டு பண்ணும் என்று கருதி அவன் அதைத் தவிர்க்க நினைத்தான்...

"இல்லை அண்ணா... இனியும் உண்மையை மறைக்க வேண்டாம்..." என்றபடி நிஷா முன் வர...

அவளை வியப்பாய் எல்லோரும் பார்த்தனர்... அவள் விக்டரை பார்த்தாள்... அவன் சம்மதமாய்த் தலையசைக்கவும் நிம்மதியுற்றவளாய் கோபிநாத்திடம் பேச ஆரம்பித்தாள்...

"அவன் சொன்னது உண்மை தான்... நான்..." சொல்ல முடியாமல் சிறிது இடைவெளி விட்டாள்...

"அப்படிப்பட்ட பெண் தான்... இல்லை என்பதற்கு இல்லை... என் சூழ்நிலை என்னை அந்தத் தொழிலுக்குத் தள்ளிருச்சு... இதோ இவரைச் சந்திச்ச நாள் முதல் நான் இவருக்காக மட்டும் தான் வாழ்றேன்... இப்போ நான் விக்டரோட மனைவி... மித்ரேஷ்வரன் ஏசிபியோட அம்மா... டாக்டர் ஜானோட அம்மா... இது தான் இப்போதைய என்னுடைய அடையாளம்... என் மீதான களங்கத்தை என் பிள்ளைங்க நல்லா படிச்சு நல்ல பதவிக்கு வந்து அதைத் துடைச்சுட்டாங்க... இதுக்காக நான் வேதனைப்படலை... இப்போ நான் இவங்கம்மாவா பெருமைப்படறேன்... தலை நிமிர்ந்து தான் இருக்கிறேன்..." என்ற அன்னையைப் பெருமையாய் பார்த்தார்கள் மித்ரேஷும், ஜானும்...

மித்ரேஷின் கண்கள் அவனையும் அறியாமல் தந்தையைப் பார்த்தது... தன் நல்வழிக்காகத் தந்தை தன்னுடன் போராடியது ஏன் என்று அவனுக்கு இப்போது புரிந்தது...

நிஷா தன் கணவன் அருகில் வந்து அவன் கைகளைப் பெருமையுடன் பற்றிக் கொண்டவள், “நான் யாருக்கும்

விளக்கம் கொடுக்கணும்ன்னு அவசியம் இல்லை... என் விக்டருக்கு என்னைப் பத்தி நல்லா தெரியும்...” என்றவளை காதலாய் பார்த்தான் விக்டர்...

இந்தப் புரிந்துணர்வு தான் அவர்களை இத்தனை காலமாய் வழி நடத்துகிறது...

“ஆனாலும் நீங்க அண்ணாவோட அப்பாவா இருக்கிறதால தான் இவ்வளவு விளக்கம் சொல்றேன்...” என்ற நிஷாவை நோக்கி அலட்சிய பார்வை ஒன்றை வீசிய கோபிநாத்,

"அது உன்னோட தனிப்பட்ட விசயம்... அதைப் பத்தி எங்களுக்குக் கவலை இல்லை... ஆனா..." என்று நிறுத்தியவரை அக்ஷய் அவரைக் கூர்மையாய் அளவெடுத்தான்... தந்தை ஏதோ குண்டை வீசப் போகிறார் என்று எண்ணி அவரையே இமைக்காது பார்த்தான்...

"அதுக்காக உன் வீட்டோட சம்பந்தம் பண்ண எங்களால முடியாது... அதாவது உன் பையனுக்கு என் பேத்தியை கொடுக்க முடியாது... பாரம்பரியம் உள்ள குடும்பம் எங்களோடது... ஆனா அது இல்லாத உன் குடும்பத்தில் என் பேத்தி மருமகளா போறது எனக்குப் பிடிக்கலை... இது தான் என் முடிவு... என் பையன் உங்களைத் தலையில் தூக்கி வைத்து ஆடலாம்... ஆனால் என்னால் அது முடியாது..."

ஏற்கெனவே மித்ரேஷுக்கு மதுவை கொடுப்பதில் திருப்தி இல்லாமல் இருந்தவர் இந்த விசயத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டார்...

"டாட்... நிஷா தப்பு செஞ்சாள்ன்னு சொன்னீங்கன்னா... உங்க பிள்ளைங்க நாங்களும் தப்பு செஞ்சவங்க தான்... நிஷா தவறாவது அவள் தெரியாம செஞ்சது... ஆனா நாங்க...?" என்று நிறுத்திய அக்ஷய் முகத்தில் அன்றைய நாளின் வேதனையின் மிச்சம் இன்றும் இருந்தது...

"அது வேறு... இது வேறு அக்ஷய்... ஊர் அறிந்த வேசி என் பேத்தியோட மாமியாரா வர நான் சம்மதிக்க மாட்டேன்..."

கோபிநாத் சொல்லி முடிக்கும் முன் மித்ரேஷ் அவர் முன் வந்து,

"தாத்தா வார்த்தையை அளந்து பேசுங்க... தேவையில்லாம எங்க அம்மாவை பேசும் வேலை வேண்டாம்... உங்களுக்கு என்ன எனக்கும் உங்க பேத்திக்கும் நடக்க இருக்கிற கல்யாணம் நடக்கக் கூடாது அவ்வளவு தானே... அது நடக்காது... அதுக்காக என் அம்மாவை தேவையில்லாம பேசுனீங்க... அப்புறம் பெரிய மனுசன்னு கூடப் பார்க்க மாட்டேன்..." ஆள்காட்டி விரலை நீட்டி அவன் அவரை எச்சரித்தான்...

பெற்ற அன்னையைக் கேவலமாய் அவர் பேசுவதை அவனால் சகித்துக் கொள்ள முடியவில்லை...

மற்ற எல்லோரும் என்ன செய்வது என்று தெரியாமல் பார்த்துக் கொண்டு இருந்தனர்... அபியும், அனியும் ஆளுக்கொரு பக்கமாய் ஆதரவாய் நிஷாவின் கைகளைப் பிடித்துக் கொண்டு நின்று இருந்தனர்... என்ன இருந்தாலும் இத்தனை நாள் உடன் பிறந்தவள் போல் உடன் இருந்தவள் ஆயிற்றே... சட்டென்று கோபிநாத் போல் அவர்களால் உறவை அறுத்து ஏறிய முடியவில்லை... அந்தளவுக்கு அன்பால் பின்னி பிணைந்து இருந்தனர்...

"என்னடா பண்ணுவ...?" கோபிநாத்தும் பதிலுக்கு எகிற...

“டாட்...” அக்ஷய் தந்தையை அடக்க முயன்றான்...

"ம்... இன்னைக்கு அந்த அயோக்கியனுக்குக் கிடைச்ச அடி தான் உங்களுக்கும் விழும்..." என்ற மித்ரேஷ்,

பெற்றோரிடத்தில் திரும்பி, "வாங்க மாம், டாட்... போகலாம்.. இவங்க வீட்டு பொண்ணுக்காக இங்க யாரும் ஏங்கி கிடக்கலை... அவங்க பொண்ணை அவங்களே வச்சுக்கிடட்டும்..." என்றவன் பெற்றோரை அழைத்துக் கொண்டு வெளியேறினான்... ஜானும் அவர்களைப் பின் தொடர்ந்தான்...

மது செய்வதறியாது திகைத்து நின்றாள்...

வீட்டிற்குள் நுழைந்த நிஷா அறைக்குள் சென்றுவிட விக்டர் அவளைப் பின்தொடர்ந்தான்...

"விக்டர்..." அவனின் தோள் சாய்ந்து கதறிய மனைவியை ஆறுதலாய் அணைத்துக் கொண்டான் விக்டர்...

எதற்கும் கலங்காத அவனும் பிள்ளைகளுக்கு விசயம் தெரிந்ததில் சற்று மனம் கலங்கி தான் போனான்...

"மாம்..." என்றபடி அங்கு வந்தனர் மித்ரேஷும், ஜானும்...

நிஷாவால் வளர்ந்த தன் ஆண் பிள்ளைகளைக் கண் கொண்டு பார்க்க முடியாமல் உடலும் மனமும் கூச, தலை குனிந்து அமர்ந்து இருந்தாள்...

"மாம்..." இருவரும் அவள் அருகே மண்டியிட்டு அமர... விக்டர் மனைவியிடம் இருந்து தள்ளி அமர்ந்தான்...

"நீங்களும் இந்த அம்மாவை தப்பா நினைக்கிறீங்களாப்பா..." கேட்கும் போதே அவளது கண்களில் கண்ணீர் வழிந்தது...

"மாம்... நீங்க எங்களோட அம்மா... உங்களைப் போய் நாங்க தப்பா நினைக்க முடியுமா... எந்தத் தாயும் உலகத்தில் கெட்டவள் கிடையாது... நீங்க என்னைக்குமே எங்களோட பெஸ்ட் அம்மா தான்... இவ்வளவு ஏன் இந்த உலகத்திலேயே பெஸ்ட் அம்மா நீங்க மட்டும் தான்..." என்று இரு பிள்ளைகளும் அன்னையை அணைத்துக் கொள்ள, அவளின் மனம் இரு மகன்களை நினைத்துப் பெருமிதப்பட்டது...

தன்னுடைய வளர்ப்பு தவறாகப் போய்விடவில்லை என்று மனதுக்குள் மகிழ்ந்து போனாள்...

"இது போதும்ப்பா... உங்கப்பாவும், நானும் கஷ்டப்பட்டதுக்கு நீங்க ரெண்டு பேரும் நல்ல பெயரும், புகழும் வாங்கிக் கொடுத்துட்டீங்க... எங்களைக் கேவலமா பார்த்தவங்க மத்தியில் எங்களைத் தலை நிமிர செஞ்சிட்டீங்க... இதை விட எங்களுக்கு வேறு என்ன

வேணும்..." அவளும் அவர்களை அணைத்துக் கொள்ள விக்டர் புன்னகையுடன் மூவரின் பாசப்பிணைப்பை பார்த்துக் கொண்டு இருந்தான்...

மித்ரேஷ் மண்டியிட்டவாறே தந்தையிடம் திரும்பியவன் விக்டரின் கையைப் பிடித்துக் கொண்டு, "சாரி டாட்..." என்றவனின் கண்களில் கண்ணீர் முத்துக்கள் சரம் கோர்த்தது...

"ஈஷ்வர்... என்ன இது...?" மகனை கடிய நினைத்த விக்டருக்கும் ஏனோ கண்ணீர் வந்தது...

"இல்லை டாட்... உங்களைப் புரியாம எத்தனை தடவை எதிர்த்து பேசி இருப்பேன்... நடந்து இருப்பேன்... ஆனா என்னைக் கண்டிச்சதுக்குப் பின்னாடி இவ்வளவு பெரிய மனக்காயம் இருக்கும்ன்னு எனக்குத் தெரியாம போச்சு... அதை எல்லாம் நான் உணராம தான்றோன்றித்தனமா சுத்தி இருக்கேன்னு நினைக்கிறப்போ என் மேலேயே எனக்குக் கோபம் வருது... உங்க கோபம் நியாயம்ன்னு இப்போ எனக்குப் புரியுது... இதெல்லாம் விட ஏழு வருசம் உங்களை எல்லாம் தவிக்க விட்டுட்டு போன என்னை அந்தக் கடவுள் கூட மன்னிக்க மாட்டாரு... ஐம் சாரி டாட்..." சிறு குழந்தையாய் கண்ணீர் விட்டு அழுதான் அவன்...

"ஈஷ்வர்... நடந்து முடிஞ்சதை நினைச்சு வருந்துவதை விடு... இப்போ எல்லாம் சரியாய் போயிருச்சு இல்ல... இனியாவது உங்கம்மாவை நல்லா சந்தோசமா வச்சிக்கோ..." விக்டர் சொல்ல அதை மறுத்துத் தலையாட்டினான் மகன்...

விக்டர் திகைத்து போய் அவனைப் பார்க்க...

"மாம் மட்டும் இல்லை... உங்களையும் சேர்த்து சந்தோசமா வச்சுக்கப் போறேன்..." என்று சிரித்தபடி சொன்ன மகனை கண்டு இப்போது விக்டருக்கும் சிரிப்பு வந்தது...

மூவரும் சந்தோசமாய்ப் பேசி கொண்டு இருக்கும் போது...

"ஈஷ்வர்... நீ மதுவை ஏன் வேண்டாம்ன்னு சொன்ன...? பாவம்ப்பா அவள்..." நிஷா மது பற்றிப் பேச அதில் மித்ரேஷ் முகம் இறுகியது...

"அவளைப் பத்தின பேச்சு வேண்டாம் மாம்..." என்றவன் அதற்கு மேல் பேச பிடிக்காமல் எழுந்து சென்று விட்டான்...

வெளிவாயிலுக்கு வந்தவனை அங்கு மது எதிர் கொண்டாள்...

"மித்து... என்னை வேண்டாம்ன்னு ஏண்டா சொன்ன...? தாத்தா பேசியதுக்கு நான் என்னடா பாவம் பண்ணினேன்..." பரிதாபமாய்க் கேட்டவளை கண்டு அவனது மனம் உருகத்தான் செய்தது...

ஏற்கெனவே தாழ்வு மனப்பான்மையில் வெந்து கொண்டு இருந்தவனைக் கோபிநாத் தனது வார்த்தையால் மேலும் நோகடித்து விட்டார்... அதில் அவனது தாழ்வு மனப்பான்மை இன்னமும் அதிகரித்தது தான் மிச்சம்...

மதுவுக்குத் தான் எந்தவிதத்திலும் பொருத்தம் இல்லாதவன் என்ற எண்ணம் இன்னமும் அவனுள் வேரூன்றிப் போனது...

தன் அன்னையை நன்கு புரிந்து கொண்டவள் மது என்ற காரணத்தால் தான் அவனின் மனம் அவளைக் காதலித்தது... அன்னையைப் பற்றிய எந்தப் பேச்சு வந்தாலும் அது மதுவை பாதிக்காது... அதே சமயம் அவள் அதை எல்லாம் புறந்தள்ளி விடுவாள் என்று எண்ணித்தான் அவன் அவளை விரும்பியது...

இந்தக் காரணங்களை எல்லாம் தாண்டி அவள் அவன் மனதில் சிம்மாசனமிட்டு அமர்ந்து இருக்கிறாள் என்றால் அது தான் உண்மையும் கூட...

ஆனால் அவனது காதலால் அவனது அன்னைக்கு ஒரு அவப்பெயர் வந்துவிட்டால்... அன்னையின் தலைக்குனிவுக்குத் தான் காரணமாக இருக்கக் கூடாது என்று அவன் எண்ணினான்...

அவனுக்குத் தெரியும் நிச்சயம் மதுவை கைப்பிடித்தால் கோபிநாத்திடம் தன் தாய் அவமானப்பட வேண்டி வரும் என்று... கோபிநாத்திடம் மட்டுமா அவளது உறவு கூட்டங்களிடமும் தான்... அதை முற்றிலும் தவிர்க்கவே அவன் எண்ணினான்... ஏழைக்கேற்ற எள்ளுருண்டை போல் அவனுக்கேத்த பெண் எங்காவது இருப்பாள்... நிச்சயம் அது மது இல்லை அவனது மனம் தீர்மானமாய் எண்ணியது...

"நமக்குள் இருந்த பந்தயத்தில் வெற்றி பெற தான் நான் உன்னைக் கல்யாணம் பண்ண எண்ணினேன்... ஆனா இப்போ நான் அதில் தோற்றுப் போயிட்டேன்... உன் கிட்ட சொன்ன மாதிரி நான் மாறலை... இப்பவும் அதே பொறுக்கி மித்துவா தான் இருக்கிறேன்... அதை இன்னைக்குக் கல்யாண வீட்டில் கூட நீ பார்த்து இருப்ப... இந்தப் பொறுக்கி உனக்கு வேண்டாம்... அந்தத் தருண் தான் உனக்கு ஏற்றவன்... நீ அவனைக் கல்யாணம் பண்ணிக்கோ... இதுக்கு நான் பரிபூரணமா சம்மதிக்கிறேன்... நீ தருணை கல்யாணம் பண்ணினாலும் நம் நட்பு இதே போல் என்றும் தொடரும்..."

முகத்தில் எந்த உணர்வையும் காட்டாது கல் போல் இறுகி இருந்தவனின் பேச்சு அவளது பேதை மனதை கொல்லாமல் கொன்றது... அவளது காதல் கொண்ட இதயம் முழுவதும் அவனது வார்த்தைகள் ரணமாய்ப் பரவி தாங்கொண்ணா வலியை கொடுத்தது...

ஈர்க்கும்...

ஆதியின் அறைக்குள் தயங்கி தயங்கி உள்ளே நுழைந்தாள் மிருதுளா... அவள் மனதில் பெரிதாக எந்த எதிர்பார்ப்பும் இல்லை... அதே சமயம் இந்த மாதிரி ஒரு சூழ்நிலையில் ஆதியை எதிர் கொள்ளவும் பெண்ணவள் மிகவும் தயங்கினாள்...

இவ்வளவு நாள் நட்பின் அடிப்படையில் பேசியது, பழகியது வேறு... இன்று கணவனாய் அவனை அவனது அறையில் சந்திக்கப் போகிறாள்... அவளையும் அறியாது அவளிடத்தில் மெல்லிய நாணமும், நடுக்கமும் எட்டி பார்த்தது...

"பட்டு... என்ன அங்கேயே நின்னுட்ட... வா..." இயல்பாய் அழைத்த ஆதியின் குரலில் தன்னுணர்வு பெற்றவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள்...

நல்லவேளை அவன் கட்டிலில் அமராமல் அங்கு இருந்த சோபாவில் அமர்ந்து கொண்டு தான் அவளை அழைத்தான்... தேவையில்லாத மனச்சங்கடங்களைத் தவிர்க்க தான் அவனும் எண்ணினான் போலும்...

அவனுக்கு எதிரே இருந்த சோபாவில் அமர போனவளிடம், "இங்கே வந்து உட்காரு பட்டு..." தனது பக்கத்தில் இருந்த இடத்தைச் சுட்டி காட்டி அவன் சொல்ல...

அவள் திகைப்பாய் அவனைப் பார்த்தாள்... காலையில் தாலி கட்டும் போது அவனிடத்தில் தெரிந்த மாற்றம் அவளுக்குச் சந்தோசத்தைக் கொடுத்தாலும் இந்த அதீத உரிமை அவளுக்குச் சற்றுச் சுணக்கத்தை அளித்தது என்னவோ உண்மை... ஆனாலும் அவனின் வேண்டுகோளுக்கு இணங்க அவன் அருகில் சென்று அமர்ந்தாள்...

இருவருக்கும் இடையில் பலத்த மௌனம் நிலவியது...

"பட்டு..." ஆதி தான் மௌனத்தைக் கலைத்தான்...

குனிந்து இருந்த மிருதுளா அவனை நிமிர்ந்து பார்த்தாள்...

அவன் அவள் அருகில் நெருங்கி அமர்ந்தான்... அதில் விதிர்த்து போனாவளாய் அவள் தள்ளி அமர முயல அவனது கைகள் அவளது தோளை இறுக பற்றி அவளை அசைய விடாமல் தடுத்தது...

"மாமா... ப்ளீஸ்..." அவனது தொடுகையில் அவள் நெளிந்தாள்...

"ஏன்... நான் உன் கணவன் தானே...?"

அதில் திடுக்கிட்டவள், "ஏன் இப்படிக் கேட்கிறீங்க...?" கலக்கத்துடன் கேட்டவளின் விழிகள் லேசாகக் கலங்கியது...

"அப்போ ஏன் வேண்டாம்ன்னு சொல்ற...?"

அதற்கு அமைதியாய் இருந்தவளை கண்டு, "சொல்லு பட்டு..."

"நீங்க என் மேல் இரக்கப்பட்டு வாழ்க்கை தர வேண்டாம்..." அவளது உறுதியான வார்த்தையில் அவன் தன் கைகளை எடுத்து விட்டான்...

"எனக்குத் தெரியும் மாமா... உங்களால அவளை மறக்க முடியாதுன்னு... அதே சமயம் நான் கஷ்டப்படுறதையும் உங்களால பார்க்க முடியாதுன்னும் எனக்குத் தெரியும்... எனக்காக நீங்க உங்க வலிகளை மறந்துட்டு என்னோட வாழணும்ன்னு எந்த அவசியமும் இல்லை... நீங்க நீங்களா இருங்க... நான் அப்போ சொன்ன மாதிரி உங்களை எந்தத் தொந்திரவும் பண்ண மாட்டேன்..." என்றவளை ஆழ்ந்து பார்த்தவன்,

"என்ன பேசி முடிச்சிட்டியா...? இல்லை வேறு எதுவும் இருக்கா...?"

இல்லை என்பது போல் தலையாட்டியவளின் கையை எடுத்து தனது கைகளுக்குள் பொதிந்து வைத்து கொண்டவன்,

"நீ சொன்ன மாதிரி என் மனசில் காயங்கள், வலிகள் இருந்து இருக்கலாம்... அதை மறக்க முடியாமல் நான் தவித்து இருக்கலாம்... நல்லா கேட்டுக்கோ இது எல்லாமே இறந்த காலம் தான்... எப்போ உன் கழுத்தில் நான் தாலி கட்டி உன்னை என்னுடையவள் ஆக்கினேனோ அப்பவே நான் உனக்கு மட்டும் தான் சொந்தம்... இப்ப இந்த நிமிசம் என் மனதில் யாரும் இல்லை... மனைவியான நீ மட்டும் தான் இருக்க... நான் காதலுக்குக் கொடுக்கிற மரியாதையை விட உனக்குக் கட்டி இருக்கிற தாலிக்கும், உனக்குக் கொடுத்து இருக்கிற மனைவி என்ற சொந்தத்துக்கும் அதிக மரியாதை கொடுக்கிறேன்..."

"இப்ப கூட உன் கூட என் வாழ்க்கையை ஆரம்பிக்க நான் தயாரா தான் இருக்கேன்... ஆனா உன் மனசில் வீண் சஞ்சலங்கள் இருக்கு... அது எல்லாம் மறைஞ்சு நான் மாறிட்டேன்னு நீ நம்பும் போது நம் வாழ்க்கையை நாம் தொடங்கலாம்... அதுவரை நான் காத்திருப்பேன் பட்டு... என் மனைவியான உனக்காக..."

அவனது ஒவ்வொரு வார்த்தையும் அவளது காதில் தேனாகப் பாய்ந்த போதும் மனைவி, கடமை என்ற அர்த்தத்தில் தான் அவனது பேச்சு இருப்பதை உணர்ந்த அவளது மனதுக்கோ அது பெரும் துயரமாய் இருந்தது... கல்யாண வாழ்க்கையில் கடமை மட்டும் இருந்தால் போதுமா... மனைவி என்ற சொந்தம் மட்டும் இருந்தால் போதுமா... அவனது மனங்கவர்ந்தவளாய் தான் இல்லையே என்று எண்ணி அவளது மனம் கலங்கியது...

அவளது மனதை படித்தவனாய் அவனும் பேசினான்...

"நீ நினைக்கலாம் என்னடா இவன் இப்படிப் பேசுறானேன்னு... காதல் இல்லாம கடமையா வாழ அழைக்கிறானேன்னு... கடமையா வாழ சொல்லலை... என் மனைவியாய் என்னோடு வாழ வான்னு தான் சொல்றேன்... எல்லா அரேன்ஜ்டு மேரேஜும் இப்படித் தான் நடக்குது... அந்தக் கணவன், மனைவி என்கிற உரிமை நாளடைவில் காதலாய் மாறி அந்தச் சொந்தத்தை

இறுக்கமாய்ப் பிணைக்கிறது... எனக்கு நம்பிக்கை இருக்கு... நம் வாழ்க்கையும் அது போல் மாறும்ன்னு..." என்றவன் அவளது முகத்தைத் தன் கையில் ஏந்தினான்...

அவளது விழிகளில் தன் விழிகளை ஊடுருவி செலுத்தியவன் கணவனாய் தனது முதல் அச்சாரத்தை அவளது நெற்றியில் மென்மையாய் பதித்தான்...

அவனது ஸ்பரிசத்தில் ஏற்கெனவே காதலில் தவித்த அவளது நெஞ்சம் முழமையாய் அவனிடத்தில் மயங்கியது... கண்களை மூடி அவனது இதழ் தீண்டலை ரசித்தாள் அவள்...

அவனுக்குமே முதல் முறையாய் ஒரு பெண்ணின் அருகாமை அவனது உள்ளத்தைத் தடுமாறச் செய்தது... சிறுவயது முதல் அவளோடு விளையாடி இருக்கிறான்... நேற்று வரை அவளைத் தொட்டு பேசி இருக்கிறான்... ஆனால் இன்று அவனது உடலிலும், மனதிலும் ஏற்படும் மாற்றம் அவனே இதுவரை உணர்ந்திராத ஒரு புது உணர்வு... ஏனோ அந்த உணர்வு அவனுக்கும் பிடித்துத் தான் இருந்தது...

"பட்டு..." மென்மையாய் அழைத்தவனின் குரல் அவளது செவியைத் தீண்டியது...

"ம்..."

"தூங்க போகலாமா..." அதில் அவள் படக்கென்று கண் விழித்துப் பார்த்தாள்...

குறும்பு புன்னகையுடன் அவளைப் பார்த்துக் கொண்டு இருந்தவனைக் கண்டு அவளது முகம் வெட்கத்தில் சிவந்தது...

"அப்போ உனக்கு ரொம்ப நாள் தேவைப்படாதுன்னு நினைக்கிறேன்..."

"மாமா... ப்ளீஸ்..." அவள் கெஞ்சுதலாய் அவனைப் பார்க்க...

"ஓகே ஓகே... டேக் யுவர் ஓன் டைம்... நான் உன் கணவன் அதை மட்டும் உன் மனசில் நல்லா பதிய வச்சுக்கோ..." என்றவன் எழுந்து அவளை நோக்கி கையை நீட்டினான்...

என்ன ஏது என்று கேட்காமல் மறுக்காமல் தன்னை நோக்கி கையை நீட்டியவளை ஆதூரத்துடன் பார்த்தவன்,

"இந்த நம்பிக்கை காலம் முழுவதும் இருக்கணும் பட்டு..." என்றவன், "குட் நைட்..." என்றபடி கட்டிலின் ஒரு பக்கம் படுத்துக் கொள்ள, அவளும் மறு பக்கம் வந்து அமைதியாகப் படுத்து கொண்டாள்...

இத்தனை நாள் இருந்த மனக்கலக்கம் காணாமல் போய் நிர்மலமான மனநிலையில் இருவரும் நித்திரையில் ஆழ்ந்தனர்... வருங்காலத்தில் நல்லதே நடக்கும் என்ற நம்பிக்கை இருவர் மனதிலும் நிறைந்து இருந்தது...

அக்ஷய் தந்தையிடத்தில் சண்டை போட்டுக் கொண்டு இருந்தான்...

"ஆனாலும் டாட்... நீங்க இந்தளவுக்கு நிஷாவை அவமானப்படுத்திப் பேசி அனுப்பி இருக்கக் கூடாது... நீங்க நிஷாவை பேசிய பேச்சுக்கு இதே இது வேறு ஆளா இருந்து இருந்தா விக்டரின் நடவடிக்கையே வேற மாதிரி இருந்து இருக்கும்... என்னோட அப்பா நீங்கங்கிறதால தான் அவன் பேசாம போயிட்டான்... எப்படி உங்களால இப்படி மனசாட்சி இல்லாம பேச முடியுது..."

"ஆமாண்டா நான் மனசாட்சி இல்லாதவன் தான்... நேத்து முளைச்சப் பயல் என்னைப் பார்த்து விரல் நீட்டி எதிர்த்து பேசிட்டுப் போறான்... நீ என்னடான்னா வேடிக்கை பார்த்துட்டு இருக்க... அவனை ஒரு வார்த்தை நீ சத்தம் போட்டியா... உனக்கு அப்பாங்கிற பாசம் இருக்கா... உனக்குக் கொஞ்சமாவது மனசாட்சி இருக்கா...? பெருசா என்னைப் பேச வந்துட்ட..." கோபிநாத் பதிலுக்குக் கத்தினார்...

"மாமா... நடந்து போன தவறுகளைப் பேசிட்டு இருக்கிறதுல அர்த்தம் இல்லை... இப்போ அவங்க திருந்தி வாழறப்போ நீங்க இப்படிப் பேசுறது சரியில்லை..." அமைதியாக இருக்கும் ஆதர்ஷ் கூட மாமனாரின் பேச்சை கண்டிக்கத் தான் செய்தான்...

நிஷாவை பற்றி அவனுக்கு நன்கு தெரியும்... இத்தனை வருடங்களில் அவள் எந்தளவுக்கு அடக்கமான, மென்மையான பெண் என்று அவனுக்கும் தெரியும்...

"சும்மா அதையே சொல்லாதீங்க டாட்... ஈஷ்வர்க்கு என்ன குறைச்சல்... நல்லா படிச்சியிருக்கான்... நல்ல பதவியில் இருக்கான்... என் மகளைக் கட்டிக்க இதை விட அப்படி என்ன பெரிய தகுதி வேணும் உங்களுக்கு...?"

"நாலு பேர் முன்னாடி இவங்க தான் என் பொண்ணைக் கொடுத்த சம்பந்தின்னு நாம தலை நிமிர்ந்து சொல்ற மாதிரி குடும்பம் இருக்கணும்... அவங்களை அப்படிப் போய் யார் கிட்டேயாவது அறிமுகப்படுத்த முடியுமா...? அப்படிப்பட்ட தகுதி தான் அவங்களுக்கு இருக்கா...?"

அபி, அனியால் கோபிநாத்தை எதிர்த்து பேச முடியவில்லை...

இவ்வளவு ஏன் துளசியால் கூட எதுவும் பேச இயலவில்லை... அவருக்கும் நிஷா விசயம் சற்று அதிர்ச்சி தான் என்றாலும் ஒரு பெண்ணாய் நிஷாவிற்காக அவரது மனம் வருந்தத்தான் செய்தது... மற்றபடி அவர் அருவருப்பில் முகம் சுளிக்கவில்லை...

"முடிவா என்ன தான் சொல்றீங்க தாத்தா...?" இப்போது மதுவே நேரிடையாய் அவரிடம் கேட்டாள்...

"அவன் உனக்கு வேண்டாம் அம்மு..."

"எனக்கு அவன் தான் வேணும்ன்னு நான் சொன்னா... உங்களை எதிர்த்துட்டு அவனைக் கல்யாணம் பண்ண நான் முடிவு எடுத்தா..."

"அப்படி ஒரு முடிவு நீ எடுத்தேன்னா அது என் பொணத்து மேல தான் எடுக்க முடியும்..." உறுதியாய் சொன்னவரை கண்டு அவள் ஒன்றும் உறுதி குலைந்து விடவில்லை... அவள் அக்ஷியின் மகளன்றோ...

"ஓகோ சபாஷ் தாத்தா... நீங்க பேசுறது ரொம்ப நல்லா இருக்கு... சினிமா எடுக்கிறதுக்கு ஏத்த வசனம், காட்சி இது..." என்று குத்தலாய் அவரைப் பாராட்டியவள்,

"ஒரு பூ அழகா பூக்கிறது பூவோட தப்பா தாத்தா... அந்த அழகை கண்டு அதைக் கசக்கி முகர்ந்து பார்க்கிறாங்களே அந்த அயோக்கியர்கள் அது அவங்களோட தப்பு தாத்தா... நிஷா அத்தை அந்தப் பூ மாதிரி ரொம்ப மென்மையானவங்க... அவங்க இந்த மாதிரி ஆனதுக்குக் காரணம் அவங்களைப் போகப் பொருளா பார்த்த அயோக்கியர்கள் தான்... அதுக்கு அவங்க என்ன செய்ய முடியும்... ஒண்ணும் தெரியாத அவங்களைப் போய் நீங்க ரொம்பப் பேசிட்டீங்க... அதே சமயம் என் மித்துவையும் ரொம்பக் கேவலமா பேசிட்டீங்க..." சொல்லும் போதே அவளது கண்ணில் கண்ணீர் வழிந்தது...

அதை அழுந்த துடைத்தவள், "நீங்க பண்ணிய பாவத்துக்கு நான் பிரயாசித்தம் தேட போறேன்... நான் மித்துவை கல்யாணம் பண்ணிக்கப் போறேன்... அதையும் மீறி நீங்க விசத்தைக் கையில் எடுத்தா... நான் வேறு ஒரு பாணியைக் கையில் எடுக்க வேண்டி வரும்... என்ன புரியலையா தாத்தா... யாரை பார்த்து கேவலமா வேசின்னு சொன்னீங்களோ... அதே வார்த்தையை உங்க பேத்தியை பார்த்து நாளை இந்த உலகம் சொல்லும்..." எல்லோரும் அதிர்ந்து போய் அவளைப் பார்த்தனர்...

அக்ஷய், அபி மகளின் வார்த்தையில் சப்தநாடியும் ஒடுங்கி போயினர்...

"அம்மு..." இருவரும் ஒருசேர கூவினர்...

"எனக்கு வேறு வழியில்லை டாட், மாம்... காயப்பட்ட நிஷா அத்தைக்கும், மித்துவுக்கும் நான் ஏதாவது செஞ்சாகணும்...

அதுக்கு நான் அவனைக் கல்யாணம் பண்ணிக்கணும்... தாத்தா கல்யாணத்தை மறுக்கிறார்... அப்புறம் நான் என்ன பண்ண முடியும்... என்னால் பண்ண முடிஞ்சது ஒண்ணே ஒண்ணு தான்... அது நிஷா அத்தைக்கு மருமகளா, மித்துவோட மனைவியா நான் அங்கே வாழ போறேன்... என்ன ஒண்ணு தாலி கட்டாம வாழ போறேன்... நிச்சயம் தாத்தா பேசின பேச்சுக்கு அவன் என் கழுத்தில் தாலி கட்ட மாட்டான்... அந்தளவுக்கு அவன் ரோசக்காரன், பிடிவாதக்காரன்... அவனைப் பத்தி எனக்கு நல்லா தெரியும்..."

தாத்தா அருகில் வந்து நின்று, "நீங்க இதைத் தானே விரும்புனீங்க தாத்தா..." என்றவள் அவரின் காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்க குனிந்தவள்,

"உங்க பேத்தி போற காரியம் வெற்றி பெறணும்ன்னு வாழ்த்தி ஆசிர்வாதம் பண்ணுங்க தாத்தா..." என்றவளை கண்டு கோபிநாத்துக்குக் கண்கள் கலங்கியது...

யார் தான் இதை ஆதரிப்பார்கள்...?

"நீங்க இன்னும் இப்படியே இருந்தீங்கன்னா எப்படி...? நம்ம பேத்தியை நினைச்சு பாருங்க..." துளசி பேத்தியை நினைத்துக் கண்ணீர் விட்டார்...

"அம்மு... நான் ஈஷ்வர் கிட்ட பேசறேன்... அவன் சம்மதிப்பான்..." அக்ஷய் மகளிடம் சொல்ல...

"அவனைப் பத்தி உங்களுக்குத் தெரியாது டாட்... நான் வேணும்ன்னு நினைச்சு இருந்தா தாத்தா பேசியது எல்லாம் அவன் சட்டை செஞ்சிருக்க மாட்டான்... என்னை அடையறது மட்டுமே குறிக்கோளா இருந்து போராடி இருப்பான்... உண்மையில் அவன் என்னை வேண்டாம்ன்னு முடிவு பண்ணிட்டான்... தாத்தா பேசிய பேச்சு தான் இதுக்கு எல்லாம் காரணம்... அதுக்காக நான் அவனை விட்டு கொடுக்கிறதா இல்லை... வாழ்வோ சாவோ அது எனக்கு அவன் கூடத் தான்..." என்றவள் நேரே வந்து நின்றது மித்ரேஷ் முன் தான்...

அது புரியாமல் அவனோ, 'பந்தயத்தில் தோற்றுப் போய்விட்டேன்... நீ வேண்டாம்' என்கிறான்...

அவன் கூறிய வார்த்தைகள் அவளுக்கு வலிக்கச் செய்த போதும் அவனது மனவலியை உணர்ந்தவளாய் அதைப் புறம் தள்ளிவிட்டு வீட்டினுள் செல்ல முற்பட்டாள்...

"நீ எதுக்கு உள்ளே போற...? உன் வீடு அங்கே இருக்கு..." வெளிப்புறமாய்ச் சுட்டி காட்டினான் அவன்...

"அது எங்களுக்கும் தெரியும்..." என்று அவனைப் பார்த்துப் பழிப்பு காட்டியவள் அவனை இடித்துக் கொண்டு உள்ளே செல்ல மேலே கடிந்து பேச வாய் எடுக்கப் போனவன் அங்கே வந்த அக்ஷய், அபியை கண்டு அமைதியாய் தானும் உள்ளே சென்றான்...

அவனது இறுகிய முகத்தைக் கண்டு ஒருவரை ஒருவர் பார்த்தபடி அக்ஷியும், அபியும் விக்டரின் வீட்டிற்குள் நுழைந்தனர்...

அதற்குள் மது விக்டரையும், நிஷாவையும் வரவேற்பறைக்கு அழைத்து வந்து இருந்தாள்...

"விக்டர், நிஷா... சாரி... டாட் பேசினதுக்கு நான் மன்னிப்பு கேட்கிறேன்..." அக்ஷய் விக்டர், நிஷாவிடம் மன்னிப்பு கேட்டான்...

"சார் நீங்க போய் என் கிட்ட மன்னிப்பு எல்லாம் கேட்டுக்கிட்டு... நீங்க எங்களுக்குப் பண்ணிய உதவிக்கு நாங்க காலம் முழுவதும் உங்களுக்குச் சேவகம் பண்ணினாலும் தீராது... எங்களையும், என் பசங்களையும் சமூகத்தில் நல்ல அந்தஸ்து உள்ளவங்களா மாத்தினது நீங்க தான்... அவர் உங்களுக்கு மட்டும் அப்பா இல்லை எனக்கும் அப்பா தான்... என் அப்பா நிஷாவை பேசியிருந்தா என்னால் பதிலுக்குக் கையை ஓங்கி இருக்க முடியாது... அது போல் தான் கோபிநாத் சார் கிட்டேயும் என்னால் எதிர்த்து பேச முடியலை... இதே இது வேறு யாராவது பேசியிருந்தா நடந்து இருக்கிற கதையே வேறு...

இன்னைக்குக் கல்யாண வீடுங்கிறதுனால தான் அந்த நாயை சும்மா விட்டேன்... இல்லை அவனை..."

பல்லை கடித்து மீசையை முறுக்கி விட்ட விக்டரின் இந்த முகம் சின்னவர்கள் அனைவருக்கும் புதிது... அவர்கள் மூவரும் அவனை அதிசயமாகப் பார்த்தனர்...

"என்னைக்கா இருந்தாலும் என் கையால் தான் அவனுக்குச் சாவு..." உறுமிய விக்டரை பார்த்த அக்ஷய் மித்ரேஷ் புறம் திரும்பி,

"நீ எங்களை மாதிரி இல்லை... உன் கிட்ட பதவி, அதிகார பலம் எல்லாம் இருக்கு... உன் அம்மாவை பேசியவனை எந்த மாதிரி டீல் பண்ணனும்ன்னு உனக்குத் தான் தெரியணும்..." என்று சொல்ல மித்ரேஷ் புரிந்தது போல் தலையாட்டினான்...

"விக்டர்... நீ இந்த மாதிரி உணர்ச்சிவசப்பட்டு எதையும் செய்யக் கூடாது... நீ தான் நிஷாவுக்கு உறுதுணையா இருக்கணும்... அதான் உன் பையன் போலீசா இருக்கானே... அப்பறும் என்ன... எல்லாத்தையும் அவன் பார்த்துக்குவான்..." என்று விக்டரை சமாதானப்படுத்தினான் அக்ஷய்...

அபியும், நிஷாவும் அமைதியாய் இரு ஆண்களையும் பார்த்துக் கொண்டு இருந்தனர்... இருவரின் முகமும் அவர்களுக்குப் பழகி போன ஒன்று தானே...

"சூப்பர் மாமா... உங்க நிதானம் யாருக்கும் வராது... ரொம்பச் சாணக்கியத்தனமா யோசிக்கிறீங்க..." என்று ஜான் அக்ஷயை பாராட்டினான்...

அதைக் கேட்டு மித்ரேஷ் முகத்தில் கூடச் சிறு புன்னகை தோன்றியது...

அந்நேரம் கோபிநாத், துளசி, ஆதர்ஷ், அனி நான்கு பேரும் அங்கு வர அங்கே கனத்த மௌனம் நிலவியது...

"வாங்க..." விக்டர் அவரை வரவேற்க...

"வாங்கப்பா..." நிஷாவும் தன் பங்கிற்கு வரவேற்றாள்...

அவர்களது வரவேற்பை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் கோபிநாத் உள்ளே நுழைந்தார்... பேத்தியின் வாழ்விற்காக அவர் அங்கே வந்து இருந்தார்... பேத்தியின் பிடிவாதம் முன் அவரின் வறட்டுக் கௌரவம் சற்றும் எடுபடாமல் போனது அவரது தூரதிர்ஷ்டமே...

யார் என்ன பேசுவது என்று தெரியாமல் அங்கே அப்படியே நின்று இருந்தனர்... கனத்த மௌனம் அங்கே நிலவியது...

"மித்து... என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறியா...?" மது மித்ரேஷ் முன் வந்து கேட்டாள்...

அவன் அவளை முறைத்துப் பார்த்தான்...

"உன் தாத்தா பேசிய பேச்சு கேட்டதுக்கு அப்புறமும் நான் உன் கழுத்தில் தாலி கட்டுவேன்னு நீ எப்படி நினைக்கிற...?" காட்டமாய் எரிந்து விழுந்தான்...

"இது தான் உன் முடிவா...?"

"ஆமாம்..." என்றான் எரிச்சலாய்...

"அப்போ என் முடிவையும் நல்லா கேட்டுக்கோ... நீ தாலி கட்டினா உன் மனைவியா உன் கூட வாழ்வேன்... இல்லை முடியாதுன்னு நீ சொன்னாலும் எனக்கு ஒன்றும் கவலை இல்லை... அப்போதும் நான் உன் கூடத் தான் வாழ்வேன்... என்ன தாலி கட்டாமல் வாழ வேண்டி இருக்கும்... அவ்வளவு தான்... நீ என்னோட புருசன்னு நான் மனசில் நினைச்சு ரொம்ப நாளாச்சு..."

அவளது வார்த்தையில் விக்டர், நிஷா, ஜான் மூவரும் திகைத்துப் போய்ப் பார்த்தனர்...

மித்ரேஷ்க்கு அதிர்ச்சி தான் என்றாலும் அவளது ஒவ்வொரு வார்த்தையும் அவனின் காயம் அடைந்த இதயத்திற்கு மருந்தாக இருந்தது என்றால் மிகையில்லை...

ஆனாலும் அவனின் பிடிவாதத்தைத் தளர்த்த அவனால் இயலவில்லை...

"நீ என்ன வேணும்ன்னாலும் சொல்லிக்கோ... என்னால் உன்னைக் கல்யாணம் பண்ண முடியாது..."

"அது உன் விருப்பம்... கல்யாணம் ஆனாலும் சரி ஆகலைன்னாலும் சரி நான் இந்த வீட்டை விட்டு வெளியில் போக மாட்டேன்..." என்று பிடிவாதமாய்ச் சொன்னவளின் அருகே வந்து அவளது கையைப் பிடித்து அவன் இழுக்க முயல, அசையாது நின்றவள்,

"என்ன என்னைக் கழுத்தை பிடித்து வெளியில் தள்ள போறியா... தாராளமா தள்ளு... ஆனா அதுக்கு முன்னாடி என் உயிரை எடுத்துட்டுப் பிணமா கொண்டு போய் வெளியில் போடு... பிணமாய்ப் போனாலும் உன் மனைவியா தான் நான் இந்த வீட்டை விட்டு போவேன்..." அழுத்தமாய்க் கூறியவளை கண்டு அவனது கை தளர்ந்தது...

"ஈஷ்வர்... மது பாவம்டா... அவ்வளவு சொல்றாளே... சரின்னு ஒத்துக்கோப்பா..." நிஷா அவனிடத்தில் வந்து கெஞ்சினாள்...

"அவன் ஒத்துக்க மாட்டான் அத்தை... ஏன்னா தாத்தா பேசியது அப்படி... நான் உங்க மருமகளா இந்த வீட்டில் இருந்துட்டு போறேன்... நீங்க என்னை ஏத்துக்க மாட்டீங்களா என்ன...?"

பல கோடி மதிப்புள்ள சொத்துகளுக்கு அதிபதியான மது ஒன்றும் இல்லாத நிஷாவிடத்தில் கையேந்துகிறாள் என்றால் அதற்குத் தூய்மையான அன்பு மட்டுமே காரணம்...

"அவன் கிடக்கிறான் மது... நீ எப்பவும் என் மருமகள் தான்... உனக்கு இல்லாத இடமா... நீ தாராளமா இங்கே இருக்கலாம்..." நிஷா கூற அவளை அணைத்து கொண்டாள் மது...

இருவரின் பாசப்பிணைப்பை பார்த்துக் கொண்டு இருந்தாலும் மித்ரேஷின் மனம் இரங்கவில்லை...

இவ்வளவையும் பார்த்துக் கொண்டு இருந்த கோபிநாத் பேத்திக்காக மித்ரேஷ் அருகில் வந்தார்...

"ஈஷ்வர்... என் பேத்தியை கல்யாணம் பண்ணிக்கோப்பா... இல்லைன்னா ஊர் உலகத்தில் வேறு மாதிரி பேசுவாங்க..."

அதைக் கேட்டு மித்ரேஷின் முகத்தில் திருப்தி வந்தது... மனதில் எதையோ சாதித்துவிட்ட நிம்மதி எழுந்தது...

"எப்படிப் பேசுவாங்க தாத்தா... கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி எங்கம்மாவை பேசுனீங்களே அந்த மாதிரியா தாத்தா..." அதில் இருந்த நக்கலில் கோபிநாத்தின் முகம் கறுத்துப் போனது...

"ஈஷ்வர்..." நிஷாவும், விக்டரும் கத்திவிட்டனர்...

யாரை பார்த்து என்ன வார்த்தை கூறுகிறான்... ஏதோ மது விருப்பப்பட்டு அவனைத் தேடி வந்தால் அவன் வாய்க்கு வந்ததைப் பேசி விடுவானா...?

"ஈஷ்வர்... நீ என்ன பேசினாலும் அது என்னையும் பாதிக்கும்... ஏன்னா மது என் மகள்... நான் உன்னை என் மகனா தான்ப்பா பார்க்கிறேன்..." அபி அவனிடத்தில் கண்ணீர் மல்க கூற...

"சாரி அத்தை..." என்றவன் அதற்கு மேல் அதைப் பற்றிப் பேசவில்லை...

"சரி மதுவை நான் பேசலை... அதே சமயம் நான் அவளைக் கல்யாணம் பண்ணிக்கவும் முடியாது..." என்று தீர்மானமாய்ச் சொன்னவனை ஒன்றும் பேசாது பார்த்த மது பெற்றோரிடம் வந்து,

"நீங்க வீட்டுக்கு போங்க..." என்றவள் மாடிப்படியில் காலை வைத்தாள் அவனது அறைக்குச் செல்வதற்கு...

"ஏய்... எங்கேடி போற...?" அலறிக் கொண்டே அவள் முன் வந்து வழி மறித்து நின்றான் அவன்...

"நான் தான் ஏற்கெனவே சொன்னேனே... நீ தாலி கட்டினா உன் மனைவியா வாழ்வேன்... இல்லைன்னா..." என்று நிறுத்தியவள்,

"என் தாத்தா பேசியதுக்குப் பழிவாங்குறதுன்னா நீ தாலி கட்டாமலே என்னோடு குடும்பம் நடத்தலாம்... அதனால் உன் மனக்காயம் ஆறும்ன்னா நான் அதுக்கும் தயார் தான்..." என்று நிதானமாய்ச் சொன்னவளை உறுத்து விழித்தவன் அவளின் கையைப் பிடித்து அவளது பெற்றோர் முன் அழைத்து வந்தவன்,

"நான் மதுவை கல்யாணம் பண்ணிக்கிறேன்... இப்போ நீங்க அவளைக் கூட்டிட்டு போங்க..." அதில் அனைவரது முகமும் மலர்ந்தது...

'இது தான்டா நீ...' மனதுக்குள் சந்தோசமாய் உணர்ந்தாள் மது...

"இல்லை நான் போக மாட்டேன்... இப்பவே நீ தாலி கட்டணும்..."

"அம்மு..." அபி அவளை அதட்ட...

"அதான் ரெண்டு வீட்டு பெரியவங்களும் இங்கே இருக்கீங்களே அப்புறம் என்ன..." அன்று அக்ஷய் சொன்னது போல் இன்று அவனது மகளும் கூறினாள்...

அவளின் பிடிவாதத்தின் முன் யாரின் பேச்சும் எடுபடாமல் போனது...

ஏற்கெனவே மிருதுளாவிற்குத் தாலி வாங்கிய போது மதுவிற்கும் நிஷா தாலி எடுத்து வைத்திருந்தாள்... அதைப் பொன் மஞ்சள் கயிற்றில் கோர்த்து அவள் எடுத்து வர வீட்டின் பூஜையறையில் மிகவும் எளிமையான முறையில் மித்ரேஷ் மது கழுத்தில் தாலி கட்டி தன் மனைவியாய் ஆக்கி கொண்டான்...

தாலி கட்டும் போது அவள் புறமாய்க் குனிந்தவன், "பிடிவாதம்... பிடிவாதம்..." என்று வார்த்தையைக் கடித்துத் துப்ப...

"எல்லாம் சகவாச தோசம் தான் மச்சான்..." என்று அவனைப் பார்த்து கண்சிமிட்டி சிரித்தாள் அவள்...

அதில் அவனது மனம் மயங்கத்தான் செய்தது...

நினைத்ததைச் சாதித்துக் காட்டி மது அக்ஷயின் மகள் என்று நிரூபித்தாள்...

அபிக்கு சற்று மனவருத்தம் தான்... அது கூட மகளின் சந்தோசத்தைக் காணும் போது பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டது... அக்ஷய்க்கு மகளின் சந்தோசம் மட்டுமே பிரதானமாய்த் தெரிந்தது...

விக்டர், நிஷா பற்றிச் சொல்லவே வேண்டாம்... அத்தனை சந்தோசத்தில் இருந்தனர்... ஜானும் அப்படியே...

மித்ரேஷ் சந்தோசமும் துன்பமும் கலந்து இரு வேறு மனநிலையில் இருந்தான்...

ஆதி, மிருதுளாவிற்குத் தெரியாமல் மித்ரேஷ், மது திருமணம் அந்த நள்ளிரவு நேரத்திலும் நடந்து முடிந்துவிட்டது...

எல்லோரிடமும் ஆசிர்வாதம் வாங்கிய போதும் மித்ரேஷ் கோபிநாத் காலில் விழ மறுத்து விட்டான்... அதில் அவரது மனம் சுணங்கி தான் போனது...

திருமணம் தான் அவசரகதியில் நடந்து முடிந்து விட்டதால் மற்ற சடங்கு நல்ல நேரம் பார்த்து நடத்த வேண்டும் என்று அபி மிகவும் கண்டிப்பாகக் கூறிவிட்டாள்...

'ஆமா... அப்படியே நீங்க என்னைக் கொண்டு போய் விட்டாலும் உங்க மருமகன் பர்ஸ்ட் நைட் கொண்டாடிட்டு தான் மறுவேலை பார்ப்பான்... அட போங்க மாம்...' மனதுக்குள் சலித்துக் கொண்டாள் மது...

எல்லோரும் சென்றதும் மித்ரேஷ் மதுவை திரும்பியும் பார்க்காமல் தனது அறைக்குச் சென்று விட மது நிஷாவுடன் அவளது அறைக்குச் சென்றாள்...

"நீ இங்கே படும்மா..." படுக்கையைச் சரி பண்ணி மதுவை படுக்கச் சொன்ன நிஷாவிடம்,

"அத்தே..."

"என்னடா சொல்லு...?" கனிவாகக் கேட்டாள் நிஷா...

"நான் போய் மித்துவை பார்த்துட்டு வரட்டா... உங்க பையன் கற்புக்கு நான் உத்திரவாதம்... அதனால் பயப்பட வேண்டாம்..." சிரியாமல் சொன்னவளை கண்டு நிஷாவிற்குச் சிரிப்பு வந்தது...

"சரியான அறுந்த வாலு... போய்ப் பார்த்துட்டு வா..." என்று நிஷா அனுமதி அளிக்க அடுத்த நொடி சிட்டாகப் பறந்து இருந்தாள் அவள்...

அப்போது தான் படுக்கையில் சரிந்த மித்ரேஷ் கதவை தட்டாமல் திடுமென உள்ளே நுழைந்த மதுவை கண்டு,

"ஏய் கதவை தட்டிட்டு உள்ளே வரணும்ன்னு அறிவில்லை உனக்கு..." என்று கத்த துவங்க...

வேகமாய் அவன் அருகில் வந்தவள் அவன் வாய் மீது கை வைத்து பொத்தியவள், "ஷ்... கத்தின... அவ்வளவு தான்..." ஒற்றை விரல் நீட்டி மிரட்டியவளின் அருகாமை அவனை வாயடைக்கப் போதுமானதாய் இருந்தது...

"இது நல்ல பிள்ளைக்கு அழகு..." என்றபடி அவன் அருகில் அவள் உட்கார... அவளின் செயலில் அவன் தான் பயந்து போய் எழுந்து அமர்ந்தான்...

"என்ன சொன்ன கதவை தட்டிட்டு உள்ளே வரணுமா... அது எல்லாம் அப்போ... இப்போ நான் உன் வொய்ப்... இப்போ கதவை தட்டாமல் உள்ளே வர எனக்கு முழு உரிமை இருக்கு... இங்கே மட்டும் அல்ல..." கண்களை

உருட்டியவளை கேள்வியாய் பார்த்தவனைக் கண்டு நமட்டு சிரிப்புடன்,

"பாத்ரூமுக்கு உள்ளேயும் தான்..."

"உன்னை..." அவன் முறைத்தான்... அதற்கு எல்லாம் பயப்படுவாளா மது...

"என்ன...?" என்றாள் பதிலுக்கு...

"எதுக்குடி தேவையில்லாம என் வாழ்க்கையில் வர்ற... நான் தான் நீ வேண்டாம்ன்னு வந்துட்டேனே... அப்புறம் எதுக்கு என்னைத் தொந்திரவு பண்ற... இப்படி வலுக்கட்டாயமா கல்யாணம் பண்ணி என்ன சாதிக்கப் போற... எனக்கு உன்னைப் பிடிக்கலை... பிடிக்கலை..." என்றவனைக் கண்டு வேதனையின் சாயல் அவளின் முகத்தில் படிந்தது...

எல்லாம் ஒரு நொடி தான் தன் முகத்தை மாற்றிக் கொண்டவள் அவன் அருகே இன்னமும் நெருங்கி அமர்ந்தாள்...

"எதுக்குக் கிட்ட வர்ற... தள்ளி போ..." அவன் குரலில் கடுமையைக் காட்ட நினைக்க அதுவோ நலிந்து போய் ஒலித்தது...

"என்னை உனக்குப் பிடிக்கலையா... எங்கே என் முகத்தை நல்லா பார்த்து சொல்லு..." அவனின் முகத்தின் அருகே தன் முகத்தைக் கொண்டு வந்தவளின் நெருக்கத்தைக் கண்டு காலையில் நடந்தது அவனுக்கு நியாபகம் வந்தது...

"இப்போ சொல்லுடா பிடிக்கலைன்னு..." என்றவள் அவனது இதழ் மீது தன் இதழை பொருத்தினாள் தைரியமாக...

அவளது இதழ் ஒற்றலில் அவனது அடக்கப்படக் காதல் நீரூற்று போல் பீறிட்டு கிளம்பியது... எத்தனை நாள் கனவு இது... அவள் அவனது மனைவியாக அவனின் கைகளில் வந்து சேரும் நாளை எத்தனை ஆவலாய் எதிர்பார்த்து இருந்தான்...

அடுத்த நொடி அவளது செயலை தனதாக்கிக் கொண்டவன் அவளது இதழை தன் வசப்படுத்திக் கொண்டான்...

நீண்ட நேரம் தொடர்ந்த நீண்ட நெடிய முத்தத்தில் இருவருக்குமே மூச்சிரைத்தது... மூச்சு வாங்குவதற்காகப் பிரிந்தது அவர்களது இதழ்கள்... ஆனால் அடுத்த நிமிடம் அவனது இதழ் தனது துணையைத் தேடி மீண்டும் அவளது இதழை நாடியது...

மீண்டும் மீண்டும் அவளுள் மூழ்கியவனின் கைகள் அவளது மேனியில் அத்துமீறும் போது அவன் சற்றுச் சுதாரித்துக் கொண்டு அவளை விட்டு விலகினான்...

இன்னமும் தன் மடியில் கண்களை மூடி கொண்டு ஒருவித இன்ப லயிப்பில் மூழ்கி படுத்து இருக்கும் அவளைக் காதலோடு வருடியது அவனது விழிகள்...

"அம்மு..." குனிந்து அவளது காதோரமாய் அழைத்தவன் குரல் அவளைத் தென்றலாய் வருடி சென்றது...

மெல்ல கண்களைத் திறந்து பார்த்தவள் அவனது கழுத்தில் கைகளை மாலையாகக் கோர்த்து அவனைத் தன் முகம் அருகே இழுத்தவள்,

"இப்போ சொல்லுடா என் மச்சான்... என்னைப் பிடிக்கலைன்னு..." விசமச் சிரிப்புடன் சொன்னவளை கண்டு அத்தனை நேர இதம் மறைந்தது அவனிடத்தில்...

அவளை விட்டு விலகி அமர்ந்தான் அவன்... கட்டிலில் சாய்ந்து அமர்ந்து மேலே விட்டத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டு இருந்தவன் அருகில் அமர்ந்தவள்,

"மித்து... உன் மனசில் ஏதோ ஒண்ணு குழப்பிட்டு இருக்கு... நீ என்னை ஜெயிக்கிறதுக்காகக் கல்யாணம் பண்றதா இருந்தா தாத்தா பேசிய வார்த்தையை எல்லாம் நீ பொருட்படுத்தி இருக்க மாட்ட... உன் குறிக்கோள் ஒன்று தான் உன் லட்சியம்ங்கிற மாதிரி நீ என்னை வம்படியா கல்யாணம் பண்ணி இருப்ப... ஆனா தாத்தா சொன்னதும்

நான் வேண்டாம்ன்னு என்னைத் தூக்கி எறிஞ்சிட்டு வந்த பாரு... அப்ப தான் எனக்கு உன் மேல் சந்தேகம் வந்தது... உண்மையில் நாம போட்ட சவாலுக்காகத் தான் நீ என்னைக் கல்யாணம் பண்ண நினைச்சியா இல்லை அதுக்கு வேறு ஏதாவது காரணம் இருக்குமான்னு..." என்றவள் அவனின் கண்ணை உற்று நோக்கினாள்...

அவனோ அவள் தன்னைக் கண்டு கொண்டதில் திகைத்து போய் அமர்ந்து இருந்தான்...

"நீ என்னைக் கல்யாணம் பண்ண நினைச்சது நிச்சயம் பழிவாங்க இல்லை... இதுக்கு வேறு ஏதோ காரணம் இருக்கு... இதோ இப்போ என்னை விட்டு விலகி இருக்கணும்ன்னு நீ முடிவு பண்ணின பாரு அதுக்குப் பின்னாடியும் அதே காரணம் தான் இருக்கு... ஆனா அந்தக் காரணம் தான் என்னன்னு எனக்குப் புரிய மாட்டேங்குது..."

அவளுக்கு உண்மையில் புரியவில்லை தான்... மித்ரேஷ் தன்னைக் காதலித்து இருப்பான் என்பதை அவளால் ஊகிக்க முடியவில்லை...

"உன் மனசில் என்ன இருக்குன்னு சொன்னா தானே தெரியும் மித்து... எது எப்படி இருந்தாலும் நீயும் நானும் கணவன், மனைவி... அதை யாராலும் மாத்த முடியாது... நான்..." தான் அவனைக் காதலிப்பதாய் சொல்ல வாய் எடுத்தவள் அப்படியே அமைதியாய் அமர்ந்து இருந்தாள்...

இப்போது சொன்னால் அதை ஏற்றுக் கொள்வானா என்று அவளுக்குப் பயமாக இருந்தது...

"ம்ப்ச்... நீயா ஏதாவது கற்பனை பண்ணிக்காதே... நான் பேசியது நடந்துக்கிட்டது எல்லாம் உண்மை தான்... அதுக்கு முன்னாடி பின்னாடின்னு எந்த ஒரு காரணமும் இல்லை..." என்று எரிந்து விழுந்தவன்,

"முதல்ல நீ இங்கிருந்து கிளம்பு..." கோபமாய்ச் சொன்னவனைக் கண்டு அவள் அசரவில்லை...

"நான் ஒண்ணும் உன் கூட இருக்க வரலையே... இதைச் சொல்லிட்டுப் போகத் தான் வந்தேன்... உன் மனசில் என்ன இருக்குன்னு கூடிய சீக்கிரம் கண்டு பிடிக்கிறேன்... அதுக்கு அப்புறம் உன்னைக் கவனிச்சிக்கிறேன்..." என்றவள் அங்கிருந்து செல்ல...

'கவனிச்சிக்கிறேன்' என்ற வார்த்தையில் அவள் கொடுத்த அழுத்தத்தில் அவனது முகத்தில் சிரிப்பு வந்தது...

அதையும் மீறி அவனது முகம் வருத்தத்தில் ஆழ்ந்தது...

மதுவிற்குத் தான் எந்தவிதத்திலும் பொருத்தமானவன் இல்லை என்கிற தாழ்வு மனப்பான்மை, தேவதையாய் போற்றப்பட வேண்டியவளை மிரட்டி திருமணத்திற்குச் சம்மதிக்க வைத்ததில் ஏற்பட்ட குற்ற குறுகுறுப்பு எல்லாம் அவன் மனதை வாட்டி கொண்டு இருக்கும் இந்த நேரத்தில் அவனது அன்னை பற்றிய விசயம் வெளியில் தெரிந்து அவனது நிலையை மேலும் கவலைக்கிடமாக்கி விட்டது...

இனியும் அவளை எந்த முகத்தை வைத்துக் கொண்டு அவன் அவளைத் திருமணம் செய்வான்... அதற்கு அவனுக்குக் கொஞ்சமும் அருகதை இருக்கிறதா...

ஆனால் அதை எல்லாம் பொருட்படுத்தாமல் தன்னைப் பிடிவாதமாய்த் திருமணம் செய்து கொண்டு இருக்கும் மதுவின் மனநிலை புரியாத புதிராய் இருந்தது அவனுக்கு...

'அன்றில் இருந்து இன்று வரைக்கும் உன்னை மிரட்டி காரியத்தைச் சாதிக்க நினைக்கும் என்னிடத்தில் அப்படி என்னத்தையடி கண்டாய்... இந்தளவுக்கு எனக்காகக் கீழிறங்கி வந்து என்னைத் திருமணம் செய்யும் அளவுக்கு...?' நினைத்தவனுக்கு அவள் மனதில் இருந்த காதல் புரியவே இல்லை...

அவனின் மனம் மெல்ல கடந்த காலத்துக்குச் செல்ல ஆரம்பித்தது...

அங்கே நிஷாவுடன் படுத்து இருந்த மதுவும் கடந்த காலத்தைத் தான் நினைத்துக் கொண்டு இருந்தாள்...

இப்போது இருவரும் ஒரே மாதிரியாய் எண்ணினர்... அது... அன்று இருவருமே நாவை அடக்கி இருக்கலாமோ என்று... காலம் கடந்து வந்த ஞானோதயம்...

ஈர்க்கும்...

"ஹாய் எப்படி இருக்கீங்க...?" கணினியின் திரையில் தோன்றிய ஆதித்யாவின் உருவத்தைக் கண்டு மது,

"அண்ணா... நான் நல்லா இருக்கேன்... நீங்க...?" முதல் ஆளாய் குரல் கொடுத்தாள்...

ஆதி மேற்படிப்பிற்காக இலண்டன் சென்று இருந்தான்... இன்னும் சில மாதங்களில் படிப்பு முடிந்து இங்கு வந்துவிடுவான்...

மது பன்னிரெண்டாம் வகுப்பின் இறுதியில் இருந்தாள்...

மித்ரேஷ் ஆதியுடன் சேர்ந்து தான் பொறியியல் படிப்பு முடித்தான்... அதில் தேர்ச்சி பெறாது நிலுவையில் வைத்த பாடங்களை இப்போது தான் ஒவ்வொன்றாய் எழுதி முடித்துத் தேர்ச்சி பெற்று இருக்கிறான்... அதனால் தான் ஆதி வெளிநாடு சென்ற போது அவனால் செல்ல முடியவில்லை... அதை விட அவனுக்குமே அன்னையை விட்டு பிரிந்து வெளிநாடு செல்வது கொஞ்சமும் பிடிக்காத காரணத்தால் அவன் செல்லவில்லை...

அக்ஷய் கூட எவ்வளவோ சொல்லி பார்த்தான்... ம்ஹூம் அசைந்து கொடுத்தான் இல்லை அவன்...

ஜான் மருத்துவக் கல்லூரியில் நான்காம் ஆண்டுப் படிக்கிறான்... மிருதுளாவும் அதே கல்லூரியில் இரண்டாம் ஆண்டுப் படிக்கிறாள்...

கடந்த இரண்டு ஆண்டுகளாக ஆதியை உயிருக்கு உயிராய் காதலிக்கிறாள் அவள்... அவன் இங்கு இருந்த போது எல்லாம் தோன்றாத உணர்வு அவன் இலண்டன் சென்ற பின் தான் தோன்ற ஆரம்பித்தது... அவன் இல்லாது எதையோ இழந்தது போல் இருந்தது அவளுக்கு... முதலில் அவள் அந்த உணர்வை பற்றி ஆராயவில்லை... நாள் செல்ல செல்ல சரியாகப் போகும் என்று எண்ணி இருக்க ஆனால் நாள் செல்ல செல்ல அது இன்னமும் அதிகரித்து அவளின் தவிப்பை அதிகரிக்கச் செய்தது...

அவன் அங்குச் சென்ற பின் முதன் முறையாய் இங்கு எல்லோரிடமும் பேசும் போது அவனைக் கணினி திரையில் கண்டு அவளுக்குப் படபடப்பாய் இருந்த அதே சமயம் அவனிடம் பேச வேண்டும் என்ற ஆர்வம் மனதில் எழுந்த போதும் வெட்கம் அழையா விருந்தாளியாய் வந்து அவன் முகத்தைப் பார்க்க தயங்க செய்தது... ஒரு வகைப் புது உணர்வு அவளது மனதை தாக்கியது...

அப்போது உணர்ந்தாள் தனது மனதின் காதலை... இப்போது காதலை சொல்லும் வயதில்லை என்று அவள் தனக்குள் அதைப் பத்திரமாய்ப் பூட்டி வைத்து கொண்டாள்... ஒருவேளை அன்றே அவள் ஆதியிடம் தன் மனதை சொல்லி இருந்தால் அவனது பார்வை அவள் மேல் விழுந்து இருக்குமோ என்னமோ... விதியின் விளையாட்டில் அவளது காதல் மாட்டி கொண்டது அந்தோ பரிதாபம்...

"ஜான்... படிப்பு எல்லாம் எப்படிப் போகுது...?" ஜானிடம் விசாரித்தவன், மிருதுளாவிடம்...

"பட்டு... எப்படி இருக்க...? இப்ப எல்லாம் நீ முன்ன மாதிரி பேசுறது இல்லையே... காலேஜ் போனதும் ரொம்ப மாறிட்ட..." அவனது பேச்சுக்கு மிருதுளாவிடம் இருந்து புன்னகையே பதிலாக வந்தது...

"ஆமாம்... ஈஷ்வர் எங்கே...?" ஆதி கேட்டதும்,

"அவன் எங்கேயாவது ஊரை சுத்த போயிருப்பான்... அவனை விடு அண்ணா... வேஸ்ட் ஃபெல்லோ... நீ எனக்கு வரும் போது இது எல்லாம் வாங்கிட்டு வரணும்..." என்று தன் கையில் இருந்த காகிதத்தைத் திரையின் முன் ஆட்டினாள் மது...

"நான் வேஸ்ட்டுன்னா... நீ ரொம்ப யூஸ்புல்லா...?" என்றபடி அங்கே வந்த மித்ரேஷ் அவளது சடையைப் பிடித்து இழுத்து,

"குள்ளக்கத்திரிக்கா... கொஞ்சம் தள்ளி உட்காரு... ஸ்கிரீனை அடைச்சிட்டு உட்கார்ந்தா எங்களை எல்லாம்

ஆதி எப்படிப் பார்ப்பான்... தள்ளுடி..." என்று அவளை இடித்துக் கொண்டு அமர...

"போடா... என் அண்ணன் கிட்ட நான் பேசணும்..." அவளும் அவனை மேலும் இடித்துக் கொண்டு அமர அதைக் கண்டு ஜானும், மிருதுளாவும் சத்தம் போடாமல் சிரித்தபடி எழுந்து கொண்டார்கள்...

"நீ என்ன பேச போறேன்னு எனக்குத் தெரியும்..." என்றவன் அவள் கையில் இருந்த பட்டியலை பிடுங்கி படித்துப் பார்த்தவன்,

"டேய் ஆதி... ஊரில் இருக்கிற அத்தனை பிராண்ட் சாக்லேட் எல்லாம் வாங்கிட்டு வர சொல்லி எழுதியிருக்காடா... அப்புறம் இதுல இருக்கிறது எல்லாம் திங்க கூடியது தான்... சரியான தின்னிப் பண்டாரம்டி நீ..." அருகில் இருந்த அவளது தலையில் கொட்டினான் மித்ரேஷ்...

"இல்லைண்ணா... அவன் பொய் சொல்றான்... நம்பாதே..." வலித்த தலையைத் தடவி கொண்டே அவள் மறுத்து பேச...

"எனக்கு நேரம் ஆகுது... உங்க சண்டையை அப்புறம் வச்சுக்கிறீங்களா...?" ஆதி கேட்கவும் தான் இருவரும் அமைதியானார்கள்...

ஆதியிடம் பேசிவிட்டு எழுந்த மித்ரேஷ் மதுவின் சடையைப் பிடித்து இழுத்து, "ஏண்டி நான் பொய் சொல்றேனா...? மிருது இங்கே வாம்மா... நீயே பாரு... நான் சொன்னது சரி தானே..."

அதை வாங்கிப் படித்த மிருதுளா திருதிருவென விழித்தாள்... உண்மையில் மித்ரேஷ் சொன்னது தான் மெய்...

"பார்த்தியா மிருதுவே நான் சொன்னது சரிங்கிறாள்... இப்படியே போனேன்னு வை... ஒரு நாள் இல்லை ஒரு நாள் நீ பலூன் மாதிரி வெடிக்கத் தான் போற..." அவன் மேலும் அவளைக் கிண்டலடிக்க...

"போடா... நெட்டை கொக்கு..." என்று பழிப்பு காட்டியவள் அவன் எட்டி பிடிப்பதற்குள் அங்கிருந்து ஓடி விட்டாள்...

அன்று தலை சீவும் போது அபியிடம் மது, "மாம்... எனக்கு முடியை வெட்டி விடுங்க... மித்துச் சடையைப் பிடிச்சு பிடிச்சு இழுக்கிறான்... வலிக்குது..." என்று அழாத குறையாய் சொல்ல...

"நான் ஈஷ்வர் கிட்ட சொல்றேன்... அதுக்காக எல்லாம் முடியை வெட்ட கூடாது அம்மு... பாரு எவ்வளவு அழகா இருக்கு..." முடியை நீண்ட பின்னல் போட்டு மகளிடம் பெருமையாய் காட்ட அதில் சற்றுச் சமாதானம் ஆனாள் மது...

அது என்னவோ தெரியவில்லை மித்ரேஷ்க்கும் மதுவுக்கும் அப்படி ஒரு ஏழாம் பொருத்தம்... மது தவறே செய்யவில்லை என்றாலும் அவளை அழ வைத்துப் பார்ப்பதில் அவனுக்கு அலாதி ஆனந்தம்...

அதற்கு எல்லாம் காரணம் சிறு வயதில் நடந்த சம்பவம் ஒன்று தான்... அப்போது மித்ரேஷ்க்கு பன்னிரெண்டு வயது இருக்கும்... அருகில் இருந்த மைதானத்தில் உடன் விளையாடும் மாணவன் ஏதோ கிண்டல் அடித்தான் என்று அவனை இரத்தம் வரும் அளவுக்கு அவன் அடித்து விட்டான்... அந்தப் பையனின் அம்மா நிஷாவிடம் வந்து சத்தம் போட்டு விட்டு போக நிஷா மித்ரேஷிடம் அதைப் பற்றிக் கேட்க அவனோ அதைத் தான் செய்யவில்லை என்று உறுதியாய் மறுத்துவிட்டான்...

ஆதி, ஜான், மிருதுளா மூவரிடமும் கேட்க அவர்கள் யாரும் அவனைக் காட்டி கொடுக்க முன் வரவில்லை... ஆனால் ஆறு வயது சிறுமியான மது பொய் பேச பயந்து உண்மையை நிஷாவிடம் கூறிவிட அன்று நிஷா அவனை அடித்துத் துவம்சம் செய்து விட்டாள்...

என்றும் கை ஓங்காத அன்னை கோபப்பட்டு அவனை அடித்தது அவனது மனதில் ஆறாத ரணமாய் விழ அதற்குக்

காரணமான மது மேல் அவனுக்கு வெறுப்பு எழுந்தது... அது நாளுக்கு நாளுக்கு நாள் கூடி கொண்டே போனது...

அதன் பின் ஒரு பத்துத் தினங்கள் தாயிடம் பேசாமல் அவன் இருக்க மனம் பொறுக்காத நிஷா அவனிடம் கெஞ்சி கூத்தாடி அவனைப் பழைய மாதிரி பேச வைத்தாள்... அதில் இருந்து நிஷா அவன் தவறு செய்தாலும் அன்பாய் கண்டிப்பாளே ஒழிய அடிக்க மாட்டாள்... விக்டர் மட்டுமே அவனை அடித்துக் கண்டித்தான்...

அன்று பாடத்தில் ஏற்பட்ட சந்தேகத்தை ஜானிடம் கேட்பதற்காக மது அவனின் வீட்டிற்குச் செல்ல ஜான் நண்பனது வீட்டிற்குச் சென்று இருந்தான்...

"வேணும்ன்னா ஈஷ்வர் கிட்ட கேளேன்ம்மா..." நிஷா சொல்ல...

'அவன் கிட்டேயா... வேணவே வேண்டாம்...' என்று நினைத்தவள், "ஜான் வந்ததும் என்னைக் கூப்பிடுங்கத்தை... நான் வர்றேன்..." என்றபடி அவள் தன் வீட்டிற்குப் போவதற்குக் கிளம்ப அங்கு வரவேற்பறையில் அமர்ந்து இருந்த மித்ரேஷ்,

"அம்மு... நான் சொல்லி தர மாட்டேனா...? ஏன் அம்மு என் மேல் கோபமா உனக்கு...?" தன்மையாய் கேட்டவனைக் கண்டு அவள் வியப்பாய் பார்க்க...

'வசமா மாட்டிக்கிட்டியாடி...' மனதுக்குள் நினைத்தவன் வெளியில் பாவம் போல் முகத்தை வைத்துக் கொண்டு,

"உனக்குப் பிடிக்கலைன்னா வேண்டாம்... நீ ஜான் கிட்டேயே படிச்சிக்கோ..." அவனது பாவத்தில் அதை உண்மை என்று எண்ணி அவள் அவனிடம் படிக்க அமர்ந்தாள்...

"பரவாயில்லை நீயே சொல்லி கொடு..."

'என்னை எத்தனை தடவை என் அப்பா கிட்ட அடி வாங்கிக் கொடுத்து இருப்ப... இன்னைக்கு உனக்கு இருக்குடி...'

மனதில் கறுவி கொண்டவன் முதலில் அவளது கணித புத்தகத்தை எடுத்தான்...

அவனுக்குத் தெரியும் மதுவுக்கும் கணிதத்திற்கும் காத தூரம் என்று...

முதலில் எளிதான கணக்கை புரியும் படி விளக்கியவன் பின்னர் அவள் தனியே செய்வதற்காகக் கொடுக்கும் போது கஷ்டமான கணக்கு ஒன்றை கொடுக்க அதைச் செய்ய முடியாமல் அவள் விழி பிதுங்கி நின்றாள்...

"இது கூட உன்னால் செய்ய முடியலையா...? இதே இது சாப்பிட மட்டும் சொல்லி கொடுக்கவே வேண்டாம்... எதையாவது அரைச்சிக்கிட்டே இரு..." என்று திட்டியபடி அவள் தலையில் நங்கென்று கொட்டினான்...

"நீ ஒண்ணும் எனக்குச் சொல்லி கொடுக்க வேண்டாம்..." என்று அவள் கோபித்துக் கொண்டு எழ முயற்சிக்க...

அவளின் கையை இறுக்கமாய்ப் பிடித்துக் கொண்டு அவளை எழ முடியாமல் செய்தவன்,

"ஒரு கொழுத்த கோழி வலிய வந்து சிக்கியிருக்கு... சூப் போட்டுர வேண்டாமா...?" என்றபடி மீண்டும் அவள் தலையில் கொட்டியவன்,

"ஒழுங்கா கவனி..." என்றபடி கணக்கை விளக்க,

"அத்தே..." மது அலறிய அலறலில் நிஷா அங்கே உடனே வர...

மித்ரேஷ் அடித்ததால் அழுது கொண்டு இருந்த மதுவை கண்டு பதறி போய் அவள் அருகே வந்த நிஷா,

"ஏன் அழற மது...? ஈஷ்வர் உன்னை அடிச்சானா...?" என்று அவளிடம் கேட்டவர்,

"டேய்... உனக்கு எத்தனை தடவை சொல்லி இருக்கேன்... வளர்ந்த பொண்ணு மேல கை வைக்காதேன்னு..."

"யாரு இவளா வளர்ந்த பொண்ணு...? கத்திரிக்காய்க்குக் கை, காலு முளைச்ச மாதிரி இருக்கிற இவ வளர்ந்த பொண்ணா... குட் ஜோக் மாம்..." என்றபடி வாய்விட்டு சிரித்தவனை ஆத்திரமாய்ப் பார்த்தாள் மது...

"மது உண்மையைச் சொல்லு... ஈஷ்வர் அடிச்சானா இல்லை வம்பிழுத்தானா...?"

நிஷாவின் கண்டிப்பான கேள்வியில் மது உண்மையைச் சொல்லாமல் மறைத்து விட்டாள்... எங்கே தன்னால் அவன் அடி வாங்கி விடுவானோ என்று அவள் சொல்லாமல் மறைத்தாள்...

"இல்லை அத்தை... அங்கே ஒரு பூச்சி இருந்ததா அதைப் பார்த்து பயந்து கத்திட்டேன்..."

"நல்ல பொண்ணு போ... தைரியமா இருக்க வேண்டாமா...?" என்றவாறு நிஷா எழுந்து சமையலறைக்குச் செல்ல...

"ம்... அந்தப் பயம் இருக்கணும்..." கெத்தாய் சொன்ன மித்ரேஷை முறைத்துக் கொண்டே பாட புத்தகங்களைக் கையில் எடுத்துக் கொண்டு எழுந்தவள் அவன் தலையில் நறுக்கென்று கொட்டி விட்டு ஓடிவிட்டாள்...

"ராட்சசி..." கத்தியவன் வலியில் தலையைத் தேய்த்துக் கொண்டான்...

'என் கிட்ட மாட்டாமலா போயிடுவ... அப்ப கவனிச்சிக்கிறேன்டி...' என்று மனதில் கறுவி கொண்டான் அவன்...

அன்று வெளியில் சுற்றிவிட்டு அப்போது தான் வீட்டிற்கு வந்தான் மித்ரேஷ்... வந்ததுமே அபி அவனிடம் வந்து,

"ஈஷ்வர்... அம்முவை ஸ்கூலில் இருந்து கூட்டிட்டு வந்துடுப்பா... இனிமேல் ஸ்பெசல் கிளாஸ்ன்னு தினமும் காலையில் சீக்கிரம் போகணும்... அதே போல் மாலையிலும் லேட்டா தான் விடுவாங்களாம்... அதனால்

தினமும் நீயே அவளைக் கூட்டிட்டு போயிட்டு வந்திருப்பா... உனக்கு ஒண்ணும் தொந்திரவு இல்லையே..."

"அவனுக்கு வேற என்ன வேலை இருக்குத் தங்கச்சி... எப்பவும் வெட்டி ஆபிசர் தான்..." விக்டர் சொல்ல தந்தையை முறைத்துப் பார்த்தான் மித்ரேஷ்...

"ஒரு தொந்திரவும் இல்லை அத்தை... நானே கூட்டிட்டு போறேன்..." பவ்யமாய்ச் சொன்னவனைப் பார்த்து சிரித்தபடி சென்றாள் அபி...

காரை எடுத்துக் கொண்டு மதுவின் பள்ளி முன்பு நிறுத்திவிட்டு அவளுக்காகக் காத்திருக்கலானான்... சுமார் பத்து நிமிடம் கழித்து மது அவளது தோழி தான்யாவோடு வந்தாள்...

அப்போது தருண் தான்யாவை அழைத்துச் செல்ல அங்கு வந்து இருந்தான்... வந்தவன் மதுவை கண்டதும் அவளிடம் பேசி கொண்டு இருந்தான்...

மித்ரேஷ் விழிகள் கூர்மையுடன் இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டு இருந்தது... தருண் மதுவிடம் சிரித்துப் பேசி கொண்டு இருந்தது கூட அவனுக்குத் தவறாகத் தோன்றவில்லை... ஆனால் மது அவனிடம் சிரித்துப் பேசி கொண்டு இருந்தது அவனுக்கு அவ்வளவு ஆத்திரத்தை அளித்தது...

'என்னைய கண்டால் மட்டும் இவ எப்பவும் முறைச்சிக்கிட்டு இருப்பா... ஆனா யாரோ ஒருத்தன் கிட்ட முப்பத்திரண்டு பல்லையும் காட்டி பேசுறதை பாரு...' மனதில் மூண்ட கோபத்துடன் மதுவிற்காக அவன் காத்திருந்தான்...

மது மேலும் பத்து நிமிடம் தருணிடம் பேசிவிட்டு பிறகு வந்து காரில் ஏறினாள்... பின் பக்க கதவை திறந்து கொண்டு ஏற போனவளை பார்த்து,

"நான் என்ன உனக்கு டிரைவரா...? வந்து முன்னால் ஏறு..." என்று அவன் உத்தரவிட...

அதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் பின்னால் ஏறி அமர்ந்தவள்,

"அந்த வேலையைத் தானே பார்க்க வந்திருக்க... அப்போ பேசாம அதை மட்டும் பாரு..." என்று அதிகாரமாய்க் கூறியவளை கண்டு எரிச்சலுடன் ஏதோ பேச எண்ணி அவள் புறம் திரும்பியவன் இருக்கையில் சாய்ந்து கண்களை மூடியபடி இருந்த அவளின் ஓய்ந்த தோற்றத்தில் ஒன்றும் பேசாமல் காரை கிளப்பினான்...

வீட்டில் வந்து அவள் இறங்கி செல்ல முற்பட்ட போது, "ஒரு நிமிசம்..." என்றவனைச் சலிப்புடன் பார்த்தவள்,

"ரொம்ப டையர்டா இருக்கு மித்து... நாளைக்குப் பேசலாமே..." என்றவளை கண்டு அவனுக்குப் பாவமாக இருந்த போதும் தருணிடம் அவள் சிரித்துப் பேசியது நியாபகம் வந்து அந்த நினைவை புறம் தள்ளியது...

"அவன் கூட மட்டும் சிரிச்சு சிரிச்சு பேச உனக்கு நேரம் இருக்கும்... ஆனா என் கூடப் பேச மட்டும் உனக்கு நேரம் இல்லை என்ன...?" என்று கோபமாய் இரைந்தவனைக் கண்டு அவளுக்கும் கோபம் வந்தது... ஆனாலும் அடக்கி கொண்டாள்... அவளுக்குத் தெரியும் இப்போது தானும் கோபப்பட்டால் அவனின் கோபம் இன்னமும் அதிகரிக்கும் என்று...

"யாரு அவன்...?" அதிகாரமாய்க் கேட்டவனைக் கண்டு எரிச்சல் வந்தது...

"தான்யாவோட அண்ணன்..."

"அதுக்கு ஏன் அவன் கூட அவ்வளவு நேரம் பேசிட்டு இருக்க... ஸ்கூல் விட்டா உடனே வரணும்ன்னு உனக்குத் தெரியாது... ஏற்கெனவே அத்தை கிட்ட வாங்கின அடியை மறந்து இருக்க மாட்டேன்னு நினைக்கிறேன்..."

அவன் பேசிய விதத்தில் அவளின் கோபம் எல்லை கோட்டை தாண்டி கொண்டு சென்றது...

"அவன் ஒண்ணும் உன்னை மாதிரி கிடையாது ரொம்ப நல்லவன்... அது போக அவங்கப்பாவும் எங்க டாட்டும் ரொம்பக் கிளோஸ் பிரெண்ட்ஸ்... அதனால் இதில் தப்பா நினைக்க ஒண்ணும் இல்லை... நீ தேவையில்லாம என்னைப் பத்தி மாம் கிட்ட போட்டு கொடுத்த நான் மனுசியா இருக்க மாட்டேன்..." என்று கத்தியவளை அலட்சியமாய்ப் பார்த்தவன்,

"இங்கே பாருடா... நீ மனுசியா... இது எப்போ இருந்து...? ஜந்துக்கள் எல்லாம் மனுசியைப் பத்தி பேச கூடாதும்மா..." என்று சொல்லி அவளை அவன் மேலும் வெறுப்பேற்ற அவள் முறைத்துக் கொண்டே காரில் இருந்து இறங்கி வீட்டிற்குள் சென்றாள்...

அன்று விடுமுறை தினம் என்பதால் வீட்டில் ஹோம் தியேட்டரில் படம் போட்டு பார்த்துக் கொண்டு இருந்தனர் சின்னவர்கள் நால்வரும்... மது அபியிடம் கெஞ்சி கூத்தாடி படம் பார்க்க வந்து இருந்தாள்... பொதுத் தேர்வு என்பதால் அபி அவளிடம் கொஞ்சம் கண்டிப்பாக நடந்து கொள்வாள்... மதுவோ தந்தையை ஐஸ் வைத்து தன் காரியத்தைச் சாதித்துக் கொள்வாள்...

வழக்கம் போல் படத்தில் ஒன்றி போன மது அருகில் அமர்ந்து இருந்த ஜான், மிருதுளாவிடம் நகைச்சுவையாய் பேசி கொண்டும், தோளில் அடித்துக் கொண்டும் திரைப்படம் பார்த்துக் கொண்டு இருந்தாள்...

முன்பு என்றால் மித்ரேஷ் இதைச் சாதாரணமாக எடுத்துக் கொண்டு போயிருப்பான்... ஆனால் இன்று அவனால் இதை அப்படியே விட முடியவில்லை... ஏனோ மனதுக்குள் முணுமுணுவென்று இருந்தது...

"டேய் அவ கூட என்னடா சிரிச்சு பேசிட்டு இருக்க..." ஜான் காதை கடித்தான் அவன்...

"யார்ண்ணா மிருதுவா...?" புரியாமல் கேட்டான் ஜான்...

"இல்லை... அந்தக் குள்ளக்கத்திரிக்காயை சொன்னேன்..."

"மதுவா..." வியப்புடன் அண்ணனை பார்த்தான் ஜான்.

"நீ தள்ளி உட்காரு..." என்ற மித்ரேஷிடம் ஒன்றும் பேசாமல் தள்ளி அமர்ந்தான் ஜான்...

சகோதரன் மேல் அவனுக்குச் சந்தேகமாக இருந்தது... ஆனால் ஒன்றும் காட்டி கொள்ளவில்லை...

"ஜான்... அங்கே பாரேன்..." மித்ரேஷ் தோளில் தட்டிய மது சிரித்தபடி திரையைக் காட்ட...

அவனோ புன்னகையுடன் அவளைப் பார்த்துக் கொண்டு இருந்தான்...

"ஜான்... என்னடா பேச மாட்டேங்கிற..." மது திரும்பியவள் அங்கே மித்ரேஷை கண்டு திகைத்து போனவளாய் எழ போக அவனோ அவளின் கையை அழுத்தமாய்ப் பிடித்து அமர வைத்தான்...

"என்னைய கண்டா உனக்கு எப்படி இருக்கு... ஊர்ல உள்ளவன் கூட எல்லாம் சிரிச்சு சிரிச்சு பேசுற... என்னைக் கண்டா மட்டும் உனக்குப் பேச பிடிக்கலையோ..." நக்கலாய்க் கேட்டாலும் அவனது வார்த்தையில் கோபமே இருந்தது...

"மித்து... தேவையில்லாம பேசாதே..." பல்லை கடித்தாள் அவள்...

"தேவை இருக்கப் போய்த் தான் பேசறேன்... நான் கேட்டதுக்குப் பதில் சொல்லு..."

"நான் மனுசங்க கூட மட்டும் தான் பேசுவேன்... நீ தான் மனுசனே கிடையாதே..." என்றவள் அவனின் கையை உதறிக் கொண்டு சென்றுவிட்டாள்...

செல்லும் அவளை முறைத்துக் கொண்டு அமர்ந்து இருந்தான் அவன்...

அடுத்த வந்த நாட்களில் தருண் தினமும் தங்கையை அழைத்துப் போகும் சாக்கில் பள்ளிக்கு வந்தவன் மதுவிடம்

பேசி விட்டு தான் சென்றான்...

அவனின் பார்வையில் தெரிந்த அதிகப்படியான ஆர்வத்தை மித்ரேஷின் விழிகள் கண்டு கொண்டது... அது அவனுக்கு ஆத்திரத்தை உண்டு பண்ணியது... இது தெரியாமல் பேசி கொண்டு இருக்கும் மது மேல் தான் அவனது ஆத்திரம் முழுவதும் திரும்பியது...

மித்ரேஷ் முறைத்துக் கொண்டு இருப்பதை ஒரு நாள் தருண் கண்டு கொண்டான்...

"என்ன உன் ஹீரோ என்னை முறைச்சு பார்க்கிறார்...?" சிரித்தபடி மதுவிடம் கேட்க...

"யாரு மித்துவையா சொல்றீங்க...?" மித்ரேஷை பார்த்தபடி அவள் கேட்டாள்...

"அண்ணா... அவன் எல்லாம் ஹீரோவா... அப்புறம் அந்த வார்த்தைக்கே மரியாதை இல்லாம போயிரும்... அங்கே பாருங்க... காதில் கடுக்கன், முடியை குடுமி போட்டுட்டுச் சாயம் போன ஜீன்ஸ்ன்னு பார்க்க பக்கா பிச்சைக்காரன் மாதிரி இருக்கான்..." தான்யா கேலியாய் சிரிக்க அதில் மதுவிற்கு ஆத்திரம் வந்தது...

"தான்யா மைண்ட் யுவர் வேர்ட்ஸ்... தேவையில்லாம எங்க மித்துவை இந்த மாதிரி பேசும் வேலையை வச்சுக்காதே... இனி நீ இப்படிப் பேசினா நம்ம பிரெண்ட்ஷிப் பத்தி நான் யோசிக்க வேண்டி இருக்கும்..." படபடவெனப் பொரிந்தவள் இருவரிடமும் விடை பெறும் எண்ணம் கூட இல்லாமல் தன் காரை நோக்கி நடந்தாள்...

"உனக்கு எத்தனை தடவை சொல்லி இருக்கேன்... அவன் கூடப் பேசாதேன்னு..." அவள் காரில் ஏறி அமர்ந்ததும் மித்ரேஷ் அவளிடம் கத்த ஆரம்பித்தான்...

'இவனுக்காக நான் அவங்க கிட்ட சண்டை போட்டுட்டு வந்தா இவன் என்னைச் சத்தம் போடுறான்... சரியான லூசுப்பய... என்னைக்குத் தான் இவன் திருந்த போறானோ...' மனதில் அலுத்து கொண்டவள் ஒன்றும்

பேசவில்லை... பேசினாலும் அவன் புரிந்து கொள்ளப் போவதில்லை என்று அவளுக்குத் தெரியும்...

இப்படிச் சின்னச் சின்னதாய் இவர்களிடையே வளர்ந்த சண்டை பெரிய சண்டையாய் உருவெடுத்தது ஒரு நாள்...

அன்று மதுவின் பிறந்தநாள்... காலையில் இருந்து எல்லோரும் அவளுக்கு வாழ்த்து சொல்லி பரிசு பொருட்களைக் கொடுத்தனர்...

ஜான், மிருதுளா இருவரும் சேர்ந்து தங்களது சேமிப்பில் இருந்து அவளுக்காக ஒரு அழகிய சுடிதாரை பரிசாகக் கொடுத்தனர்...

மித்ரேஷ்க்கு தான் சேமிக்கும் பழக்கம் கிடையாதே... நிஷா அவனுக்கு என்று செலவுக்குக் கொடுக்கும் பணம் அவன் தினப்படி செலவுக்கே சரியாய் போய்விடும்... அதனால் அவன் கையில் சுத்தமாய்ப் பணம் இல்லை...

'குள்ளக்கத்திரிக்கா வந்து கிப்ட் கேட்டா என்ன பண்றது...? கொடுக்கலைன்னா கேவலமா பார்ப்பாளே...' என்று யோசித்தவன் கண்ணில் தோட்டத்தில் அழகுற பூத்து இருந்த இளஞ்சிவப்பு ரோஜா பூ தென்பட்டது...

மதுவுக்கு இளஞ்சிவப்பு ரோஜா என்றால் கொள்ளைப் பிரியம்... அது அவனுக்கும் தெரியும்...

மனதுக்குள் சந்தோசம் அடைந்தவன் விசிலடித்தபடி அந்தப் பூவை பறித்துக் கொண்டு அவள் முன்னே வந்து நின்றான்...

"ஹேப்பிப் பேர்த்டே அம்மு..." அவளுக்குப் பிறந்தநாள் என்பதாலோ ஏனோ அவன் அவளிடத்தில் கொஞ்சம் அடக்கி வாசித்தான்...

மது நன்றி கூறி அதைப் பெற்றுக் கொண்டு போயிருந்தால் அன்று பிரச்சினை எழ வாய்ப்பு இல்லாமல் போயிருக்கும்... ஆனால் அவளோ அவனைக் கேலியாய் பார்த்தவள்,

"இதை விடப் பெட்டரான கிப்ட் உன் கண்ணில் படலையா..." கேட்டவள் நமட்டுச் சிரிப்பு சிரிக்க... அதில் அவனது முகம் சுருங்கி போனது...

"ஏன் ஐயா கையில் காசு இல்லையா...? நான் வேணா உனக்குத் தரவா...?" அவளின் கிண்டலில் அவனுக்கு மிகுந்த அவமானமாய்ப் போய்விட்டது...

அவனது கையில் இருந்த பூ தானாகக் கீழே விழுந்தது... ஒன்றும் பேசாது அங்கிருந்த நகர்ந்து விட்டான்... அவனுக்குத் தெரியும் இன்னும் அங்கே இருந்தால் அவளை வார்த்தையால் கடித்துக் குதறி விடுவான் என்று... பிறந்தநாள் அதுவுமாய் அவளை அழ வைக்க அவன் விரும்பவில்லை...

அவன் அமைதியாய்ச் சென்றது மதுவுக்கே சற்றுப் பாவமாக இருந்தது... கீழே கிடந்த பூவை கையில் எடுத்தாள்...

"சாரிடா... உன் கிட்ட நல்லா பேசணும்ன்னு தான் நினைக்கிறேன்... ஆனா உன் முகத்தைப் பார்த்தா அந்த எண்ணம் அப்படியே மாறி போகுது... நான் என்ன செய்ய...?" பூவை பார்த்து சொல்லியவள் அதைத் தலையில் வைத்து கொண்டாள்...

வேண்டும் என்றே அவன் முன் வந்து அவள் நிற்க அவனோ அவளை நிமிர்ந்தும் பார்க்கவில்லை...

"ஜான்... இங்கே பார்... இந்த ரோஸ் அழகா இருக்கா... மித்துக் கிப்ட்டா கொடுத்தான்..." மதுவின் பேச்சில் மித்ரேஷ் அவளை நிமிர்ந்து பார்த்தான்...

ஏனோ அவள் அவனைக் கிண்டலாய் பேசுவது போல் அவனுக்குத் தோன்றியது... அப்போது மது முகத்தில் தவழ்ந்த புன்னகை அவனது எண்ணத்தை உறுதிப்படுத்த மறு நொடி அவன் அந்தக் காரியத்தைச் செய்தான்...

அவள் தலையில் சூடியிருந்த பூவை பறித்துக் கசக்கி தூர எறிந்தவன் அவளைப் பார்த்து, "இதுக்கு மேல ஏதாவது

பேசின... கொன்னுருவேன்டி..." உறுமியவன் வேகமாய் அங்கிருந்து நகர்ந்துவிட்டான்...

அவனின் செய்த காரியத்தில் திகைத்துப் போய்க் கண்ணீர் மல்க நின்று இருந்தவளை ஜான் தான் சமாதானப்படுத்தினான்...

அன்று மாலை மதுவின் பிறந்தநாள் கொண்டாட்ட விழா நட்சத்திர விடுதியில் நடைப்பெற்றது... அதற்குத் தான்யாவின் குடும்பமும் அழைக்கப்பட்டு இருந்தது... தான்யாவோடு தருணும் அங்கு வந்து மித்ரேஷின் புகைச்சலை அதிகரித்தான்...

அதிலும் அழகாகக் கம்மீரமாக இருந்த தருணை கண்டு ஏனோ மித்ரேஷ்க்கு அவ்வளவு பொறாமையாக இருந்தது... அது ஏன் என்று அவனுக்குத் தெரியவில்லை... அதைப் பற்றி அவன் அலசி ஆராயவும் இல்லை...

காலையில் நடந்த நிகழ்வால் மது அவனிடத்தில் இருந்து சற்று ஒதுங்கியே இருந்தாள்... அதனால் அவனிடம் அவள் பேசவே இல்லை... அவனிடம் பேசாமல் அவள் தருணிடம் சிரித்துச் சிரித்துப் பேசியது வேறு அவனுக்கு வயிற்றெரிச்சலை கிளப்பியது...

இதற்கு எல்லாம் சிகரம் வைத்தது போல் தருண் தனிப்பட்ட முறையில் அவளிடம் பரிசு பொருள் கொடுத்தான்... அவன் அவளை அதைத் திறந்து பார்க்க சொல்லி வற்புறுத்த மதுவும் அதைத் திறந்து பார்க்க அதில் அழகான கைக்கடிகாரம் இருந்தது...

"ரொம்ப அழகா இருக்கு... தேங்க்ஸ்..." என்று மது அவனுக்கு நன்றி கூற...

"நீ கையில் போட்டுக் கொண்டால் நான் ரொம்பச் சந்தோசப்படுவேன்..." என்று தருண் தன்மையாகக் கூற உடனே மது சந்தோசமாக அதைத் தன் கையில் அணிந்து கொண்டாள்...

யாரும் இதைப் பெரிதாக நினைக்கவில்லை... மதுவை அந்தளவுக்குப் பெரிய பெண்ணாய் எண்ணவில்லையா இல்லை தருண் தெரிந்த பையன் என்பதால் அதைச் சாதாரணமாக எண்ணினார்களோ என்னமோ யாரும் பெரிதாய் இதற்கு மறுப்பு தெரிவிக்கவில்லை...

மித்ரேஷ்க்கு தான் புசுபுசுவென்று கோபம் எழுந்தது...

அதன் தாக்கம் அன்று இரவே அவளிடத்தில் வெடித்தது...

ஈர்க்கும்...

அன்று இரவு பால்கனியில் அமர்ந்து இருந்த மது முன் தொப்பென்று குதித்தான் மித்ரேஷ்...

அதில் அதிர்ச்சி அடைந்தவள் அவனைக் கண்டதும் அமைதியாய் நின்று இருந்தாள்... சின்ன வயதில் இருந்து அவன் அப்படித் தான்... குரங்கு போல் அங்கே இங்கே என்று தாவி குதித்துக் கொண்டு இருப்பான்... அதனால் அவளுக்கு அது ஒன்றும் பெரிதாய் தோன்றவில்லை... ஆனாலும் அவனை முறைத்து பார்க்க தவறவில்லை...

"எதுக்குடி முறைக்கிற...?" அவன் கேட்டதும் தன் பார்வையைத் திருப்பிக் கொண்டாள்...

"அவன் கொடுத்தா நீ பல்லை காமிச்சட்டு வாங்கிப் போட்டுக்குவியோ...?" பல்லை கடித்தான் அவன்...

யாரை சொல்கிறான் என்று புரியாமல் அவள் அவனைப் பார்த்தாள்...

"அதான் அந்த மூக்குறிஞ்சி தான்யாவோட அண்ணன் அவனைத் தான் சொல்றேன்..."

"தேவை இல்லாம அவனைப் பத்தி நீ பேசாதே..." கண்டிப்புடன் கூறினாள் அவள்...

"பாருடா... சாரை சொன்னா மேடம்க்குக் கோபம் பொத்துக்கிட்டு வருது... அப்படி என்னடி உனக்கு அவன் ஸ்பெசல்..."

அவனது வார்த்தையில் திகைத்து போய் அவனைப் பார்த்தாள்...

"காலையில் நான் பூவை கிப்ட்டா கொடுத்தப்போ அப்படித் தூக்கி எறிஞ்சு கிண்டல் பண்ணின... அவன் கொடுத்தா மட்டும் பல்லை காட்டிட்டு வாங்கிக்கிற..."

"போதும் மித்து... தேவையில்லாம பேசாதே..." கையமர்த்தி அவனைத் தடுத்தாள்...

"எனக்குப் போதாதுடி... அவன் கிப்ட் கொடுக்கிறான்னா உனக்கும் அவனுக்கும் அப்படி என்னடி உறவு இருக்கு...? இல்லை அவன் கேட்டது எதையாவது நீ கொடுத்தியா..."

"மித்து..." அதிர்ச்சியில் கூவியவள் பின் சற்று நிதானித்து,

"நீ... நீ... குடிச்சியிருக்கியா..."

"ஆமாம்... கொஞ்சமா குடிச்சேன்..."

"இப்போ நீ போ மித்துக் காலையில் பேசிக்கலாம்..."

"நான் கேட்டதுக்குப் பதில் சொல்லு..." விடாப்பிடியாய் நின்றவனைக் கண்டு எரிச்சல் வந்தது...

"லூசு மாதிரி உளறாம இங்கிருந்து போ... நீ பேசிய பேச்சுக்கு டாட் கிட்ட சொன்னேன் நீ அவ்வளவு தான்... மாமாவுக்கும் தெரிஞ்சது நீ தொலைஞ்ச..."

அக்ஷயை பற்றி அவள் சொன்னதும் சற்று அடங்கினான் அவன்...

"இங்கே பாரு நீ அவன் கூடப் பழகுறது எனக்குப் பிடிக்கலை... இனிமேல் நீ அவன் கூடப் பழகக் கூடாது... அதையும் மீறி அவன் கூடப் பழகினேன்னு தெரிஞ்சது அன்னைக்கு உனக்கு லவ் லெட்டர் கொடுத்தானே அவன் கையை உடைச்ச மாதிரி இவன் கையையும் உடைச்சிருவேன்..."

அவள் அதிர்ச்சியுடன் அவனைப் பார்த்தாள்... பதினாலு வயதில் அவளுக்குக் காதல் கடிதம் கொடுத்தவன் மறுநாளில் இருந்து பள்ளிக்கு வரவில்லை... இருபது நாள் கழித்து வந்தவன் கையில் பெரிய கட்டு... கேட்டதற்குக் கீழே விழுந்து விட்டதாய்க் கூறினான்... அது மித்ரேஷ் வேலை தானா... இப்போது மித்ரேஷை எண்ணி அவளுக்குப் பயமாய் இருந்தது...

"அதுக்கு அப்புறம் உன் பின்னாடி சுத்தினான்ங்களே கிஷோர், ராஜா... அப்புறம் வாசு இவன்களை எல்லாம் அடிச்சு துவைச்ச மாதிரி இந்தத் தருணையும் ஒரு நாள்

இல்லை ஒரு நாள் துவைச்சு எடுக்கப் போறேன்... மவனே என் கையில் மட்டும் மாட்டினே நீ கைமா தான்டா..." என்றவனிடம் மேலே பேச அவளுக்குப் பயமாய் இருக்கக் கதவை மூடி கொண்டு அறைக்குள் சென்று விட்டாள்...

அவள் பயந்து சென்றது தனக்குக் கிடைத்த வெற்றியாக எண்ணி சந்தோசப்பட்டவன் தனது வீட்டிற்குச் சென்றுவிட்டான்...

அவன் அன்றே யோசித்து இருக்கலாம் தான் ஏன் மதுவுக்காக இவ்வாறு செய்கிறோம் என்று... அவனும் யோசிக்கவில்லை... தனக்காக அவன் ஏன் இவ்வாறு செய்கிறான் என்று அவளும் யோசிக்கவில்லை... காலம் கடந்து தான் இருவருமே யோசித்தனர்...

மித்ரேஷின் தூரதிர்ஷ்டமோ என்னவோ அவன் அப்படிப் பேசி சென்ற ஒரு வாரத்தில் இரு சக்கர வாகனத்தில் சென்ற தருணுக்கு விபத்து ஏற்பட்டுக் கை உடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டான்... அதை அறிந்த மது நேரே மித்ரேஷ் முன் தான் வந்து நின்றாள்...

அபி, அனி, நிஷா மூவரும் கோவிலுக்குச் சென்று இருந்தனர்... மித்ரேஷ் மட்டும் வீட்டில் இருந்தான்...

"ஏண்டா இப்படிப் பண்ணின...?" அவனின் சட்டையைப் பிடித்துக் கொண்டு கத்தியவளை கண்டு அவனுக்குச் சுத்தமாய் ஒன்றும் புரியவில்லை...

"முதல்ல சட்டையில் இருந்து கையை எடுடி... கொஞ்சமாவது பொண்ணாட்டம் நடந்துக்கோ..." அவளின் பிடியில் இருந்து தனது சட்டையை விடுவிக்க அவன் முயல...

"முதல்ல நீ மனுசனாட்டம் நடந்துக்கோ..." தன் பிடியை தளர்த்தாமல் அவள் பதிலுக்குக் கத்தினாள்...

"கொஞ்சம் புரியும் படியா தான் பேசி தொலையேன்... தலையும் இல்லாம வாலும் இல்லாம இப்படி மொட்டையா பேசினா எனக்கு என்ன தெரியும்...?"

"ஏன்டா தருணின் கையை உடைச்ச...?" அவள் ஆங்காரமாய்க் கத்த...

"நானா...?" அவன் குழம்பி போய் நின்று இருந்தான்...

"ஆமாம் நீயே தான்... நேத்து அவன் பைக்ல போகும் போது எதிரில் ஒரு பைக்காரன் வந்து இடிச்சி தள்ளியதில் அவனுக்குக் கையில் பிராக்சர் ஆகியிருக்கு..."

"அப்படியா ரொம்ப நல்லது..." வேண்டும் என்றே கிண்டலாய் சொன்னவன்,

"அதுக்கு நீ அந்தப் பைக்காரன் கிட்ட போய்த் தான் சத்தம் போடணும்... என் கிட்ட எதுக்கு வந்து கத்துற..."

"நீ தானே அந்தப் பைக்காரன்... உண்மையைச் சொல்லு மித்து... தப்பு மேல தப்பு செய்யாதே..."

"ஏண்டி... நீ என்ன லூசா... அவனுக்கு ஆக்சிடெண்ட் ஆனதுக்கு நானா பொறுப்பு... என் கிட்ட வந்து கத்திக்கிட்டு இருக்க..."

"ஆமாம் டா நீ தான் பொறுப்பு... உன் பொறுப்பில்லாத செயலால் தான் அவன் ஹாஸ்பிட்டல்ல படுத்து இருக்கான்..."

"திரும்பத் திரும்ப இதையே பேசினே அப்படியே அறைஞ்சிருவேன் அறைஞ்சு... நான் தான் இல்லைன்னு சொல்றேன்ல... நான் பண்ணினா பண்ணினேன்னு ஒத்துக்கிட்டு போயிட்டே இருப்பேன்... நான் எதுக்கும், யாருக்கும் பயப்பட மாட்டேன்..." என்றவனை உறுத்து விழித்தவள்,

"ஆனா எங்கப்பாவுக்கு நீ பயப்படுவியே... நான் அன்னைக்கு அப்பா கிட்ட சொல்லிருவேன்னு சொன்னதை வச்சு இப்போ என் கிட்ட மறைக்கிற..."

"போடி லூசு... இப்ப எது சொன்னாலும் உன் மண்டையில் ஏறாது... வீட்டுக்கு போ..."

"நான் போக மாட்டேன்... என்ன சொன்ன நான் தருண் கூடப் பழகக் கூடாதுன்னு தானே... அதுக்காகத் தானே அவனை அடிச்சுப் போட்டிருக்க... இப்ப சொல்றேன் கேட்டுக்கோடா... நான் அவன் கூடப் பழகுவேன்... உன்னால என்ன பண்ண முடியும்...?"

"மது..." கோபமாய்ப் பார்த்தவனைக் கண்டு அவள் ஒன்றும் அஞ்சவில்லை...

"அவன் கூடப் பழகுவேன்... இவ்வளவு ஏன் அதுக்கு மேலேயும் கூடப் போவேன்..." என்றவளை உறுத்து விழித்தவனைக் கண்டு,

"என்ன பார்க்கிற...? நான் அவனை லவ்வும் பண்ணுவேன்... கல்யாணமும் பண்ணிப்பேன்... நீ யாருடா அதைக் கேட்கிறதுக்கு...? அவன் என்ன உன்னை மாதிரின்னு வெட்டி ஆபிசர்ன்னு நினைச்சியா...? ஐஏஎஸ்க்கு படிச்சிட்டு இருக்கான்... இன்னும் கொஞ்ச நாளில் கலெக்டர் ஆகிருவான்... அவன் ஒண்ணும் உன்னை மாதிரி பொறுக்கித்தனம் பண்ணிட்டு ஊரை சுத்தலை..." என்றவள் அவனை மேலும் கீழும் பார்த்து,

"ஆளும் மூஞ்சியையும் பாரு... டிரசை பாரு... மாமா சொன்ன மாதிரி கழைக் கூத்தாடி மாதிரி இருந்துட்டு உனக்கு எல்லாம் வாய் வேண்டி கிடக்கு..."

இப்போதும் அவனின் செயலுக்குப் பின்னால் இருக்கும் நேசத்தை அவள் புரிந்து கொள்ளவில்லை... அவனே அதைப் புரிந்து கொள்ளாத போது அவளுக்கு எங்கே அது புரிய போகுது...

"ஏண்டி... உன் வயசு என்ன...? அதுக்குள்ள உனக்கு ஆம்பிளை கேட்குதோ..." அமிலம் தோய்ந்து வந்த அவனது வார்த்தையில் அவள் பேச்சற்று நின்று இருந்தாள்...

தன்னைக் காயப்படுத்திய அவளை இன்னும் அதிகமாய்க் காயப்படுத்த எண்ணினான் அவன்... அது ஏன் என்று கொஞ்சமும் அவன் யோசிக்கவில்லை...

"இப்போ உனக்கு என்ன ஒரு ஆம்பிளை தானே வேணும்... அது ஏன் நானா இருக்கக் கூடாது...?" அவனது கேள்வியில் திகைப்புற்றவள் முகம் அருவருப்பைத் தேக்கியது...

"ச்சீ..." அவனது பேச்சுக்கு முகத்தைச் சுளித்தவளை அவன் தவறாக எண்ணி கொண்டான்...

அவள் தன்னைக் கண்டு தான் முகத்தைச் சுளிக்கிறாள் என்று...

"ஏன் என்னைக் கண்டா உனக்கு அவ்வளவு அருவருப்பா இருக்கா... இதே இது அவனைக் கண்டால் இனிக்குதோ..." கோபமாய் உறுமியவன்,

"சரிடி... அவனை மாதிரி நானும் ஐஏஎஸ் ஆனேன்னா நீ என்னைக் காதலிப்பியா...? கல்யாணம் பண்ணிக்குவியா...?" அவனது கேள்வியில் அவளது திகைப்பு கூடி கொண்டே போனது...

"ச்சீ... என்ன பேச்சு பேசற மித்து... நீ... உன்னை... நான்... லூசு மாதிரி உளறாதே..." என்றவள் அங்கிருந்து நகர முயல...

அவன் வேகமாய் அவளைத் தன் கைகளால் சிறைப் பிடித்து இருந்தான்... அவனது அருகாமையில் மூச்சு விடக் கூடப் பயந்து போய் அவள் நின்று இருந்தாள்...

"பதில் சொல்லிட்டு போ... நான் அதே மாதிரி ஐஏஎஸ் ஆனா நீ என்னைக் கல்யாணம் பண்ணிப்பியா...?" அவனது உறுமலான பேச்சு கண்டு அவளுக்குப் பயம் வர...

"நீ முதல்ல அது மாதிரியாகி காட்டு... அப்புறம் பார்க்கலாம்..." அவனிடம் இருந்து விலக முற்பட்டாள் அவள்...

"அதெல்லாம் முடியாது... வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டுங்கிற மாதிரி எனக்கு முடிவா ஒரு பதில் வேணும்... சொல்லிட்டு போ..."

அவளைத் தான் ஏன் கட்டாயப்படுத்துகிறோம் என்று அவன் யோசிக்கவில்லை... அவன் மனதில் இருந்தது எல்லாம் தருணை தோற்கடிக்க வேண்டும்... அவனை விடத் தான் எந்தவிதத்தில் குறைந்து போனோம் என்ற எண்ணம் மட்டும் தான் அவனது மனதில் நிறைந்து இருந்தது...

தான் ஏன் தருணை தனக்குப் போட்டியாக எண்ணுகிறோம் என்று அவன் சிறிதும் யோசித்துப் பார்க்கவில்லை...

"சரி..." என்று சம்மதமாய்த் தலையை ஆட்டியவளை பார்த்து,

"சம்மதம்ன்னு சொல்லுடி..." என்றவனை நிமிர்ந்து பார்த்தவள் அவனது கண்ணில் தெரிந்த பிடிவாதத்தில் வேறுவழியின்றி,

"சம்மதம்..." என்றவளை கண்டு வெற்றிச் சிரிப்புடன் விலகி நின்றவன்,

"நீ என்னைத் தான்டி காதலிக்கணும்... என்னைத் தான் கல்யாணம் பண்ணிக்கணும்... என் கிட்ட நீ சவால் விட்டு இருக்க... மறந்துறாதே... நீ மறந்தாலும் நான் மறக்க மாட்டேன்..." அழுது கொண்டே ஓடும் அவளைப் பார்த்து அவன் கத்தி சொல்லும் போது விக்டர் வீட்டிற்குள் நுழைந்தான்...

அந்நேரம் தந்தையைக் கண்டு மித்ரேஷ் திகைத்துப் போனான்...

"டாட்..." என்றவனிடம் பதில் பேசாது வாயில் கதவை சாத்திய விக்டர் தனது பெல்ட்டை கழட்டியபடி,

"ஏண்டா நாயே... உன்னோட நிலை என்னன்னு தெரியாம உனக்கு மதும்மா கேட்குதோ... நீ யாருன்னு உனக்குத் தெரியுமாடா நாயே... ஒரு அடியாளுக்கும் ஒரு வேசிக்கும் பிறந்த கேவலமான பிறவிடா நீ... நீ மதும்மாவை கல்யாணம் பண்ணிக்கப் போறியா...? மதும்மாவோட குடும்பப் பாரம்பரியம் என்ன... அந்தஸ்து என்னன்னு உனக்குத் தெரியுமா...? அவங்க வீட்டு வேலைக்காரனா

இருக்கக் கூட நீ தகுதியில்லாதவன்... உனக்கு மதும்மா கேட்குதா..."

மித்ரேஷ் பேசியதில் கடைசிப் பகுதி மட்டுமே விக்டர் கேட்டு இருந்தான்... முழுவதும் கேட்டு இருந்தால் அவனும் இதைப் பெரிய பிரச்சினையாய் நினைத்து இருக்க மாட்டானோ என்னமோ...

விக்டரின் வார்த்தையில் மித்ரேஷ் உறைந்து போய் நின்றான்...

"டாட்... மாம்..." அவனால் அந்த விசயத்தை ஜீரணிக்க முடியவில்லை...

"ஆமாம்டா உன் அம்மா வேசி தான்... இதோ நிற்கிறேனே உன் அப்பா நான் உயிரை கொல்ல கூடத் தயங்காத ஒரு கொலைக்காரன்... எங்க ரெண்டு பேர் வயித்தில் பிறந்த நீ எப்படித் தேவதையான மதும்மாவை விரும்பலாம்..."

தந்தை கடைசியாய்ச் சொன்னது அவனது காதில் விழவில்லை... முதலில் விக்டர் சொன்ன வார்த்தையில் அவன் மனம் நின்றது...

அன்னையை நினைத்துத் துக்கம் கொண்டது அவனது மனம்...

அடுத்து விக்டர் அவனை அடித்துச் சாய்த்த போது கூட அவனுக்கு உடல் வலிக்கவில்லை... அந்தளவுக்கு அவனது மனம் ரணமாய் வலித்து இருந்தது...

விக்டர் அவனைத் திட்டியது அடித்தது எல்லாம் அவனது காதில் விழவும் இல்லை... உடலில் உறைக்கவும் இல்லை... மரக்கட்டையாய் உணர்வின்றித் தனது அறையில் போய்ப் படுக்கையில் விழுந்தவனுக்குக் கண்களில் கண்ணீர் பொங்கியது...

தன் அன்னைக்கா அப்படி ஒரு நிலை என்று மனம் வெதும்பி போனான்...

அன்னையின் நிலை கேள்விப்பட்டு அவனால் அவளை வெறுக்க முடியவில்லை... மாறாக உள்ளம் நொறுங்கி போனான்...

அன்று முழுவதும் அன்னையின் முகத்தைப் பார்க்க பார்க்க அவனுக்குக் கண்ணீர் வந்து கொண்டே இருந்தது... எங்கே தன்னை வெளிப்படுத்தி இப்போது சந்தோசமாய் இருக்கும் அன்னையின் சந்தோசத்தைக் கெடுத்து விடுவோமோ என்று எண்ணி அவன் தன்னை அடக்கி கொண்டான்...

அப்படி இருந்தும் அன்னையிடத்தில் தன்னையும் அறியாது சிறு கேவலில் தன்னைக் காட்டி கொடுத்து விட்டான்...

"கண்ணா... ஏன் அழற...?" வளர்ந்த மகன் அழுவது கண்டு பதறி துடித்துப் போனாள் நிஷா...

இதுவரை மகன் அழுது அவள் பார்த்தது இல்லை... அதனால் அவனது அழுகை அவளுக்குப் பயத்தை உண்டு பண்ணியது... அவளுக்கும் கண்களில் கண்ணீர் அரும்பியது...

அன்னையின் கண்ணீரை கண்டு அவன் தன்னை அடக்கி கொண்டான்...

அன்றிரவு அவனால் நிம்மதியாய் தூங்க முடியவில்லை... அன்னையின் புன்னகை முகமே அவன் மனதில் நிழலாடியது...

என்றாவது ஒரு நாள் இந்த விசயத்தைத் தான் அன்னையிடம் உளறி கொட்டி விடுவோமோ என்று அவனுக்கு அச்சமாக இருந்தது... உண்மையைத் தான் தெரிந்து கொண்டது அறிந்தால் அன்னை மனதுக்குள் புழுங்கி உயிரை விட்டு விடுவாரோ என்று அஞ்சினான்... தனது மகிழ்ச்சியை இழந்து விடுவாரோ என்று பயந்தான்...

அன்னைக்குத் தெரியாமல் இதை மறைக்க வேண்டும் என்று எண்ணினாலும் அவரைப் பார்க்கும் போது எல்லாம் கலங்கி அவனது கண்கள் அவனைக் காட்டி கொடுத்து விடுகின்றனவே... என்ன செய்வது... இங்கு இருந்தால்

தானும் நிம்மதி இல்லாமல் தாயையும் நிம்மதி இல்லாமல் செய்து விடுவோம் என்று எண்ணி தாயின் நிம்மதிக்காக அவரை விட்டு விலகி போக முடிவு செய்தான்...

அவரின் நிம்மதி அவன் தான் என்பதை அவன் அறியவில்லை... சிறு வயது முதல் எந்த ஒரு துயரத்தையும் கண்டிராத மனது இத்தகைய பெரிய பாரத்தைச் சுமக்க முடியாமல் வாழ்க்கையை எதிர்கொள்ளப் பயந்து ஓடி ஒளிய திட்டமிட்டது... நினைத்தபடி அன்றிரவே அவன் ஊரை விட்டு ஓடி போனான்...

நிச்சயம் காதலுக்காக அவன் கோழை போல் ஓடி போகவில்லை... அவனது தாயின் துயரத்திற்காகத் தூர ஓடி போனான்...

கையில் படித்த படிப்பிற்கான சான்றிதழ்களுடன் ஒற்றை ரூபாய் கூட இல்லாமல் கிடைத்த லாரியை பிடித்து ஏறியவனை அது கொண்டு விட்ட இடம் டெல்லி மாநகரம்... இந்தி அவனுக்கு இரண்டாவது மொழி பாடமாக இருந்ததால் மொழி தெரியாமல் அவன் தடுமாறவில்லை... அங்கேயே ஒரு வேலையைத் தேடி கொண்டான்...

தன் மனதின் சோகத்தை மறைக்கத் தினமும் குடிக்க ஆரம்பித்தான்... அது கொஞ்சம் கொஞ்சமாய் அதிகரித்துக் கொண்டே போனது...

அப்படி ஒரு நாள் மூக்கு முட்ட குடித்து விட்டு அவன் தள்ளாடி கொண்டு வந்த போது அவனைக் கடந்து சென்ற ஒருவர் அவனைக் கண்டு தலையில் அடித்தபடி,

"கர்மம் கர்மம்... இது எல்லாம் எங்கே உருப்படப் போகுது... கழைக் கூத்தாடி மாதிரி அவனும் அவன் டிரெஸ்சும்..." என்று திட்டி கொண்டு செல்ல... அவனுக்குச் சுரீர் என்று உரைத்தது...

வீட்டிற்கு வந்து தன்னைக் கண்ணாடியில் பார்த்தவனுக்கு அவர் கூறியது உண்மை என்றே தோன்றியது... அவரது

'கழைக் கூத்தாடி' என்ற வார்த்தையில் அவனுக்கு மதுவின் வார்த்தைகள் நியாபகம் வந்தது...

தான் அவளிடம் சவால் விட்டு வந்தது நியாபகத்தில் வந்தது...

என்றாவது ஒருநாள் அவளைப் பார்க்கும் போது அவள் தலை நிமிர்ந்து பார்க்கும்படி அவன் உயர வேண்டாமா...? இப்படியா குடித்துச் சீரழிவது... இப்போது தன்னை அவள் பார்த்தால் எவ்வளவு கேவலமாய்ப் பார்ப்பாள்...

மனதில் மதுவின் கேவலமான பார்வையை நினைத்து பார்த்தவனுக்கு அதுவே அவன் மனதை வெறிக் கொள்ளச் செய்தது...

அன்று முதல் விட்ட சவாலில் வெற்றி பெற அவன் தன்னை முழுமையாய் மாற்றிக் கொண்டான்... முதலில் தனது தோற்றத்தை மாற்றிக் கொண்டவன் அதன் பின் தனது கவனத்தைப் படிப்பில் செலுத்த ஆரம்பித்தான்...

வேலை செய்து கொண்டே தேர்விற்கும் படிக்க ஆரம்பித்தான்... படிக்க வேண்டும் என்ற உந்துதல் அவனுக்கு ஊக்கத்தைக் கொடுக்கப் படிப்பில் ஆர்வம் இல்லாமல் இருந்தவன் நன்கு படிக்க ஆரம்பித்தான்...

இந்திய குடியியல் பணிகள் தேர்வில் தேர்ச்சி பெறுவது என்பது அவ்வளவு சாதாரண விசயம் இல்லை... இரண்டு முறை தோல்வியுற்று மூன்றாவது முறையே அவன் தேர்ச்சி பெற்றான்...

ஐபிஎஸ் தேர்ச்சி பெற்றுப் பயிற்சி வகுப்பு முடிந்து முதன்முறையாய் அவன் பணியில் அமர்ந்த போது அவன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை... எப்போதும் எல்லோராலும் இகழப்பட்ட அவனை இப்போது எல்லோரும் மதிப்பது கண்டு அவனுக்கு அத்தனை சந்தோசமாய் இருந்தது...

தனது பணியைத் தனது தாய்க்கு தான் முதலில் சமர்பித்தான்... கூடவே அவனது நினைவில் இந்த

வெற்றிக்கு தூண்டுகோலாய் இருந்த மதுவின் சவாலும் நியாபகம் வரும்... முயன்று அதை மறக்க முயலுவான்...

இருந்தாலும் அன்னையை நினைக்கும் போது எல்லாம் அவளின் நினைவும் அவனது மனதில் எழத்தான் செய்தது... அன்னையை எப்படி மறக்க முடியாதோ அது போல் அவளின் நினைவுகளையும் அவனால் மறக்க இயலாது என்கிற நிதர்சனத்தை அவன் வெகுநாள் கழித்தே உணர்ந்தான்...

நிச்சயம் அந்த நினைவில் முன்பு போல் வெறுப்பு இல்லை மாறாக ஏதோ ஒன்று அவன் மனதை சுகமாய்த் தாலாட்டியது... அது என்ன என்று அவன் தனக்குள் ஆராய்ந்த போது கிடைத்த விடை தான் காதல்...

அதில் குப்பென்று வியர்த்து கொட்டி போனது அவனுக்கு... ஆனாலும் அது தான் உண்மை என்று அவனது மனசாட்சி கட்டியம் கட்டி கூறியது...

ஒரு புறம் தனது காதலை நினைத்து மகிழ்ந்தாலும் மறுபுறம் தனது தகுதியை நினைத்து உள்ளம் மருகினான்... அவனைப் பொருத்தவரையில் மது எட்டாக்கனி...

அங்கே நிஷா மகனை காணாது பரிதவித்துப் போனாள்... எந்நேரமும் அழுகை மட்டுமே அவளது துணையாய் ஆனது... இருந்தாலும் கணவனுக்காக, ஜானுக்காகத் தன் அழுகையை அடக்கி கொள்வாள்... ஆனாலும் பெரிய மகனின் பிரிவு அவளது உள்ளத்தை வாட்டி வதைத்தது என்னவோ உண்மை...

நிஷாவின் துன்பம் கண்டு மதுவுக்குப் பெரும் துயரமாய் இருந்தது... தன்னால் தான் மித்ரேஷ் காணாமல் போய்விட்டான் என்று எண்ணி மனதுக்குள் வருந்தினாள்... குற்றவுணர்ச்சி அவளைக் கொன்றது... அதைத் தாங்க முடியாமல் ஜான், மிருதுளாவிடம் தங்களுக்கு இடையில் நடந்தது எல்லாவற்றையும் கூறிவிட்டாள்...

ஜானுக்கு யார் பக்கம் பேசுவது என்று தெரியவில்லை... இருவரிடத்திலும் தவறு இருக்கிறது... என்ன செய்வது என்று அவனுக்கும் தெரியவில்லை...

விக்டர் தன்னால் தான் மகன் காணாமல் போய்விட்டான் என்று அவனும் மனதுக்குள் அழுதான்... மொத்தத்தில் மித்ரேஷ் வீட்டை விட்டுக் காணாமல் போய் எல்லோரின் மனநிம்மதியையும் இழக்க செய்து இருந்தான்...

மது இளங்கலை கல்லூரி படிப்பு முடித்த சமயம் தருண் அவளிடம் வந்து தன் காதலை சொன்ன போது அவள் மறுத்து விட்டாள்... மித்ரேஷ்க்கு பிடிக்காதது தனக்கும் வேண்டாம் என்று... அவனாய் பார்த்துத் தருணை மணந்து கொள் என்று சொன்னால் ஒழிய அவள் அவனைக் காதலிக்க முடியாது என்று உறுதியாய் மறுத்துவிட்டாள்...

அன்று மித்ரேஷ் கூறியதை விளையாட்டுக்கு என்று தான் அவள் நினைத்துக் கொண்டு இருந்தாள்... ஆனால் தான் கூறிய வார்த்தைகள் அவனை அவமானப்படுத்தி இருக்கிறது... அதனால் தான் அவன் வீட்டை விட்டு போய்விட்டான் என்று தான் எண்ணி இருந்தாளே ஒழிய அவனது மனதில் காதல் இருப்பது சத்தியமாய் அவளுக்குத் தெரியாது...

ஒவ்வொரு இடமாக மாற்றலாகி வந்த மித்ரேஷ் கடைசியில் புனே வந்த போது தான் அவன் அக்ஷயை சந்தித்தான்... தொழில் நிமித்தமாய் அவனைச் சந்திக்க வந்த போது அது மித்ரேஷாய் இருக்கக் கூடும் என்று அக்ஷயும் எதிர்பார்க்கவில்லை... அதே போல் மித்ரேஷும் அக்ஷயை எதிர்பார்க்கவில்லை...

எல்லா இடங்களிலும் மித்ரேஷை தேடிய அக்ஷய் கண்ணில் இது நாள் வரை அவன் அகப்படவே இல்லை...இன்று தான் அக்ஷய் கண்ணில் அவன் தென்பட்டு இருக்கிறான்...

‘ஏன் வீட்டை விட்டு வந்தாய்..?’ என்று அக்ஷய் கேட்ட போது அவன் சொல்ல மறுத்து விட்டான்... ‘சரி திரும்ப வீட்டிற்கு வா’ என்ற போதும் அவன் கிளம்ப மறுத்துவிட்டான்...

அன்றிரவே விக்டருக்கு அழைத்த அக்ஷய் அவனைத் தோண்டி துருவி எல்லா விசயத்தையும் அறிந்து கொண்டவன் மித்ரேஷ் மனதில் மது மீதான காதல் இருக்கும் என்பதைச் சத்தியமாய் எதிர்பார்க்கவில்லை... அதற்காக அதைத் தவறு என்றும் நினைக்கவில்லை...

தகுதி இல்லாத காரணத்துக்காக மித்ரேஷின் காதல் மறுக்கப்படுவதை அவனால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை... அதற்காக அவன் வருந்துவது கண்டு அக்ஷய்க்கு மனம் பொறுக்க முடியவில்லை... அவன் காதல் நிறைவேற வேண்டும் என்றே அக்ஷய் எண்ணினான்...

மறுநாள் மித்ரேஷை சந்தித்து நிஷாவிற்காகவாவது வீட்டிற்கு வர வேண்டும் என்று கேட்டு கொண்டவன் தன்னிடம் இருந்த நிஷாவின் புகைப்படத்தைக் காண்பித்தான்...

"பாரு உனக்காக ஏங்கி ஏங்கி தன்னை உருக்கி கொள்ளும் உன் அம்மாவை பாரு... இன்னும் கொஞ்ச நாள் போனால் அவள் தன் உயிரை விட்டிருவா... கொள்ளி போடவாவது வருவியா...? இல்லை...?"

"சார்..." மித்ரேஷின் கண்கள் கலங்கியது...

அடுத்த ஆறாவது மாதம் கஷ்டப்பட்டுச் சென்னைக்கு மாற்றல் கேட்டு அங்கு வந்து சேர்ந்தான்... அதற்கு அக்ஷயும் தனது அதிகாரத்தால் உதவி புரிந்தான்...

இதோ இப்போது அவனது காதலும் கல்யாணத்தில் முடிந்து வெற்றி பெற்று விட்டது...

ஆனால் அந்த வெற்றியை கொண்டாட முடியாமல் அவனது மனம் குற்றவுணர்ச்சியில் தவித்துத் தூக்கத்தைத் தொலைத்து இருந்தது...

அவளோ இனியாவது மித்ரேஷின் மனம் கோணாமல் நடந்து அவனது காதலை பெற வேண்டும் என்று எண்ணியவள் நிம்மதியில் நித்திரையில் ஆழ்ந்தாள்...

ஈர்க்கும்...

வழக்கம் போல் தூக்கக் கலக்கத்துடன் எழுந்த மது அறையை விட்டு வெளியில் வந்தவள் வரவேற்பறையில் செய்தித்தாள் வாசித்துக் கொண்டு இருந்த மித்ரேஷ் அருகில் வந்து அமர்ந்தாள்...

"குட்மார்னிங் மித்து..." என்றவள் அவனது தோளில் சுகமாய்ச் சாய்ந்து தனது தூக்கத்தைத் தொடர அவன் தான் என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தான்...

அந்நேரம் விக்டர் அங்கு வர மித்ரேஷின் நிலை தான் தர்மசங்கடமாகப் போய்விட்டது... இது நாள் வரை உடன் வளர்ந்தவள் என்ற முறையில் அவளது அருகாமையை அவன் பெரிதாக எடுத்துக் கொண்டது கிடையாது... ஆனால் இன்று அவள் அவன் மனைவியான பின்பு தந்தை முன்னிலையில் அவளது அருகாமை அவனுக்கு என்னவோ போல் இருக்க அவன் மதுவை எழுப்பினான்...

"மது... எழுந்திரு..." அவன் எழுப்பவும் கண்களைத் திறந்து அவனைக் கேள்வியாய் பார்த்தவள் அவன் பதில் பேசும் முன் அவன் மடியில் படுத்து தூங்கி விட்டாள்...

அவளுக்கு வேண்டியது எல்லாம் தூங்குவதற்கான ஒரு மடி... அது தந்தையாக இருந்தால் என்ன... கணவனாக இருந்தால் என்ன... எல்லாம் ஒன்று தான் அவளைப் பொருத்தவரையில்...

"மதும்மா தூங்கட்டும் ஈஷ்வர்..." என்று சிரித்தபடி விக்டர் வெளியில் சென்று விட... தந்தையின் சிரிப்பை ஆச்சிரியத்துடன் பார்த்தபடி அவன் அமர்ந்து இருந்தான்...

பின்பு மெல்ல அவனது கண்கள் தன் மனையாளை பார்த்தது... பூக்குவியல் போல் அழகாய் உறங்கி கொண்டு இருந்தவளை ரசனையுடன் அளவிட்டது அவனது விழிகள்...

நேற்று அணிந்து இருந்த புடவையோடு இருந்தவளின் சேலை மாராப்பு லேசாக விலகி அவளது அழகை ஏலம் போட்டு அவனது கண்களுக்கு விருந்தாக்கியது... ஆனாலும் அதைக் கணவனாய் ரசிக்க முடியாமல் பதறி போய்ப் புடவையை இழுத்து மூடினான்...

'கொஞ்சம் கூடப் புத்தி இல்லை... ஆள் வளர்ந்தும் அறிவு வளரவே இல்லை...' அவன் மனதில் கடிந்து கொண்டு இருக்கும் போது அபி வீட்டிற்குள் நுழைந்தாள்...

அங்கு மித்ரேஷ் மடியில் உறங்கி கொண்டு இருந்த மகளைக் கண்டு, "இன்னும் இவள் திருந்தலையா...? ஏய் அம்மு எழுந்திரு... கல்யாணமானதாவது உனக்கு நினைப்பிருக்கா...?" என்று சத்தம் போட அதில் தூக்கம் கலைந்து எழுந்த மது,

"குட்மார்னிங் மாம்..."

"கல்யாணமான பொண்ணு இப்படித் தான் இருக்கிறதா...? காலையில் எழுந்து குளிச்சு அத்தைக்கு உதவி செய்ய வேண்டாமா...?"

"என்னது எனக்குக் கல்யாணம் ஆகிருச்சா...?" அதிர்ச்சியில் கூவியவளை கண்டு மித்ரேஷ் தான் அதிகம் அதிர்ந்தது...

'அடப்பாவி... இவ உரிமையோடு எல்லாம் செய்றாள்ன்னு நினைச்சா... கல்யாணம் பண்ணியதையே மறந்து போயிட்டாளா...? இதில் நான் புருசன்ங்கிறது எங்கே நியாபகம் இருக்கப் போகுது...?' மனதில் நொந்து போனான் அவன்...

"அட ஆமாம்..." கழுத்தில் கிடந்த தாலியை கையில் எடுத்து பார்த்தவள் அதை மித்ரேஷ் முன் நீட்டியவள்,

"இதை நீ தானே கட்டின..." என்று கேட்க அதற்கு அவன் முறைப்பையே பதிலாகக் கொடுக்க...

"ஒரு சின்ன டவுட்... அதான் கேட்டேன்..." கண்களைச் சுருக்கி உதட்டை குவித்துக் கொண்டு சொன்னவளை

கண்டு அவனுக்குக் கோபம் வரவில்லை... மாறாகச் சிரிப்பு வந்தது... ஆனாலும் அடக்கி கொண்டான்...

"நான் என்ன பேசிட்டு இருக்கேன்... நீ என்ன சொல்லிட்டு இருக்க... முதல்ல எழுந்திருடி..." அபி அவளை அடிக்கக் கையை ஓங்க...

"மித்து... என்னைக் காப்பாத்து..." என்று அவள் அவனது நெஞ்சில் முகம் புதைத்துச் சரண் புக... அதில் அவன் மனம் அத்தனை சந்தோசம் அடைந்தது... அவனது வலக்கை தானாக அவளை வளைத்து பாதுகாப்பாய் அணைத்துக் கொண்டது...

"அங்கே அப்பா பின்னாடி ஒளிஞ்சிக்கிறது மாதிரி இங்கே ஈஷ்வர் பின்னாடி ஒளிஞ்சிக்கிறியா...?" அபி சத்தம் போட...

அதைக் கேட்டு அவனுக்கு அவ்வளவு மகிழ்ச்சியாய் இருந்தது... அவளது தந்தையைப் போல் தன்னையும் எண்ணி தன்னிடம் அடைக்கலம் புகும் அவளின் உரிமை அவனுக்கு மிகவும் பிடித்து இருந்தது...

அவனது வாய் தானாக, "இருக்கட்டும் அத்தை... அவளை ஃப்ரீயா விடுங்க..." என்றவனை மது அதிசயமாகப் பார்த்தாள்...

தந்தையைப் போல் அன்னையிடத்தில் இருந்து தன்னைக் காக்கும் அவனை அவளுக்கும் மிகவும் பிடித்துப் போனது...

ஆனாலும் குறும்புத்தனம் தலைத்தூக்க, "ரொம்ப ஃப்ரீயா விடாதே மச்சான்... அப்புறம் என்னை மேய்க்கிறது உனக்குத் தான் ரொம்பக் கஷ்டம்..." என்று கூறி புன்னகைக்க...

"ஈஷ்வர்... பார்த்தியா இதுக்குத் தான் இவளுக்கு ரொம்பச் செல்லம் கொடுக்கக் கூடாதுன்னு சொல்றது..." அபி சொல்லி கொண்டு இருக்கும் போதே நிஷா காபி கோப்பைகளுடன் அங்கு வந்தாள்...

"அத்தை காபி..." கெஞ்சுதலாய் கேட்டவளின் கையில் கொண்டு தான் வந்திருந்த கோப்பையில் ஒன்றை எடுத்து நிஷா கொடுக்க அதை ஆசையுடன் வாங்கிக் கொண்டாள் மது...

"பல் தேய்க்கும் பழக்கம் கிடையாதா...?" மித்ரேஷ் முகத்தைச் சுளித்தான்...

"ஆடு மாடு எல்லாம் பல்லா தேய்க்குது... போ மித்து... எனக்கு ரொம்பப் பசிக்குது..." என்று சொல்லியபடி மது ஆர்வமாய் அதை வாய் அருகே கொண்டு போனாள்...

"மது..." என்ற அவனது கண்டிப்பான குரலில் அவள் முகம் சுருங்க காபி கோப்பையை அங்கு இருந்த மேசை மீது வைத்தவள்,

"அத்தை... நான் குளிச்சிட்டு வந்து குடிச்சிக்கிறேன்..." என்று நிஷாவை பார்த்து சொன்னவள் கணவனைக் கண்டு பழிப்பு காட்டவும் தவறவில்லை...

நிஷாவின் அறைக்குச் செல்ல திரும்பியவளை அபியின் குரல் தடுத்து நிறுத்தியது...

"அம்மு... உன்னோட டிரெஸ் வேண்டாமா...?" கையில் இருந்த பெட்டியை அவளிடம் நீட்டினாள்...

மறுப்புச் சொல்லாமல் அதை வாங்கிக் கொண்ட மது உள்ளே செல்ல அபி நிஷாவின் கைகளைப் பிடித்துக் கொண்டு,

"நிஷா... அவளுக்குக் கொஞ்சம் குறும்புத்தனம் அதிகம்... எடுத்துச் சொன்னால் புரிந்து கொள்வாள்..." பெண்ணைப் பெற்றவளாய் அபிக்கு மனம் கலங்கியது...

"என்ன அண்ணி... இதை நீங்க சொல்லவும் வேண்டுமா... மதுவை என் பொண்ணு மாதிரி... அவளைப் பத்திரமா பார்த்துக்கிறேன்..." நிஷா ஆறுதலாய் சொன்னாள்...

"அத்தை மதுவை பத்தின கவலையை விடுங்க... நாங்க பார்த்துக்கிறோம்..." மித்ரேஷும் தன் பங்கிற்குச் சொல்ல

அதில் அபியின் மனம் நிம்மதி அடைந்தது...

எதற்கு அடங்காத தன் மகள் மருமகனது ஒற்றை வார்த்தையில் அடங்கிப் போனதை கண்டு மித்ரேஷ் அவளை நல்லவிதமாய்க் கொண்டு சென்றுவிடுவான் என்ற நம்பிக்கை அபி மனதில் எழுந்தது...

மித்ரேஷ் குளித்து முடித்து உடை மாற்றி முடிக்கும் போது திடுமென அவனது அறைக் கதவு திறந்தது... திரும்பி பார்க்காமலே அவனுக்குத் தெரிந்து போனது அது மது தான் என்று...

அவள் புறம் திரும்பாமல் அவன் பெல்ட்டை எடுத்து இடுப்பில் மாட்டி கொண்டு இருக்க அவளோ அதைக் கண்டு கொள்ளாமல் அவன் முன் வந்து நின்றாள்...

"நான் எப்படி இருக்கேன் மித்து...?" இரு புருவங்களையும் உயர்த்திக் கேட்டவளை கண்டு அவனது மனம் மயங்க தான் செய்தது...

ஆலிவ் பச்சை நிறத்தில் ஷிபான் புடவை அவளது மேனியை தழுவி இருக்கத் தலை நிறையப் பூ சூடி பார்ப்பதற்குத் தேவதையின் அம்சமாய் நின்று இருந்தவளின் அழகு அவனது இதயத் துடிப்பை தடுமாறச் செய்தது...

"உனக்கு என்ன அம்மு... அழகா தான் இருக்கே..." அவனையும் அறியாமல் சொன்னான்...

"தேங்க்ஸ் மித்து..." என்றவள் அவனை மேலும் கீழும் பார்த்து,

"நீயும் அழகா தான் இருக்க..."

"நான் சொன்னதுக்குப் பதிலாகவா...?" என்றான் ஒரு மாதிரி குரலில்...

"இல்லை... உண்மையா தான் சொல்றேன்..." என்றபடி அவன் அருகில் வந்தவளை கண்டு,

"தருணை விடவா..." அவனது வார்த்தையில் திகைத்து போய் நின்றாள் அவள்...

"ப்ச்... இப்போ எதுக்கு அவனைப் பத்தி பேசுற...? நீயும் நானும் தான் கணவன், மனைவி... நமக்கு இடையில் அவன் எங்கு இருந்து வருகிறான்...?"

"நான் உன்னைக் கல்யாணம் பண்ணலைன்னா நீ அவனைத் தானே பண்ணி இருப்ப...?"

"ம்ஹூம்..." மறுப்பாய் தலையை ஆட்டியவள், "உனக்கே தெரியும்... நீ சம்மதிக்காம நான் பண்ண மாட்டேன்னு... நேத்து கூட நீ அதுக்குச் சம்மதம் சொன்னதா எனக்கு நினைவு... ஆனா அதையும் மீறி உன் கூடப் போராடி உன் மனைவியா நான் ஆகியிருக்கேன்னா என்ன அர்த்தம்...?" ஒற்றைப் புருவத்தை ஒயிலாகத் தூக்கியபடி அவனைப் பார்த்துக் கேள்வி கேட்டவளை கண்டு அவன் செயல் இழந்து நின்றான்...

அது அவளது செயலிலா அல்லது சொல்லிலா... அவனுக்கே அது விளங்கவில்லை...

"எல்லா விசயத்தையும் தாறுமாறாய் யோசிப்பியே... இதையும் ஏன்னு நீயே யோசிச்சு பாரு... உனக்குப் புரியும்..."

அதற்கும் அமைதியாய் நின்றவனைக் கண்டு அவளுக்குக் கோபம் வந்தது... அதே சமயம் பாவமாகவும் இருந்தது... ஆனாலும் தனது காதலை வாய் விட்டு சொல்ல அவளால் முடியவில்லை...

அவன் தன்னை நேசித்தால் மட்டுமே தனது நேசம் முழுமை பெறும் என்று அவள் எண்ணினாள்...

"இன்னுமா உனக்குப் புரியலை மித்து...?" அவளது குரலில் தெரிந்த ஏதோ ஒன்றில் அவன் அவளை நிமிர்ந்து பார்த்தான்...

அவளது கருவண்டு விழிகள் இரண்டும் அவனை இமைக்காது பார்த்துக் கொண்டு இருக்க அதில் தெரிந்த

ஏதோ ஒன்றில் அவனது மனம் சுகமாய் அடித்துச் செல்லப்பட்டது...

"இல்ல புரிஞ்சும் புரியாத மாதிரி நடிக்கிறியா...?" அவளது விழிகள் லேசாகக் கலங்கி இருந்தது...

அவனுக்கு ஏதோ புரிந்தாலும் அதை வாய் விட்டு சொல்ல முடியாதபடி அவனை ஏதோ ஒன்று தடுத்தது... அந்த ஏதோ ஒன்றை அவன் அலசி ஆராய்ந்து இருக்கலாம்...

"மனசுக்குள்ள எதையோ நினைச்சுக்கிட்டு நீ மருகிற மித்து... அது என்னன்னு சொல்லேன்டா...?"

அவளது கேள்விக்கு அவனால் பதில் சொல்ல முடியுமா...? எல்லாம் முடிந்து போனது போனது தான்... முடிந்து போன நிகழ்வுகளை யாராலும் மாற்ற இயலாது... ஆனாலும் அது கொடுக்கும் மனவுளைச்சல் அதை யாரால் மாற்ற முடியும்...

அத்தகைய ஒரு மனநிலையில் தான் அவன் இருந்தான்...

அவள் தனக்குக் கிடைக்க மாட்டாளோ என்ற கோபத்தில் அவளை அடைய பல வழிகளைக் கையாண்டவனுக்கு இப்போது அவள் தன் கை அருகில் இருந்த போதும் அவளை அள்ளி அணைக்க மனம் வரவில்லை... மாறாக அவளுக்குச் சற்றும் பொருத்தம் இல்லாத தான் அவசரப்பட்டு அவள் வாழ்க்கையில் விளையாடி விட்டோமோ என்ற எண்ணம் அவனது மனதை வருத்தி கொண்டு இருந்தது...

அதுவும் அவனது அன்னையைப் பற்றி எல்லோருக்கும் தெரிந்ததில் அவனுக்கு இருந்த கொஞ்ச நஞ்ச தகுதியும் குறைந்து போய்விட்டதாகவே கருதினான்... அதைப் பற்றி மது ஒன்றும் நினைக்க மாட்டாள் என்ற போதும் அவனது மனதில் எழும் இந்தத் தாழ்வு மனப்பான்மை அவனை விட்டு விலகுவதாய் இல்லை...

அதை இல்லாம் விட அவன் தனது காதலுக்காகச் சிறு துரும்பை கூட எடுத்து போடவில்லை... அன்றும்

அன்னைக்காகத் தான் வீட்டை விட்டு ஓடினான்... இன்றும் அன்னைக்காகத் தான் வீட்டிற்கு வந்து இருக்கிறான்...

மதுவுக்காக, அவனது காதலுக்காக என்றும் அவன் போராடவே இல்லை... காதலுக்காக என்றாலும் எந்நேரம் அவளை மிரட்டி தான் இதுவரை தன் காரியத்தை அவன் சாதித்து இருக்கிறான்... அது எல்லாம் சேர்ந்து அவனது குற்றவுணர்ச்சியை அதிகப்படுத்தியது...

"என்னை உனக்குப் பிடிச்சு இருக்கா மித்து...?" ஏக்கத்துடன் கேட்டவளை கண்டு அவன் இரக்கம் கொண்டான்...

ஏனோ நேற்று காலையில் அவன் பேசியதை பாவையவள் மறந்து விட்டாளா... இல்லை ஏக்கம் கொண்ட மனதின் தவிப்பை அவனிடத்தில் கேள்வியாய் கேட்டுத் தவிப்பை அடக்க முற்பட்டாளா... ஏதோ ஒன்று ஆனால் அவனது வாய் வார்த்தைக்காக அவள் மிகவும் ஏங்கி போயிருந்தாள்... மனதுக்குப் பிடித்தமானவனின் மனதுக்குப் பிடித்தமானவளாகத் தான் இருக்க வேண்டும் என்று பேதையவள் மனம் ஊமை ராகம் வாசித்தது...

"பிடிக்காமல் தான் தாலி கட்டினேனா... ம்ப்ச்... என் மனைவியான பிறகு இது என்ன கேள்வி அம்மு...?" அவளுக்குப் பதிலை சொல்லாமல் அவன் அவளைக் கடிந்தான்...

"நான் கேட்டதுக்கு இது பதில் இல்லை மித்து..." என்றவளை ஒரு பார்வை பார்த்தவன் ஒன்றும் பேசாது அறையை விட்டு வெளியேற மனம் நிறையப் பாரத்துடன் அவளும் அவனைப் பின் தொடர்ந்தாள்...

அங்கு ஏற்கெனவே வந்து காத்துக் கொண்டு இருந்தனர் மதுவின் குடும்பத்தினர்... அதில் ஆதித்யாவும், மிருதுளாவும் அடக்கம்...

"டேய் புது மாப்பிள்ளை... நீ எங்கேடா இங்க...?" சந்தோசமாய் ஆதியை கட்டி பிடித்துக் கொண்டான் மித்ரேஷ்...

"அதை நாங்க கேட்கணும்... திடீர் புது மாப்பிள்ளையான நீ அதைக் கேட்க கூடாது..." என்று சிரித்தபடி நண்பனை அணைத்துக் கொண்டான் ஆதி...

"ஏன்டா நைட் கல்யாணம் மட்டும் தான் முடிஞ்சதா... இல்லை குழந்தை ஏதாவது..." ஆதி மித்ரேஷ் பின்னால் விழிகளால் தேட...

"ஆதி உன்னை..." மித்ரேஷ் முறைக்க அதைக் கண்டு ஆதி வாய்விட்டுச் சிரித்தான்...

"மது... ஆனாலும் உனக்கு இத்தனை பிடிவாதம் ஆகாது..." தங்கையைப் பார்த்து கடியவும் அவன் தவறவில்லை...

"அட போண்ணா நீ வேற... விட்டா உன் பிரெண்ட் நேத்தே எங்கேயாவது ஓடி போயிருப்பான்... அப்புறம் அவனைத் தேடி பிடிச்சு நான் கல்யாணம் பண்றதுக்குள்ள எனக்கு வயசாகி போயிரும்... அதான் நேத்தே கல்யாணத்தைப் பிடிவாதமா முடிச்சேன்... இனி எங்கேயாவது ஓடி போகட்டும் பார்ப்போம்... அதுக்கு அப்புறம் இந்த மது யாருன்னு தெரியும்..." மது சவாலான பார்வையை மித்ரேஷ் மேல் பதிக்க... அதைக் கண்டு அவன் தான் திகைத்து நின்றான்...

'அடப்பாவி... இவளே எனக்கு ஐடியா கொடுப்பா போலிருக்கே...' மனதுக்குள் புலம்பி கொண்டான்...

காலை உணவு மித்ரேஷ் வீட்டில் முடித்து விட்டு எல்லோரும் மது வீட்டிற்குக் கிளம்ப மித்ரேஷ் அங்கு வராமல் அமர்ந்து இருந்தான்...

"நீங்க போங்க... நான் ட்யூட்டிக்கு போகணும்... நேத்து ஒரு நாள் தான் லீவு எடுத்து இருந்தேன்..." அவன் பிடிவாதமாய்ச் சொல்ல மற்றவர்களால் ஒன்றும் பேச முடியவில்லை...

"சரி... ஈவினிங் ஆதி ரிசப்சனோட உங்க ரிசப்சனும் சேர்த்து வச்சிடலாம்... அநாவசியமா அடுத்தவங்க கேள்வி கேட்பதை தடுத்துடலாம்..." அக்ஷய் யோசனை சொல்ல அதுக்கு மித்ரேஷிடம் இருந்து மௌனமே பதில் வந்தது...

"ஈஷ்வர்... பதில் சொல்லுப்பா..." அக்ஷய் கேட்க...

"உங்களை எதிர்த்துப் பேசுறதா தப்பா நினைக்காதீங்க... எங்களுக்கு ரிசப்சன் எல்லாம் வேண்டாம்... மது என்னோட மனைவின்னு ஊரு உலகத்துக்குத் தெரியும் போது தன்னால தெரிஞ்சுகிடட்டும்... இப்போ வேண்டாம்..."

மித்ரேஷ் உறுதியாய் மறுக்க வேறு வழியின்றி அக்ஷய் தான் தன் முடிவை அவனுக்காகத் தளர்த்த வேண்டி இருந்தது... அதை விட மதுவின் கெஞ்சுதலான பார்வையில் அக்ஷயால் மேலே ஒன்றும் பேசவில்லை...

எல்லோரும் சென்றதும் மது அவனிடத்தில் வந்து அமர்ந்தாள்...

"ஏன் மித்து ரிசப்சன் வேண்டாம்ன்னு சொல்ற...?" அதற்கு மௌனம் சாதித்தவனின் முகத்தை வலுக்கட்டாயமாகத் தன் புறம் திருப்பியவள்,

"ஏண்டா வேண்டாம்ங்கிற... என்னை உன் மனைவின்னு சொல்ல உனக்குக் கேவலமா இருக்கா... இந்தக் குண்டை உன் மனைவின்னு சொல்ல உனக்கு அவமானமா இருக்கா...?" கேட்டவள் கண்களில் கண்ணீர் மல்கியது...

"உன்னைப் போய் யாராவது அப்படிச் சொல்வாங்களா... லூசாடி நீ..." அவளைக் கடிந்தவன்,

"திரும்ப என் அம்மாவை யாராவது அவமானப்படுத்தினா என்னால் சும்மா இருக்க முடியாது... அப்புறம் அடி தடி கலாட்டாவா போயிரும்... வேண்டாம்ன்னா விட்டிரு அம்மு..."

அவன் சொன்ன காரணம் அவளுக்கும் புரிய, "நான் டாட் கிட்ட சொல்லிக்கிறேன்... நீ வீணா மனசை போட்டு குழப்பிக்காதே..." அவள் அவனுக்கு ஆறுதல் சொன்னவள்,

"நான் அம்மா வீட்டுக்கு போறேன்... நீ மதியம் அங்கே சாப்பிட வருவியா... இல்லை நம்ம வீட்டுக்கு இங்கே எடுத்திட்டு வரவா...?"

அவன் அங்கே வர மாட்டான் என்று அவளுக்கு நன்கு தெரியும்... அவன் மனம் அறிந்து கேட்டவளை கண்டு அவனுக்கு அத்தனை இதமாக இருந்தது...

“நான் மதியம் சாப்பிட வர மாட்டேன்...” என்றவன், "இங்கே வா..." என்று அவளை அருகில் அழைத்தான்...

"என்ன மித்து...?" என்று கேட்டபடி அருகில் வந்தவளை பிடித்துத் தன் மடியில் அவன் இருத்தி கொள்ள...

"மித்து... என்ன இது...?" அவள் கூச்சத்தில் நெளிந்தாள்...

அவளது பேச்சை கவனிக்காமல் அவளைத் தனது கைகளால் சிறைப்பிடித்தவன், "ஏண்டி அப்படிச் சொன்ன...?"

"என்ன சொன்னேன்...?" அவளுக்கு வார்த்தைகள் வெளிவரவில்லை... தொண்டைக்குள் சிக்கி கொண்டது போல் தவிப்பு ஏற்பட்டது...

கணவனான அவனது தொடுகையை மனதுக்குள் ரசித்தவள் உள்ளுக்குள் பாகாய் உருகி கொண்டு இருந்தாள்...

"உன்னை என் மனைவின்னு சொல்ல எனக்குக் கேவலமா இருக்குன்னு ஏன்டி சொன்ன...? நீ குண்டா இருக்கேன்னு நான் சொன்னேனா உன் கிட்ட...?"

"இல்லையா பின்ன... உண்மை அது தானே..."

"இருக்கலாம்..." என்றவனை அவள் முறைத்து பார்க்க...

"ஆனாலும் இந்தக் குண்டை தான் எனக்கு ரொம்ப ரொம்பப் பிடிச்சியிருக்கு..." அவளது காதுக்கு அருகில் கிசுகிசுத்தவனின் மீசை ரோமம் அவளது காதில் குறுகுறுப்பை ஏற்படுத்தி மனதில் காதல் அலையடிக்கச் செய்தது...

"மித்து... ப்ளீஸ்..." கண்களை மூடி அதை அனுபவித்தபடி சொன்னவளின் கிறக்கம் அவனையும் கிறக்கத்தில்

ஆழ்த்தியது...

அவளது மூடிய விழிகளில் மென்மையாய் முத்தமிட்டவன், "எதுக்கு ப்ளீஸ்... நான் ஒண்ணுமே செய்யலையே..." என்க...

அதில் கண் திறந்தவள் அவனைப் பார்த்தாள்...

"உண்மையில் என்னைப் பிடிச்சு இருக்கா மித்து...?" கலக்கத்துடன் கேட்டவளை கண்டு அவன் அவளை விட்டு விலகினான்...

"திரும்பத் திரும்ப இந்தக் கேள்வியைக் கேட்டு என்னைக் கொல்லாதே அம்மு..." குற்றவுணர்ச்சியில் தவித்தபடி அவன் சொல்ல அவளுக்கோ ஏதோ ஒரு ஏமாற்றம் மனதை கவ்வியது...

இருந்தாலும் தன்னைச் சமாளித்துக் கொண்டு, "உனக்குப் பிடிக்கலைன்னா நான் கேட்கலை... அதுக்காக நீ வருத்தப்படாதே..." என்றவள் அவனின் பதிலை எதிர்பாராமல் வெளியேறினாள்...

இருவருள்ளும் ஒரே எண்ணம்... ஆனால் எண்ணம் பயணிக்கும் பாதை தான் வேறு வேறு...

அன்று மாலை வேலை முடிந்து வந்த மித்ரேஷ் நேரே வரவேற்பு நிகழ்ச்சிக்கு வந்துவிட்டான்...

அவன் வரவை உணர்ந்து மது வேகமாய் அவனை நோக்கி வந்தாள்... காலையில் தான் வாங்கி வந்து இருந்த கோட் சூட்டில் கம்பீரமாய் இருந்த கணவனின் அழகை அவளது விழிகள் அவசரமாய்ப் பருகியது...

'அழகன் தான்டா நீ...' மனதுக்குள் பரவசப்பட்டுக் கொண்டு வந்தவளை அங்கு நின்று இருந்த ஒரு பெண்மணி தடுத்து நிறுத்தினார்...

"மது... உனக்கு எப்போ கல்யாணம் ஆனது...? எங்களுக்கு எல்லாம் அழைப்பு கொடுக்கவே இல்லையே..." மதுவின்

கழுத்தில் கிடந்த மஞ்சள் கயிற்றைப் பார்த்தபடி அவர் விசாரிக்க...

"அது போன மாசமே நடந்து முடிஞ்சிருச்சே ஆன்ட்டி... நீங்க கூட வந்து இருந்தீங்களே... என்னோட முகூர்த்த சேரி கூட அழகாயிருக்குன்னு சொன்னீங்களே... மறந்துட்டீங்களா...?" அவள் கதை அளந்து விட...

"அப்படியா... எனக்கு நியாபகம் இல்லையேம்மா..."

"ஒரு கல்யணம்ன்னா நியாபகம் இருக்கும்... நீங்க சொசைட்டில பிக் ஷாட்... வருசம் முழுவதும் உங்களுக்குக் கல்யாணம் அது இதுன்னு விசேச வீடு இருந்துட்டே இருக்கும்... இதில் என்னை நீங்க மறக்காமல் இருந்ததே அதிசயம்... என் கல்யாணத்தை மறந்தது ஒண்ணும் பெரிய விசயம் இல்லை ஆன்ட்டி..." என்று அவள் அவருக்குக் கூடை கூடையாய் ஐஸ் வைக்க அதில் அவர் குளிர்ந்து போனார்...

இதைக் கேட்டபடி அங்கு நின்று இருந்தான் மித்ரேஷ்...

"ஆன்ட்டி இவர் தான் என் ஹஸ்பெண்ட்..." பெருமையாய் அவனை அவருக்கு அறிமுகப்படுத்த...

"அட நம்ம ஏசிபி சார்... சாரை தெரியாதவங்க இருக்க முடியுமா..." என்றவர் அவனது நடவடிக்கைகளைப் பாராட்டினார்...

சிறிது நேரம் அவரிடம் பேசிவிட்டு மித்ரேஷை அழைத்துக் கொண்டு மது அங்கு இருந்து நகர...

மித்ரேஷ் அவளது கையைப் பிடித்து நிறுத்தி அவளது காதுக்கு அருகில் குனிந்து, "நாமும் சேர்ந்து மேடையில் போய் நிற்கலாமா...?"

அவள் புரியாமல் பார்த்தாள் அவனை...

"போய் நிற்கலாம் வா... இதுக்கு ஏன் பெர்மிசன் கேட்கிற...?"

"மணமக்களா போய் நிற்கலாமான்னு கேட்டேன்..." அவன் கேட்டதில் அவளது கண்கள் வியப்பில் விரிந்தது...

"உண்மையாவா சொல்ற மித்து..."

"சத்தியமா..." என்றவனைக் கண்டு மகிழ்ச்சியில் அவனது தோளில் சாய்ந்தவள்,

"தேங்க்ஸ் மித்து..." என்க..

"இப்ப போகலாமா...?"

அவளின் மனம் அறிந்து அவள் மனம் நோக கூடாது என்பதற்காக அவளுக்காக அந்த முடிவை எடுத்தான் அவன்...

அவள் உடனே தன் தந்தையிடம் சொல்ல அக்ஷய் சிறிய அறிமுகத்துடன் மேடையில் மித்ரேஷ், மது ஜோடியின் திருமணத்தை அங்கீகாரம் செய்து அவர்களையும் ஆதி, மிருதுளா தம்பதியினருடன் சேர்த்து நிற்க வைத்தான்...

நிஷா பற்றி எந்த ஒரு கேள்வியும் எழாமல் மித்ரேஷின் மனம் புரிந்து எல்லோரும் நடந்து கொண்டனர்... அதிலும் மது பார்த்து பார்த்து அவனைக் கவனித்துக் கொண்டாள்... எந்நேரமும் அவனுடன் கை கோர்த்து நின்றவள் வந்தவர்களிடத்தில் சளைக்காது பெருமையுடன் அவனை அறிமுகப்படுத்தி வைத்தாள்... பெரும்பாலும் அவள் சார்பில் வந்து இருந்தவர்களே அங்கு அதிகம்...

அதே போல் தான் ஆதியும் எந்த இடத்திலும் மிருதுளாவிற்குச் சிறு முகச் சுணக்கம் வராமல் பார்த்துக் கொண்டான்... அவனது ஒவ்வொரு செயலிலும் 'நீ என் மனைவி' என்ற உரிமையை அவளுக்கு அழுத்தமாய் உணர்த்திக் கொண்டே இருந்தான்... அவனது மனதை உணர்ந்தவளாய் மிருதுளா அவனின் மனதிற்கு இணக்கமாய் நடந்து கொண்டாள்...

காதல் கொண்ட இரு மனமும் தவிப்புடன் பரிதவித்தாலும் அண்ணன், தங்கை இருவரும் அதை அழகாகக் கையாண்டு தத்தம் துணைகளின் மனதுக்குப் பிடித்த விதத்தில் நடந்து கொண்டனர்...

காதல் கொண்ட தனது துணைகளுக்காகக் காதலே இல்லாமல் இல்லாத காதலை வரழைத்துக் கொண்ட ஆதியும் மதுவும் உண்மையில் மிகச் சிறந்தவர்கள் தான்... அதற்கு அபியின் வளர்ப்பும் ஒரு காரணம்...

அன்று இரவு மிருதுளாவை ஆதியின் கண்கள் தொடர்ந்து கொண்டே இருந்தது... நிச்சயம் அது கணவனின் பார்வையாகத் தான் இருந்தது...

ஆனாலும் மேலும் அவனுடன் உறவாட அவளது மனம் ஏனோ தடுமாறியது... அவளின் நிலை புரிந்து அவனும் அமைதி காத்தான்...

மித்ரேஷ், மதுவிற்கு நேரம் சரியாக அமையாததால் அவர்களது சாந்தி முகூர்த்தம் ஒரு வாரத்திற்குத் தள்ளி போனது... வழக்கம் போல் குற்ற குறுகுறுப்பில் அவனும், எதிர்பார்ப்பும் பயமும் கலந்த உணர்வில் அவளும் அந்த நாளை எதிர்பார்த்து காத்திருந்தனர்...

அன்று அவர்களுக்கான நாள் அழகாய் விடிந்தது... காலையில் எழுந்ததில் இருந்து மித்ரேஷ்க்கு ஒரே டென்சனாய் இருந்தது... அவன் ஆர்வமுடன் எதிர்பார்த்த நாள் என்றாலும் ஏனோ அவனால் ஒரு நிலையில் அமைதியாய் இருக்க முடியவில்லை...

ஆனால் மது எப்போதும் போல் உற்சாகமாய் வேலைக்குக் கிளம்பி கொண்டு இருந்தாள்... அவளின் உற்சாகம் அவனுக்குக் கடுப்பை கிளப்பியது...

"என்ன ரொம்பச் சந்தோசமா இருக்கியா...?"

"இல்லையா பின்னே..." நிஷா சுட்டு கொடுத்த தோசையை வாயில் அடைத்து கொண்டவள்,

"இப்படித் தோசை சுட்டு கொடுக்கிற மாமியார் யார்க்கு கிடைப்பாங்க...? அதை விட உன்னை மாதிரி ஒரு அடிமை கணவனாக யாருக்கு வாய்க்கும்... அதான் நான் ரொம்பச் சந்தோசமா இருக்கேன்..." சிரித்தவளை கண்டு,

"அப்போ என்னை அடிமைன்னே முடிவே பண்ணிட்டியா...?" என்றான் ஒரு மாதிரி குரலில்...

"இல்லையா பின்னே..." அலட்சியமாகச் சொன்னவளை உறுத்து விழித்தவன்,

"நீ தான் எனக்கு அடிமை... நான் இல்லை... என்ன புரிந்ததா...?" அவன் கடுமையுடன் கூற...

அவளோ சன்னச் சிரிப்புடன் எழுந்து, "எஸ் பாஸ்..." என்று ஆங்கிலேய பாணியில் குனிந்து நிமிர...

அவளை அடக்க முடியாமல் அவன் தான் புறமுதுகிட்டு ஓட வேண்டி இருந்தது...

"போடா மச்சான்... ரொம்பத்தேன் சிலிர்த்துக்கிற... அதுவும் என் கிட்டேயேவா..." என்றவள் தனது சாப்பாட்டைத் தொடர்ந்தாள்...

அன்று இரவு காலையில் வேலைக்குப் போன மது வீட்டிற்கு வரவே இல்லை... ஏழு மணிக்கு மேல் ஆனதும் எல்லோருக்கும் பயம் பிடித்துக் கொள்ள எல்லோரும் அவளைத் தேடி ஒவ்வொரு இடத்திற்குச் சென்றனர்... அவளது அலைப்பேசி வேறு அணைத்து வைக்கப்பட்டு இருந்தது...

பதினோரு மணி வரை அலைந்து திரிந்து எல்லோரும் ஏமாற்றத்துடன் வீட்டிற்கு வந்தனர்... மித்ரேஷ் அவளைக் காணாது தனக்குள் இறுகி போய்விட்டான்...

காவல்துறை அதிகாரியாய் அவன் செயல்பட அவனது மூளை ஒத்துழைக்கவில்லை... அவளைக் காணாமல் அது முற்றிலும் செயலிழந்து போயிருந்தது...

பன்னிரெண்டு மணிக்கு மேல் வீட்டிற்கு வந்தவளை எல்லோரும் சுற்றி வளைத்து கொண்டனர்... மித்ரேஷின் பார்வை அவளைத் துளைத்து எடுத்தது... அதில் அவளது முதுகு தண்டுவடம் சில்லிட்டது...

"என் பிரெண்டுக்கு திடீர்ன்னு பிரசவ வலி வந்திருச்சு... அவ புருசன் வேற ஊரில் இல்லை... காதல் கல்யாணம் பண்ணிக்கிட்டவங்க... அதனால துணைக்கு யாரும் இல்லையா... எனக்கு ஃபோன் பண்ணி ஒரே அழுகை... அவ கூடப் போய் இவ்வளவு நேரம் இருந்துட்டு வர்றேன்... அதான் லேட்... ஃபோன்ல வேற சார்ஜ் இல்லை..." இவ்வளவு விசயத்தையும் அவள் மித்ரேஷை பார்த்துக் கொண்டே சொல்ல அவனோ அதைக் கேட்டுக் கொண்டு இறுக்கமாய் அமர்ந்து இருந்தான்...

'இருந்தாலும் ஹாஸ்பிட்டல்ல இருந்து ஒரு ஃபோன் பண்ணி இருக்கலாம்...' என்று எல்லோரும் அவளைக் கடிந்தனர்... மித்ரேஷோ ஒன்றும் பேசாது அமர்ந்து இருந்தான்...

அதன் பின் அவளைத் தயாராகச் சொல்லி மித்ரேஷ் அறையில் கொண்டு போய் விட்டனர்...

மது மெல்ல தயக்கத்துடன் அவனது அறைக்குள் நுழைந்தாள்...

அவள் உள்ளே நுழைந்த மறுநொடி அவளது கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட்டான் மித்ரேஷ்...

அவன் சந்தோசமாய் அவளை வரவேற்க போவது இல்லை என்று அவளுக்குத் தெரிந்து இருந்தாலும் இப்படி ஒரு அடியை அவனிடம் இருந்து அவள் சத்தியமாய் எதிர்பார்க்கவில்லை...

கண்கள் கலங்கி விக்கித்துப் போய் நின்றாள் அவள்...

அவனோ கோபத்துடன் அவளை உறுத்து விழித்துக் கொண்டு இருந்தான்...

ஈர்க்கும்...

மித்ரேஷ் கொடுத்த அடியில் மது சர்வாங்கமும் ஒடுங்கி போய் மேனி அதிர நின்றிருந்தாள்... அதுவும் காவல்துறை அதிகாரியான அவனது அடியில் அவளுக்கு பொறி கலங்கி போனது... அவனது கைத்தடம் பதிந்த அவளது கன்னம் நெருப்பு வைத்தது போல் எரிந்தது...

ஒருவேளை தான் சொன்ன காரணத்தை அவன் நம்பவில்லையோ... அதனால் தான் இந்த கோபமோ என்று நினைத்தவள்,

"மித்து... நான் பொய் சொல்லலை... நிஜமா நான் ஹாஸ்பிட்டல்ல தான் இருந்தேன்..." அவள் சொல்லி முடிக்கும் முன் கையமர்த்தி அதை தடுத்தவன்,

"பேசாதடி..." என்று கர்ஜிக்க...

"என்னை சந்தேகப்படுறியா மித்து...?" கேட்கும் போதே அவளது கண்களில் கண்ணீர் கரகரவென வழிந்தது...

"நான் உன்னை சந்தேகப்படுறேனா...? அப்படியே ஓங்கி அறைஞ்சேன்னு வை..." என்று கையை ஓங்கியவன் அவளது பார்வையில் தெரிந்த அச்சத்தில் தனது கையை கீழே இறக்கினான்...

"எப்பவுமே என்னை, என் மனசை புரிஞ்சிக்க மாட்டியாடி...?" அவளது தோளைப் பற்றி அவன் உலுக்க... அதில் திகைத்து போய் அவனை பார்த்தாள் அவள்...

"உன்னை காணோம்ன்னு கிட்டத்தட்ட ஐஞ்சு மணி நேரம் பைத்தியக்காரன் மாதிரி உன்னை நினைச்சு பயந்துட்டு இருந்தேன்... சரி எப்படியும் வந்துடுவன்னு நினைச்சிட்டு இருந்தா பத்து மணி வரை ஆளையே காணோம்... உன்னை காணாம அந்த நொடி செத்து போயிட்டேன்டி... நீ திரும்ப வர்ற வரைக்கும் வெறும் உடலா தான் நான் இருந்தேன்... எத்தனையோ காணாம போனவங்களோட கேசை நான் டீல் பண்ணி இருக்கேன்... ஆனா இன்னைக்கு உன்னை காணாம என் மூளை செயல்பட மறந்து பைத்தியக்காரன்

மாதிரி உட்கார்ந்துட்டு இருந்தேன்... உன்னை பார்க்கிற வரை என் உயிர் என் கிட்ட இல்லை... நீ என்னடான்னா கூல்லா வந்து ஹாஸ்பிட்டலுக்கு போனேன், டெலிவரிக்கு போனேன்னு கதை அளக்கற... சரி உதவி பண்ண போனது தப்பில்லை தான்... ஆனா வீட்டில் உள்ளவங்க கிட்ட சொல்லணும்ன்னு அக்கறை கொஞ்சமாவது உனக்கு வேண்டாம்..."

அவன் பேச பேச அவள் அதிசயமாய் அவனை பார்த்து கொண்டு இருந்தாள்... மித்ரேஷ் மனதில் தான் இருக்கிறோமா...? அவளால் அந்த விசயத்தை நம்ப முடியவில்லை... அவனின் தவிப்பே அவனது காதலை சொல்லாமல் சொல்லியது...

கணவன் தன்னை காதலிக்க மாட்டானா என்று ஏங்கியவளுக்கு அவன் காதலிப்பதை உணர்ந்ததும் அழுகையும், மகிழ்ச்சியும் ஒரு சேர உள்ளத்தில் பொங்கியது...

"இதில் உனக்கு கல்யாணம், குடும்பம், குழந்தை குட்டின்னு ஆசை வேற... உனக்கு எல்லாம் எதுக்குடி கல்யாணம்...? உன் புருசன்னு குத்துக்கல்லாட்டம் இருக்கிற எங்கிட்டேயாவது ஃபோன் பண்ணி சொல்லி இருக்கலாம் இல்லையா...?" முதலில் ஆக்ரோசமாய் கத்தியவன் கடைசி வார்த்தையை முடிக்கும் போது ஆதங்கத்துடன் சொன்னான்...

அவன் பேச பேச கண்களில் கண்ணீர் வழிந்த போதும் அதற்கு நேர்மாறாய் அவளது இதழ்கள் புன்னகையை சிந்தியது...

அவளின் புன்னகையை கண்டு அவனுக்கு கோபம் தான் வந்தது...

"நான் என்ன சொல்லிக்கிட்டு இருக்கேன்...? நீ பாட்டுக்கு சிரிச்சிக்கிட்டு இருந்தா என்ன அர்த்தம்...?" காதலையும் கோபமாய் தான் காட்டினான் அந்த காதல் கணவன்...

"மித்து..." என்றபடி அவனை அணைத்து கொண்டவள் அவனது நெஞ்சில் தஞ்சம் புகுந்தாள் விருப்பத்துடன்...

அவளின் அந்த செய்கையில் அவனது கோபம் முற்றிலும் காணாமல் போனது... அவனையும் அறியாமல் அவனது கைகள் அவளை ஆரத்தழுவி கொண்டது...

"ஏண்டி... என்னை இப்படி தவிக்க விட்டு போன... கொஞ்ச நேரத்தில் என்னை உயிரோடு கொன்னுட்டடி..." அவனது வார்த்தையில் அவள் அண்ணாந்து அவனை பார்த்தாள்...

தன் நெஞ்சில் நாடி பதித்து முகத்தை நிமிர்த்தி பார்த்தவளின் பார்வையில் உள்ளம் உருகி போனவன்,

"என்னடா இவன் என்னலாமோ உளறுகிறானேன்னு பார்க்கிறியா... இதுக்கு மேல என்னால் சொல்லாமல் இருக்க முடியாது அம்மு... மனசுக்குள்ள பூட்டி வச்சு பூட்டி வச்சு எனக்கு மூச்சு மூட்டுதுடி... இதை சொல்ல எனக்கு எந்த தகுதியும் இல்லை தான்... ஆனால் இனியும் சொல்லாமல் என்னால் இருக்க முடியாது அம்மு..." என்றவன் அவளது நெற்றியில் மென்மையாய் முத்தமிட்டு,

"ஐ லவ் யூ அம்மு... நான் உன்னை எந்தளவுக்கு காதலிக்கிறேன்னு என்னால சொல்ல முடியலை... ஆனா என் உயிரை விட மேலா உன்னை காதலிக்கிறேன்... அது மட்டும் நிச்சயம்... என் காதலை நீ ஏத்துக்குவியா அம்மு...? உனக்கு... உனக்கு என்னை பிடிக்குமாடி...?" காதலை தட்டுத் தடுமாறி ஒருவழியாய் சொல்லி முடித்தான் அந்த அஞ்சா நெஞ்சம் உடைய காவலதிகாரி சிங்கம்...

"நான் காணாம போன கொஞ்ச நேரத்தில் இந்தளவுக்கு தவிச்சு போயிட்டியே மித்து... உன்னை காணாம நான் ஏழு வருசமா எந்தளவுக்கு தவிச்சேன், துன்பப்பட்டேன்னு உனக்கு தெரியுமா மித்து...?"

அன்றொரு நாள் கூட 'எல்லோரும் தவித்ததாய்' அவள் கூறிய போது அதை அவன் பெரிதாக எடுத்து கொள்ளவில்லை... ஆனால் இப்போது அவள்

வாய்மொழியாக கூறிய போது அவளின் மனத்தவிப்பு அவனுக்கு நன்கு புரிந்தது... இந்த தவிப்புக்கான அர்த்தம் காதல் என்பது அவள் சொல்லாமலே அவனுக்கு புரிந்தது...

அவனது இத்தனை வருட தவிப்பு, நெருடல், குற்றவுணர்ச்சி எல்லாம் அவளது வார்த்தையில் அப்படியே காணாமல் போய் மாயமாய் மறைந்து போனது... இப்போது மனதின் பாரம் அகன்று நிம்மதியாய், இதமாய் உணர்ந்தான் அவன்...

"ம்ஹூம்... எனக்கு தெரியாதே..." அவளது முகத்தோடு தன் முகத்தை வைத்து தேய்த்தபடி கூறியவனின் முகத்தில் எல்லாம் புரிந்ததற்கான புன்னகை தவழ்ந்தது... அத்தனை சந்தோசமாய் இருந்தது அவனுக்கு...

"ம்ப்ச்... எனக்கே அது புரியாத போது உனக்கு எங்கே அது புரிந்து இருக்க போகுது... அன்னைக்கு அண்ணா கல்யாணத்துக்கு முந்தின நாள் நீ..." அவ்வளவு நேரம் சரளமாய் பேசி கொண்டு வந்தவள் வார்த்தைகள் தடுமாற வெட்கப்பட்டு கொண்டு பேசாமடந்தையாகி நிற்க...

"நான்...?" கேள்வியாய் பார்த்தவனை கண் கொண்டு நோக்க முடியாமல் அவனது நெஞ்சில் அவள் முகம் புதைத்தாள்...

அப்படியே விட்டு விட்டால் அது மித்ரேஷ் இல்லையே... வலுக்கட்டாயமாய் தன் நெஞ்சில் இருந்து அவளது முகத்தை நிமிர்த்தியவன்,

"அப்படி நான் என்னடி பண்ணினேன் உன்னை...? நான் ரொம்ப அப்பாவிம்மா... இந்த அப்பாவி மேல் ஏதாவது அபாண்டமாய் பழி போட்டு விடாதே..." என்றான் நகை குரலில்...

"க்கும்... நீ அப்பாவி... நம்பிட்டேன்..." அவனது கிண்டலில் அவள் நொடித்து கொண்டாள்...

அவன் புன்னகையுடன் அவளையே வைத்த கண் வாங்காமல் பார்க்க அதில் மீண்டும் வெட்கம் அழையா

விருந்தாளியாய் வந்து ஒட்டி கொள்ள நாணத்தில் அவளது கண்கள் தாழ்ந்தது...

"அன்னைக்கு நீ என் கையை பிடிச்சி..." அவள் கூறும் போதே அன்று நடந்தது அவனுக்கு நியாபகம் வந்துவிட்டது...

"ம்... கையை பிடிச்சி..." குறும்பு கூத்தாடியது அவனது குரலில்...

"முத்தம் கொடுத்தியா..." அவள் சொல்லும் போதே அவன் அவளது இரு கரங்களையும் பற்றி அதே போல் இதழ் பதிக்க அன்று போல் இன்றும் புதுவித அவஸ்தைக்கு உள்ளான மது கிறக்கத்துடன் கண்களை மூட அதை கண்டு மனதுக்குள் நகைத்தவன் அவள் நின்ற விதத்தை ரசித்தபடி,

"என்ன நடந்து இருக்கும்ன்னு இப்போ எனக்கு புரிஞ்சிருச்சு..." என்றவன் அடுத்த நொடி அவளை தன் கையில் அள்ளி கொள்ள அதில் கண்களை திறந்தவள் அவனது ரசனையான பார்வையில் மீண்டும் கண்களை மூடி அவனது நெஞ்சில் முகம் புதைத்து கொண்டாள்...

கட்டிலில் அவளை கிடத்தியவன் மெல்ல அவளது நெற்றியில் இதழ் பதித்தான்... முன்பே அவளுள் மூழ்கி முத்தெடுக்க நினைப்பவன் அவன்... இப்போது அவள் மனம் அறிந்தவுடன் இன்னும் உரிமையாய் அவளுள் மூழ்க துவங்கினான்...

நெற்றி, கண், மூக்கு, கன்னம் என்று ஒவ்வொன்றாய் வரிசைப்படுத்தி தன் இதழை அவளிடத்தில் அழுத்தமாய் பதித்தவன் அவளது இதழ் வந்ததும் அவளின் கண்களை நோக்கினான்...

கண்மூடி அவனது முத்திரையை ரசித்து அனுபவித்து கொண்டு இருந்தவள் அவனது அமைதியில் கண்களை திறந்து பார்த்தாள்...

'என்ன...?' என்பது போல் பார்த்தவளின் இதழை தனது விரலால் வருடியவன், "அன்னைக்கு என்னாச்சுன்னு சொல்லவே இல்லை...?"

அவளுக்கு புரிந்து போனது தனது மனம் முழுவதும் தெரியாமல் அவன் அவ்வளவு சீக்கிரத்தில் சமாதானமாக மாட்டான் என்று...

அன்று அவள் மனதில் காதல் தோன்றியதை தருணத்தை அவனுடன் பகிர்ந்து கொண்டவளின் நெற்றியில் செல்லமாய் முட்டியபடி,

"அன்னைக்கு என்னடி சொன்ன நான் ட்யூப் லைட்டா...? நீ தான்டி ட்யூப் லைட்... உனக்கு முந்தியே நான் உன்னை காதலிக்கிறதை கண்டுபிடிச்சிட்டேன்... அப்போ ஐயா தானே படு ஸ்பீடு..." என்றவன் தன் காதலை உணர்ந்த தருணத்தை கூற...

"க்கும்... உன் வேகத்தை நீ தான் மெச்சிக்கணும்... அன்னைக்கு என் கிட்ட சவால் விட்ட போதே நீ கொஞ்சம் அலசி ஆராய்ந்து பார்த்து இருந்தா இந்த பிரச்சினையே வந்திருக்காது..."

"ஓ... அப்போ நான் காதல் சொன்னா நீ அப்படியே ஏத்துக்கிட்டு இருந்திருப்ப பாரு... அதுக்கும் ஊரை கூப்பிட்டு பஞ்சயத்து வச்சு எங்கப்பாவை நாட்டாமையா மாத்தி தீர்ப்பு சொல்ல வச்சிருப்ப... போடி போ..." அவன் கோபப்பட...

அவனது கோபம் உணர்ந்து அவனது முகத்தை தன் கையில் தாங்கியவள், "ம்ஹூம் அப்படி எல்லாம் செஞ்சிருக்க மாட்டேன் மித்து... கொஞ்சம் அதிர்ச்சியா இருந்தாலும் உனக்காக நான் யோசிச்சு இருப்பேன்... நான் எப்பவுமே உன்னை வருத்தப்பட வைக்கணும்ன்னு நினைச்சது இல்லை... நீ பேசுறதுக்கு பதிலுக்கு பதில் கோபப்பட்டு கத்துவேனே தவிர... உன்னை நான் ஒருநாளும் வெறுத்தது இல்லைடா... இதை நீ நம்புறியா..."

அவனுக்கு அவளது பேச்சு பிரமிப்பாய் இருந்தது... பார்ப்பதற்கு விளையாட்டு பிள்ளையாய் இருந்தாலும் மது எத்தனை பக்குவமானவள் என்று அவனுக்கு அப்போது தான் புரிந்தது...

அவனின் அமைதியை அவள் வேறு மாதிரி எண்ணி கொண்டாள்...

"நான் யார் கிட்டேயும் உன்னை விட்டு கொடுத்தது இல்லை மித்து... இவ்வளவு ஏன் தான்யா உன்னை பத்தி கேவலமா பேசினப்போ அவளோட பிரெண்ட்ஷிப்பே வேண்டாம்ன்னு சொல்லிட்டேன்... என்னோட பேர்த்டே அன்னைக்கு உன்னை சும்மா தான் நான் கிண்டல் பண்ணினேன்... ஆனா அதை அவ்வளவு சீரியசா நீ எடுப்பேன்னு நான் நினைக்கவே இல்லை... உனக்காக தான் கீழே விழுந்த பூவை எடுத்து நான் தலையில் வச்சிக்கிட்டேன்... ஆனா நீ அதை கசக்கி தூர எறிஞ்சிட்டே... அன்னைக்கு நான் எவ்வளவு வேதனைப்பட்டேன் தெரியுமா..." என்றவள் முகத்தில் அத்தனை வேதனை இருந்தது...

அவளின் சுளித்த புருவங்களை நீவி விட்டவன் மெல்ல அவளது தலையை வருடி, முகத்தை வருடி வேதனையை குறைக்க முற்பட்டவன்,

"உன் அளவுக்கு எனக்கு அறிவில்லாமல் போயிருச்சு அம்மு... சாரிடா... ஐம் ரியலி சாரி..." என்று அவளுக்கு சற்றும் குறையாமல் வேதனைப்பட்டவனை கண்டு,

"பரவாயில்லை விடு மித்து..." என்றவள்,

"மித்து... அந்த தருணை..." என்றவளின் வாய் மீது கை வைத்து பொத்தியவன்,

"எனக்கு எல்லாம் தெரியும்... தருண் சொன்னான்..."

"சொன்னானா...? அப்போ எல்லாம் அடிக்கடி எப்பவும் உன் நியாபகம் தான் வரும்... எங்கே வெளியில் போனாலும் நீ எங்கேயாவது தென்படுறியான்னு தேடிட்டே இருப்பேன்... ஜான் கூட சத்தம் போடுவான்... அவனையே நினைச்சு உன்

நிம்மதியை நீ கெடுத்துக்காதேன்னு... வீட்டில் இருந்தாலும் சாதா உன் நினைப்பு தான்... இந்த ஏழு வருசத்துல உன்னை ரொம்ப மிஸ் பண்ணினேன்டா... அதை எப்படி சொல்றதுன்னு தெரியலை... அது காதலான்னும் சொல்லத் தெரியலை... ஆனா நீ என் உயிர் மூச்சா மாறியிருந்த... அது மட்டும் உண்மை... நீ மட்டும் திரும்ப வரலைன்னா நான் கல்யாணம் கூட பண்ணி இருக்க மாட்டேன்... நிஷா அத்தைக்கு மகளா கடைசி வரை அவங்க கூட இருக்கணும்ன்னு தான் நினைச்சேன்... அது ஏன்னு அப்போ புரியலை... ஆனா இப்போ புரியுதுடா..."

அவளின் காதல் அவனை சுகமாய் தாலாட்டியது... தன்னை விட அதிகமாய் நேசித்த அவளின் காதலின் முன் அவனின் காதல் தோற்று போனது என்னவோ உண்மை...

"உன் அளவுக்கு நான் உன்னை காதலிக்கலை அம்மு... கடைசி இரண்டு வருடங்களாக தான் நான் உன்னை காதலிக்கிறதை உணர்ந்தேன்... அதுக்கு முன்னாடி வரை நான் உன் மேல் பயங்கர கோபத்தில் தான் இருந்தேன்..." என்றவனின் குரல் கம்மியது...

"அம்மு... நீ இந்தளவுக்கு குற்றவுணர்ச்சியில் குறுகி போற அளவுக்கு ஒண்ணும் நடக்கலை... நான் உனக்காக, நீ பேசிய பேச்சுக்காக வீட்டை விட்டு வெளியில் போனேன்னு நினைச்சேன்னா அது ரொம்ப தப்பு... நான் போனதுக்கு காரணம் என் அம்மா..."

"மித்து..." அவள் அதிர்ச்சியாய் அவனை பார்த்தாள்...

"ஆமாம் அம்மு... அம்மாவை பத்தின எல்லா உண்மையும் எனக்கு அப்பவே தெரியும்... டாட் எல்லாத்தையும் என் கிட்ட சொல்லி நீ மதுவுக்கு பொருத்தமானவன் இல்லைன்னு சொல்லி அடிச்சாரு... எனக்கு மாம்மை பத்தின விசயத்தை ஜீரணிக்கவே முடியலை... இங்கே இருந்தா அவங்க கிட்ட உளறிருவோம்ன்னு பயந்து போய் ஊரை விட்டு ஓடி போனேன்... திரும்பவும் நான் இங்கே வந்தது மாம்க்காக தான்..." என்றவன் அக்ஷய் வந்து தன்னை சந்தித்ததை கூறினான்...

"நீ எனக்காக எவ்வளவோ போராடி என்னை கல்யாணம் பண்ணியிருக்க... ஆனா நான் நம் காதலுக்காக ஒண்ணுமே செய்யலை... போராடவும் இல்லை... குறுக்கு வழியில் உன்னை அடையறதுக்கு தான் முயற்சி செய்தேன்... அப்படிப்பட்ட என் மீது எப்படி டி இவ்வளவு காதல் வச்சிருக்க...? உன்னை கல்யாணம் பண்ணிக்க எந்த தகுதியும் இல்லைடி எனக்கு... நான் மட்டும் உன் வாழ்க்கையில் குறுக்கிடாம இருந்து இருந்தா நீ என்னை விட எல்லா விதத்திலும் தகுதி அதிகம் உள்ளவனை கல்யாணம் பண்ணி இருப்ப... நான் உன் வாழ்க்கையையே கெடுத்த பாவி அம்மு..." வேதனையுடன் அவன் சொல்ல...

"போடா லூசு..." என்று அவனை செல்லமாய் கடிந்தவள் அவனின் வேதனையை போக்கும்படி அவனது தலையை தன் நெஞ்சோடு சேர்த்து அணைத்து கொண்டாள்... அவளின் கை விரல் அவனது தலையை மெல்ல கோதி கொடுத்தது...

"என்னை உயிர்க்கு உயிராய் நேசிக்கிற உன்னை விட வேறு எவனுக்குடா தகுதி இருக்கு...? நீ தான்டா எனக்கு மிகவும் பொருத்தமானவன்... நீ என்னை வற்புறுத்தலைன்னாலும் நானே உன் ஸ்மார்ட்னெசை பார்த்து உன்னை காதலிச்சு இருப்பேன்... அன்னைக்கு முதல் முறையா உன்னை யூனிபார்ம் இல்லாம நார்மல் ட்ரெசில் பார்த்த போதே நான் அப்படியே பிரமிச்சு போயிட்டேன்... இது நம்ம மித்துவான்னு..."

"அது எனக்கும் தெரியும்டி... அப்படியே ஆளை விழுங்குற மாதிரி ஒரு பார்வை பார்த்தியே... அதை பார்த்து நானும் டோட்டலி சரண்டர் தெரியுமா... ஆனாலும் என் தகுதி முன்னே வந்து குற்றவுணர்ச்சியை கொடுத்து என்னை அந்த மாதிரி பேச வச்சிருச்சு... அன்னைக்கு உனக்கு ரொம்ப கோவம் வந்திருக்குமே..."

"ம்... ரொம்ப கோபம் வந்தது... அதுக்கு அப்புறமும் நீ சேலன்ஜ் பண்ணியதை பத்தி பேசும் போது கோபம் கோபமாய் வரும்... அதுக்கு அப்புறம் டாட் உன்னை பத்தி

என் கிட்ட பேசினாங்க... அப்போ தான் நான் கொஞ்சம் உன்னை பத்தி யோசிக்கவே ஆரம்பிச்சேன்..." என்றவள் அக்ஷய் பேசியது அனைத்தையும் சொல்ல...

"என்னது சாருக்கு நான் லவ் பண்ணியது தெரியுமா...?" கேட்கும் போதே அதிர்ச்சியில் அவன் விழிகள் இரண்டும் தெறித்து விடுவது போல் பிதுங்கியது... பின்னே அக்ஷயை கண்டாலே இன்னமும் அவனுக்கு பயம் அல்லவா...

அவள் பதில் பேசாமல் அவன் வாயில் பட்டென்று ஒரு அடி அடித்தாள்...

"ராட்சசி இப்படியாடி அடிப்ப... இதுக்கு நீ ட்ரீட்மெண்ட் தந்தே ஆகணும்..." அவளது இதழ் நோக்கி குனிந்தான் அவன்... முன்பு இருந்த தயக்கம் இப்போது அவனிடத்தில் இல்லை...

"ம்ஹூம்... முடியாது..." என்று சிணுங்கியவளை கண்டு சிரித்து கொண்டே விலகினான்...

"ம்... சொல்லு... அப்போ என் காதல் உன் அப்பா சொல்லி தான் உனக்கு புரிஞ்சதா...?"

"அதை பிறகு சொல்றேன்..." என்றவள், "இனிமே டாட்டை நீ மாமான்னு தான் கூப்பிடணும்... அது என்னடா அவர் பொண்ணை கல்யாணம் பண்ணிய பிறகும் சார்ன்னு கூப்பிடற..."

"ஏனோ தெரியலை ஆரம்பத்துலே இருந்தே உங்கப்பாவை கண்டாலே ஒரு பயம், மரியாதை..."

"இனி அப்படி எல்லாம் பயப்பட வேண்டாம்... என்னை மீறி அவரால் உன்னை ஒண்ணும் பண்ண முடியாது... அவரோட வீக்னசே நான் தான்..."

"அதான் தெரியுதே... பொண்ணு சொன்னாங்கிறதுக்காக மிட் நைட்ல நம்ம கல்யாணத்தை நடத்தி முடிச்சாரே... உண்மையில் அவர் கிரேட் தான்... நான் கூட என் பொண்ணு கிட்ட அப்படி இருப்பேனான்னு தெரியலை..."

"நீ இல்லைன்னா போடா... நான் என் பொண்ணு கிட்ட அப்படித்தான் இருப்பேன்..."

"அப்போ அதுக்கான வேலையில் இறங்குவோமா...?" என்றவனது கைகள் அவளது மேனியில் அத்துமீற...

"இன்னும் கொஞ்ச நேரம் மித்து..." கெஞ்சிய மனையாளை கண்டு புது கணவன் இரங்காமல் இருந்தால் தான் அதிசயம்...

"டாட் பேசினதுக்கு அப்புறம் தான் நான் உன் பக்க நியாயங்களை பத்தி யோசிக்க ஆரம்பிச்சேன்... நீ கோபப்பட்டாலும் உனக்காக உன் கிட்ட சமாதானமா போக நினைச்சேன்... ஆனா கடைசியில் நீ இப்படி என்னை ஒரேடியா விட்டு கொடுத்துட்டு போவேன்னு நான் கொஞ்சமும் நினைக்கலைடா..." என்றவளது கண்கள் கலங்கியது...

"தாத்தா சொன்னா என்னை வேண்டாம்ன்னு உதறிட்டு போயிருவியாடா...?" ஆதங்கத்துடன் கேட்டவளை கண்டு அவனின் முகத்தில் வேதனையின் சாயல் படிந்தது...

"எப்படி உன் தாத்தா கிட்ட உன்னை பெண் கேட்பேன்... ஏற்கெனவே தகுதி இல்லைன்னு உள்ளுக்குள் மருகிட்டு இருக்கேன்... அவர் அப்படி பேசியது என் தாழ்வு மனப்பான்மையை அதிகரிச்சதும் இல்லாம என்னோட கோபத்தையும் அதிகரிச்சது... என் அம்மாவை பேச இவர் யார்ன்னு...? அதான் அப்படி பேசிட்டேன்..."

"அது மட்டுமாடா பேசின... தருணுக்கு என்னை தாரை வார்த்து கொடுக்கவும் தயாரா இல்ல இருந்த... எனக்கு வர ஆத்திரத்தில் உன்னை..." அவனது மீசையை பிடித்து வலிக்கும்படி இழுத்தாள்...

"ஷ்... வலிக்குதுடி... இப்படி டிசைன் டிசைனா கொடுமைப்படுத்த எங்கே இருந்துடி கத்துக்கிட்ட..." அவன் சாமர்த்தியமாய் பேச்சை மாற்றினான்...

அவளா அவனை விடுபவள்....

"இன்னமும் நீ நம்பறியா நான் தருணை லவ் பண்ணி இருப்பேன்னு...?"

"அது முதல்ல... அப்புறம் நீ எனக்காக மாற ஆரம்பிச்சதுமே அந்த எண்ணம் என் மனசில் இருந்து ஓடி போயிருச்சு..."

"டாட்.... தருணை பத்தி சொன்னது எல்லாம் பொய்... உன்னை வெறுப்பேத்த தான் அப்படி சொன்னாராம்... அவர் எதிர்பார்த்த மாதிரி நீயும் பொங்கி எழுந்துட்ட... ஆனாலும் உனக்கு ரொம்ப தைரியம்டா... நீயும் நானும் காதலிக்கிறதா என் அப்பா கிட்டேயே வந்து சொல்லுற...?"

"எல்லாம் நீ சரின்னு சொல்லுவங்கிற தைரியம் தான்..." என்று கண்சிமிட்டி அவன் சிரிக்க...

"அது எப்படி உனக்கு தெரியும்...?" கண்களை அகல விரித்து பார்த்தவளின் கண்களில் அவன் மெல்ல தொலைந்து போக ஆரம்பித்தான்...

"எனக்காக இல்லைன்னாலும் என் அம்மாவுக்காக நீ என்னை ஏத்துக்குவேன்னு எனக்கு நம்பிக்கை இருந்தது... அதை தான் நான் யூஸ் பண்ணிக்கிட்டேன்... அதே மாதிரி நீயும் எனக்கு சாதகமான பதிலை சொன்ன..."

"போடா... இத்தனை பிரச்சினைக்கும் நீ தான் காரணம்... அன்னைக்கே தெளிவா யோசிக்காம தேவையில்லாம வீட்டை விட்டு ஓடி போய்..." அவள் சொல்லும் போதே அவனது முகம் அவமானத்தில் கன்றி கறுத்து போனது...

அதை கண்டவள் தனது பேச்சின் தவறு புரிய நாக்கை கடித்தவள், "சாரி மித்து... நீ அவ்வளவு சொல்லியும் நான் புரியாம பேசிட்டேன்... சாரிடா..." அப்போதும் அமைதியாய் இருந்தவன் அவளை விட்டு விலகி அமர... அவனது அமைதி அவளை கொல்லாமல் கொன்றது...

"இப்படி தான் மித்து... பேச தெரியாம பேசி உன்னை ரொம்ப ஹர்ட் பண்ணிடறேன்... இந்த வாயை நல்லா அடிச்சா தான் சொன்ன பேச்சு கேட்கும்..." என்றவள் தன் கை கொண்டு வாயை அடிக்க போக...

அவளது செயலில் மனப்பாரம் குறைந்த மித்ரேஷ் அதை தடுத்தபடி, "ஏற்கெனவே அதுக்கு நான் கொடுக்க வேண்டிய தண்டனை பாக்கி இருக்கு... அதோடு இதுக்கும் சேர்த்து தண்டனை கொடுக்கிறேன்..." என்றவன் அவள் யோசிக்கும் முன் அவளது இதழை தன் இதழ் கொண்டு சிறை செய்தான்...

அவளும் விருப்பத்துடன் அவனிடம் இதழ் முற்றுகையில் தோற்று தானாக அவன் கையில் சரணடைந்தாள்...

மூச்சு வாங்குவதற்காக பிரிந்த நொடியில் அவள் மிகுந்த தயக்கத்துடன் அவனிடம்,

"மித்து..."

"சொல்லுடி..." என்றவன் தாபத்துடன் அவளின் இதழை நோக்கி மீண்டும் குனிய...

"கொஞ்ச நாள் நாம காதலிக்கலாமா மித்து..." மிகுந்த தயக்கத்துடன் தான் அவள் கேட்டாள்... அவனின் கோபம் கண்டு என்றுமே அவளுக்கு பயம் தான்...

அத்தனை நேர மகிழ்ச்சி மறைந்து அவளது விழிகள் பயத்துடனும், தயக்கத்துடன் தன்னை பார்ப்பதை உணர்ந்தவன் மனதுக்குள் மிகவும் நொந்து போனான்... அந்தளவுக்கு தான் அவளை காயப்படுத்தி இருக்கிறோமா என்று...

"உனக்கு அது தான் விருப்பம்ன்னா எனக்கு ஓகே..." என்று அவளின் விருப்பத்துக்கு அவன் கட்டுப்பட...

"தேங்க்ஸ் மித்து..." என்று அவனை அணைத்து கொண்டவள், "நீ என்ன சொல்லுவியோன்னு பயந்து போயிட்டேன்..."

"என் கிட்ட எதுக்கு பயம் உனக்கு...?" என்று கேட்டவனிடத்தில் தன் கன்னத்தை அவள் காண்பித்தாள்...

அவனின் கைத்தடம் அவளது சிவந்த கன்னத்தில் நன்கு பதிந்து இருந்தது...

"சாரி அம்மு... ரொம்ப வலிக்குதா..." என்றவன் அவளது கன்னத்தில் தனது உதட்டால் ஒத்தடமிட...

"ரொம்ப வலிக்குது..." என்று சலுகையாய் கொஞ்சியவளின் எண்ணம் புரிந்து அவனது தனது இதழ் ஒத்தடத்தை நிறுத்தவில்லை...

"இதுக்கு மேல போச்சு அப்புறம் நடக்கிறதுக்கு நான் பொறுப்பு இல்லை..." என்று அவனாக தான் அவளை விட்டு விலகினான்...

"ம்... ஓகே ஓகே..." மனமே இல்லாமல் அவளும் விலகி அமர்ந்தாள்...

"இனிமேல் எங்கே போறதா இருந்தாலும் என் கிட்ட சொல்லிட்டு தான் போகணும்..."

"சரி மித்து..." என்று சிரிப்புடன் உடனே தலையாட்டியவளை கண்டு அவனுக்கும் சிரிப்பு வந்தது...

"நல்லா தலையாட்ட கத்து வச்சிருக்க..." என்றவன் அவளை தன் அருகே இழுத்து கொண்டான்...

"மித்து... தூக்கம் வருது..." என்று கொட்டாவி விட்டவளை கண்டு,

"இவ்வளவு பூவும் வேஸ்ட்டா போயிருச்சே..." என்று கட்டிலில் அலங்காரம் செய்து இருந்த பூக்களை கண்டு அவன் பெருமூச்சு விட...

"உனக்கு கஷ்டமா இருக்கா மித்து..." என்றவளின் கைகள் மாலையாய் அவனின் கழுத்தில் கோர்த்து அவனது முகத்தை தன் பக்கமாய் இழுத்தது...

"உன்னோட விருப்பம் தான் என்னோட விருப்பம் மித்து..."

"இங்கேயும் அதே மாதிரி தான் மேடம்... உங்க விருப்பம் தான் என்னோட விருப்பமும்..." என்று அவளது மூக்கை பிடித்து ஆட்டியபடி சொன்னவனை கண்டு அவளுக்கு அத்தனை சந்தோசமாய் இருந்தது...

காதலித்தவனை கைப்பிடித்து அந்த கணவனே காதலனாக மாறிய அதிசய தருணத்தை அவளது மனம் அசை போட்டு கொண்டு இருந்தது...

"ஹலோ என்ன தூங்கலையா...?" அவளது முகம் முன் சொடக்கு போட்டு அவன் கேட்கவும்,

"அப்போ வந்துச்சு... இப்போ இல்லை..."

"எனக்கு தூக்கம் வருது அம்மு..." என்றவன் அவளை கையணைவில் கொண்டு வந்து தூங்க முற்பட்டான்...

அவளோ உறங்காமல் கட்டிலில் சாய்ந்து அமர்ந்து கொண்டு தனது கை விரல்களால் அவனது தலையை வருடி கொடுக்க, அவளது கண்கள் எல்லையில்லா நேசத்துடன் அவனை பார்த்தது... அதை கண்டவன் அவளது மடியில் தலை வைத்து படுத்து கொண்டு,

"தேங்க்ஸ்டி அம்மு... என் வாழ்க்கையை முழுமையடைய செய்துட்ட..." என்றவனின் கண்களில் இரு சொட்டு கண்ணீர் துளிகள் துளிர்த்தது...

"ச்சு... இதுக்கு எல்லாம் யாராவது தேங்க்ஸ் சொல்வாங்களா...? அப்படி பார்த்தா நான் தான் உனக்கு தேங்க்ஸ் சொல்லணும்... எனக்கு ரொம்ப செல்லம் கொடுக்கிற என்னோட டாட் மாதிரி..."

அவளது வார்த்தைகள் அவனை அந்தளவுக்கு குளிர்வித்தது...

"உண்மையா...?"

"நிஜமா மித்து..." அவனது நெற்றியில் இதழ் பதித்தவள் மீண்டும் அவனது தலையை வருடி விட அவளது இதமான வருடலில் அவனது கண்கள் ஆழ்ந்த தூக்கத்தில் ஆழ்ந்தது... வெகு நாட்களுக்கு பிறகு நிம்மதியான உறக்கம் அவனை ஆட் கொண்டது...

மது அவனையே பார்த்து கொண்டு இருந்தவள் எப்போது உறங்கினாள் என்பது அவளுக்கே தெரியாது...

மறுநாள் காலையில் வேலைக்கு கிளம்பியவளிடம் அத்தனை தடவை சொல்லி அனுப்பினான்... தாமதமாக வர நேரிட்டால் அவனுக்கு அழைத்து விபரத்தை சொல்ல வேண்டும் என்று வலியுறுத்தினான்...

இருவரின் இணக்கத்தையும் பார்த்த குடும்பத்தினர் அவர்களது வாழ்க்கை சரியாகி விடும் என்று சந்தோசப்பட்டனர்...

"மது... உன் முகம் ரொம்ப பிரகாசமா இருக்கு... என்ன விசயம்...?" என்று ஜான் கூட அவளை கிண்டல் அடித்தான்...

"அது உன்னை மாதிரி சின்னப் பையன் கிட்ட சொல்ல கூடாத ரகசியம்... என்ன சில்க்கி அப்படித்தானே..." என்று மது மிருதுளாவை பார்த்து கண்சிமிட்ட... அவளோ மதுவை பார்த்து உயிர்ப்பில்லாது புன்னகைத்தாள்...

ஆதி அவளிடம் கணவனாய் நெருங்கி வர முயலுகிறான் தான்... இருந்தாலும் அவளால் அவனிடத்தில் அது போல் நெருங்க முடியவில்லை... மனம் நிறைய அவன் மேல் காதல் இருக்கு... ஆனால் ஏதோ ஒன்று அவனிடத்தில் நெருங்க விடாமல் அவளை தடுக்கிறது... அது என்ன என்று தான் அவளுக்கும் தெரியவில்லை...

இரண்டு நாட்களுக்கு முன் நடந்த நிகழ்ச்சியை நினைத்து பார்த்தது அவளது மனம்...

அன்று ஆதி வீட்டிற்கு வரும் போதே தலையை பிடித்து கொண்டு வந்தான்... அன்று மிருதுளாவும் மருத்துவமனையில் இருந்து அதிசயமாய் சீக்கிரத்தில் வீடு திரும்பி இருந்தாள்...

தலைவலி தாங்க முடியாமல் மாத்திரையை விழுங்க போனவனை தடுத்து, "அடிக்கடி பெயின் கில்லர் போட கூடாது மாமா..." என்றவள் வன் அருகில் அமர்ந்து தலைவலி தைலத்தை எடுத்து அவனது தலையில் தேய்த்து இதமாய் பிடித்து விட்டாள்...

அவளது இதமான வருடலில் அத்தனை நேரம் இருந்த தலைவலி காணாமல் போனது ஆதிக்கு...

"தேங்க்ஸ் பட்டு..." என்று அவளது கையை பற்றி அவன் இதழ் பதிக்க அதில் விதிர்த்து போய் அவள் தனது கையை அவன் பிடியில் இருந்து உருவி கொண்டாள்...

அவளின் மனநிலை புரிந்து ஒன்றும் பேசாது அவள் மடியில் இருந்து எழ போனவன் திரும்பி புரண்டு படுத்து எழுவதற்கு முயலும் போது அவளின் புடவை விலகி அவளின் இடுப்பு பிரதேசம் தாரளமாக அவனின் கண்களுக்கு விருந்தளிக்க ஆண்மகனாய் முதன்முறையாய் மனைவியான பெண்ணிடத்தில் தடுமாறி நின்றான் அவன்...

அவனையும் அறியாது அவனது இதழ்கள் அழுத்தமாய் பதிந்தது அவளது இடையில்... அதில் ஒரு நொடி உருகி கரைந்தவள் அவனின் இதழ்கள் இடையை விட்டு நகர மறுத்து மேலும் வயிற்று பகுதியை நாடி செல்வதை உணர்ந்தவள் உள்ளம் பதறியவளாய் சட்டென்று எழுந்து விட்டாள்...

"பட்டு... ப்ளஸ்டி..." அவளின் கையை பிடித்து கொண்டு தாபத்தோடு கெஞ்சியவனை கண்கள் கலங்க அவள் பார்த்தாள்...

அதில் தனது தவறை உணர்ந்தவனாய் அவன், "சாரி பட்டு..." என்றபடி வெளியில் சென்று விட்டான்...

அன்றில் இருந்து அவனது முகத்தை பார்க்கவே அவளுக்கு சங்கடமாக தோன்றும்... ஆனால் அவன் என்னமோ அவளிடம் சகஜமாக தான் நடந்து கொள்கிறான்...

அவன் கேட்டு அவள் மறுத்தது அவளது மனதில் நெருஞ்சி முள்ளாய் உறுத்தியது... தனக்கு என்ன வேண்டும் என்று அவளுக்கு தெரியவில்லை... அவனிடத்தில் தான் என்ன எதிர்பார்க்கிறோம் என்று அவளுக்கு புரியவும் இல்லை...

காலம் தனக்கு என்ன வைத்து காத்திருக்கிறது என்பதை அவள் அறியவும் இல்லை...

அன்று இரவு நகரில் ரோந்து பணியில் மித்ரேஷ் ஈடுபட்டு கொண்டு இருந்த போது செம்மரக் கட்டைகளை ஏற்றி கொண்டு சென்ற லாரி ஒன்று பிடிப்பட்டது... அதில் இருந்த செம்மரக் கட்டைகள் எல்லாம் பல கோடி ரூபாய் மதிப்பு பெறும்...

இப்போது தமிழகத்தில் செம்மரக் கட்டைகள் கடத்துவதை ஓரளவு தடுத்து வந்த போதும் இது மாதிரி செயல்கள் இங்கு ஒன்றும் அங்கு ஒன்றுமாய் நடைப்பெற தான் செய்கிறது...

அதன் பின்னணியில் யார் இருக்கிறார்கள் என்று விசாரித்த போது அனுமார் வால் போல் நீண்ட விசாரணை சென்று முடிந்த இடம் வரதராஜனிடத்தில்...

"என் கிட்ட வசமா மாட்டினியா நீ... மவனே உனக்கு இருக்குடா ஆப்பு... என் அம்மாவையா கேவலமா பேசின... உன்னை கேவலப்படுத்தாம விட மாட்டேன்டா..." ஆக்ரோசப்பட்ட மித்ரேஷின் கண்களில் பழிவாங்கும் வெறி பளபளத்தது...

ஈர்க்கும்...

அன்று மித்ரேஷ் வீட்டிற்கு வரும் போது மிகவும் தாமதமானது... மிகவும் களைப்புடன் ஜீப்பில் இருந்து அவன் இறங்கும் போதே வீட்டின் வாயிற்கதவு திறந்தது... வேறு யார் அவனது மனங்கவர்ந்த மனையாள் மது தான்... அவனை கண்டதும் முகத்தில் மகிழ்ச்சி பொங்க ஓடி வந்தவள்,

"மித்து..." என்று உற்சாகமாய் அழைக்க...

அவனோ கண்டிப்பான பார்வையை அவள் புறம் செலுத்தியவன் ஓட்டுநர் வண்டியை கிளப்பி கொண்டு அங்கு இருந்து அகன்ற பின்பே அவளது கணவனாய் அவளை பார்த்து புன்னகைத்தான்...

"இந்த மாதிரி பண்றதுக்கு நீ என் கிட்ட அடி வாங்க போற மித்து..." மது இரு கைகளையும் இடுப்பில் ஊன்றி அவனை பார்த்து முறைக்க...

"டிரைவருக்கு நான் உன் வொய்ப்ன்னு தெரியாதா...? ஏன் அவர் முன்னாடி நான் உன் கூட பேச கூடாதா...? ரொம்பத் தான் டூ மச்சா பிகேவ் பண்ற நீ..."

கத்த தொடங்கியவளை இரு கைகளால் வளைத்து பிடித்தவன், "எதுக்குடி அவன் வேடிக்கை பார்க்கணும்...? நான் உன் முன்னாடி தோப்புக்கரணம் போடுறதை நாளைக்கு டிபார்ட்மெண்ட் முழுசும் பரப்பறதுக்கா... உன்னை பார்த்தாலே மெல்ட் ஆகிறேன்... இதில் நீ இப்படி ஆவலா ஓடி வரும் போது நான் உன் கிட்ட டோட்டலி சரண்டர்... என்னால என்னை கண்ட்ரோல் பண்ணவே முடியலைடி அம்மு..." சரசமாய் பேசியபடி அவள் முகம் நோக்கி குனிய...

"ஐயோ... யாராவது பார்க்க போறாங்க..." பதட்டத்துடன் சுற்றும் முற்றும் பார்த்தாள் அவள்...

"பார்த்தா என்ன... பார்க்கட்டுமே..." என்றவன் தன் காரியத்தில் கண்ணாயிருக்க...

"ம்ஹூம்... இது சரிப்படாதுப்பா..." அவனை விலக்கி கொண்டு அவள் வீட்டினுள் ஓட அவன் சிரித்தபடி அவள் பின்னே ஓடினான்...

இந்த காட்சியை அக்ஷியும், அபியும் தங்களது அறை பால்கனியில் இருந்து பார்த்து கொண்டு இருந்தனர்...

"பார்த்தியா என் பொண்ணு கல்யாணமானதும் எப்படி பொறுப்பா மாறிட்டாள்ன்னு... என்னமோ அவளை திட்டிட்டே இருப்பியே... இப்போ என்ன சொல்ற...?" அக்ஷய் மனைவியிடம் கேட்க...

"உண்மை தான் அக்ஷய்... அம்மு இந்தளவுக்கு மாறுவாள்ன்னு நான் நினைச்சு கூட பார்க்கலை... எப்பவும் இந்த நேரம் நல்லா குறட்டை விட்டு தூங்கிட்டு இருப்பாள்... ஆனா இப்போ புருசனுக்காக முழிச்சிட்டு இருக்காள்ன்னா அதிசயம் தான்... நிஷா கூட சொன்னாள் அம்மு நல்லா வீட்டு வேலை எல்லாம் செய்றாள்ன்னு..." மகளை நினைத்து பெருமைப்பட்டு கொண்டாள் அபி...

"அவள் யார் பொண்ணு... என் பொண்ணு இல்லை..." மீசையை முறுக்கி விட்டு கொண்ட அக்ஷயை பார்த்து,

"உங்க பொண்ணா... நான் இல்லாம உங்க பொண்ணு எங்கே இருந்து வந்தாள்... வானத்தில் இருந்தா..."

"எல்லாம் உன்னோட வளர்ப்பு தான் பேபி..." என்றவனின் கைகள் மனைவியை அன்பாய் அணைத்து கொண்டது... அபியும் மகிழ்ச்சியோடு அவனின் தோள் சாய்ந்தாள்...

"ஏய் அம்மு எங்கே ஓடுற...?" மதுவின் பின்னால் வந்தவன் அவளின் சடையை பிடித்து இழுத்து அவளது ஓட்டத்தை தடுத்து நிறுத்தினான்...

எதிர்பாராமல் அவன் சடையை பிடித்து இழுத்ததில் அவள் தடுமாறி அவன் மீதே சாய்ந்தாள்... அவனது கைகள் ஆசையுடன் அவளை அணைத்து கொண்டது...

"எங்கேடி யாரையும் காணோம்...?"

"எல்லாரும் தூங்க போயிட்டாங்க..." அவனது அணைப்பில் அவள் கரைந்து கொண்டு இருந்தாள்...

"ரொம்ப நல்லதாய் போச்சு..." பின்பக்கமாய் அவளை அணைத்து இருந்தவன் அவளின் கழுத்தை நோக்கி குனிந்தவன் நாசியில் அவள் சூடியிருந்த மல்லிகை மணம் ஏற இழுத்து சுவாசித்தவன் கண்மூடி கிறங்கி நின்றான்...

"மித்து... சாப்பிட வா..." அவள் இன்ப அவஸ்தையுடன் நெளிந்தபடி கூற...

"சாப்பிடத் தான் வேணும்... ஆனா நீ தான் அதுக்கு தடா போட்டு இருக்கியே..." அவனது வார்த்தையின் அர்த்தம் புரியாமல் குழம்பியவள் பின் புரிந்தவளாய்,

"உன்னை..." அவனின் தோளில் அடித்தபடி, "போய் குளிச்சிட்டு வா... உனக்காக நானும் சாப்பிடாம வெய்ட் பண்ணிட்டு இருக்கேன்... பசிக்குதுடா..." வயிற்றை தொட்டு காண்பித்து பாவமாய் அவள் சொல்ல அதை கண்டு அவனுக்கு கோபம் வந்தது...

"அறிவில்லை உனக்கு... இவ்வளவு நேரம் சாப்பிடாம என்ன பண்ணிட்டு இருந்த...? எனக்காக காத்து இருக்க வேண்டாம்ன்னு உனக்கு எத்தனை தடவை சொல்றது...?"

"இந்த நேரம் மட்டும் தான்டா உன் கூட ப்ரீயா பேசிட்டு சாப்பிட முடியுது... அதான் அதை மிஸ் பண்ண வேண்டாமேன்னு தான்..." அவள் இழுக்க...

அதில் அவனது முகம் மலர்ந்தது... அந்த கணத்தில் அவள் மீதான அவனது காதல் அதிகரித்தது...

"உன்னோட வார்த்தையில், செயலில் என்னை மயக்கறடி..." அவளது கன்னம் பற்றி மென்மையாய் முத்தமிட்டவன் தங்களது அறைக்கு செல்ல அவள் புன்னகை முகமாய் உணவு மேசையை நோக்கி நடந்தாள்...

ஐந்து நிமிடத்தில் குளித்து முடித்து வந்தவன் அவளையும் அமர செய்து அவளுக்கு உணவு ஊட்டி விட்டு அவள்

சொல்லும் கதைகளை கேட்டபடி தானும் உண்டு முடித்து எல்லாவற்றையும் ஒழுங்கு செய்துவிட்டு வரவேற்பறைக்கு வரும் போது மேலும் அரை மணி நேரம் தாண்டி இருந்தது...

"கொஞ்சம் நேரம் டிவி பார்த்துட்டு போகலாம்... சாப்பிட்டதும் படுக்க கூடாது..." என்றவன் தொலைக்காட்சியை உயிர்ப்பிக்க...

"தூக்கம் வருது மித்து..." என்று அவள் சிணுங்கினாலும் அவன் சொல்லுக்கு கட்டுப்பட்டு அங்கே அமர்ந்தாள்...

ஒரு மணி நேரமாய் அவன் செய்தியில் மூழ்கிவிட பொறுத்து பார்த்த மதுவோ தூக்கம் கண்களை சுழற்ற சோபாவில் அமர்ந்த நிலையில் உறங்கிவிட்டாள்...

தொலைக்காட்சியை அணைத்த பின் தான் அவள் உறங்கியதை அவன் கவனித்தான்...

"ம்ஹூம்... உன்னை திருத்த முடியாதுடி..." என்று புலம்பியவன் அவள் தூக்கம் கலைந்து விடாதபடி அவளை தன் கையில் அள்ளி கொண்டு தங்களது அறையை நோக்கி நடந்தான்...

அவளை படுக்கையில் படுக்க வைத்து தானும் உடன் படுத்தவன் தேவதையென உறங்கும் அவளை பார்த்து கொண்டு இருந்தான்...

அவனுக்காக அவனின் காதலுக்காக தன்னையே மாற்றி கொண்டு அவனது மனைவியாய் அவனது வீட்டில் புன்னகை முகத்துடன் வளைய வரும் அவளின் அன்பு அவனை திக்குமுக்காட செய்தது...

மகளுக்காக அக்ஷய் எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க முன் வந்த போதும் கணவனுக்கு பிடிக்காது என்பதாலோ என்னமோ மது அது அனைத்தையும் வேண்டாம் என்று மறுத்து விட்டாள்...

காலம் முழுவதும் அவனின் மனைவியாய் வாழ்வது ஒன்றே போதும் என்று காதலோடு அவள் சொன்ன போது அந்த

காதலில் அவன் கரைந்து தான் போனான்...

"ஐ லவ் யூ அம்மு..." மென்மையாய் அவளது நெற்றியில் முத்தமிட்டவன் அவளை அணைத்து கொண்டு படுக்க உறக்கம் அவனை சுகமாய் தழுவி கொண்டது...

"மது..." ஜானின் குரல் உரத்து ஒலித்து அவளை அழைத்தது...

"இதோ வந்துட்டேன் ஜான்..." அறையில் இருந்து வெளியில் வந்தவள் மேலிருந்தபடியே கீழ் நோக்கி கத்தினாள்...

மீண்டும் அறைக்குள் வந்தவள் அவசரமாய் தலையை வாரி பின்னல் போட நேரம் இல்லாமல் அதை அப்படியே ஹேர் பாண்டில் போட்டு அடக்கியவள் தனது கைப்பையை எடுத்து கொண்டு கிளம்பினாள்...

வேகமாய் கீழிறங்கி வந்தவளை உணவு மேசையில் அமர்ந்து இருந்த மித்ரேஷ் அழைத்தான்...

"அம்மு சாப்பிட்டுட்டு போ..."

"நேரமில்லை மித்து... லேட்டானா ஜான் கத்துவான்..." காலில் சக்கரம் கட்டி கொண்டு பறந்தவளை நிறுத்தி இரு நிமிடத்தில் உணவை ஊட்டி முடித்தவன் தானும் கிளம்பினான்...

அவன் வெளியில் வரும் போது மது ஆளை காணவில்லை...

'சொல்லிட்டு போகணும்ங்கிற நினைப்பு கூட இல்லை... இவளை என்ன செய்றது...?' என்று மனதுக்குள் நினைத்தவனுக்கு ஏனோ எரிச்சலாக இருந்தது... அது அவள் சொல்லாமல் சென்றதாலோ என்னமோ...

அந்நேரம் பக்கவாட்டில் இருந்து ஒரு கை அவனை பிடித்து இழுத்தது... அவன் சுதாரிப்பதற்குள் அந்த கை அவனை மல்லிகை பந்தல் அடியில் இழுத்து கொண்டு ஓடியது... அது மது என்று தெரிந்ததும் அவனுக்கு சந்தோசமாய் இருந்தது...

"ஹேய் அம்மு... என்ன பண்றடி...?" என்று கேட்டாலும் அவன் மனைவியின் இழுத்த இழுப்பிற்கு செல்ல தவறவில்லை...

அன்று அவன் செய்தது போல் அவனை சுவற்றோடு சுவராய் சாய்ந்து நிற்க வைத்தவள் அவன் மீது சாய்ந்து கொண்டு,

"என்ன கோபமா...?"

"இல்லையே..." அவசரமாய் மறுத்தவனை கண்டு,

"பொய் சொல்லாதே மித்து... உன் கிட்ட சொல்லிட்டு போகலைன்னு உனக்கு கோபம்..."

"தெரியுதுல... அப்புறம் எதுக்கு சொல்லாம போன..." விரலால் அவள் முகத்தில் கோலம் இட்டவனின் செயலில் கிறங்கி நின்றவள்,

"அவசரத்தில் மறந்துட்டேன்..." என்றவள் அவனது கன்னம் பற்றி முத்தமிட்டு,

"இப்போ கோபம் போயிருச்சா...?"

"ம்ஹூம் போகலை..." என்றவன் அடுத்த நொடி அவளது இதழை சிறை செய்தான்...

ஐந்து நிமிடம் கழித்தும் அவளை விடாமல் இருந்தவனின் நெஞ்சில் கை வைத்து தள்ளியவள்,

"ஜான் கிட்ட ஐஞ்சு நிமிசம் தான் கேட்டுட்டு வந்தேன்... லேட்டா போனா அவன் என்னை ஓட்டியே கொன்னுருவான்..." என்றவள்,

"பை மித்து..." என்றபடி விடை பெற...

"முதல்ல அவனுக்கு ஒரு கல்யாணத்தை பண்ணணும்... அப்போ தான் அவனுக்கு மனுசனோட அவஸ்தை புரியும்..." முனங்கி கொண்டே அவளோடு நடந்து வெளிவாசல் வந்தவன் அவளை காரில் ஏற்றி விட்டு கையசைத்தவன் பின் ஏதோ தோன்ற,

"பார்த்து பத்திரம் அம்மு... எங்கே போனாலும் சொல்லிட்டு போ..." ஏனோ இன்று ஒரு மாதிரி உணர்வு அவனின் மனதை அலைக்கழித்தது...

"அண்ணா... இது ரொம்ப எல்லாம் ரொம்ப ஓவர்... மது என்ன சின்ன குழந்தையாக காணாம போறதுக்கு..." ஜான் கிண்டல் அடிக்க...

"டேய் வாயை மூடிட்டு வண்டியை கிளப்புற வழியை பாருடா..." அவனது தலையில் தட்டினான் மித்ரேஷ்...

ஜான் சிரித்தபடி காரை எடுக்க மித்ரேஷ் தன் மனையாளை பார்த்து கொண்டு இருக்க அவளும் அவன் உருவம் கண்ணில் இருந்து மறையும் வரை பார்த்து கொண்டே சென்றாள்...

ஏனோ இருவருக்குள்ளும் இனம் புரியாத தவிப்பு... அது ஏனென்று இருவருக்கும் தெரியவில்லை...

மித்ரேஷ் செம்மரக் கட்டைகள் கடத்தலில் வரதராஜனின் பின்னணியை பற்றி விசாரிக்கும் போது அவனின் மற்ற கடத்தல் தொழில்களும் சேர்ந்து அம்பலத்துக்கு வந்தது...

அவனை கைது செய்வதற்கான ஆவணங்களை மித்ரேஷ் தயார் செய்யும் போதே வரதராஜன் சுதாரித்து கொண்டவன் மித்ரேஷ்க்கு செக் வைக்க நினைத்து மதுவையும், மிருதுளாவையும் கடத்தி விட்டான்... உடன் இருந்த ஜானை அடித்து போட்டு விட்டு ஓடி விட்டனர் அவனது ஆட்கள்...

"அண்ணா... நான் எவ்வளவோ போராடினேன்... ஆனா என்னால மதுவையும், மிருதுவையும்..." மேலே பேச முடியாமல் ஜானின் கண்ணில் கண்ணீர் தேங்கியது...

"நான் பார்த்துக்கிறேன் ஜான்..." என்ற மித்ரேஷின் கண்கள் ஆத்திரத்தில் சிவந்தது...

மிருதுளாவையும், மதுவையும் காணோம் என்றதும் ஆதி மிகவும் கலங்கி போய்விட்டான்... ஒரு பக்கம் தங்கை

என்றால், மறுபக்கம் மனைவி... இருவருக்கும் ஒன்றும் ஆகியிருக்க கூடாது என்று அவனது மனம் பிரார்த்தித்தது... அதே சமயம் ஆத்திரம் அவனை ஆண்மகனாய் துடித்து எழ வைத்தது...

"ஈஷ்வர்... நீ உன் போலீஸ் பவரை யூஸ் பண்ணி தேடு... நான் என் பவர் என்னன்னு அவனுக்கு காட்டுகிறேன்..." என்று கூறியவன் அலைப்பேசியை கையில் எடுத்தான்...

"சார்... இன்னமும் என்ன பார்த்துக்கிட்டு இருக்கீங்க...? நாமளும் ஏதாவது பண்ணுவோம்..." விக்டர் அக்ஷயை அழைக்க...

"வேண்டாம் விக்டர்... இது நம்ம பசங்களுக்கான நேரம்... நாம ஒதுங்கி நின்னு வேடிக்கை பார்க்கலாம்... அவங்களை பார்த்தா உன்னையும், என்னையும் பார்க்கிற மாதிரியில்ல..." அமைதியாய் அக்ஷய் சொன்னதும் விக்டர் மித்ரேஷ், ஆதியை பார்த்தான்...

ரௌத்திரமாய் நின்று இருந்த இருவரையும் கண்டு அவனது முகத்தில் புன்னகை வந்தது...

மித்ரேஷ் காவல்துறை அதிகாரியாய் திட்டமிட்டான் என்றால், ஆதி பக்கா தொழிலதிபனாய் திட்டம் தீட்டினான்...

மது, மிருதுளா அலைப்பேசி சிம் கார்டை வைத்து கூட அவர்கள் இருக்கும் இடத்தை கண்டுபிடிக்க முடியவில்லை... புத்திசாலித்தனமாக அதை உடைத்து போட்டு இருந்தனர்... ஆனால் அதை கைப்பற்றி உடைத்து போட்டது இருவரையும் கடத்திய பின்பு அரைமணி நேரம் சென்று... அதனால் அவர்கள் சென்ற பாதையை ஓரளவுக்கு மித்ரேஷால் கணிக்க முடிந்த போதும் அவர்கள் எங்கே கடத்தி வைக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதை குறிப்பிட்டு அறிய முடியாமல் திணறினான்...

ஆதித்யாவோ தன்னிடம் இருந்த கையாள்கள் மூலம் வரதராஜனின் அடியாட்களை அடையாளம் கண்டு கொண்டு அவர்கள் மூலம் வரதராஜனின் இருப்பிடத்தை

அறிய முற்பட்டான்... அதில் எல்லாம் அவன் தந்தையை போன்று எதற்கும் அஞ்சாதவன் தான்... இல்லை என்றால் தந்தை கட்டி காத்து வந்த தொழிலை திறம்பட நடத்த முடியுமா...

என்ன ஒன்று அனுபவம் இல்லாத காதலில் மட்டுமே கொஞ்சம் சறுக்கி விட்டான்...

வரதராஜனின் இருப்பிடம் தெரியும் வரை ஆதியால் ஒன்றும் செய்ய முடியாது... அவனின் இருப்பிடத்தில் தான் மதுவும், மிருதுவும் கடத்தி வைக்கப்பட்டு இருப்பார்கள் என்று அவன் நம்பினான்...

கண்களை மூடி இருக்கையில் சாய்ந்தவன் மனக்கண்ணில் புன்னகையுடன் மிருதுளாவின் முகமே தோன்றியது...

காதலாய் தன்னை நோக்கும் அவளது விழிகள் அவனை மிகவும் இம்சித்தது... முதன்முறையாய் அவளது நேசம் அவனது இதயத்தை தீண்டி சென்றது... காதலிக்கப்படுவதும் சுகம் தான் அந்த காதலை உணரும் போது... இவ்வளவு நாள் அவளது காதலை அவன் புரிந்து கொண்டாலும் அதை ஒரு நாளும் அவன் உணர்ந்தது இல்லை... இன்று தான் முதன்முறையாக தன்னுள் சிலிர்ப்பாய் ஒரு உணர்வு ஓடி அவனை கொல்லாமல் கொல்லுவதை உணர்ந்தான்...

அது என்ன என்று அலசி ஆராய்ந்தவனுக்கு பெருத்த ஆச்சிரியம்... ஆம் இரண்டாம் முறையாக காதல் வந்தால் ஆச்சிரியப்படாமல் என்ன செய்வது... சிறிது நேரம் அவனுக்கு ஒன்றுமே ஓடவில்லை... அப்போ முதன் முறையாய் பிருந்தாவை பார்த்து நேசித்தது...?

கொஞ்ச நேரம் குழப்பமாய் இருந்தது அவனுக்கு... அதே சமயம் இப்போது பிருந்தாவை பார்க்கும் போது உடன் பணி புரியும் சக மனுசியாய் பார்க்க முடிந்ததே தவிர அவனால் வேறு மாதிரி நினைக்க முடியவில்லை... எப்படி நிகழ்ந்தது இந்த மாற்றம்...? தனக்கு தானே கேள்வி கேட்டு கொண்டான்... அதற்கு விடையாக மிருதுளாவின் காதலே

பதிலாக வர மகிழ்ச்சியில் ஸ்தம்பித்து போய் அமர்ந்து விட்டான்...

சந்தோசமும் அதையும் தாண்டிய ஒரு உணர்வை ஆதி அனுபவித்து கொண்டு இருந்தான்... இழந்து போனதாய் நினைத்த காதல் கைக்கெட்டும் தூரத்தில் இருந்தும் அதை கண்டு கொள்ளாமல் விட்ட தனது மடத்தனத்தை இப்போது எண்ணி உள்ளம் குமைந்தான்...

'பட்டு... நான் உன்னை காதலிக்கிறேனா...?' தனக்கு தானே கேட்டு கொண்டவன்,

'ஐ லவ் யூ டி பட்டு...' என்ற வார்த்தையை அவன் மனதுக்குள் சொல்லும் போது இதை மிருதுளாவின் முன் தான் சொன்னால் அவளது பூ முகம் எப்படி மலரும் என்று கற்பனை செய்து பார்த்தவனுக்கு அந்த நினைவே தித்திப்பாய் இருந்தது...

ஆதி நினைத்தது போல் தகவல் உடனே கிடைத்தது... ஆவேசமாய் கிளம்பியவன் உடனே மித்ரேஷை அழைத்து விசயத்தை சொன்னான்...

"நான் அந்த பகுதியில் தான் தேடிட்டு இருக்கேன் ஆதி... சீக்கிரம் அங்கே போறேன்..." மித்ரேஷ் ஆதி சொன்ன இடத்தை தேடி சென்றான்...

மது, மிருது இருவரையும் வாயையும் டேப்பினால் ஒட்டி கை கால்களை கயிற்றால் கட்டி போட்டு இருந்தனர்...

அந்த நவீனமான அறைக்குள் இருவரையும் தவிர வேறு யாரும் இல்லை...

மது திடுமென கீழே படுத்தவள் மெதுவே ஊர்ந்து மிருதுளா அருகில் வந்து கண்களால் வாயை ஒட்டி இருக்கும் டேப்பை கழற்ற சொல்ல மிருதுளா புரியாமல் விழித்தாள்...

நான்கு முறை முயன்று ஐந்தாம் முறை மிருதுளாவிற்கு புரிய மெல்ல தன் கை கொண்டு அவளது வாய் கட்டை

அவிழ்த்தாள்... அதே போல் மதுவும் மிருதுளாவின் வாய் மீது ஒட்டிய டேப்பை கழட்டி விட்டாள்...

"மது... எனக்கு என்னமோ ரொம்ப பயமா இருக்கு...?" மெல்லிய குரலில் அழுகையுடன் மிருதுளா கூற...

"சில்க்கி பயப்படாதே... இப்போ உன் புருசனும், என் புருசனும் சும்மாவா இருப்பாங்க... இந்நேரம் ஆக்சன்ல இறங்கி இருப்பாங்க..." தைரியமாய் கூறிய மதுவை ஆச்சிரியத்துடன் பார்த்தாள்...

"என்ன அப்படி பார்க்கற... என் அண்ணன் மேலேயும், உன் அண்ணன் மேலேயும் நம்பிக்கை வைம்மா..."

"ஆதி... எப்படி...?" மென்மையான ஆதியை அந்த மாதிரி உருவகப்படுத்தி பார்க்க அவளால் முடியவில்லை...

"என்ன சில்க்கி... இப்படி சொல்லிட்ட... அதுவும் யாரை பார்த்து இப்படி சொன்ன...? என் அண்ணன் பார்க்க தான் சாது... ஆனா சாது மிரண்டால் காடு கொள்ளாது... அதே மாதிரி நம்மளை கடத்தியவனும் செத்தான்..." மது சொல்லும் போதே அறைக் கதவு திறந்தது...

வரதராஜன் தான் ஈயென்ற இளிப்புடன் உள்ளே நுழைந்தான்... கூடவே இரண்டு கைத்தடி வேறு...

"என்னடா இது...? நான் போலீஸ்க்காரன் பொண்சாதியை தானே தூக்கிட்டு வர சொன்னேன்... இது யாரு...?"

வரதராஜனை மது, மிருதுளாவிற்கு அடையாளம் தெரிந்தது... ஆனால் அவனுக்கு இருவரையுமே அடையாளம் தெரியவில்லை...

மிருதுளா பயத்துடன் அமர்ந்து இருக்க மது தைரியமாய் அவனை பார்த்தாள்...

"ரெண்டு பேரும் ஒண்ணா இருந்ததால சேர்த்து கடத்திட்டோம்..."

"சரி இலவச இணைப்பா இருந்துட்டே போகட்டும்..." என்று சிரித்த வரதராஜன் இருவரையும் வெளியில் போக சொல்லிவிட்டு இரு பெண்களிடம் திரும்பி,

"இதில் போலீஸ்க்காரன் பொண்சாதி யாரு...?"

"நான் தான்..." மது தைரியமாக குரல் கொடுத்தாள்...

"அப்போ நீ தான் எனக்கு வேணும்..." என்றவன்,

"என்ன உன் புருசன் என் மானத்தை வாங்காம விட மாட்டேன்னு கங்கணம் கட்டிக்கிட்டு அலையறானாமே... இப்போ அவன் பொண்டாட்டி மானம் போக போகுது... எப்படி வந்து காப்பாத்த போறான்னு பார்க்கிறேன்... என் குடும்பத்தை சிதைச்ச அவன் மனைவியை நான் சிதைக்காம விட்டா என் பொண்டாட்டி, மகளுங்க ஆன்மா என்னை மன்னிக்காது..." என்றவன் மதுவை நோக்கி குனிய அவளோ திமிறினாள்...

"அடடடா... இப்படி கையை காலை கட்டி வச்சா நான் எப்படி உன்னை அனுபவிக்கிறது...?" என்றவன் அவளது கைக் கட்டை அவிழ்த்தபடி,

"மடப்பசங்க... எத்தனை தடவை கயித்தை சுத்தி வச்சிருக்கானுங்க..." என்றவன் மதுவின் கை கால் கட்டை அவிழ்த்து விட...

அடுத்த நொடி வில்லில் இருந்த புறப்பட்ட அம்பு போல் துள்ளி கொண்டு எழுந்த மது வரதராஜன் எதிர்பார்க்காத நேரத்தில் அவனது படறியில் ஓங்கி கராத்தே அடி விட்டவள் தனது கால்முட்டியை மடக்கி அவனது உயிர்நாடியை தாக்கியவள் நொடி நேரம் கூட தாமதிக்காமல் அவனின் கை, கால்களை தன்னை கட்டி வைத்திருந்த கயிற்றால் கட்டி முடித்தவள் அவன் கத்தாமல் இருப்பதற்காக தன் தோளில் தொங்கிய துப்பட்டாவை எடுத்து அவனது வாயில் வைத்து திணித்தாள்...

மின்னல் வேகத்தில் அனைத்தையும் செய்து முடித்து இருந்தாள் அவள்...

பின் வேகமாய் மிருதுளாவின் கட்டுக்களை அவிழ்த்து விட்டவள், "வா சில்க்கி போகலாம்... இன்னும் இங்கே இருந்தா ஆபத்து தான்..." என்று அவசரப்பட...

"மது... உண்மையில் நீ தைரியசாலி தான்..." மிருதுளா மதுவை மெச்சி கொண்டே எழுந்தாள்...

"எல்லாம் அபி மேடத்தோட உத்தரவு... கராத்தே படிச்சே ஆகணும்ன்னு... அப்போ எரிச்சலா வரும்... ஆனா இப்போ யூஸ் ஆகுது..."

கிளம்பும் வேளையில் மீண்டும் வரதராஜன் அருகில் வந்தவள், "அவ்வளவு அவமானப்பட்டும் இன்னும் உனக்கு பொண்ணு கேட்குதா... உன்னை..." என்றவள் மீண்டும் அவனது உயிர்நாடியை தனது குதிகால் செருப்பால் தாக்கியவள்,

"இந்த ஜென்மம் இல்லை எந்த ஜென்மத்திலும் எந்த பொண்ணையும் நீ நினைச்சு கூட பார்க்க கூடாது மவனே... இனி நீ யாரையும் பார்ப்ப..." என்று சகட்டுமேனிக்கு அவனை தாக்கியவளை மிருதுளா தான் தடுத்தாள்...

வலியில் வாய் விட்டு கூட அழ முடியாமல் கண்ணீரில் வலியை கரைத்து கொண்டு இருந்தான் வரதராஜன்...

'பொண்ணுன்னு நினைச்சா சரியான பஜாரியா இருக்காளே... பாவம் அந்த ஏசிபி தம்பி...' மித்ரேஷை நினைத்து பாவப்பட்டான் அவன்...

கடத்தல் தொழிலில் கொடி கட்டி பறந்தவன் பெண் கடத்தலில் கோட்டை விட்டிருந்தான்...

பெண் மோகம் மாபெரும் சாம்ராஜ்யத்தையே அழித்துவிடும் என்ற கதையை அறியாத மூடனாய் பெண் மேல் கை வைத்துவிட்டான்...

அந்நேரம் கதவு திறக்கும் சத்தம் கேட்க மது மிருதுளாவை அழைத்து கொண்டு கதவின் பக்கவாட்டில் பதுங்கி தன் கையை தயாராக வைத்து இருந்தாள் தாக்குவதற்காக...

கதவை திறந்து கொண்டு உள்ளே வந்தவனை தாக்க அவள் தயாரான போது தான் அவனை கவனித்தாள்... அது மித்ரேஷ் என்று...

கையில் துப்பாக்கியுடன் அவனும் மனைவி நின்று இருந்த போஸில் திகைத்து போய் நின்றவன் பின் வாய்விட்டு சிரித்துவிட்டான்...

"ஏண்டா... உன் வொய்ப் தைரியத்தை பார்த்து பாராட்டாம கிண்டலா சிரிக்கவா செய்ற..." மது அவனை மொத்த துவங்க அவனோ சிரித்தபடி அதை வாங்கி கொண்டவன் ஒரு கட்டத்தில் தாங்க முடியாமல் அவளை அணைத்து கொண்டு சமாதானப்படுத்தினான்...

'நாம நினைச்சது சரி தான்... புருசனையே இந்த பாடு படுத்தறாளே... அப்போ நம்ம எல்லாம் அவளுக்கு எம்மாத்திரம்... இத்தோடு விட்டாளேன்னு சந்தோசப்பட்டுக்கோ...' வரதராஜன் மனதுக்குள் நினைத்தபடி தரையில் சுருண்டு கிடந்தான்...

மித்ரேஷ் பின்னால் வந்த ஆதியின் கண்கள் மிருதுளாவை வேகமாய் தேடி அவளை தலை முதல் கால் வரை அவசரமாய் அலசி ஆராய்ந்தது... அவள் நலமாய் இருப்பதை அறிந்த பின்பே அவனுக்கு நிம்மதி வந்தது...

மிருதுளா கணவனை கண்டாலும் மது மித்ரேஷை உரிமையாய் அணைத்தது போல் அவளால் ஆதியிடம் சரண் புக முடியவில்லை...

ஆனால் இவ்வளவு நேரம் அவனை மீண்டும் காணாமல் மாண்டு விடுவோமோ என்று தவித்தவள் அவனை கண் இமைக்காமல் பார்த்து அவனது உருவத்தை இதயத்தில் சேமித்து வைத்து கொண்டாள்...

ஆதி அவள் அருகே விரைந்து வந்தவன் அடுத்த நொடி அவளின் அனுமதி இன்றி அவளை ஆவேசமாய் அணைத்து கொண்டான்...

"பட்டு... உன்னை மறுபடியும் பார்ப்பேனோன்னு ரொம்ப தவிச்சு போயிட்டேன்டி... உன்னை ரொம்ப மிஸ் பண்ணினேன் பட்டு..." அவனது வார்த்தை கேட்டு ஆனந்த அதிர்ச்சி அடைந்தவள் அவனை ஏறிட்டு பார்த்தாள்...

"நம்ப முடியலையா பட்டு..." என்று ஆதங்கத்துடன் கேட்டவனின் தோற்றத்தை அப்போது தான் கவனித்து பார்த்தாள்...

கண்கள் கலங்கி சிவந்து இருக்க எதையோ பறி கொடுத்தார் போன்று இருந்த அவனது தோற்றம் இப்போது தான் அவளது கருத்தில் பதிந்தது... அவ்வளவு நேரம் அவனை கண்ட ஆவலில் அவனின் உருவத்தை பார்த்தாலும் இப்போது தான் செயலிழந்து இருந்த அவளது மூளை வேகமாய் செயல்பட்டது...

ஆதி மிருதுளாவின் முன் நெற்றியில் முத்தமிட்டு, "ஐ லவ் யூ பட்டு..." மூன்று வார்த்தையில் தன் முழு நேசத்தையும் பொத்தி வைத்து அவன் சொல்ல...

ஆனந்தக் கண்ணீர் வடித்தபடி இதழில் புன்னகையுடன் கணவனை பார்த்த மிருதுளாவிற்கு அத்தனை நாள் தடையாய் இருந்த ஏதோ ஒன்று சுக்கு நூறாய் உடைய,

"மாமா..." என்று கதறியபடி அவனை அணைத்து கொண்டாள்... அவனும் மனைவியை இறுக அணைத்து கொண்டான்...

காலம் கடந்து என்றாலும் தனது உண்மையான நேசத்தை அவன் தேடி கண்டு கொண்டான்...

"க்கும்..." மது தொண்டையை கனைத்து தங்களது இருப்பை தெரியப்படுத்த அதில் மிருதுளா வெட்கத்துடன் ஆதியிடம் இருந்து விலக... ஆதியோ அவளை விலக விடாமல் கையணைவில் வைத்து கொண்டவன் தங்கையிடம்,

"நீ வேணும்ன்னா உன் புருசனை கட்டிப் பிடிச்சுக்கோ... அதுக்கு எதுக்கு எங்களை பிரிக்கிற..." அண்ணனின்

கேலியில் மது தான் 'ஆ'வென வாயை பிளந்தாள்...

அடுத்து மித்ரேஷ் காவல்துறை அதிகாரியாய் செயல்பட்டான்...

"ஆதி... நீ இவங்க ரெண்டு பேரையும் கூட்டிட்டு போ... நான் இவனை பார்த்துக்கிறேன்..." என்று சொல்ல...

"நீ என்ன பார்த்துக்கிறது...? நானே அவனுக்கு ட்ரீட்மெண்ட் கொடுத்துட்டேன்..." என்று அலட்சியமாய் இரு கையையும் தூசு தட்டுவது போல் தட்டியபடி சொன்ன மதுவை கண்டு,

"அப்படி என்னடி பண்ணின அவனை...?"

"குடும்ப கட்டுப்பாடு ஆபரேசன் தான்..." என்று கண்சிமிட்டி சொன்னவள், "கதம்... கதம்..." என்று ராகம் பாட...

மித்ரேஷ்க்கு மட்டும் அல்லாது ஆதிக்கும், மிருதுவுக்கும் கூட சிரிப்பு வந்தது...

"மச்சான்... இந்த சினிமாவில் காண்பிக்கிற மாதிரி கடைசி நேரத்தில் வந்து இருக்கிறியே... நான் உன் கிட்ட இன்னும் நிறைய எதிர்பார்த்தேன்..." என்று சொன்ன மதுவை கண்டு மித்ரேஷ்,

"வீட்டுக்கு போடி... நைட் வந்து கவனிச்சிக்கிறேன்..." அவளுக்கு மட்டும் கேட்கும் படி சொன்னவனின் வார்த்தையில் இருந்த அழுத்தத்தில் அவள் புரியாமல் அவனை பார்த்தவள் பின் அலட்சியமாய் தோளை குலுக்கி கொண்டாள்...

அதற்குள் மற்ற காவலர்கள் அங்கு வந்துவிட மித்ரேஷ் தனது பணியில் இறங்க மற்ற மூவரும் வீட்டிற்கு வந்தனர்...

மது மிருதுளா இருவரும் நலத்துடன் திரும்பி வந்ததை உணர்ந்து பெரியவர்கள் நிம்மதி அடைந்தனர்... சிறிது நேரம் பேசி இருந்துவிட்டு மது மித்ரேஷ் வீட்டிற்கு செல்ல, ஆதி மிருதுளாவை அழைத்து கொண்டு தனது அறைக்கு வந்தான்...

வந்ததும் மிருதுளா குளியலறைக்குள் புகுந்து கொள்ள ஆதி அமைதியாய் கட்டிலில் அமர்ந்தான்... அவனது மனம் யோசனையில் ஆழ்ந்து இருந்தது...

பத்து நிமிடம் கழித்து வந்தவளை தொடர்ந்து அவனும் குளித்துவிட்டு வந்தான்...

படுக்கையில் அமர்ந்து இருந்த மிருதுளாவின் பக்கத்தில் அமர்ந்தவன் அவளின் கையை எடுத்து தனது கையில் வைத்து கொண்டான்... அவள் வேண்டாம் என்று சொல்லாமல் அமைதியாய் இருப்பதிலேயே அவளது மனம் அவனுக்கு புரிந்து போனது...

இன்னமும் நெருங்கி அவன் உட்கார, "மாமா ப்ளீஸ்..." என்றாலும் மிருதுளா அவனை விட்டு விலகவில்லை...

"பட்டு..." அவனது அழைப்பில் என்ன என்று பார்த்தவளின் முகத்தை தனது கைகளில் தாங்கி,

"நான் ரொம்ப தப்பு பண்ணிட்டேன் பட்டு... உன்னோட அன்பை உணராம கானல் நீரை நேசம்ன்னு நினைச்சு அதை நோக்கி ஓடின என்னை கண்டா எனக்கே வெறுப்பா இருக்கு... நீ இல்லாத இந்த கொஞ்ச நேரத்தில் உணர்ந்தேன் நீ இல்லாம எனக்கு வாழ்க்கை இல்லைன்னு... நான் சொல்றதை நம்பணும் பட்டு... என்னடா இவ்வளவு நாளா காதல் அது இதுன்னு கதை விட்டவன் இப்ப தடாலடியா இப்படி பேசுறானேன்னு நீ நினைக்க கூடாது... நான் காதல்ன்னு நினைச்சு ஓடினது காதல் இல்லைன்னு உன்னோட காதல் எனக்கு நிரூபிச்சிருச்சு... காதல்ன்னா என்னன்னு நீ எனக்கு புரிய வச்சிட்ட... இப்போ இந்த நிமிசம் என் மனசில் நீ தான், நீ மட்டும் தான் இருக்க பட்டு..." என்றவன்,

"நான் உன்னை மனசார காதலிக்கிறேன் பட்டு..." என்றவனின் கைகள் மீது தனது கைகளை வைத்தவள் கண்களில் கண்ணீருடன் ஆமோதிப்பாய் தலையசைத்தாள்...

"தேங்க்ஸ் பட்டு..." தனது காதலை ஏற்று கொண்ட மனையாளை அவன் இறுக அணைத்து கொள்ள அவளும் அவனது அணைப்பில் பாந்தமாய் அடங்கினாள்...

மெல்ல மெல்ல அவனது கணவன் என்கிற உணர்வுகள் விழித்து கொள்ள அவன் தாபத்தோடு அவளுள் புதைந்தவன்,

"உனக்கு சம்மதமா பட்டு...?" என்று கேட்ட கணவனின் கைகளில் சம்மதாய் சரணடைந்தாள்...

கணவனது நேசம் தனக்கு மட்டுமே வேண்டும் என்று எண்ணிய பேதைக்கு அவனது நேசம் அவளுக்கு மட்டும் தான் என்று அவன் உணர்த்திய பிறகு அவளுக்கு வேறு என்ன வேண்டும்...

காதல் என்றால் என்ன என்பதை ஆதி தனது காதல் மனையாளிடம் கற்று கொண்டு இருந்தான் காதல் கணவனாய்...

மித்ரேஷ் அன்று வீட்டிற்கு வர மிகவும் தாமதமானது... என்றும் அவனுக்காய் காத்திருக்கும் மது இன்று சோபாவில் அமர்ந்த நிலையில் அப்படியே உறங்கிவிட்டாள்...

கதவை திறந்து கொண்டு உள்ளே வந்தவன் நேரே அறைக்கு சென்று குளித்துவிட்டு சில வேலைகளை அங்கு செய்துவிட்டு வந்து தனது மனையாளை கையில் ஏந்தி கொண்டு மீண்டும் அறையை நோக்கி சென்றான்...

அவன் அவளை படுக்கையில் கிடத்தும் வரை அவள் துயில் கலையவில்லை... இதற்கு மேலும் தாமதிக்க முடியாது என்று எண்ணியவன்,

"அம்மு..." என்று அழைத்தவனின் உதடு அவளது முகத்தில் ஊர்வலம் போக...

தூக்கக் கலக்கத்திலும் தன்னவனை கண்டு கொண்டவளாய், "மித்து..." என்றபடி அவனை அணைத்து

கொள்ள அதில் மனம் மயங்கியவன் அவளின் இதழை தாபத்துடன் சிறைப்பிடித்தான்...

அதில் உறக்கம் கலைந்தவள், "மித்து... இப்போ இது வேண்டாம்..." என்று சிணுங்க...

"ம்ஹூம்... முடியாதுடி... எனக்கு இப்பவே நீ வேணும்... நீ காணாம நான் பட்ட அவஸ்தை எனக்கு தான் தெரியும்... இனியும் உன்னை விட்டு விலகி இருக்க என்னால் முடியாது... உனக்கு ஏதாவது ஒண்ணுன்னா உன் கூட வாழ்ந்த திருப்தியில் நான் என் உயிரை விட்டிருவேன்..."

"ஓ... இல்லைன்னா விட மாட்டீங்களாக்கும்... போலீஸ்க்காரன் மாதிரி வீரமா பேசு மச்சான்... இது என்ன கோழை மாதிரி..." அவள் கிண்டல் அடிக்க...

அவனிடம் இருந்து பதில் இல்லை என்றதும் அவனது முகத்தை நிமிர்த்தி பார்த்தவள் அவனது கலங்கிய கண்களை கண்டு பதறியபடி,

"மித்து..." என்று அவனை வாரி அணைத்து கொண்டாள்...

"சாரிடா... உன்னை புரிஞ்சிக்காம பேசிட்டேன்..." என்றவள் அவன் முகம் முழுவதும் ஆவேசமாய் முத்தமிட்டு தனது அன்பை அவனுக்கு வெளிப்படுத்தினாள்...

அடுத்த நொடி அவளது செயலை அவன் தனதாக்கிக் கொண்டான்... நேரம் செல்ல செல்ல அவனது செயலில் முரட்டுத்தனம் கூடி கொண்டே போக,

"மித்து... மெதுவாடா..." என்று மது கெஞ்சிய போதும் அவன் அவளை விடவில்லை...

"எத்தனை வருச காதல், எத்தனை வருச ஆசை இது தெரியுமா அம்மு...? எனக்கு நீ வேணும்டி..." பைத்தியக்காரன் போல் திரும்ப திரும்ப சொல்லியபடி அவளுள் புதைந்தவனின் காதலை கண்டு பேச்சற்று போனவளின் கண்களில் கண்ணீர் துளிர்த்தது...

கரடுமுரடான வாழ்க்கை பாதையில் பயணித்த முரடன் அவன்... ஆனாலும் தன் காதலில் கட்டுண்டு தனக்காக அவனை மாற்றி கொண்ட அவனது காதல் அவளது இதயத்தை நெகிழ செய்தது...

"மித்து... ஐ லவ் யூ டா..." என்றவள் அவனின் முத்தத்திலும், அணைப்பிலும் கொஞ்சம் கொஞ்சமாய் தன்னை இழக்க துவங்கினாள்...

இனிமையான இல்லறம் அழகாய் மலர்ந்தது அங்கே...

கூடல் முடிந்த பின்பே பெண்ணரசி அந்த வித்தியாசத்தை உணர்ந்தாள்... படுக்கை முழுவதும் இளஞ்சிவப்பு ரோஜா பூக்கள் பரப்பப்பட்டு இருந்தது...

"ஐய்யோ... சூப்பர் மித்து..." என்று அவனை அவள் கட்டி கொள்ள...

அவன் பக்கவாட்டு மேசையில் இருந்து இளஞ்சிவப்பு பூங்கொத்தை அவள் கையில் கொடுத்தவன்,

"ஒரு ரோஜாவை கசக்கி எறிஞ்சதுக்கு அழுதேன்னு சொன்னே இல்ல... இது உனக்கு மட்டும் தான்..." என்றவன் அதை அவள் கையில் கொடுக்க ஆசையுடன் அதை வாங்கியவள் கைகள் நடுங்க அதை வருடி கொடுத்தாள்...

"தேங்க்ஸ் மித்து..." அவனது கன்னத்தில் முத்தமிட்டு தனது மகிழ்ச்சியையும், நெகிழ்ச்சியையும் அவனுக்கு தெரிவிக்க...

"எனக்கு தேங்க்ஸ் எல்லாம் வேண்டாம்... நீ தான் வேண்டும்..." என்று அவன் அவளை தனது கரங்களால் சிறைப்பிடித்தான்...

அவன் கொடுத்த பூவை நுகர்ந்தபடி, "மித்து... அவன் என்னவானான்...?"

"என்ன ஆனானா...? நீ அடிச்சதுக்கு அப்புறம் அவன் பொழைப்பானா என்ன...?" என்றவன் தன்னையும் மீறி வாய் விட்டு சிரித்து விட்டான்...

"நாங்க ட்ரீட்மெண்ட் கொடுக்க வேண்டிய அவசியமே இல்லாம நீயே அவனுக்கு சூப்பர் ட்ரீட்மெண்ட் கொடுத்திட்ட அம்மு... இப்போ அவன் ஹாஸ்பிட்டல்ல இருக்கான்..."

"மித்து... அவனை சும்மா விடாதே... ஊரில் உள்ள எல்லா கேசையும் அவன் மேல் போட்டு உள்ளே தள்ளு... எவ்வளவு கொழுப்பு இருந்தா என் மேல் கையை வைப்பான்..." என்று கோபத்தில் பற்களை நறநறவென்று கடித்தாள் அவனது மனைவி...

"டோன்ட் வொர்ரி அம்மு... அவன் வெளியில் வராதபடி நான் பார்த்துக்கிறேன்... இப்போ நீ என்னை கவனிடி..." என்றவனை இறுக அணைத்து கொண்ட மது,

"கவனிக்க தானே செய்யணும் நல்லா கவனிக்கிறேன்..." அவளது வாய் தான் அப்படி மிரட்டியதே தவிர அவளது கைகள் அவனுக்கு அழைப்பை விடுவித்தது...

"எனக்கு தெரியும் என் அம்முக்குட்டி என்னை ரொம்ப நல்லா கவனிப்பாள்ன்னு..." என்றவன் அவளின் அழைப்பை ஏற்று கொண்டு அவளது முகம் நோக்கி குனிந்தான்...

அன்று முள்ளாய் அவளது மனதை குத்தி கிழித்தவன் இன்று தனது காதலால் அவளது மனதை இதமாக வருடி சுகமாய் மணம் பரப்பி அவள் மனம் முழுவதும் நிறைந்து இருந்தான்...

****

"ஜானுக்கு நம்ம வெங்கட் அங்கிள் பேத்தியை கல்யாணம் பண்ணி கொடுக்க கேட்கிறாங்க... நீ என்ன சொல்ற விக்டர்...?" அக்ஷய் விக்டரிடம் கேட்டான்...

ஆதர்ஷின் குருவான அவரை ஜானுக்கும் நன்கு தெரியும்...

"இதில் நான் சொல்ல என்ன இருக்கு சார்... ஜானோட விருப்பம் தான்..." விக்டர் மகனின் கையில் பொறுப்பை கொடுத்துவிட்டு ஒதுங்கி கொண்டான்...

"ஜான்... சரின்னு சொல்லுடா..." மது சந்தோசத்தில் ஆர்ப்பரிக்க...

"ஷ்... அம்மு சும்மாயிரு... கல்யாணம் அவனோட விருப்பம்..." மித்ரேஷ் அவளை அதட்ட அதில் அவள் அமைதியாக,

"தட்ஸ் குட் கேர்ள்..." என்று மித்ரேஷின் கரங்கள் அவளது இடையை வளைத்து கொண்டது...

அதில் அவள் முகம் மலர அவனது தோள் சாய்ந்தாள்...

இப்போது எல்லாம் அவனது இந்த வார்த்தைக்கு, இந்த அணைப்பிற்காகவே அவள் அவனது சொல் பேச்சை சமத்தாய் கேட்கிறாள்...

"வேண்டாம் அங்கிள்..." என்றான் ஜான் மொட்டையாக...

எல்லோரும் திகைப்பாக அவனை பார்த்தனர்...

"ஏன்...?" அக்ஷய் கேட்டான்...

"பொண்ணு நல்லா படிச்சியிருக்கா... அழகாவும் இருப்பாள்..." அக்ஷய் எடுத்து சொல்ல...

"எனக்குன்னு சில குறிக்கோள் இருக்கு அங்கிள்... அதுக்கு இந்த பொண்ணு சூட்டாக மாட்டாள்..."

"என்ன குறிக்கோள் ஜான்...? அண்ணா தான் அவ்வளவு சொல்றாருல்ல... சரின்னு சொல்லுடா..." நிஷா அவனை வற்புறுத்த...

"ப்ளீஸ் மாம்..." என்று அன்னையிடம் கெஞ்சியவன் அக்ஷயிடம்,

"வாழ்க்கையில் பாதிக்கப்பட்ட ஒரு பொண்ணுக்கு தான் வாழ்க்கை கொடுக்கணும்ன்னு நான் விரும்பறேன்..." ஜான் சொல்லி முடித்ததும் அங்கே குண்டூசி விழுந்தால் சத்தம் கேட்கும் அளவுக்கு அமைதி நிலவியது...

"ஜான்... உன்னை மகனா பெத்ததில் இன்னைக்கு தான்டா எனக்கு பெருமையா இருக்கு..." விக்டர் கண்கள் கலங்க மகனை அணைத்து கொண்டான்...

இளைய மகனின் இந்த முடிவுக்கு தானும் ஒரு காரணம் என்பதை அறிந்த நிஷாவிற்கு தாயாய் அழுகை வந்தது... ஆனாலும் மகனின் தெளிவான முடிவு பற்றி ஒரு பெண்ணாய் அவளது மனம் பெருமை அடைந்தது...

"சூப்பர் ஜான்..." மது அவனை பாராட்டியவள் மித்ரேஷை கேள்வியாய் பார்க்க...

அவனோ புன்னகையுடன் கையை கட்டி கொண்டு மனைவியை பார்க்க அதில் உற்சாகம் குறைந்தவள்,

"அப்போ நான் குட் கேர்ள் இல்லையா...?" அவளின் முகம் சுருங்கி போனது...

"அடி அசடு... இப்போ தான்டி நீ ரொம்ப ரொம்ப குட் கேர்ள்..." என்று அவளது நெற்றியில் அவன் இதழ் பதிக்க...

"டேய் நாங்களும் இங்கே தான்டா இருக்கோம்..." ஆதி தன் இருப்பை நண்பனுக்கு சுட்டி காட்ட...

மித்ரேஷும், மதுவும் அதை கண்டு கொண்டால் தானே...

ஜானின் முடிவை எல்லோரும் ஏகமனதாய் ஏற்று கொண்டனர்... அவன் மனதுக்குள் இத்தகைய வைராக்கியம் இருக்கும் என்று யாருமே நினைத்து பார்க்கவில்லை...

"ஜான்... என்னால் தானே நீ இப்படி ஒரு முடிவு எடுத்து இருக்க...?" தனிமையில் நிஷா கேட்க...

மௌனமாய் இருந்து அதை ஆமோதித்தவன், "உங்க கஷ்டத்தை பார்த்ததால் தான் இந்த முடிவு எடுத்து இருக்கேன் என்றாலும் வர போறவளை மனதார நேசித்து தான் கல்யாணம் பண்ணுவேன் மாம்... இது சத்தியம் மாம்..." என்றவனை பெருமிதம் பொங்க பார்த்தாள் நிஷா...

ஜான் விருப்பப்பட்டபடி திருமணமாகி ஒரு வாரத்தில் கணவனை இழந்த இளம்பெண்ணான பூரணியை அவனுக்கு பெண் பார்த்தனர்...

ஒரு வார வாழ்க்கையில் திருமணத்தை அறவே வெறுத்து இருந்த பூரணியின் மனதை மாற்ற ஜான் சிறிது காலம் அவகாசம் எடுத்து கொண்டான்...

பொறுமையாய், நிதானமாய் அவளுக்கு தன் அன்பை உணர்த்தி அவளையும் தன்னை காதலிக்க செய்த பின்பே அவளின் கரம் பிடித்தான் காதல் கணவனாய்...

"என்ன இருந்தாலும் என் நண்பன் ஜானோட பொறுமை உனக்கு வராது மித்து... பாரு எவ்வளவு பொறுமையா பூரியை ஹேண்டில் பண்றான்..." மது பூரணியை தான் பூரி என்று செல்லமாய் அழைத்தாள்... எதை மறந்தாலும் அவளால் சாப்பாட்டை மறக்க முடியாது...

"உன் கிட்ட தானே பொறுமையா எடுத்து சொல்லிட்டாலும் அப்படியே கேட்டுக்க போற பாரு... பூரணி அமைதியான பொண்ணு அவளை அப்படி தான் பொறுமையா ஹேண்டில் பண்ணணும்... ஆனா என் அதிரடி அல்லி ராணிக்கு அதிரடி தான் சரி..." என்ற மித்து அவளது இதழை அதிரடியாய் சிறை செய்ய முதலில் முறைத்து திமிறியவள் பின்பு மெல்ல மெல்ல அவனது ஆளுமையில் அடங்கினாள்...

சில மாதங்கள் கழித்து...

"அம்மு... ப்ளீஸ் எழுந்திருடி..." மித்ரேஷ் மது அருகில் அமர்ந்து பள்ளி எழுச்சி பாடி கொண்டு இருக்க... அதற்கு எல்லாம் அசைவாளா நம் சண்டிராணி...

"மித்து... டூ மினிட்ஸ் டா..." செல்லம் கொஞ்சியவள் அவன் மடியில் படுத்து கொள்ள...

"அம்மு... எக்சர்சைஸ் பண்ணலைன்னா உடம்பு வெயிட் போடும்டி..."

"அப்போ என்னை குண்டுன்னு சொல்றியா... போடா..." என்று கோபித்து கொண்டவள் அவன் மடியில் இருந்து எழுந்து படுக்கையில் படுத்தாள்...

"அம்மு சொன்னால் கேளுடி... வெயிட் போட்டா இல்லாத வியாதி எல்லாம் வரும்... அப்புறம் உனக்கு தான் கஷ்டம்..." என்று அவன் எடுத்து சொல்ல...

"உனக்கு தான் கஷ்டம்ன்னு என்னை கஷ்டப்பட சொல்ற... போ... போ..." அவள் கூறியதன் அர்த்தம் புரிந்து,

"உன்னை..." என்று அவளது தலையில் செல்லமாய் முட்டியவன்,

"சரி எனக்கென்ன நீ எப்படியோ போய்க்கோ... ஆனா ஒண்ணு..." என்றவனை ஒரு கண் திறந்து என்ன என்று அவள் பார்க்க...

"எனக்கு ஒரு நல்ல பொண்ணா பார்த்து கொடுத்துட்டு போ..."

"எதுக்கு உனக்கு பொண்ணு...? அதுவும் என்னை பார்த்து கொடுத்துட்டு போக சொல்ற... ஏன்...?" படபடவென கேட்டபடி அவள் எழுந்து அமர...

"ஆமாம்... இப்படி நோயை தட்டு தாம்பாளம் வச்சு வரவழைச்சுக்கிட்டா நீ சீக்கிரம்..." மேலே சுட்டி காட்டியவன், "அங்கே போய் சேர்ந்திடுவ... அதுக்கு அப்புறம் என்னை யாரு கவனிப்பா...? அதான் நீயே உன்னை மாதிரி ஒரு நல்ல பொண்ணா பார்த்து கொடுத்துட்டு போ... நான் நிம்மதியா இருப்பேன்... அப்புறம் ஒரு விசயம்... எங்களுக்கு பெண் குழந்தை பிறந்தா உன் பேரை வைக்கிறேன்..." சிரியாமல் சொன்னவனை கொலைவெறியுடன் பார்த்தவள்,

"உனக்கு நான் மட்டும் போதாதுன்னு வேறு பொண்ணு கேட்குதா... டேய் மித்து... நீ செத்தேடா..." என்றபடி அடிக்க வந்தவளிடம் இருந்து சிரித்தபடி பாதுகாப்பாய் விலகியவன்,

"இது எல்லாம் நடந்துருமோன்னு பயமாயிருக்கு அம்மு... அதனால இது எல்லாம் நடக்காமல் இருக்க இப்போது நீ என்னோடு நடக்க வா..." என்று ட்ராக் சூட்டை தூக்கி அவள் மீது எறிந்தவன் வெளியில் ஓடி போய்விட்டான்...

"போடா... வந்து கவனிச்சிக்கிறேன்..." என்றவள் உடையை மாற்றி கொண்டு தோட்டத்திற்கு சென்றாள்...

அங்கு ஆதியுடன் கூடைப்பந்து விளையாடி கொண்டு இருந்த மித்ரேஷ் அவனிடம் பந்தை கொடுத்துவிட்டு,

"பை டா... நான் அம்மு கூட வாக்கிங் போறேன்..." என்றவன் மனையாளை நோக்கி வந்தான்...

வீட்டை விட்டு வெளியேறி கடற்கரை சாலையில் நடந்த போதும் அமைதியாய் இருந்த மதுவை கண்டு அவனுக்கு பாவமாய் இருந்தது... தான் அதிகமாய் அவளை காயப்படுத்தி விட்டோமோ என்று கவலையாய் இருந்தது...

"அம்மு... என் மேல் கோபமா...?"

அமைதியாய் தலை குனிந்து நடந்தவள் முன் குனிந்து அவளை பார்த்தவனை வசமாய் அவளது கைகள் பிடித்து கொண்டது...

"பேசுறது எல்லாம் பேசிட்டு கோபமான்னா கேட்கிற... அய்யாவுக்கு வேறு நல்ல பொண்ணு கேட்குதோ..." அவனது முதுகில் அவள் குத்த...

"வலிக்குதுடி ராட்சசி..." என்றவன் அவள் பிடியில் இருந்து தப்பி ஓட...

"ஓடாதேடா..." என்றபடி அவள் அவனை தூரத்த துவங்கினாள்...

சிறிது தூரம் ஓடியவள் மூச்சு வாங்க ஓரிடத்தில் நின்றதும் மித்ரேஷ் அவள் அருகில் வந்தவன்,

"சாரிடி..." என்றவனை கண்ணீர் மல்க ஏறிட்டவள்,

"உண்மையாவா மித்து...?" அவளின் கண்ணீரில் அவன் கரைந்து தான் போனான்...

"ச்சீ லூசு... உன்னை விட்டுட்டு வேறு பொண்ணா... ச்சீச்சீ..." அருவருப்பாய் முகத்தை சுளித்தவனை கண்டு முகம் மலர்ந்தவள்,

"மித்துன்னா என் மித்து தான்... சோ ஸ்வீட்..." என்று அவனது கன்னத்தில் முத்தமிட அவனது கரம் அவளை தன்னோடு வளைத்து கொண்டது...

"வீட்டுக்கு போகலாமாடி..." சரசமாய் கேட்டவனை கண்டு முறைத்து பார்த்தவள்,

"நோ..." என்று மறுத்தவள் அவனது கரத்தை பற்றி கொண்டு மேலே நடக்க ஆரம்பித்தாள்...

அவளின் எண்ணம் புரிந்தவனாய் அவளை பின்பற்றி அவனும் நடக்க ஆரம்பித்தான்...

பலாப்பழம் போல் வெளியில் முரட்டுத்தனமாய் அவன் பார்ப்பதற்கு தெரிந்தாலும் பலாச்சுளை போல் காதலில் தித்தித்திப்பாய் இனிப்பவனின் சுவை பற்றி அவள் மட்டுமே அறிவாள்...

அவளது விழியசைவில் கண்டுண்டு நடப்பது அவனுக்குமே மிகவும் பிடித்து இருந்தது... அதை அவனும் விரும்பியே ஏற்று கொண்டான்...

இனி காலம் முழுவதும் மகிழ்ச்சி தான் இருவரது வாழ்க்கையிலும்...

முற்றும்...